# சமதக்கினி நாடகம்

பதிப்பாசிரியர் :

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,

எம்.ஏ.(தமிழ்) எம்.ஏ., (ஆங்கிலம்) பி.எட். டிப்.வ. மொ. பிஎச்.டி,

பொதுப்பதிப்பாசிரியர் :

கு. தாமோதரன், எம்.ஏ.,

அ.கீ.சு.நூலக வெளியீடு எண் : 425
தமிழ் நூல் வெளியீடு எண் : 120

# சமதக்கினி நாடகம்

பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ.எம்.ஏ.,பி.எட். டிப்.வ.மொ,பிஎச்.டி
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5.

பொதுப்பதிப்பாசிரியர் :

**கு.தாமோதரன்** எம்.ஏ.
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-113.

© அ.கீ.சு.நூலகம்
1999

விலை ரூ. : **143/-**

முதற்பதிப்பு: 1999

வெளியிட்டபடிகள் : 500

பதிப்பாசிரியர் :

முனைவர் சு.சௌந்தரபாண்டியன்

பொதுப்பதிப்பாசிரியர் :

கு. தாமோதரன்

© அ.கீ.சு.நூலகம், சென்னை-5

விலை ரூ. **143/-**

அச்சிட்டவர்கள் : இராயப்பேட்டை எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் உபபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,
26, கோயா அருணகிரி முதல் தெரு, இராயப்பேட்டை
சென்னை - 600 014.

G.O.M.L. PUBLICATIONS No.425
Tamil Publications No.:120

# SAMATHAKKINI NATAKAM

EDITOR :

**DR. S.SOUNDARAPANDIAN**
M.A.M.A.B.Ed. Dip.Skt. Ph.D.
Curator
Government Oriental Manuscripts Library
Chepauk, Chennai-5.

GENERAL EDITOR :

**K.DAMODARAN** M.A.
Director
Department of Archaeology
Tharamani
Chennai - 600 113.

© G.O.M.L.
1999

Price Rs. **143/-**

First Edition 1999
No. Copies : 500

**SAMATHAKKINI NATAKAM**

Edited by :

**DR. S.SOUNDARAPANDIAN**

General Editor :

**K. DAMODARAN**

© G.O.M.L., Chennai-5

Price Rs. **143/-**

**Printed at :** Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. Co-op. Society Ltd.,
26, Koya Arunagiri 1st Street, Royapettah, Chennai - 600 014.

# சமதக்கினி நாடகம்

## பதிப்புரை

அ.கீ.க.நூலகத்தின் தாட்சுவடியிலிருந்து (டி.482) இந்நூல் பதிப்பிக்கப் பெறுகிறது.

இந்நூலின் காலம் கி.பி. 18-19ஆம் நூற்றாண்டுகளை ஒட்டியதாக இருத்தல் வேண்டும்.

நூலாசிரியரின் பெயர் அறியப்படவில்லை.

சமதக்கினி முனிவரின் கதையே இந்தத் தமிழிசை நாடகம் ஆகும்.

தமிழிசைக்காகவும் தமிழ்நாடகத்திற்காகவுமே இந்நூல் பதிப்பிக்கப் பெறுகிறது.

சமதக்கினி முனிவரின் கதை ஸ்ரீமத் பாகவதம், முதலிய பழைய நூற்களில் மொழியப்பட்டுள்ளன.

சமதக்கினியின் கதைச் சுருக்கம்:

ரிசீக முனிவரின் மகனான சமதக்கினி என்பவர், இரேணுகாதேவியை மணந்து, பரசுராமரைப் பெற்றார். வேட்டைக்கு வந்த கார்த்தவீரியார்ச்சுனனுக்கு ஒரு பசுவின் உதவியால் விருந்தளித்தார்; கார்த்தவீரியன் அப்பசுவைக் கவர்ந்து சென்றான்; பரசுராமன், கார்த்தவீரியனைக் கொன்றான்: அப்பாவத்திற்காகத் தீர்த்தமாடப் புறப்பட்டான் பரசுராமன். பரசுராமன் அவ்வாறு

போயிருந்த போது, கார்த்தவீரியார்ச்சுனனின் மகன்கள் சமதக்கினி முனிவரைக் கொன்றுவிட்டார்கள். அதனால், பரசுராமன், சத்திரிய பரம்பரையையே 21 முறை கொல்வதாகச் சூளுரைத்தார். கணவனிறந்த துக்கத்தால், மரமேறிக்குதித்துக் கொப்புளங் கொண்ட இரேணுகை, ஒரு துணிவெளுப்பவன் வீட்டிலிருந்து மா முதலிய உணவை உண்டு, கொப்புளத்தின் மேல் அமர்ந்த கொசுக்களை வேப்பிலை ஒட்டியும், வேப்பிலையை அரைத்துப் பூசியும் வாழ்ந்தாள். இவளே வைசூரி நோயின் தெய்வமானாள். முன்பு சமதக்கினியோடு இருந்து வாழும்நாளில் நீர் எடுக்கச் சென்ற போது, ஒரு கந்தருவனின் நிழலை நீருள் பார்த்து, அதனால் கற்பு குறைபட்ட காரணத்தால் இவளைப் பரசுராமர், சமதக்கினி ஆணைப்படி கொன்றார். பிறகு உயிர்பெற்றாள் இரேணுகை. இவள் முன் பிறவியில் புலோமஜை என்ற பெயரில் பிருகுமுனிவர் மனைவியாக இருந்தவள்; அப்போது, விசுவகர்மாவைக் கொண்டு செய்த இரும்புக் கடலையைச் சுண்டல் செய்து கற்பில் சிறந்தவளானாள்! இந்த இரேணுகையே, பின்பு கோசலை, தேவகியாக அவதரித்தாள்!

இதுவே இந்நாடகத்தின் பொருள்.

கதை வடபுலம் தழுவியதாக இருந்தாலும், திராவிடப் பண்பாடுகள் சமதக்கினி போன்ற எல்லாக் கதைகளிலும் ஊடுருவி நிற்பதை நாம் அறிதல் தகும்.

எனவே, தமிழ் ஆய்வில் வடபுலக் கதைகளின் ஆய்வும் இணைக்கப்பட வேண்டுமே தவிர, அவை தள்ளப்படக் கூடாது.

சமதக்கினி பற்றி, பாரதம் முதலியவற்றிலும் பல குறிப்புகள் காணப்படுகின்றன அவை :

சமதக்கினி அம்பு பயிலும் போது, இரேணுகை அம்பு பொறுக்கிக் கொடுத்தாள். சூரியன் அவளைத் துன்புறுத்தவே, சமதக்கினி சூரியனை எய்ய முயன்றார். அப்போது, சூரியன், பிராமண உருவில் வந்து குடையும், செருப்பும் அளித்தான்! ரிசீக முனிவருக்கு காதியின் மகளாகிய உத்தியவதியிடம் பிறந்தவர் சமதக்கினி. சமதக்கினிக்கு, உருமதி, உத்சாதன், விச்வாவசு, பரசுராமர் ஆகியோர் பிள்ளைகள். சமதக்கினி, பிருகு முனிவரின் மகன் எனவும் கூறுவர்.

இந்நாடகம், பாடலும் வசனமும் கலந்து வருவது.

நாடகத்தின் முதலில் விநாயகர் வரவு உரைக்கப்படுகிறது.

வசனம் என்ற பகுதி, ''அகோதெப்படி'' என்று தொடங்குகிறது. அகோ + அது + எப்படி = அகோதெப்படி என்று ஆனது. ''அகோ'' என்பது நாடகம் பார்க்க வந்த கூட்டத்தை, விளிக்கும் வகையிலும், கேட்போருக்கு ஒரு விறுவிறுப்பை ஊட்டும் வகையிலும் உள்ளது.

ஜமதக்கினி, இராஜன், போன்ற சொற்கள் முறையே சமதக்கினி, இராசன், என்றெல்லாம் பதிப்பாசிரியரால் தமிழ் மரபிற்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளன.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்று சொற்களும் தூய தமிழ்ச் சொற்களென்று முன்பே நிறுவப்பட்டுள்ளன. (தமிழில் கீர்த்தனை இலக்கியம், ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.)

தமிழே நாடகக் கலையின் ஊற்று! கூத்துக்கென்றே வாழ்வை ஈந்தவர்கள் கூத்தர்கள்! சங்க இலக்கியம் கூத்தர், விறலியர் பற்றியெல்லாம் பேசுகின்றது!

கூத்தர், விறலி முதலியோரே, புராணங்களில் கின்னரர், கிம்புருடர் என்றெல்லாம் குறிக்கப்படுகின்றனர்.

இனி, நாடகத்தினைப் பினபற்றிச் செல்வோம்.

இந்நாடகத்தின் தொடக்கத்தில், தேவேந்திரன், கொலுவுக்கு வருவது கூறப்படுகிறது.

தேவேந்திரனும் மந்திரியும் நாட்டுவளம் குறித்து, பேசிக்கொள்கின்றனர்.

தமிழ் அரசர்கள் தொடக்கி வைத்த மரபு இது! ஒவ்வொரு நாளும் அமைச்சனோடு நாட்டு நடப்பு பற்றி அரசன் உசாவியறியும் இந்தப் பண்பே, இன்றுவரை நிலைபெற்றுள்ளது, இன்றும் ஒவ்வொரு நாள் பற்றிய காவல்துறை அறிக்கை ஆளுநருக்கு அளிக்கப்படுகிறது.

பிறகு, நாடகத்தில் தேவேந்திரன் அவைக்கு நாரதர் வருகிறார்!

நாரதர் வருகை பொதுக்கவியால் தெரிவிக்கப்படுகிறது. பொதுக்கவி என்பது, நாடகங்களில், கவிக்கூற்று ஆகும்.

நாதரருக்காக, அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகிய நடனப் பெண்களை அழைத்து வரச் செய்கிறார்

தேவேந்திரன்!

அழைத்துவரப்பட்ட அரம்பையர்கள், 'எச்சரிக்கை' விடுக்கின்றனர்! "நீ ஒழுங்கா நடந்து கொள்" என்பது போலவா? இல்லை!

தமிழ் நாடகங்களில் எச்சரிக்கை என்பது, "தங்கள் ஆணைக்காக உள்ளோம்; தாங்கள் கூறுவதுபோலச் செய்கிறோம்" என்று பாத்திரங்கள் கேட்கும் குறிப்பில், அரசனை உயர்த்திப் பாடுவதற்கு எச்சரிக்கை என்று பெயர்.

இந்திரன் முன் ஆட்டம் முடிந்ததும்; சபைச் சான்றோர்களைப் பார்த்து, "இவ்வுலகில் கற்பினில் சிறந்த பெண் யார்?" என்று ஒரு கேள்வியைக் கேட்கிறான் இந்திரன்! அதற்கு நாரதர், "பிருகு முனிவரின் மனைவி புலோமசை தான் கற்பினிற் சிறந்தவள்!" என்கிறார். அதை விளக்குமாறு இந்திரன் கேட்க, "அடுத்தநாள் விளக்குகிறேன்" என்கிறார் நாரதர்!

பிறகு நாரதர், விசுவகர்மாவை அழைக்கச் சொல்லுகிறார்.

அழைக்கச் சொல்லும்போது, "பிள்ளாய்" என்று சீடர்களை விளிக்கிறார் நாரதர். பிள்ளாய் என்றால், பிள்ளைகளே என்பது பொருள்.

சீடர் என்று வரவேண்டியது, மூலச்சுவடியில், சீஷர் என்றே எழுதப்பட்டுள்ளது.

அழைத்துவரப்பட்ட விசுவப்பிரம்மா தனது சாதனைகளைப் பட்டியலிடுகிறான்! விசுவப்பிரம்மா படைத்துத் தந்தவை என்று

அவர் பட்டியலிடுவன :

1. திருமாலுக்கு அம்பு செய்து தந்தவர் விசுவபிரம்மா
2. பிரம்மாவுக்கு எழுத்தாணி செய்து தந்தவர் விசுவப்பிரம்மா
3. பரமேசுவரனுக்கு மழுவைச் செய்து தந்தவர் விசுவப்பிரம்மா
4. முருகனுக்கு வேல் செய்து தந்தவர்விசுவப்பிரம்மா
5. பெண்கள் அணியும் நகைகளைச் செய்து தந்தவர் விசுவப்பிரம்மா
6. தாலி செய்து தந்தவர் விசுவப்பிரம்மா
7. உழும் குடிகளுக்கு கலப்பை செய்து தந்தவர் விசுவப்பிரம்மா

நாரதர், விசுவகர்மனைப் புகழ்ந்துவிட்டு, ''நாழி அளவு இரும்புக்கடலை செய்து எனக்குத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறார்''

''இலக்கணம், இரும்புக்கடலை'' என்ற வழக்கு இந்தக் கதையிலிருந்து வந்திருக்கலாம்.

விசுவகர்மா செய்தளித்த இரும்புக் கடலையைப் பார்த்து அதிசயிக்கிறான் நாரதன்!

அதன்பிறகு நாரதர், கயிலாயம் செல்கிறார். கயிலாயத்தில்

பார்வதியிடம், விசுவகர்மா செய்த இரும்பு மற்றும் எஃகினால் ஆன கடலையைக் கொடுத்து, ''இதைச் சுண்டல் செய்து தாருமம்மா'' என்று கேட்கிறார்!

''இரும்புக்கடலை வேகாது! ஆகவே இதனைச் சுண்டல் செய்து தர முடியாது!'' என்கிறாள் பார்வதி.

இதே பதிலை மகாலட்சுமியும் தருகிறாள்!

சரசுவதியும் இதே பதிலைச் சொல்கிறாள்!

இவ்வாறு செல்லும் இந்த நாடகத்தில், செய்யுளும், அதன் கருத்தாக வசனமும் அடுத்தடுத்து வருகின்றன. கேட்போர், படிப்பறிவு அற்றவர்களாக இருந்தாலும் நாடகத்தைக் கண்டு களிக்க வாய்ப்பாக இந்த உத்தி (Technique) பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிறகு, நாரதர், காட்டுவழியே வரும்போது, பிருகு முனிவரைச் சந்திக்கிறார்; பிருகு முனிவரின் மனைவி புலோமசையும் அருகில் இருக்கிறாள்.

புலோமசை, புலோமிசை எனவும் குறிக்கப்படுகிறாள்.

''நான் காட்டில் தவம் செய்கிறேன்; தவம் முடித்து வரும்வரை நம் ஆசிரமத்தில் இருப்பாயாக'' என்று தன் மனைவி புலோமிசையம்மாளிடம் சொல்லிச் சென்றார் பிருகு.

பிறகு, புலோமிசையம்மாளிடம் நாரதர் வந்து, ''இந்த இரும்புக் கடலையைச் சுண்டல் செய்து, என் பசியாற்று தாயே!'' என்று வேண்ட, ''நான் சுண்டல் செய்கிறேன்!'' என்று இரும்புக்

கடலையை வாங்கினாள் புலோமிசை; சுண்டலும் செய்து அளித்தாள்!

இச்செய்தியை நாரதர் பார்வதி, சரசுவதி, இலக்குமி ஆகியோரிடம் தெரிவித்தார்; உலகில் புலோமிசை கற்பே சிறந்தது என்று இந்திரனுக்கு இவ்வாறு நிரூபித்துக் காட்டினார் நாரதர்!

அதன்பின், ''என்ன செய்வது?'' என்று சரசுவதி, இலக்குமி, பார்வதி மூவரும் பேசிக்கொள்கின்றனர்.

பார்வதி, சிவனிடம் முறையிடுகிறாள்.

சிவன், பிருகு முனிவரைக் கொண்டே பிரம்மா, விஷ்ணுவை வரச் செய்கிறார்.

பிருகு ஒரு முனிவராக இருந்தாலும், சிவனாகிய அரசன் ஏவலால், வேலையாள் போல பிரம்மா முதலியவர்களை அழைத்து வருவதாக இந்நாடகத்தில் வருகிறது! இது குறிப்பிடத்தக்கது. அரசன், அறிவாளிகளை மதிக்காது, தன் கொற்றத்தையே பெரிதாக நினைத்த கி.பி.17,18ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தை இது காட்டுவதாகலாம்.

சிவன், விஷ்ணு, பிரம்மா மூவரும் நாரதரை வரச்செய்கிறார்கள், பிருகு முனிவரைக் கொண்டே!

நாரதர் நடந்ததைச் சொன்னார்.

''சரி நீங்கள் போகலாம்'' என்று கூறிவிட்டு, சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரும் சந்நியாசி வேடமிட்டுப் புலோமிசை கற்பைச்

சோதிக்கக் கிளம்பினர்.

இவ்விதம் நாடகம் செல்கையில், பரணி, ஆனந்தக்களிப்பு போன்ற பாட்டு வகைகள் வருவது துக்கற்பாற்று.

இவற்றில் பரணி என்பது தாழிசை ஆகும்;

ஆனந்தக் களிப்பு என்பது சிந்துப்பா யாப்பில் பாடப்படுவது ஆகும்.

நாடகத்தின் இப்பகுதியில் வரும் ஆனந்தக்களிப்பில் (பாடல் 151), உள்ள குறிப்பால், நூலாசிரியர் தொண்டைநாட்டுக் காராளர் வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கலாம்என்ற எண்ணமுண்டாகிறது.

பிறகு, புலோமிசை இருக்கும் ஆசிரமத்திற்கு வந்த சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரும் புலோமிசையைப் பார்த்து, ''உன் முலைப்பால் சாப்பிட வந்தோம் என்று கேட்கின்றனர்.

இதனைப் புலோமிசை, தன் கணவனிடம் கூற, கணவராகிய பிருகு, ''அம் மூவரையும் குழந்தைகளாக ஆக்கு! பிறகு பால் கொடு!'' என்று ஆலோசனை கூறுகிறார்.

அதன்படியே புலோமிசை அம்மூவரையம் குழந்தைகளாக்கித் தன் தனத்துப் பாலை ஊட்டுகிறாள்!

குழந்தைகளாய்ப் போய்விட்டதால், கணவர்களைக் காணோமென்று இலக்குமி, பார்வதி, சரசுவதி மூவரும் நாரதரிடம் முறையிடுகின்றனர்!

நாரதர் நடந்ததைக் கூறுகிறார்.

நாரதர், இலக்குமி, பார்வதி, சரசுவதி மூவரும் பிருகு முனிவரின் ஆசிரமத்தில் புலோமிசையைச் சந்திக்கப் புறப்படுகின்றனர்.

அங்கு, நடந்ததைப் புலோமிசை, பிருகுவிடம் கூறி, இலக்குமி, பார்வதி, சரசுவதி மூவரும் வருந்துகின்றனர்.

பிருகு முனிவர், சிவன் முதலிய மூவரையும் பழையபடி எழுப்புமாறு புலோமிசையிடம் கூறுகிறார்; புலோமிசையும் சிவன் முதலிய மூவரையும் பழைய நிலைக்குக் கொண்டு வருகிறாள்.

''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று சிவன் முதலியோர் கேட்க, ''நீங்கள் மூவரும் எனக்குக் குழந்தைகளாகப் பிறக்க வேண்டும்'' என்கிறாள் புலோமிசை.

''நாங்கள் பிறப்பது இல்லை! ஆகவே, வரத்தை மாற்றிக் கேள்!'' என்கின்றார் சிவன்.

புலோமிசைக்கு வரத்தைக் கொடுக்க வேண்டும்; நானே மூன்று முறை அவனுக்கு மூன்று முறை அவளுக்கு மூன்று சென்மங்களில் பிள்ளையாகப் பிறக்கிறேன்!'' என்று விஷ்ணு வரம் கொடுக்கிறார்.

''நான் கேட்ட வரம் தப்பக்கூடாது! ஆகவே, பிரம்மாவும் சிவனும், எனது இரு விரல்களின் இடுக்கை, யோனித்துவாரமாக நினைத்து, அதன்வழியே சென்று, அவர்கள் பட்டணம் போய்ச் சேரட்டும் என்கிறாள் புலோமிசை.

பிறகு பிரம்மா, ''நீ ஒரு புற்றில் குழந்தையாக இருப்பாய்! பர்வதராசன் உன்னை எடுத்து வளர்ப்பான்'' என்கிறார்.

''அதன்படியே மூன்று ஜென்மம் எடுத்தபின்பு, என்னிடத்திற்கு வருவாயாக! அதுவரை யான் யோகத்தில் இருப்பேன்'' என்கிறார் பிருகு.

இதன்பின், இந்நாடகத்தில் மேருமலை அரசனாம் பர்வதராசன் பற்றிய செய்திகள் வருகின்றன; குறவஞ்சி நாடகச் சாயல் இப்பகுதியில் காணப்படுகிறது; வேடர், மலைவளம் கூறும் பகுதிகள் வருகின்றன.

பர்வதஅரசனின் மனைவி மேனாதேவி அறிமுகப்படுத்தப் படுகிறாள்.

இடையிடையே கட்டியக்காரன் புதிய பாத்திரங்களை அறிமுகம் செய்து வைக்கின்றான்!

வசிட்டர், குழவியாகப் பிறந்த புலோமிசைக்கு இரேணுகை என்று பெயர் வைக்குமாறும், பிறகு இரேணுகையைச் சமதக்கினி முனிவருக்கு மணம் முடித்துத் தருமாறும் பருவதராசனிடம் கூறுகிறார்.

அப்படியே, சமதக்கினிக்கும் இரேணுகாவிற்கும் திருமணம் நடக்கிறது; முதலில் அவ்விருவருக்கும் ஆண்பிள்ளை ஒன்று பிறக்கிறது; அவரே பரசுராமர்!

சமதக்கினி, இரேணுகை இருவரும் தமது நான்கு பிள்ளைகளுடன் இருக்கிறார்கள்.

ஒருநாள், இரேணுகை, சமதக்கினியின் சிவபூசைக்காக நீர் எடுத்துவரக் கங்கை செல்கிறாள்; நீர் எடுக்கும்போது, அந்நீரில், மேலே பறந்த கந்தருவன் ஒருவனின் நிழல் தெரிந்தது! தன் கற்புக்கு இழுக்கு என எண்ணுகிறாள் இரேணுகா!

இச்செய்தியைக் கேட்ட சமதக்கினி பரசுராமனை அழைத்து, "கற்பிழந்த உன் தாய் இரேணுகையை வெட்டி விட்டு வருக!" என்று ஆணையிடுகிறார்.

பரசுராமனும் தாயை வெட்ட, அவளை இரணகளத்திற்குக் கூப்பிடுகிறான்!

அப்போது, இரேணுகாதேவி, அங்கு வந்த ஓர் இராட்சசியிடம் அடைக்கலம் புகுகின்றாள்.

இராட்சசியாலும் காப்பாற்ற இயலவில்லை!

இராட்சசியையும் தன் தாயோடு சேர்த்துக் கழுத்தைச் சீவினான் பரசுராமன்.

தாயைக் கொன்ற தனயனை, அவன் தம்பியாகிய வசுமன்னன் என்பவன் ஏசுகிறான். அத்தம்பி வசுமன்னனையும் வெட்டிக் கொல்கிறான் பரசுராமன்!

ஆனால், பிறகு, நடந்ததற்காக வருந்துகிறான்!

சிவனை நினைத்துப் புலம்புகிறான்!

இதனால் சிவவழிபாட்டின் உயர்வு காட்டப்படுகிறது.

இந்நாடக ஆசிரியரின் நோக்கங்களில் சிவப்பெருமை சாற்றுவதும் ஒன்று.

பரசுராமனைப் பாராட்டிய சமதக்கினி, ''உனக்கு வேண்டிய வரம் கேள்!'' என்று பரசுராமனிடம் கூறினான். ''தாயையும் தம்பியையும் உயிர்பிழைக்க வரம் வேண்டும்!'' என்று பரசுராமன் கேட்கிறான்.

''அப்படியே தந்தேன்!'' என்கிறார் சமதக்கினி! இறந்த தாயும், தம்பியான வசுமன்னனும் உயிர்பெற்று எழுகின்றனர். எப்படி?

இரேணுகையின் முகமும் இராட்சசியின் உடலும் சேர்ந்த உருவம் ஒன்று! இரேணுகையின் உடலும் இராட்சசியின் முகமும் சேர்ந்த உருவம் மற்றொன்று! இந்த உருவங்கள் உயிர்பெற்று நிற்கின்றன!

''முன்விதிப்படி, அடுத்த பிறவி எடுக்க வேண்டியது தான்'' என்று கூறிவிடுகிறார் சமதக்கினி.

நாடகத்தில், இதன்பின், கார்த்தவீரியார்ச்சுனன் பேசப்படுகிறான்! அவனது அவைக்களம் காட்டப்படுகிறது.

இக்கார்த்தவீரியனைப் பார்த்து மக்கள் வேட்டையாடி விலங்குகளைக் கொல்லுமாறுகேட்டுக் கொள்கின்றனர்!

ஆம்! விலங்குகளைக் கொல்லச் சொன்ன மக்கள் இருந்தது அந்தக் காலம்! விலங்குகளைக் கொல்லக்கூடாது என்று மக்கள் கூறுவது இந்தக் காலம்!

காலவேறுபாட்டைப் பார்த்தீர்களா?

இயற்கைச் சமன்பாடு (Ecological balence) கெட்டுவிட்டது இப்போது!

அதனால், விலங்குகளைக் கொல்லக்கூடாது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்!

அன்று?

அன்று மக்களின் அடிப்படை வாழ்வுக்கே (Survival) விலங்குகளைக் கொன்று தான் ஆகவேண்டியிருந்தது!

இவ்வகையில், இந்நாடகம் பிற்காலத்திற்காக இருப்பினும், புராணம் தழுவியதாக இருப்பினும், எத்தனையோ வகைகளில் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படும் என்று குறிப்பிடல் வேண்டும்.

யாப்பு வகையாலும் இந்த நாடகம் குறிப்பிடத்தக்கது.

பல்வேறு இசையாப்புகள் இதிற் பயிலுகின்றன. "இசையென்றால், தெலுங்குக் கீர்த்தனைகளே" என்ற தவறான கருத்து இன்றும் மக்களிடையே உளது! இக்கருத்தை மாற்றவல்லது சமதக்கினி நாடகம் போன்ற தமிழிசை நூற்கள்.

கந்தார்த்தம் என்ற இசைப்பாடல் யாப்பு இந்நாடகத்தில் வருகிறது. இந்த யாப்பில், முதல் மூன்று அடிகள் ஒரு நடையிலும் அடுத்த நான்காமடி வேறு துரிதநடையிலும் அமையும்!

இனி, நாடகத்தில், கார்த்தவீரியன், மக்கள் நலன்காக்க வேட்டைக்குச் செல்லுகையில், ஆங்கு, சமதக்கினியின்

ஆசிரமத்தைக் கண்ணுறுகிறான். அங்கு இருந்து காமதேனு எனும் பசுவைக் கண்டு ஆசைக்கொண்டு, அரண்மனையில் இருந்தால்; அரண்மனையில் பலரின் பசிதீர்க்கலாம் என்று எண்ணி, அதைப் பெற முனைகிறான்'' எவரும் அறியாதவாறு காமதேனுவைத் தன் அரண்மனைக்கு ஓட்டிச் செல்லுமாறு தன் சேனாதிபதியிடம் கூறுகிறான் கார்த்தவீரியன்.

சேனாபதியும் அக்காமதேனுவை எவரும் அறியாமல் ஓட்டிச் செல்கிறான்!

இதை அறிந்த பரசுராமன், கார்த்தவீரியனிடம் செல்கிறான்; கார்த்தவீரியனைக் கொல்கிறான்! காமதேனுவை மீட்டு வருகிறான்!

இவ்வாறு பசுவை மீட்டுவருவதும், கவர்ந்து செல்வதும் தமிழர் போர்முறை ஆகும்; வெட்சி, கரந்தை என்று சொல்லப்படும் புறந்திணைகள் இதைத்தான் பேசுகின்றன. எனவே, கங்கையாற்றங்கரையில் சமதக்கினி கதை நடந்தாலும், அதன் அடித்தளம் தமிழர் முறை என்பதை மறத்தல் ஆகாது.

நாடகத்தில், கார்த்தவீரியனின் மகன், பரசுராமன் இல்லாத நேரம் பார்த்து, சமதக்கினியின் தந்தையைக் கொல்ல வருகிறான்! சமதக்கினி, நிட்டையில் இருக்கும்போது, அவனுடைய தலையைக் கொய்து போகிறான்!

இதைக்கேள்விப்பட்டு வெகுண்ட பரசுராமன் எதிரியின் 21 குலத்து மன்னரை ஒழிப்பேன் என்று சபதம் செய்கிறான்!

இரேணுகையோ உடன்கட்டை ஏற விரும்புகிறாள். முனிவர்கள், ''உனக்கு அரக்கி உடல் உள்ளதால் நீ உடன்கட்டை ஏறக்கூடாது'' என்கின்றனர்! தடுத்தும் கேளாது, ஒருவரும் இல்லாநேரத்தில், சிதைமீது விழுந்து விடுகிறாள்! வெட்டியான் அவளைப் புண்களுடன் காப்பாற்றிவிடுகிறான்!

காப்பாற்றி ஒரு சலவைத் தொழிலாளி வீட்டில் தங்கச் செய்கிறான் வெட்டியான்.

அங்கு வந்த பரசுராமன் வருந்தி, இறுதியில், ''அம்மை கண்டவர்களுக்கு அதை உறுதிப்படுத்தி, அதைப்போக்க வழிகள் கூறி, அதில் கிடைக்கும் வருவாயில் வாழ்ந்து கொள்'' என்று கூறுவதாக நாடகம் முடிகிறது.

ஒரு நாடகத்திற்கு வேண்டிய திருப்பத்தையும், சுவையான போக்குகளையம் இத்தமிழ் நாடகம் கொண்டுள்ளது.

இந்நாடகத்தில் ஆயவேண்டிய பழந்தமிழ்ப் பண்பாடுகள் நிறையவுள; மேலாய்வார்க்கு இவ்வகையில் இந்நூல் பெருவிருந்தே.

அன்புடன்

**முனைவர் சு. செளந்தரபாண்டியன்**

எம்.ஏ(தமிழ்), எம்.ஏ(ஆங்), பி.எட், டிப்.வ.மொ., பிஎச்.டி
காப்பாட்சியர்

# THE FLUTTERING OF THE MANUSCRIPT

This is another feather to the crown of Tamil Drama.

Presenting the story of the Sage Jamathakkini, this musical drama flows quite swimmingly and interestingly.

Musical stanzas set to different ragas are noteworthy.

For staging, this piece can well be used by dramatists.

Although the date of composition of this drama is a later one, the ingredient notes like ancient Tamil Culture cannot be winked at by researchers.

Prosody used, prose comtemplated, style handled all are exquisitely carved in this Tamil drama which is published from a paper Ms of G.O.M.L.

**Dr. S. SOUNDARAPANDIAN**
M.A(Tamil), M.A(Eng), B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator
G.O.M.L., Chennai - 600 005.

# சமதக்கினி நாடகம்

## விநாயகர் துதி

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

1. சீர்பெறுஞ் சுருதி யோர்ந்த
சமதக்கினி நாட, கத்தை
நீர்பெறுங் கடலாற் சூழு
நேமியி லுரைப்ப தற்கு
கார்பெறு குழலா ளான
கௌரியும் மரனு மீன்ற
வார்பெறு துதிக்கை யானை
வதனனை வணக்கஞ் செய்வாம்!

## சுப்பிரமணியர் துதி

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

2. மும்மதங்கள் பொழியுமயி ராப தத்தின்
முதுகிலிவர்ந் துலவுபுரந் தரன்ற னக்குச்
செம்மையுள புத்திரியார் தெய்வ யானை
சிந்தைமகிழ் மணவாள னாக நண்ணி
வெம்மைசெயுந் தானவரை யரைக்க ணத்தில்
வேற்படையால் வென்றபிரான் சரணம் போற்றி

இம்மையினில் சமதக்கினி நாட கத்தை
இசையுடனே செந்தமிழி லியம்பு வேனே!

## சிவன் துதி

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

3. சுந்தரன்மெய் யன்புத்தாய் பறவையிடம் தூது
சென்றபிஞ் ஞகன்மான் பரசு பாணி
கந்தமவிழ் கடுக்கைமலர்த் தெரியல் சூடி
கங்காள னெடியமயா னத்தில் ஆடி
சிந்தைமகிழ் பரமசிவ னம்பு யத்துச்
செய்யமல ரடியனேன் சிரமேற் கொண்டு
பந்தமுடன் சமதக்கினி நாட கத்தைப்
பாரின்மிசை பரவவன்பாற் பகரு வேனே!

## பிரமன் துதி

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

4. மருமலியும் இதழ்பொதுளும் பங்க யத்து
மலர்மீதி லேயிருந்து விடில் முற்றுங்
கருமையுள அலைகடல்சூழ் வைய கத்தைக்
காதலுட னேபடைக்குந் தொழில்கைக் கொண்ட
பெருமையுறு பரமேட்டி நளினத் தானைப்
பெட்பினுட னேதமியன் பணிந்து போற்றி

அருமைமிடுஞ் சமதக்கினி சரித்தி ரத்தை
அம்புவியில் நாடகமாய் அறைகு வேனே!

## திருமால் துதி

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

5. அலைகடல் கடைந்தே நென்னல்
அண்டருக் கமுத ளித்த
நிலையுள துளப மாலை
நெடியமால் பாதம் போற்றி
தலமதில் எவருஞ் சான்றுந்
சமதக்கினி நாட் கத்தை
நலமென் றங்கீ கரிக்க
நயமுட னுரைசெய் வேனே!

## திருமகன் துதி

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

6. கொண்டலைப் பழிக்குங் கேசம்
குவளையை ஒத்த நாட்டம்
கண்டினை நிகர்த்த செஞ்சொல்
கழையெனத் திரண்ட மொய்ம்பும்
தொண்டையங் கனிபோற் செவ்வாய்
சோதிமுத் தனைய மூரல்

ஒண்டொடி கரத்தாள் செல்வி

உயர்பதம் வணக்கஞ் செய்வாம் !

## சரசுவதி துதி

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

7. பண்ணவரும் போற்றிப் போற்றிப்

பணிசம தக்கினி யென்னும்

வண்ணமா முனிவர் பேரில்

மகிழ்ந்துநா டகம்வி ளம்ப

விண்ணவ ரியக்கர் சித்தர்

வியந்துதோத் திரஞ்செய் வாணி

தண்ணமார் வாரிசப் பூவாந்

தாளிணை வணக்கஞ் செய்வாம் !

## காளிதுதி

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

8. மறமிகு தகுவர் சூழும்

மயிடனை வென்ற எண்டோள்

திறமிகு கௌரி வீரி

சீலி மாதரியே போற்றி

அறமிகு புவியிற் கீர்த்தி

அவிர்சம தக்கினி காதை

நிறமிகு நாடகப்பா இதனை

நேயமாய் நிகழ்ந்து வேனே !

## விநாயகர் வருகிற

### விருத்தம்

*இராகம் : தோடி*

9. சங்கரன் தனையன் என்றே
தாரணி யுள்ளோர் போற்ற
மங்கைவல் லனபம ணாளன்
மதகெச முகனை வென்றோன்
அங்குச பாச மேந்தி
ஆகுவா களத்தி லிவர்ந்து
துங்கநற் சபையின் மிக்க
துரிதமாய் வருகின் றாரே !

(தாரணி - உலகு; கெசம் - யானை)

### வசனம்

"அகோ தெப்படி யென்றால், சிவபெருமான் புத்திரனென்று உலகத்தில் யாவரும் போற்றுகின்ற வல்லபை நாயகன், கெசமுகா சூரனை செயம் பெற்றவன்; அங்குச தரனாகிய வாகனரூடராய், அதிவேகமாய் வருகிற விதம் காண்க!"

# விநாயகர் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

## பல்லவி

10. சுந்தர விநாயகர் வந்தார் - சபை தனிலே
சுந்தர விநாயகர் வந்தார் !

## அனுபல்லவி

அந்தமாய்ப் பணிது லங்க
அணிந்தவெண் ணீறி லங்க
தந்திர வாகுள லேறித்
தகுவர் மேற்சின மீறி - சுந்தர

## சரணங்கள்

அமரர் மலர்கள் தூற்றவே - மகிழ்ச்சியுடன்
விமல முனிவர் போற்றவே - எழிலுள்ள
குமர வேலுக்கு மூத்த
குஞ்சர முகம் வாய்த்த
திமிர வல்லபை சேர்ந்த
தீர முலவு காந்தன் - சுந்தர

நான்முகன் மகத்தி லுள்ள - சித்திபுத்தி
நாயகி தனக்கேற்ற - தருக்கணிறை

கானகத்தில் தவஞ்செய் - கான முனிவர்க்கு

ஞானமே போதித்து நல்வரமே யளித்த - சுந்தர

மார்பின் முப்புரி துலங்கவே - இரண்டுகாதில்

வளைகுண்டலம் விளங்கவே - இரவியென

சீர்பரவிய வங்தம் பளபளென்ன

சிவகணங்கள் மிகப்புடையினிலே துன்ன - சுந்தர

(சுந்தம் - அழகு; குஞ்சரம் - யானை; இரவி - சூரியன்)

## கட்டியங்காரன் வருகிற

## விருத்தம்

11. தட்டி சல்லடமுங் கட்டி

தகுந்தடால் கட்கத் தோடு

வெட்டியே எறியும் நல்ல

வீரவாள் கரம்பி டித்து

சட்ட மாயிந் திரன்வா

சலையலங் காரம் செய்யும்

கட்டியங் காரன் மிக்க

களிப்புடன் வருகின் றானே !

(கட்கம் - கத்தி)

### வசனம்

"அகோ தெப்படியென்றால், தட்டி சல்லடங்கள் இடையிலே கட்டிக்கொண்டு, தகுதியான உத்தரியங்களை மேல் போட்டுக்கொண்டு, கத்தியும் வாளும் கையிலே பிடித்து, தேவேந்திர மகாராசன் கொலுவாசலை யலங்காரம் செய்யும் கட்டியக்காரன் மனக்களிப்புடன் வருகின்ற விதங்காண்க !

## கட்டியங்காரன் வருகிற தரு

*இராகம் : சௌராஷ்டகம்*

### பல்லவி

12. வீரசூரக் கட்டியன் வந்தான் - இந்திரன் வாசல்

வீரசூரக் கட்டியன் வந்தான் !

### அநுபல்லவி

தீரமாய் அஷ்டதிக்கைச் செயித்தசூரர் வந்தாலும்

கோரம் அவரைச்செய்து கொலுவில் காத்திருக்கும் - வீர

தானவ ரானவர் சமரம் புரியவந்தால்

ஊனுடல் அழியவே ஒருநொடியினில் வாட்டும் - வீர

மும்மூர்த்திளான மூவர்கள் வந்தாலும்

செம்மையாய்ச் சேதிசொல்லிச் சீர்கொலு காத்திருக்கும் - வீர

# கட்டியன், இந்திரன் வருமுன் சொல்

## கட்டியம்

13. சீர்பரவு முப்பத்து முக்கோடி யாந்தொகை
தேவரும் புடைசூழவே
செம்மையுள நாற்பத் தெண்ணாயிரம் பண்ணவர்
சேர்ந்திரு மருங்கும்வரவே
ஏர்பரவு கருட காந்தருவர் நிகரில்லாத
எழில்சித்த வித்தியாதரர்
இயல்பெருகு கிம்புருடர் இராகதா ளங்களுடன்
இனியகீ தங்கள்பாட
கார்பரவு பரிசார மாமவுன கண்டத்து
கணிகையர்கள் ஆடல்புரிய
கருதரிய வேதங்க ளாய்ந்த பிரகஸ்பதி
களிப்பினுட னாசி சொல்ல
போர்பரவு வச்சிரா யுதமஸ்த மின்னவே
புனிதமிகு தேவ ராசன்
புகழ்பெற்ற நவரத்தின கொலுவிற்கு வருகிறார்
புலவரே எச்ச ரிக்கை !

# தேவேந்திர ராசன் வருகிற

## விருத்தம்

இராகம் : தோடி

14. ஐந்தருக் கதிபன் தூய
அமரர்கள் வணங்கும் பாதன்
சுந்தர முளச சிக்குத்
தோன்றிய காந்தன் மின்னும்
சந்திர வாரம் பூண்டு
தயங்குபொன் முடிபு னைந்து
விந்தைசேர் செங்கோ லேந்தி
வேள்விநா யகன்வந் தானே !

## வசனம்

"அகோதெப்படி யென்றால், கற்பகத்தரு, காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி என்னும் பஞ்ச தருவுக்கும் அதிபதி, தேவர்கள் பணியும் பாதமுடையவன், அழகிய இந்திராணிக்கு நாயகன், பிரகாசம் பொருந்திய சந்திர ஆரம் தரித்து, ஒளியுள்ள பொற்கிரீடந் தரித்து, விநோதமாகிய செங்கோல் கையிலே பிடித்து, வேள்வி நாயகனாகிய இந்திரன் வருகிற விதங் காண்க !"

# இந்திரன் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி* *தாளம் : ஆதி*

## பல்லவி

15. இந்திர தேவன் வந்தான் - கொலுவிருக்க
இந்திர தேவன் வந்தான் !

## அனுபல்லவி

இந்திர தேவன் வந்தான் இமையவர் சூழவே
ஐந்தரு நிழலினில் அமர்ந்தவன் வாழவே - இந்திர

## சரணங்கள்

முப்பத்து முக்கோடி முடிதேவர் அடிதாழ
செப்பமுள முனிவர்திகழ் கிம்புரு டர்சூழ
தப்பிலா நாரதர் தகையாய் வீணை வாசிக்க
ஒப்பிலாப் பெரியோர்கள் உகந்துநனி நேசிக்க - இந்திர
அந்தணர் குருமுதல் அருமையாய் மறைபாட
அரம்பையர் அனைவரும் அருகில்கா மறைபோட
அந்தர துந்துபி அலைகடல் போல்தொனிக்க
சிந்தை மகிழ்ந்தெவருஞ் சிரமேற்க ரங்குவிக்க - இந்திர
அறையில்பீ தாம்பரம் அணிந்துக ரங்களில்
அறியவச் சிராயுதத் தால்நக ரங்களில்
மருவுமலைச் சிறகை யரிந்தம காவீரன்
பொருவிலா அழகுறும் புலோமசை யணை மார்பன் - இந்திரன்

(பொருவிலா - ஒப்பிலா)

# இந்திரராசன் கடவுளைத் துதித்தல்

## விருத்தம்

*இராகம் : மோகனம்*

16. அலைகடல் கடைந்தே எங்கட்(கு)
அமுத முமன்பா லீந்து
நிலைபெற அருள்பு ரிந்த
நிர்மலா போற்றி போற்றி
இலகிய எனது செங்கோல்
எந்நாளும் செலுத்த மிக்க
நலமுறு கிருபை செய்யும்
நாரணா போற்றி போற்றி !

## வசனம்

"அலைகளை யுடைய சமுத்திரத்தில் மந்தரகிரியை மத்தாக நாட்டிக் கடைந்து, அமுதத்தை எங்களுக்குக் கொடுத்து, இரட்சித்த பரப்பிரம்ம சொரூபனே, சரணம் ! சரணம் ! பிரகாசம் பொருந்திய என்னுடைய செங்கோல் எப்போழ்தும் குறைவில்லாமல் நடத்தும்படிக்கு கிருபைசெய்யும் நாராயணா, உமது பாதாரவிந்தமே சரணம், சரணம், சுவாமி !"

# தேவர்கள் போற்றி

## விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

17. படியையோ ரடியால் முன்னம்

பாங்குட னேய ளந்த

நெடியமா லடியை நாளும்

நெஞ்சினி லிறைஞ்சி ரத்ன

முடிபுனைஞ் தரசு செய்யும்

முதல்வனே போற்றி வண்டார்

கடிமலர் மாலை பூண்ட

காவலா போற்றி போற்றி !

## வசனம்

''பூமியெல்லாம் ஓரடியாக முன்னாளையில் அளந்த நெடிய மாலாகிய மகாவிஷ்ணுவின் திருவடியை மனதினில் சதாகாலமும் வணங்கி, தௌத்தியம் செய்து, நவரத்ன கிரீடம் புனைந்து, அரசு செய்யப்பட்ட நாயகனே போற்றி ! வண்டுகள் மொய்க்கும் பரிமளமுள்ள புஷ்பமாலை தரித்த இந்திரராசனே சரணம், சரணம், சுவாமி !''

(தௌத்தியம் - தூது)

## கட்டியம் இந்திரனுக்குப் போற்றி

### கலிவிருத்தம்

18. போற்றி போற்றி பொருந்து மமைச்சர்க்கும்
போற்றி போற்றி புகழுறுஞ் சோதரர்
போற்றி போற்றி புலோமசை கேள்வனே
போற்றி போற்றிநின் பொன்னடி போற்றியே !

## பிரகஸ்பதி இந்திரனுக்குச்சொல் வாழி

### விருத்தம்

19. விண்ணுறு மமரர் வாழ்க
வெள்ளைவா ரணமும் வாழ்க
தண்ணுறு நீழற் பஞ்ச
தாருவும் தழைத்து வாழ்க
மண்ணுறு மொழியா ளான
பாங்குறு சசியும் வாழ்க
எண்ணரு முனது செங்கோல்
எந்நாளும் வாழ்க வாழ்கவே !

### வசனம்

"தேவலோகத்தில் வாசம் செய்யும் தேவர்கள் வாழ்க ! வெள்ளை யானையாகிய ஐராவதமும் வாழ்க ! குளிர்ந்த நிழலைத்

தருகின்ற பஞ்ச தருவும் வாழ்க ! இனிமையான வசனத்தை யுடைய அழகிய அயிராணியும் வாழ்க ! நினைக்கவும் அருமையாகிய உம்முடைய செங்கோல் எந்தநாளும் நீடுழியாக வாழ்க ! வாழ்க உனது இந்திர ராசனே!''

## இந்திரன் தேச விசாரணையும் மந்திரி விடையும்

20. இந்திரன் : சீர்பெருகு நமதுலகில் திங்களின் மும்மாரி
திறமாகவே பெய்யுதா?

மந்திரி : கார்பெருகி வானிலே பாரெங்கும் மும்மாரி
கருணையாய் மழை பெய்யுது !

நிறைவாகி யாகாதி கருமங்கள் தடையின்றி
நியமமொடு செய்கி றார்கள் !

இந்திரன் : மறையோது மந்தணர் மந்திரம் யாகாதி
வழுவாது செய்கி றாரா?

அயனுமா லரனிட ஆலையங் களில்பூசை
அன்பாகச் செய்கி றாரா?

மந்திரி : தயவான குணபூல தப்பாமல் அறுகாலம்
தான்பூசை செய்கி றார்கள் !

இந்திரன் : நான்கு வருணத்தார்கள் அவரவர்
முறைப்படி நண்பாய் நடத்து றாரா?

மந்திரி : தேன்பரவு சோலைசூழ் சுவர்க்கனே அவரவர் செய்யுமுறை செய்து வாரார் !

இந்திரன் : நமதுலகில் ஆவு புலி கூடியோர் துறையில்நீர் நண்பாக வேயுண்ணு தா?

மந்திரி : உமதுசக்க ராக்கினை தவறாமல் புலிபசுவும் ஓர்துறையில் நீருண்ணு து !

இந்திரன் : தருமதே வதைநாலு பதமலர்க ளாலுமே தரணியில் நடந்துவரு தா?

மந்திரி : அருமையுள தருமதே வதைநான்கு பாதத்தில் அவனியில் நடந்துவரு து !

இந்திரன் : நயவுலகில் வாழ்குடிகள் யாவர்க்கும் எதனாலும் நஷ்டமுண் டோசொல்லு வீர்?

மந்திரி : இயலிறைவ னேபுவியில் வாழ்கின்ற குடிகளுக்கு கியாதொன்றும் இடையூரி லை!

இந்திரன் : பாங்குலவு கற்பக விருட்சமது கேட்டதைப் பகிர்ந்தளித் தேவருகு தா?

மந்திரி : ஓங்குபுகழ் இறைவனே கேட்டதைக் கற்பகம் உவந்தளித் தேவருகு து!

# கட்டியன் பொதுக் கவி

21. இவ்வித மிந்திரன் இயற்கொலு விருக்கையில்
செவ்வை நாரதருஞ் சிறப்புடனே வாரார் !

## வசனம்

''இந்தப் பிரகாரமாக தேவேந்திரன் கொலுவில் இருக்கும்போது, வீணையில் வல்லவராகிய நாரத மாமுனிவர் வருகிற விதங் காண்க !''

## நாரதர் வருகிற

## விருத்தம்

*இராகம் : தோடி*

22. கரத்தினில் வீணை கொண்டு
கமண்டல மதனைக் கொண்டு
சிரத்தினில் சடைமு டித்துச்
சிறக்கவி பூதி பூசி
பரத்துவஞ் தனையு ளத்தில்
பன்னியிந் திரன்ச பைக்கு
திறத்துவே தங்க ணாவில்
தேர்ந்தநா ரதர்வந் தாரே !

## கட்டியன் வசனம்

''கையினில் வீணை தண்டு கமண்டலம் பிடித்து, சிரசினிற் சடைகளை முடித்து, சரீரம் எங்கும் விபூதி பூசி, பரத்துவமான வஸ்துவை மனத்திலே தியானம் செய்து, தேவராசன் ரத்ன சிம்மாசனக் கொலுவிற்கு வேத பாராயணத்தில் தெளிந்தவரான நாரத மகா முனிவர் வருகிற விதங் காண்க !''

## நாரதர் வருகிற தரு

*இராகம் : மோகனம்* *தாளம் : அட*

### பல்லவி

23. விகசித நாரதரும் வந்தார் - சபைதனிலே
விகசித நாரதரும் வந்தார் !

### அனுபல்லவி

இகபர சுகத்தினை இஷ்டமுட னெவர்க்கும்
இன்னவிபர மென்றே பன்னிப்பண்ணி யுரைக்கும் - விகசித

### சரணங்கள்

பாகவத விரா மாயணம் பாரதம்
பதிந்த பொருள்களைப் பகர்ந்தெத வர்க்குநிதம்
யோகமுற வேயின்னம் போதிக்கு முன்னதம்
உண்மையாக வாய்ந்த உறுவன்சு வர்க்கபதம் - விகசித

எட்டுத்தி சையிலுள்ள மட்டிலா யோகரும்
திட்டமாய்ப் புகழ்ந்திடும் கட்டழக னான
அட்டாக் கரப்பொருள் கஷ்டமில் லாமலே
இட்டமுட னுரைக்கும் துஷ்டநிக் ரகஞான - விகசித
காவிவஸ் திறந்தனைக் களிப்புட னேயுடுத்து
கவின்செயும் ருத்திராட்சம் கரத்தினி லேஎடுத்து
மேவிய மிதியடி மென்கழ லில்தொடுத்து
விண்ணவர் முனிவரை நண்ணம னமடுத்து - விகசித

## நாரதர் சொல்லிடு வசனம் :

"ஆரடா, அடா மனோன்மணி ! அடா சிரோன்மணி ஓ ! சீடா!"

சீடர் வசனம் : "சுவாமி வந்தீர்களா?"

நாரதர் : "வந்தோம் சீடா !"

## இந்திரன் நாரதருக்குப் போற்றி

### விருத்தம்

24. பிரமநற் குலத் தித்துப்
பிரணவந் தனைய றிந்த
திறமுறு முனிவர் கோவே
திருவடிக் கமலம் போற்றி
கரவொன்றும் உளத்தில் லாமல்
கழறுநா ரதரே போற்றி

உரமுடன் ஆச னத்தில்

உசிதமா யிருப்பீர் போற்றி !

### வசனம்

"பிரம குலத்திலே அவதரித்துப், பிரணவப் பொருளை யறிந்த ஞானமூர்த்தியாகிய முனிவர் கோவே !உமது பாதார விந்தமே சரணம் ! மனத்திலே கபட வஞ்சனையாகிய நினைவு தன்னுமில்லாமல் உண்மையை வெளியிடும் நாரதரே ! சரணம் சரணம் ! இந்த ஆசனத்தில் இருப்பீர், பிரம புத்திரராகிய நாரதரே !"

## நாரதர் இந்திரனுக்கு வாழி

### விருத்தம்

*இராகம் : தோடி*

25. விண்ணவ ரினந்த ழைக்க

விகசித முனிவ ரோங்க

பண்ணவ ராசி கூற

பலத்தரின் செங்கோல் நாளும்

திண்ணமாய்ச் செழித்து வீர

தேவியிந் திராணி யோடு

கண்ணனா ரருள்பெற் றிங்கு

களிப்புடன் வாழி வாழி!

### வசனம்

"முப்பத்து முக்கோடி தேவர்களுந் தழைத்து வாசம் செய்யவும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் உயர்ச்சி யடையவும், அவர்களா சீர்வாதம் சொல்லவும், பலம்பொருந்திய உமது செங்கோல் சதாகாலமும் கிரமமாக மிகுதியும் பெருமை யுண்டாகவும் இந்திராணி தேவியுடன் ஸ்ரீமத் நாராயணனுடைய கிருபை பெற்று, சந்தோஷத்துடன் சுவர்க்கத்தில் வாழ்க ! வாழக்கடவது இந்திர மகாராசனே !"

## இந்திரன் கட்டியனுக்குச் சொல் கவி

26. கட்டியக் காரா, அட்டியில் லாமல்
திட்டமாய் ரம்பையைச் சட்டமா யழைப்பாய் !

### வசனம்

"ஆரடா, அடா ! கட்டியக்காரே ! நம்முடைய கொலு முன்பாக நிருத்தம் செய்யும் நடன மாதராகிய அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமையை அதிசீக்கிரமாய் அழைத்துக் கொண்டு வாடா, கட்டியக் காரா!"

## கட்டியன் நடன மாதருக்குச் சொல்

### பரணி

27. சீருறும் ரம்பை மாரே !
திறலுள்ள இந்திர ராசன்

ஏருறும் சபைக்க ழைத்தார் !

இக்கணம் வருகு வீரே !

(ஏர் - அழகு)

## வசனம்

"அகோ! கேளும் அரம்பாஸ்திரீகளே ! தேவேந்திர மகாராசன் ரத்ன சிம்மாதனக் கொலுவுக்கு உங்களை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் ! சீக்கிரம் வாருங்கள், அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமையே !".

## நடணமாதர்கள் வருகிற

## விருத்தம்

*இராகம் : சௌராஷ்டகம்*

28. செண்டுநேர் தனமு மொத்த
சேல்கெண்டை விழியும் வாய்த்த
கண்டுநேர் மொழிமி குந்த
கவினுள அரம்பை மாதர்
முண்டகக் கரத்தில் யாழு
மோதமாய் எந்தி அன்பாய்த்
திண்திறல் இந்தி ரன்பொன்
திகழ்கொலு வருகின் றாரே !

(கண்டு - கற்கண்டு)

## வசனம்

"கெண்டைப் போன்ற தனபாரமும், சேல் கெண்டையை ஒத்த நேத்திரமும், கற்கண்டைப் போல இனிமையான வசனமும், ரூபலாவண்யம் உள்ள அரம்பாஸ்திரிகள் கையிலே வீணை எடுத்துக்கொண்டு, ஆசையுடன் பராக்கிரம மிகுந்த தேவேந்திர மகாராசன் கொலுவிற்கு அரம்பாஸ்திரிகள் நான்குபேரும் வருகிற விதம் காண்க!"

## நடனமாதர் வருகிற தரு

*இராகம் : சௌராஷ்டகம்*

### பல்லவி

29. வந்தார் வடிவைப் பாரீர் - நடனமாதர்
வாரார் வடிவைப் பாரீர் !

### அனுபல்லவி

அந்தமாய்ச் சேலை மின்ன
ஆபர ணங்கள் துன்ன
இந்திர னழைத்திட
பந்தமாய்ச் சனபதனில் - வந்தார்

### சரணங்கள்

மின்னற் கொடிபோல் இடையும் - சீவிவகுத்த
பின்னிச் சாய்ந்தசெஞ் சடையும்
அன்ன நடையுடைய அரம்பையர் நல்லவரும்
உள்ளத மாகஒளி ஓங்கு சபைதனிலே - வந்தார்
விழிவலை தன்னையே வீசியே தேவர்முனிவர்
வெருண்டிய மனது கூசியே
எழிலுறும் பொற்கிண்ணம் போலத் தனமசைய
கழலிற் பதித்ததண்டை சதங்கை ஒலியிசைய - வந்தார்
அரம்பை திலோத்த மையரும் - ஊர்வசி
அழகு மேனகை நால்வரும்
சரம்விடு மன்மதன் தாள்கண்டு மயங்கவே
வரம்பெற்ற முனிவர்கள் மயல்கொண்டு தயங்கவே -
வந்தார்

## நடனமாதர் இந்திரனுக்குப் போற்றி

### விருத்தம்

30. மாகற்க ளிறைவா போற்றி
வான்முகி லூர்தி போற்றி
நாகலோ கத்தாய் போற்றி
நவில்சசி பதியே போற்றி
ஆக மில்லா தெங்கட்(கு)
அன்னைபோல் காக்கும் நெஞ்ச

மோகவிந் திரனே யுந்தன்
முளரிபொற் பாதம் போற்றி

### வசனம்

"தேவர்களுக்கு வாகனனே சரணம் ! மேக வாகனனே சரணம்! சுவர்க்க வாசனே சரணம் ! இந்திராணி நாதனே சரணம் ! வருத்தமில்லாமல் எங்களுக்குத் தாயைப்போல் காத்து இரட்சிக்கின்ற மன வாஞ்சையுடைய இந்திர மகாராசனே, உமது தாமரை மலர் போன்ற பாதமே சரணம் ! சரணம் சுவாமிம் !"

## நடனமாதர் இந்திரனுக்குச் சொல் எச்சரிக்கை

31. சீராரும் ஐந்தரு கேட்டதை தினமுவந் தளிக்க
ஏராரும் நற்சுக மேவிய இறைவா எச்சரிக்கை !
குயிற்போற் குரற்கிளி போல்மொழி கோத இந்திராணி
மயல்கொண் டணைபுய வத்திரி மகிபா எச்சரிக்கை !
தீயகொடும் பாவிவிருத்திர னாதிய ரினங்கள்
மாயம்பு ரிந்தாய் தேவர்கள் மன்னா எச்சரிக்கை !
இடமேவிய தடமாதிர இறகைக் குலிசத்தால்
திடமேவி யறுத்தே ஒளிர்தேவே எச்சரிக்கை !
விண்ணோர்களும் நண்ணார்களும் விரும்பிப்பணி பூந்தாட்
கண்ணாயிர முதல்வாசெங் கோற்கரனே எச்சரிக்கை !
அணிமேவிய நவரத்ன வாரம்பள பாளன்ன
மணிமேவிய மார்பா மொழிமதுரா எச்சரிக்கை !

# இந்திரன் நடனமாதருக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

32. கிளிநிகர் மொழியுங் காற்போற்
கேசமுங் கழைபோல் தோளும்
தளிர்மதி முகமும் மின்னல்
உடுக்கைபோல் மருங்குஞ் சூதத்
தளிருறழ் மெய்யும் வாய்ந்த
சதுரரி வையரே நீங்கள்
அளியுடன் பரத நாட்டியம்
அற்புத மாய்ச்செய் வீரே !

## வசனம்

"கிளியைப் போன்ற சொல்லும், மேகம் போன்ற கூந்தலும், பச்சை மூங்கில் போல் திரண்ட தோளும், பிரகாசமுள்ள சந்திரனைப் போன்ற முகமும், உடுக்கை ஒத்த இடையும், மாந்தளிர் போன்ற சரீரமும் பொருந்திய அரம்பாஸ்திரீகளே, நீங்கள் நால்வரும், அன்புடனே, பார்த்தவர்கள் அதிசயிக்கத் தக்க' பரதநாட்டியம் செய்யுங்கள் மாதர்களே!"

அரம்பாஸ்திரீகள் சொல் வசனம் : "அப்படியே செய்கிறோம் தேவேந்திர மகாராசனே!"

## அரம்பாஸ்திரீகள் நாட்டியஞ் செய்கிற தரு

### பல்லவி

33. நடன மாடினார் பாரீர் ! - அரம்பை மாதர்
நடன மாடினார் பாரீர் !

### அனுபல்லவி

அடல்விழி வலைவீசி அறியமொழி கள்பேசி
திடமா மதனையேசி சீருறுந் தேவதாசி - நடன

### சரணங்கள்

சீர்பெறு பணிகள் என்ன - அவளுடுத்த
சேலை பளப ளென்ன - மலரணிந்த
ஏர்பெறு குழலசைய இருகரமு மிசைய
வார்பெறு பயோதரங் குலுங்க இலங்கநன்றாய் - நடன
எட்டுத் திக்கோரும் புகழ - இவரைப்பார்த்து
கட்டி யணைத்தே நெகிழ - இணையில்லாத
வட்டமதி வதனமிட்ட திலதப் பொட்டு
திட்டஒளி வுமன்ன நட்டவர் புடைதுன்ன ! - நடன

## கட்டியனுக்கு இந்திரன் சொல் கவி

34. வாசற் கட்டியனே கேளாய் !
நேசமாய் நடனஞ் செய்த

தாசிகள் தனக்குப் பொன்னும்

தூசுடன் அளித்து வாராய் !

### வசனம்

"ஆரடா அடா! நமது கொலுவாசல் காக்கும் கட்டியக்காரா, நமது முன்பாக நிருத்தம் செய்த அரம்பாஸ்திரீகளுக்கு வேண்டிய திரவியமும் வஸ்திரமும் கொடுத்தனுப்பும் பிள்ளாய், கட்டியக்காரா!"

## இந்திரன் சபையோருக்குச் சொல் விருத்தம்

35. கற்பகத் தாரு வைகுங்

கனகலோ கத்துள் ளோரே

அற்புத மாய்த்த வஞ்செய்

அறிவுள முனிவ ரேநீ;

நற்புவி மூன்றி னுக்குள்

நண்ணிய மாதர் தம்மில்

கற்பினி லேமி குந்த

காரிழை யாற்சொல் வீரே!

### வசனம்

"கற்பக விருட்சம் இருக்கப்பட்ட கனகலோகமாகிய இந்த கரத்தில், வாசம் செய்யும் தேவர்களே! அதிசயமான தவஞ்செய்யும் அறிவுடைய முனிவர்களே! நீங்கள் சொர்க்க மத்திய பாதாள மென்னும் மூன்று லோகத்திலும் இருக்கிற ஸ்திரிசாதிகளில்

கற்பினிலே சிறந்தவர் யார், அவர்களை எனக்குத் தெரியச் சொல்லுங்கள் சபையோரே !''

## நாரதர் இந்திரனுக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

36. அண்ட மத்திய பாதாளம்
அதிலுறை நங்கை மாறில்
தண்டக வனத்தில் வீறும்
தவமுனி பிருகு தேவி
முண்டக மலரை ஒத்த
முகமுள புலோமி சைத்தான்
மண்டலத் தெவ்ரும் போற்றும்
மகிமைசேர் கற்பின் மிக்காள் !

### வசனம்

''கேளும், தேவேந்திர மகாராசனே! சொர்க்கம், மத்தியம் பாதாளம் என்று சொல்லப்பட்ட மூன்று லோகங்களில் இருக்கின்ற ஸ்திரீசாதிகளில், தண்டகாரண்ணியத்தில் வாசஞ் செய்து கொண்டிருக்கும் பிருகு மகா முனிவர் பத்தினி, தாமரை மலர்போன்ற முகத்தினை உடைய புலோமசை அம்மாள், உலகத்தில் எவரும் போற்றும் பெருமை மிகுந்த கற்புடையவள் தேவமகாராசனே !''

# இந்திரன், நாரதருக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : நாட்டை

37. அரியயன் அரனாற் தேவி
 அருந்ததி இந்தி ராணி
உரியநன் மாதர் தம்மை
 உரைக்காமல் வனத்தி ருக்கும்
திறமுறு பிருகு தேவி
 சிறந்தகற் புடையாள் என்று
தரமுடன் உரைத்த சேதி
 சகலர்க்குங் காண்பிப் பாயே!

## வசனம்

"கேளும் நாரதரே ! மகாவிஷ்ணுவினுடைய பாரி லட்சுமிதேவி, பிரமதேவர் மனைவியாகிய சரசுவதி, சிவனுடைய பாரி பார்வதி, இந்திராணி, அருந்ததி இவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, வனத்தில் தவம்செய்யும் பிருகு மகா முனிவர் பத்தினியை கற்பினிற் சிறந்தவளென்று உறுதியாகச் சொல்லிய சங்கதியை சகலமான பேருக்குங் காண்பிப்பீர் நாரதரே !"

(பாரி - மனைவி)

# நாரதர், இந்திரனுக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : பைரவி*

38. இப்பொழு துரைத்த சேதிக்(கு)
        இசைவுற நாளைக் கேயான்
    தப்பிலா தெவரும் நன்றாய்ச்
        சபாசென்று மெச்சிக் கொள்ள
    ஒப்பமாய்ச் செய்வே னெற்குச்
        சீக்கிரம் செலவு தந்தால்
    ஒப்ப னையா யதைத்தான்
        உங்களுக் கறிவிப் பேனே!

## வசனம்

''கேளும் இந்திரராஜனே, இன்றைய தினம் நான் இந்தச் சபையில் சொல்லிய சங்கதியைச் சரிப்படுத்த, நாளையதினம் ஒப்பில்லாமல் யாவர்களும் சபாசென்று மெச்சிக்கொள்ளும் படிக்குச் செவ்வையாய்ச் செய்கிறேன்! எனக்குச் சீக்கிரம் செலவு தந்தால், அலங்காரமாக புலோமசையம்மாள் கற்பின்பெருமையை உங்களுக்குத் தெரிவிக்கிறேன், இந்திர ராசனே !''

# கட்டியன் பொது வசனம்

''இந்தப் பிரகாரமாக நாரதமுனிவர், புலோமசையம்மாள் கற்பிலே மிகுந்தவள் என்ற சங்கதியை உறுதிப்படுத்துவதற்கு

எண்ணித் தன் ஆசிரமத்துக்கு வந்து, சீடர்களை அனுப்பி விசுவகர்மனை அழைக்கச் சொல்லுகிற விதங் காண்க !''

## நாரதர் சீடர்களுக்குச் சொல் கவி

39. கரமதில் தண்டம் வரமுட னேந்தும்

திறமுள **விஸ்வ பரமனை** அழைப்பாய் !

### வசனம்

''ஆரடா, அடா சீடர்களே ! கையிலே தண்டு பிடித்துவரும் விசுவப் பிரமனை அழைத்து வாரும் பிள்ளாய், சீடர்களே !''

சீடர்கள் வசனம் : அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறோம் நாரத முனிவரே !''

## விசுவப்பிரமன் வருகிறபோது சொல்லுகிற கட்டியம்

40. நெடியபா லாழியிற் கண்வளரு மாலுக்கு

நீளம்ப ளித்தவனும் யான் !

நியமமிகு திசைமுகப் பிரமற் கெழுத்தாணி

நிர்மித் தளித்தவனும் யான் !

விடையின்மிசை யேறிவரு பரமேஸ் வரர்க்குமழு

விரும்பிக் கொடுத்தவனும் யான் !

வேழமுக வற்கிளைய செங்கல்வ ராயற்கு

வேற்படை தந்தவனும் யான் !

தடையின்றி சந்திரனைச் சாணையி லேவைத்துத்
தளர்வுறச் செய்தவனும் யான் !
தயவுடன் வனிதைய ரணிந்திடப் பணிகளுந்
தாலியுந் தந்தவனும் யான் !
படிமிசை உழுதுபயி ரிடுகுடிகளுக்குப்படை
பலதினுசு தந்தவனும் யான் !
பகரனும கேதனன் காளிகா வரம்பெற்ற
பன்னுகுல விஸ்வன் யானே !

## விஸ்வம்பிரமன் வருகிற

## விருத்தம்

*இராகம் : நாட்டை*

41. சிரத்தினில் மகுடம் பூண்டு
திருநுதல் பூதி யிட்டு
உரமுடன் சந்த னத்தை
உசிதமாய்த் தரித்து மார்பில்
வரமுறு பூணூல் மின்ன
வாள்கதை ஆயு தங்கள்
கரமதி லேந்தி விஸ்வ
கர்மனும் வருகின் றானே !

### வசனம்

"அகோதெப்படி யென்றால், விஸ்வபிரம்மாவானவர் சிரசிலே மகுடந் தரித்து, அழகிய நெற்றியில் விபூதி யணிந்து, சந்தனத்தை யலங்காரமாய் மார்பிலே யணிந்து, பூணூலானது பிரகாசிக்கும்படி தோளிலிட்டு, வாளும் கதையும் கையிலே பிடித்துக் கொண்டு, விசுவபிரமன் நாரதமுனிவரிடம் வருகிற விதங் காண்க!"

## விசுவப் பிரமன் வருகிற தரு

இராகம் : நாட்டை

### பல்லவி

42. விஸ்வப் பிரமன் நானே ! - தெய்வலோக
விஸ்வப் பிரமன் நானே !

### அனுபல்லவி

அஸ்வனியா லுதித்த அஸ்வத் தாமனுக்குப்
பிசகிலா ஆயுதம் பிகுவுடனே தந்த - விஸ்வ

### சரணங்கள்

அனுமன் இலங்கை எரிக்க - இராவணனும்
அயர்ந்தெனைத் துதிக்க
முனைந்து முன்னுக் குயர்வாய் - முடித்திலங்கை நகரம்
தனையர சாட்சிசெய்யத் தயவாக வேதந்த - விஸ்வ

துரியோ தனனழைத்து - அரக்கினாலே

துலங்கு மாளிகை இழைத்து - விரைவாகத்

தரவேணும் என்றோதத் - தகுந்த சுரங்கம் வைத்து

தருமனை வளரக்காத்துத் தரணியை ஆளவிட்ட - விஸ்வ

தவமுனி சுதன் வெய்ய - சூரபத்மன்

தானர சாண்டுய்ய - எண்ணியரும்

நவமணி போலொளிரு நகரஞ் செய்யுமென்ன

தவறில் லாதசயிஞ்ச கிரியைச் சமைத்துத்தந்த - விஸ்வ

## விசுவப்பிரமன் நாரதருக்குச் சொல்

### விருத்தம்

43. சடைமுடி யுடனே கானில்

தவம்புரிந் தீச நல்கும்

திடமுள வரங்கள் பெற்ற

திறமுறு முனியே போற்றி

விடைசெயும் சீட ராலே

விரைந்தெனை அழைத்த சேதி

தடையிலா தேயெ னக்குச்

சாற்றுநின் பாதம் போற்றி !

### வசனம்

''சடைமுடியுடனே காட்டினிடத்தில் தவங்களைச் செய்து, பரமேஸ்வரர் கிருபையுடன் கொடுத்த பெரிதான வரங்களைப்

பெற்ற பராக்கிரமமுடைய மகாமுனிவரே, சரணம் சரணம், உமது பணிவிடைகளைச் செய்துவரும் சீடர்களை விடுத்து என்னை அழைத்த சேதியைத் தடையில்லாமற் சொல்லும் நாரத மகா முனிவரே !''

## நாரதர் விஸ்வப் பிரம்மாவுக்குச் சொல்

### விருத்தம்

44. சங்கரி விழியி லுற்ற
தகைபெறு காளி யாலே
இங்கித வரம்பெற் றோங்கும்
எழில்விஸ்வ குலனே வாழி!
துங்கமா யிரும்பின் முற்றும்
துலங்கவே எஃகுவி னாலே
இங்குநீ கடலை நாடி
இக்கணம் செய்தீ வாயே !

### வசனம்

''பார்வதி நேத்திரத்திற் பிறந்த பண்புள்ள காளியினுடைய வரப்பிரசாதம் பெற்றுக், கீர்த்தி மிகுந்த விஸ்வ குலத்தவனே, வாழக் கடவாய், வலுவுள்ள இரும்பினாலும், எஃகினாலும், நாழி கடலை செய்து, இப்பொழுதே எனக்குக் கொடுக்க வேணும் விஸ்வப்பிரமனே !''

## விசுவப் பிரமன் சொல் வசனம்

"அப்படியே செய்து கொடுக்கிறேன் மகா முனிவரே !"

## விசுவப்பிரமன் இரும்பு எஃகினால் கடலை செய்கிற தரு

**இராகம் : மோகனம்** **தாளம் : ஆதி**

### பல்லவி

45. கடலை செய்தானே - விஸ்வப்பிரமன்
கடலை செய்தானே !

### அனுபல்லவி

நடலை என்றில்லா நாரதர் கூறிய
திடமுள வாக்கியஞ் சிரசின்மேற் கொண்டு - கடலை

### சரணங்கள்

இரும்பெஃகு வினாலிஷ்டம் வைத்துமிக
அரும்பெனப் பிளப்பாக வேயடைவாய் - கடலை
மந்திர யோகியர் மாதவருங் கண்டு
விந்தை யிதென்று விளம்பமகிழ் கொண்டு - கடலை
கற்புறும் பார்க்கவி கலைமகள் பார்வதி
அற்புத மென்ற ஆனந்தம் மீறவே - கடலை

# விசுவப்பிரமன், நாரதருக்குச் சொல்

## விருத்தம்

46. கமலமா மலராள் கயிலைக்

கௌரிவொண் முளரி நங்கை

அமுதென வார்த்தை யுற்ற

அருந்ததி உள்ளம் நாண

இமைப்பொழு தினாலே யானும்

இரும்பெஃகுக் கடலை செய்தேன்

விமலரே வாங்கிக் கொண்டு

மிகமன மகிழு வீரே !

## வசனம்

"கமல மலரில் உதித்த மகாலெட்சுமியும், கயிலையில் வாசம் செய்யும் பார்வதியும், வெள்ளைத் தாமரை மலரில் உதித்த சரஸ்வதியும், அமிர்தம்போல் மதுரமான வசனமுள்ள அருந்ததியும் மனது வெட்கும்படிக்கு ஒரு நிமிஷத்தில் இரும்பினாலும் எஃகுவினாலும் கடலை செய்தேன்! வாங்கிப் பார்த்து மகிழ்ச்சி அடையும் நாரத முனிவரே !"

## நாரதமுனிவர், விசுவப்பிரமனுக்குச் சொல்

### பரணி

47. பெரும்புகழ் விசுவப் பிரமனே ! நீர்செய்
அரும்புறழ் கடலை அற்புதந் தானே !

(அரும்புறழ் = அரும்பு + உறழ்; அரும்பு போன்ற)

### வசனம்

''பெருத்த புகழையுடைய விசுவப் பிரமனே! அரும்பைப் போல நீர் செய்த கடலை மெத்தவும் அதிசயம், அதிசயம் ஐயா !''

## கட்டியன் சொல்

### விருத்தம்

*இராகம் : மத்தியமாவதி*

48. மெய்யுளநார தன்பால் விடைபெற்றுவிசுவப் பிரமன்
பையவே தன்ன கர்க்கும் பரிவுடன் சென்ற பின்பு
செய்யவம் முனிவன் தானும் சீடர்கள் தமைய ழைத்து
தையல்பங் கமலன் வாழும் தலம்புக விளம்பு வானே !

### வசனம்

''இந்தப் பிரகாரமாக சத்திய வாக்கியரான நாரதரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, விஸ்வப் பிரமன் தன்னுடைய

நகரத்திற்குப் போயிருந்தான். அதன்பிறகு, நாரதமகா முனிவர் சீடர்களை அழைத்து தையல் பங்கு அமலனாகிய அர்த்த நாரீஸ்வரன் வாழும் கயிலாயம் போய் வருவோம் வாரும் என்று சீடருக்குச் சொல்லும் விதம் காண்க!''

## நாரதர் சீடருடன் கயிலாயத்துக்குப் போகிற தரு

*இராகம் : மோகனம்* *தாளம் : காப்பு*

### பல்லவி

49. வாராய் மனோன் மணியே;-கயிலாயம்
பாராய் சிரோன் மணியே;

### அனுபல்லவி

வாராய் நாமூவர்க்கு நேராக மகமேரு
சீராகத் தோன்றுது ஓராயதன் பெருமைவாராய்

### சரணங்கள்

முப்பத்து முக்கோடி முனிவர் எல்லோரும்
தப்பாமல் பூசித்துத் தாழ்ந்த துதியிடம் - வாராய்
நாவலர்கள் சொல்லும் நாற்பத் தெண்ணாயிரம்
தேவர்களும் நண்ணித் திருவடிக் காசிப்பர் - வாராய்
திகழு ஞானோதயச் சிவகணங் கள் கூடி
மகிழுடன் எந்நாளும் வாசம் செய்யுமிடம் - வாராய்

## கட்டியன் வசனம்

''நாரத மகாமுனிவர் சீடர்களுடன் கயிலாயத்திற்குப் போய், பார்வதியைப் பணிந்து, துதிசெய்து சொல்லுகிற விதம் காண்க?''

## நாரதமகாமுனிவர் போற்றி

### விருத்தம்

50. மாதிரத் தரசன் முன்செய்
மாதவம் அதனில் தோன்றி
கோதியின் இடப்பா கத்தில்
துன்னிய தாயே போற்றி
பூதலத் துயிர்கள் அன்பு
பொருந்தியே காக்கும் நல்ல
மாதயை உடையே கௌரி
மாதுமை யாளே போற்றி

### வசனம்

''மலையரசனாகிய பர்வதராசன் செய்யும் தபோபலத்தினால் புத்திரியாகப் பிறந்து, பரமசிவனது இடப்பாகத்தில் அமர்ந்து வாழ்கின்ற அன்னையே சரணம், உலகத்திலுள்ள எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளின் பேரில் அன்புவைத்து ரட்சிக்கும் நல்ல கிருபையுள்ள கௌரி! அழகிய உமையவளே!சரணம் தாயே!''

## நாரதர் பார்வதிக்குச் சொல்

### விருத்தம்

51. தரணியில் எண்ணான் கென்று
சாற்றிய தருமந் தன்னை
கிருபை வாருதியே உந்தன்
கிளர்மலர்ப் பாதம் போற்றி
கருதருங் கடலை நாழி
கனிவுடன் கொண்டு வந்தேன்
அருமையாய் வறுத்துச் சுண்டல்
ஆகச்செய் தளப்பாய் அம்மா!

### வசனம்

"கேளும் உலகத்தில் முப்பத்திரண்டு தருமங்களையும் செய்த கிருபா சமுத்திரமே! உமது பிரகாசம் பொருந்திய, மலர்போன்ற பாதமே சரணம்! அடியேன் தங்களிடத்தில் நாழிகடலை கொண்டு வந்தேன்! செவ்வையாய் வறுத்துச் சுண்டல்செய்து என் பசியாறத் தின்னும்படி கொடுத்தருள வேனும் அம்மணி, பார்வதி!"

## பார்வதி நாரத மகாமுனிவருக்குச் சொல்

### விருத்தம்

52. எத்தலத் தோறும் போற்ற
இசையுறு வீணை தண்ணில்

மெத்தவுஞ் சிறந்தே ஓங்கும்
மேதைநா ரதனே வாழி!
பத்தியாய் நீகொ ணர்ந்த
பாற்கட லையை வறுத்து
வைத்ததைச் சுண்டல் செய்து
வழங்கவே காது போவீர்!

### வசனம்

"பதினாறு லோகத்திலுள்ள யாவரும் போற்றும் படிக்கு இசைபொருந்திய வீணை வாத்தியத்தில் அதிகமாகச் சிறந்தோங்கிய மெஞ்ஞானத்தை உடைய நாரதரே, வாழி! அன்புடன் நீர் கொண்டுவந்த எஃகு, இரும்பினாலே அமைந்த கடலையை வறுத்து, அதைச்சுண்டல் செய்து கொடுப்பதற்கு, அந்தக்கடலை வேகாது! எடுத்துக்கொண்டு போய்வாரும் நாரதரே!"

### நாரதர் வசனம்

"அப்படியே போய்வருகிறோம், எங்கள் அன்னையாகிய பராசக்தியே!"

## நாரதர் சீடருக்குச் சொல் தரு

*இராகம்: தன்யாசி*

### பல்லவி

53. வாராய் சிரோன்மணியே - வைகுந்தம்
பாராய் மனோன்மணியே!

## அனுபல்லவி

ஆராலுங் காணாத ஆடக மயமான

சீராரும் வைகுந்த தரிசனம் செய்குவாய் - வாராய்

## சரணங்கள்

திருமாலின் மலர்க்கழல் தினமும் பணிந்தேத்தி

பரமானந்தம் பெற்ற பாகவதரிடம் - வாராய்

நிகரில் பன்னிருவரும் நித்திய சூரிகளும்

மகிழுற் றுறைகின்ற மகிமை யுள்ளதலம் - வாராய்

மணியா யிரந்தலை மன்னி வயங்கிய

பணியாதி சேடன்மேற் பரிவாய் வைகும்புரி -வாராய்

## கட்டியன் வசனம்

"நாரத மகாமுனிவர் சீடர்களுடன் வைகுந்தத்திற்கு வந்து மகாலட்சுமியைக் கண்டு, போற்றி செய்கிற விதம் காண்க!"

# நாரதர் மகாலட்சுமிக்குப் போற்றி

## விருத்தம்

54. கஞ்சத்தில் அவத ரித்து

கார்வண்ணன் உரத்தில் உற்ற

வஞ்சிமின் னலைநி கர்ந்த

மருங்குலென் தாயே போற்றி

தஞ்சமென் றடைந்த பேர்க்குத்

தானருள் செய்து காக்கும்

அஞ்சமென் றடைசி றந்த

அன்னையே போற்றி போற்றி!

## வசனம்

''செந்தாமரைக் கமலத்தில் அவதாரம் செய்து, கார் வண்ணனாகிய மகாவிஷ்ணுவினுடய மார்பிலே யிருக்கும் வஞ்சிக்கொடியையும் மின்னலையும் நிதர்த்த, இடையுள்ள தாயே சரணம்! அடைக்கலம் என்று வந்தவர்களுக்குக் கிருபை செய்து, இரட்சிக்கும் அன்னம் போன்ற நடை பொருந்திய மாதாவாகிய உமது பாதமே சரணம், சரணம்!''

# இதுவும் நாரதர் மகாலட்சுமிக்குச் சொல்

## விருத்தம்

55. உலகத்துள் ளுயிரை நாளும்

உகந்த ளிக்கும் மாலுக்கு

நலமுற்ற மனைவியான

நளினநின் பாதம் போற்றி

இலகிய கடலை உன்தன்

இடத்திலே கொண்டு வந்தேன்

அவைவின்றி வறுத்துச் சுண்டல்

ஆகச்செய்(து) எனக்கீ வாயே!

**வசனம்**

''சர்வலோகத்திலுள்ள உயிர்களையெல்லாம் சந்தோஷத்துடன் இரட்சிக்கும் மகாவிஷ்ணுவுக்கு மனைவியாகிய கமலையே, நின்னுடைய பாதமே சரணம்! அடியேன் கடலை கொண்டு வந்தேன்; அந்தக் கடலையை வறுத்துச் சுண்டல் செய்து, என் பசிதீரத் தின்னும் படி கொடுக்க வேணும், எனது அன்னையே!''

## மகாலட்சுமி நாரதருக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

56. பாரினில் தவமி ருந்த

பாக்கிய நாரதரே வாழி

சீரிய ஞானம் வண்மை

சிறந்த பண்ணவரே வாழி

தீரமாய் நீர்கொ ணர்ந்த

திகழ்கட லையை வறுத்து

வீரமாய்ச் சுண்டல் செய்ய

வேகாது கொடுபோ வீரே!

(வண்மை - வள்ளல் தன்மை)

## வசனம்

"உலகத்தில் தவபாக்கியமும், சிறந்த மெய்ஞானமும், புகழும் மிகுந்த நாரத மகாமுனிவரே, வாழி வாழி! நீர் தீரமாய்க் கொண்டுவந்த எழுகடலையை வறுத்துச் சுண்டல் செய்து கொடுக்க, அந்தக்கடலை வேகாது! நீர் எடுத்துக் கொண்டு போவீர், நாரத மகாமுனிவரே!"

நாரதர் வசனம்: "அப்படியே போய் வருகிறோம், எங்கள் தாயாகிய மகாலட்சுமியே!"

## கட்டியன் வசனம்

"இந்தப் பிரகாரம், கடலை வேகாது என்று சொன்னதைக் கேட்டுக் கொண்டு நாரதமுனிவர் சத்தியலோகம் போவதற்குச் சிஷ்யரை அழைக்கின்ற விதம் காண்க!"

## நாரதர் சீடருக்குச் சொல் தரு

### பல்லவி

57. வாராய் எனது சீடரே! - சத்தியலோகம்
பாரீர் எனது சீடரே!

### அநுபல்லவி

தீராத பழிதன்னைத் தீர்க்கும் சத்தியலோகம்
வாராய் நமதுதாய் வாணியைப் பணிந்திட - வாராய்

## சரணங்கள்

நல்வினை தீவினை நன்றாக வேயறிந்து
பல்பிராணி களையும் படைப்போன் தலமதற்கு - வாராய்
சித்தம் தளருராமல் தீவிரமாய் நடந்து
பத்தியுட னேவாரும் பகாரன் பிதாநகரம் - வாராய்
உயர்ந்த புரிமுக வழகுந் தெரியுது
வியந்தெவர் களும்புகழ் மேன்மை யுடையதலம் -
வாராய்

## கட்டியன் வசனம்

''நாரதர் சத்தியலோகம் போய்த் தாயாராகிய சரஸ்வதியம்மனைப் போற்றி செய்கின்ற விதங் காண்க!''

## நாரதர் சரகவதிக்குப் போற்றி

## விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

58. மருமணம் வீசும் வெள்ளை
வாரிசம் தனிலு தித்து
திருமறை யுணர்ந்த வேதன்
செய்யநா வமர்ந்தாய் போற்றி
குருமலி சுவேதன் பூண்கள்
குணமுடன் தரித்தாய் போற்றி

பெருமைசேர் புலவ ருள்ளம்
　　பிறங்கிய தாயே போற்றி!"

## வசனம்

" வாசனை வீசுகின்ற வெள்ளைக் கமலத்தில் அவதாரஞ் செய்து, சிறந்த நான்கு வேதங்களையு மறிந்த பிரமதேவரது சிவந்த நாவிலே வாசஞ்செய்யு மன்னையே போற்றி! வெண்மை நிறமுள்ள ஆபரணங்கள் நல்ல பண்புடன் தரித்த முதல்வியே போற்றி! பெருமையான கல்வியுள்ள புலவர் இதயக்கமலத்தில் பிரகாசித்திருக்கிற உலகமாதாவே போற்றி! போற்றி!"

## நாரதர் சரகுவதிக்குச் சொல்

## விருத்தம்

59. காசினி தனிலுள் ளோர்க்குக்
　　கல்வியைக் கனிவாய் நல்கும்
தேசினி லேமி குந்த
　　சேயிழை தாயே கேளும்
பேசிய கடலை நாழி
　　வெட்புடன் கொண்டு வந்தேன்
ஆகையாய் வறுத்துச் சுண்டல்
　　ஆகச்செய் தேயீ வாயே!

### வசனம்

''கேளும் உலகத்திலே யுள்ளவர்க்குக் கல்வியை இஷ்டமுடனே கொடுத்துக் கிருபை செய்யும் பிரகாசமிகுந்த அன்னையே! சொல்லப்பட்ட நாழி கடலை அன்புடன் கொண்டுவந்தேன்; அதை வறுத்துச் சுண்டல் செய்து அடியேன் பசிதீரத் தின்னும்படிக்குக் கொடுத்தருள வேண்டும் சரஸ்வதித்தாயே!''

## சரசுவதி, நாரதருக்குச் சொல்

### விருத்தம்

60. தவத்தினில் மிகுந்தோய் வாழி
        தகைதுவா ரகையில் வாழும்
    பவத்தினை அகற்றும் சத்திய
        பாமா ருக்கு மணிக்கு
    நவமுள வினை யாலே
        நடத்திய கலகம் போலே
    கவனமாய்ச் செய்ய வந்தாய்
        கடலையும் வேகா தய்யா!

### வசனம்

''தவத்தினில் மிகுந்த நாரத முனிவரே, வாழி! துவாரகாபுரியிலிருந்த கிருஷ்ணதேவரிடபாரியாளான உருக்குமணி

சத்தியபாமைக்குக் கலகம் செய்தது போல இப்போதும் இவ்விடத்தில் கலகம் செய்ய வந்தாய், இந்த எஃகுக் கடலையை வறுத்துச் சுண்டல் செய்ய, அது வேகமாட்டாது! எடுத்துக்கொண்டு போவீர் நாரத முனிவரே!''

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

*இராகம் : தோடி*

61. தடமுறு மதில்கள் சூழும்
சத்திய லோகம் விட்டுத்
திடமுள சீடர் சூழத்
திறல்முனி வருகும் போது
கடமதி லுறைந்து பிஞ்ஞு
களைப்பணி பிருகு மன்பாய்
மடமுள சீடர் சூழ
மகிழுடன் வருகின் றாரே!

### வசனம்

''இந்தப் பிரகாரம் நாரதமுனிவர் பெரியமதில்களால் சூழப்பட்ட சத்தியலோகத்தை விட்டு, திடமுள தனது சீடர்கள் சூழ்ந்துவர, ஆரணியத்திற்கு வரும் போது, காட்டிலிருந்து

பரமசிவனை நோக்கித் தவம் செய்யும் அன்பிற் சிறந்த பிருகு முனிவர், சீடர்களுடன் வருகிற விதம் காண்க!''

## பிருகு முனிவர் வருகிற

### விருத்தம்

*இராகம் : சாவேரி*

62. சுக்கிரன் சுதனாய் வீறி
துலங்கிய பிருகுங் காரார்
மைக்குழல் மனைவி சூழ
மரவுரி புனைந்து கானில்
தக்கசெஞ் சடைமு டிந்து
தண்டுகைத் தலத்தில் ஏந்தி
முக்கணன் பாதம் காணை
முனிவரும் வருகின் றாரே!

### வசனம்

''சுக்கிர பகவான் புத்திரராகிய பிருகு மகாமுனிவர் மைக்குழலாளாகிய கருத்த கூந்தலையுடைய புலோமசை அம்மாள் பக்கத்திலே வரத் தனது இடையில் மரவுரி உடுத்தி, சிரசிலே சடைமுடி தரித்து, கையிலே தண்டு கமண்டலம் பிடித்துத், தண்டகாரணியத்தில் பரமசிவனைத் தோத்திரம் செய்ய வருகிற விதங் காண்க!''

# பிருகுமகா முனிவர் வருகிற தரு

*இராகம் : சௌராஷ்டகம்*

## பல்லவி

63. பிருகு முனிவர் வந்தார் தவமியற்ற
பிருகு முனிவர் வந்தார்!

## அனுபல்லவி

பிருகு முனிவர் வந்தார் பெட்பு மனைவியோடு
பெருகும் புகழுடைய பிஞ்ஞுகன் பதம் காணப் - பிருகு

## சரணங்கள்

சிரத்தில் சடைமு டித்துக் கரத்தினில்
திவ்விய தண்டம்பிடித்து அகன்றநல
உரத்திலே எழிலுற்ற அக்குமணியைத் தரித்து
பஞ்சாட்சரந் தன்னையே உச்சரித்து - பிருகு

அரையிற் காவி யுடுத்துக் காலினில்
அருமிதியடி தொடுத்து நீங்காமலே
திறமாய் முப்புரி நூலுந்திகழவே !
பிரபலமாக வெண்ணீறும் பிறங்கவே - பிருகு

அரகரா பரஞ்சோதியே கொன்றை தரித்த
அமலனே என்றோதியே இதயத்தில்

பரிவுடன் எட்டெழுத்தைப் பத்தியுடன் துதித்து
உரிய சீடர்களும் உவந்துவரக் குறித்து - பிருகு

## பிருகு முனிவர் வசனம்

"ஆரடா அடா வேதாந்தம் !"

"ஐயா !"

"அப்பா, அடா! அதி சந்தோஷம் !"

"சுவாமி வந்தீர்களா?"

"கூட இரும் !"

## பிருகு மகா முனிவர் சீடருக்குச் சொல்

### பாணி

64. தினமும் இல்லறத்தைச் சீருடன் நடத்தென்
மனைவியே இங்கு வரச்செய்கு வீரே !

### வசனம்

"கேளும் பிள்ளாய், வேதாந்தம் ! அடா அதிசாந்தம் ! தினந்தோறும் இல்லற தருமத்தை மறவாமல் பரிபாலனம் செய்யும் எனது மனைவியாகிய புலோமிசையை, யான் அழைத்துவரச் சொன்னதாய்ச் சொல்லி, இவ்விடம் வரச் செய்யும் !"

சீடர்கள் வசனம் : "அப்படியே வரச் செய்கிறோம், சுவாமி !"

## கட்டியன் வசனம்

"இந்தப் பிரகாரமாக பிருகு மகா முனிவர், தன் மகா பத்தினியாகிய புலோமிசையம்மாளைச் சீடர்கள் வந்தழைக்க பர்த்தாவாகிய பிருகு முனிவரிடம் புலோமிசை வருகிற விதம்!"

## புலோமிசை வருகிற

### விருத்தம்

*இராகம் : பந்துவராளி*

65. சிலையிளம் பிறையாம் நெற்றி
திலதப்பொட் டொளிகள் துன்ன
மலையிள நீரை ஒத்த
வார்குய மார்பிற் சாந்தம்
நிலையுடன் அணிந்து கூந்தல்
நீட்சியும் முடித்துக் கொண்டு
இலகிய கற்பின் மிக்காள்
எழிற்புலோ மிசைவந் தாளே !

### வசனம்

"வில்லைப் போலும், மூன்றாம் பிறையைப் போலும் உள்ள நெற்றிக்குத் திலதப் பொட்டு பிரகாசிக்க, பருமைக்கு மலையையும், திரட்சிக்குத் தென்னங் குரும்பையும் ஒத்த கச்சணிந்த தனபாரமுள்ள மார்பிலே சந்தனம் பூசி, நீண்ட கூந்தலை முடித்து, பிரகாச மிகுந்த

கற்பினையுடைய புலோமிசையம்மாள், பிருகு மகா முனிவரிடம் சீடப்பிள்ளைகளுடன் வருகிற விதங் காண்க''

## புலோமிசையம்மாள் வருகிற தரு

*இராகம் : பந்துவராளி*

### பல்லவி

66. மாது புலோமிசை வந்தாள் - கற்பினில் மிகு
மாது புலோமிசை வந்தாள் !

### அனுபல்லவி

ஓது மலர்க்குழலில் கோதை மலர்புனைந்து
நாதன் அழைத்ததொரு சேதி தெரியவென்று - மாது

### சரணங்கள்

படிவ மன்மதன்யாரும் வடிவைக் கண்டுமயங்க
இடையினை நோக்கியின்னற் கொடிய துந்தயங்க - மாது

அதிதிகளுக் குஞ்சதா உதவிசெய் பாக்கிய
பதிவிரதா தருமம் அதிலே சிலாக்கிய - மாது

ஆதர்வாகப் பண்பு போதசீடர்கள் சூழ
தீதிலாக்கற்றக் கண்ட மாதர்களடி தாழ - மாது

# புலோமிசையம்மாள் பிருகு முனிவருக்குச் சொல்

## விருத்தம்

67. கண்டனைப் பாதத் தாலே
தருக்குடன் உதைத்து நன்மார்க்
கண்டனுக் கீரெட் டீந்த
கடவுளைப் போற்று நாதா
முண்டக முகத்தாள் என்னை
முக்கியமாய் அழைத்த சேதி
விண்டெனக் குறைக்க வேண்டும்
வித்தகா போற்றி போற்றி

## வசனம்

இயமனைத் தனது பாதத்தினாலே பூமியில் விழச் செய்து, நல்ல ஞானத்தையுடைய மார்க்கண்டனுக்குப் பதினாறு வயது கட்டளையிட்டு அருளிய பரமசிவன் திருவடியை வணங்கித் தோத்திரஞ் செய்யும் பிராணநாதா! அடியேனை முக்கியமாய் இவ்விடத்தில் அழைத்த சேதியை விபரமாக எனக்குத் தெரியச் சொல்ல வேணும் ஞான சொரூபராகிய முனிவரே

# பிருகு மகா முனிவர் புலோமிசையம்மாளுக்குச் சொல்

## விருத்தம்

68. கற்பினுக் கிணையில் லாமல்
கதித்தொளிர் மாதே கேளாய்
பொற்புறுமிவ்வ னத்திற் பொருந்தி
பொருந்தினாள் தவமி யற்றி
நற்பலன் பெற்று வாரேன்
நான்பரு மளவு நீயும்
அற்புத மாக நன்றாய்
ஆசிரமத் திருந்தி டாயே

## வசனம்

"கேளும் கற்பினுக்கு நிகரொருவரும் இல்லாமல், அதிகமாக விளங்கிய புலோமிசையே, பொற்பாகிய இந்த அழகிய வனத்திலிருந்து நான் சிவபெருமானைக் குறித்து தவசு செய்து, நன்மையாகிய பலன்களைப் பெற்றுக் கொண்டு வருகிறேன். நான் வருகிறவரைக்கும் நீ அதிசயமாக நன்றாக ஆசிரமத்தில் இருப்பாய் புலோமிசையே!"

## புலோமிசையம்மாள் வசனம்

"அப்படியே இருக்கிறேன் பிராண நாதா".

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

இராகம் : தோடி

69. கருத்தில் அஞ்செழுத்தை உன்னி
காலகரம் அசைவில் லாமல்
பருத்திடும் விழியை நாசி
படுமுனை அதனிற் சேர்த்து
திருத்திஐம் புலன்ஒ டுக்கி
சீருறு யோகம் தன்னில்
வருத்தங்கள் நீக்கித் தன்னை
மறந்துமா தவஞ்செய் தாரே

## வசனம்

"மனதிலே பஞ்சாட்சரமாகிய நமசிவாய என்று பெயரை உச்சரித்துப் பாதமும் கையும் அசையாமல், நேத்திரங்களை நாசி முனையாகிய மூக்கின் முனையில் சேர்த்து, செவ்வையாகிய ஐம்புலன்களாகிய மெய்,வாய், கண், மூக்கு, செவி என்பதை ஒடுக்கி சிறப்புண்டாகும்படிக்கு, யோகத்தில் வருந்தங்களையெல்லாம் ஒழித்து, தன்னை மறந்து ஸ்தம்பித்தவராக பிருகு மகாமுனிவர் தவஞ்செய்கிற விதம் காண்க.

## பிருகு மகா முனிவர் தவத்திலிருந்து சொல்லுகிற நோத்திரத் தரு

*இராகம் : மத்தியமாவதி*

70. அரனே உமைபரனே கெங்காதரனே பிறை சிரனே
உரனே மழுகரனே லிங்காதரனே வந்திங்காள்வாய்
கரனே கிருபாகரனே தயாபரனே சடாதரனே
பரனே பராபரனே நிராதரனே மறிகரனே
வேணி சூலபாணி கைலைகாணி அருள்பூணி
நாணி சிரம்வளைத்துத் தந்தநாதா பிரக்யாதா
தண்ணார் மதிசடையா வெள்ளைவிடையா மழுப்படையா
திண்ணார் நாகக் குழையாய் அருளுடையாய் உமையுடையாய்
விமலா கரகமலா எங்களமலா முனம்வருவாய்
நிமலா அடியேன்முன் வந்து நிகழ்த்தும் வரம் தருவாய்

## பிருகு முனிவர் சொல் தேவாரப்பரணி

71. சிந்துர முரித்தாய் போற்றி
திங்கள்வேணியனே போற்றி
சுந்தரர்க் காகக் கங்குல்
தூதுசென் றவரே போற்றி
மந்திர முனிவர் எல்லாம்
வழுத்துமெய்ப் பொருளே போற்றி
நந்திவா கனனே போற்றி
நாயேன்முன் வருவாய் போற்றி

### வசனம்

அரஹரா, மதயானையின் தோலுரித்தவனே சரணம்! மூன்றாம் பிறையை அணிந்த சமாதரனே சரணம்! மந்திரம் உணர்ந்த ரிஷிகள் எல்லாம் தோத்திரம் செய்யும் மெய்ம்மையான ஞானப் பொருளாக விளங்கியவனே சரணம் சுந்தரமூர்திக்காக , அர்த்தராத்தியில் பறவை நாச்சியார் வீட்டுக்குத் தூது சென்ற கர்த்தனே சரணம்! இடபவாகனத்தையுடைய முதல்வனே சரணம்! அடியேன் முன்வந்து தரிசனம் தந்து இரட்சியுமையா சரணம்,சரணம்!

## பிருகு முனிவர் சொல் தரு

**இராகம் : மோகனம்**

### பல்லவி

72. அருள் செய்யவேணும் - அடியேன் முன்வந்(து)
அருள் செய்யவேணும்!

### அனுபல்லவி

மருமலியும் கருக்கை மாலை தரித்தவேணி
கருதலர் இனத்தினைக் கண்டிக்கும் சூலபாணி! அருள்
நங்கை பத்திரை யுடனடித்த மலர்ப்பதனே
மங்கை உமையவளை வைத்தஇயல் பாகனே!-அருள்
உழுவையதன் மிடைவளைந்த சங்கரா தேவர்
தொழுதுதுதிக் கும்என்முன் துரிதத்தினிலே வாவா!-அருள்

வடவரையைச் சிலையாய் வளைத்த மலர்க்கரனே
அடலரவினை அணியாகப் பூண்ட பரனே- அருள்

## கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரமாக, பிருகு மகாமுனிவர் பரம சிவனை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது நாரத முனிவர் வருகிறவிதங் காண்க!''

## நாரதர் வருகிற பொரு விருத்தம்

*இராகம் : தோடி*

73. பதினாலு புவனத் தெங்கும்
பதிவுடன் சஞ்சரித்து
நிதமட மாதர் தங்கள்
நிலைமையை அறிந்து கொண்டு
துதிமிகு வீணை தெண்டு
தோடகக் கரத்தில் ஏந்தி
அதிதவ பிருகு வாழும்
ஆசிரமம் வருகின் றாரே!

### வசனம்

பதினாலு லோகமெங்கும் ஆசையுடன் சஞ்சரித்து அங்கங்குள்ள ஸ்திரீகளின் கற்பு நிலைமைகளைத் தினந்தோறும் தெரிந்து கொண்டு, கடவுளைத் துதித்து, வீணை மீட்டிக் கொண்டு,

தண்டு கமண்டலம் பிடித்து, அதிகத் தவ மகிமையுள்ள பிருகு மகாமுனிவர் ஆசிரமத்திற்கு நாரத முனிவர் வருகிறவிதங் காண்க!

## நாரதர் வருகிற

### தரு

*இராகம்: நாதநாமக்கிரியை*

### பல்லவி

74. நமோ நமோ சிவா என்று
நாரதர் வந்தாரே!

### அனுபல்லவி

அமோகமாகத் தவம்புரியும் ஐயன் பிருகுமுனி
ஆசிரமந் தன்னைநாடி அதிவிரைவில் ஓடி-நமோ

### சரணங்கள்

கமலை கௌரி செல்வி கருத்தினை அறிந்தோமே
நிமலி புலோமிசை நிலையை அறியவென்று - நமோ
கடலைதனை எடுத்துக் கலைதனிலே முடிந்து
அடலுடைய தெண்டையாட்டி வீணையை மீட்டி-நமோ
யோகந்தனைத் தொடுத்து யேகன்தனை அடுத்து
நாகமணிந் தோன்பாதம் நாடிமிகக் கொண்டாடி-நமோ

# நாரதர் புலோமிசை அம்மாளுக்குச் சொல்

## விருத்தம்

75. ஆரணப் பொருள றிந்த
அந்தணன் பிருகுக் கன்பாந்
தாரமா யமர்ந்தே வைகும்
தையலர்க் கரசே கேளும்
ஏருடன் யான்கொ ணர்ந்த
எகுக்கட வையை வறுத்து
ஆரவே சுண்டல் செய்திங்(கு)
அன்புடன் அளித்தி டாயே!

## வசனம்

"வேதத்தின் பொருள்களை யெல்லாம் குறைவில்லாமற் தெரிந்த பிராமணராகிய பிருகுமகா முனிவருக்குப் பிரியமுள்ள பெண்சாதியா யமைந்த பெண்களுக் கெல்லாம் நாயகமே! அழகாக நான் உம்மிடத்தில் கொண்டுவந்த எகுக் கடலையை வறுத்துச் சுண்டல் செய்து புசிக்கும் படிக்குச் கொடுக்கவேணும், புலோமிசைத் தாயே!"

# புலோமிசையம்மாள் நாரதருக்குச் சொல்

## பரணி

76. திகழுள வீணையில் தேர்ந்தமா முனிவரே
எக்குக் கடலையை நீறென்கையில் தாரும்!

### வசனம்

''நாதம் விளங்கும் வீணையிலே தெளிவை உடைய பெருந்தவ நாரதா முனிவரே! எக்குவினால் செய்த கடலையை என்கையிலே கொடுத்தருளும், சமைப்போம் சுவாமி!''

நாரதர் வசனம் : ''அப்படியே கொடுத்தேன் தாயே!''

## புலோமிசையம்மாள் எஃகுக் கடலையைக் சமையல் செய்கிற தரு

இராகம் : சௌராஷ்டகம் தாளம் : ஆதி

### பல்லவி

77. கடலையைச் சுண்டல் செய்தாள்!-புலோமிசை
கடலையைச் சுண்டல் செய்தாள்!

### அனுபல்லவி

பெருகும் புகழ்விஸ்வ பிரமன் இரும்பெகுவில்
அருமையாய்ச் செய்ததை அழகிய கற்பினால் - கடலை

### சரணங்கள்

மகிழ்ந னுரைத்திடும் வார்த்தையைத் தடுக்காத
மகிமை யுடையமட மாதர சானவள்- கடலை
விரும்பி எவருங்கொள்ள மிருதுவாகிய நல்ல
அரும்பென வுஞ்சுவை அமைந்திருக்க வல்ல- கடலை

புரந்தரன் தேவரும் புசிக்கமனம் கொள்ள
திருந்திய நாரதன் செய்துவந்த கள்ள- கடலை

## புலோமிசையம்மாள் நாரதருக்குச் சொல்

### விருத்தம்

78. நான்முகன் சுதனாய் வந்த
நாரத முனிவ ரேயான்
சான்றவன் கிருபை யாலே
தகைபெறக் கடலை தன்னை
கான்மலர் போலே சுண்டல்
கனிவுடன் மெல்லி தாக
நான்ப யந்தே சமைத்தேன்
நலமுடன் கொள்வீர் ஐயா!

### வசனம்

''பிரமதேவருடைய புத்திரராக அவதரித்த நாரத மகாமுனிவரே! சூரிய பகவான் கிருமையினாலே நல்ல மதுரமுண்டாகக், கடலையை வாசனையுள்ள புஷ்பம் போல மிருதுவாகச் சமையல் செய்தேன்! அந்தக் கடலையை வாங்கிக் கொள்ளும் முனிவரே!''

## நாரதர் சொல் வசனம்

''அப்படியே வாங்கிக் கொள்ளுகிறேன் தாயே!''

## கட்டியன் பொது

### விருத்தம்

*இராகம் : சாவேரி*

79. மிருது சுவையுறக் கடலை சமைத்தளிக்க
வீணையினிற் சிறந்த முனிவருங்கைக் கொண்டு
பரிவுடனே புலோமிசையாள் சிலவு பெற்று
பார்வதி பார்க்கவி வெள்ளைமேனி யாட்டு
நரிவதற்காய் அவர்களுக்குத் தான்கொ ணர்ந்த
தேஞ்சுவை ஆகிய கடலைதனை அளிந்து
விரிவுடைபொன்னுல கதிபன் தனக்கு நல்கி
மெல்லிபுலோ மிசைகற்பை மெய்பித்தாளே!

## கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரமாக மிருதுவாகவும், மதுரமுள்ளதாகவும் சுண்டல் செய்து, வீணை நாதத்திற் சிறந்த நாரத முனிவருக்குக் கொடுக்க, அவர் அதை வாங்கிக் கொண்டு, அன்புடனே புலோமிசையம்மாளிடத்தில் செலவு பெற்றுக் கொண்டு, கைலாயத்திற்குப் போய்ப் பார்வதியம்மனுக்கும், வைகுந்தம் போய் மகாலட்சுமிக்கும், சத்தியலோகம் போய்ச் சரசுவதிக்கும் தெரிய வேண்டியதற்காக, அவரவர்களுக்குத் தான் கொண்டுவந்த கடலையைத் தின்று பாருமென்று கொடுத்து, பொன்னுலகதிப னாகிய இந்திரனுக்கும் கொடுத்து, பெண்கள் நாயகமாகிய புலோமிசையம்மாள் கற்பை மெய்யென்று உறுதிப் படுத்தி வைத்தார், நாரத முனிவரென்று அறிக! மேல் நடந்தது காண்க!''

## கட்டியன் சொல் கவி

*இராகம் : மோகனம்*

80. திரிலோகஞ் தனிலும்தேன்மொழி புலோமிசைக்
குரிய கற்பினர்கள் ஒருவரும் இல்லையென
அரிய வார்த்தைகளே ஆனதால் கைலைப்
பரிவுள பார்வதி பாங்கியர்க் குறைப்பாள்!

### வசனம்

சொர்க்கம், மத்தியம், பாதாளம் என்னும் இம்மூன்று லோகத்திலும் தேனைப்போலும் இனிமையான வசனத்தையுடைய புலோமிசைக்குச் சரியான கற்புடைய ஸ்திரீசாதிகள் ஒருவருமில்லை என்று அருமையான வசனங்கள் பிரபல மாயிருப்பதால் அதைக் கேட்ட கைலாச வாசகியாகிய பார்வதி தனது தோழிகளுக்குச் சொல்லுகிற விதம் காண்க!

## பார்வதியம்மாள், தாதிக்குச் சொல்

### விருத்தம்

81. கிளிமொழி தாதி மாரே
கின்னர நார தன்செய்
எளியகா ரியத்தை யானும்
இன்னதன் றறிய வேணும்
நளினமா மலரு தித்த
நங்கைஇந் திரையை வெள்ளை

ஒளியுளவா ணியையும் இங்கே
வந்துநீ வரவ ழைப்பாய் !

### வசனம்

"கிளியைப்போலே வசனத்தை யுடைய தாதிமாரே! வீணை வல்லவனான நாரத முனிவன் செய்திருக்கிற எளிய காரியமான அற்பச் செய்கையை இப்போர்க் கொத்ததென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும், செந்தாமரை மலரிற் பிறந்த பெண்ணாகிய மகாலட்சுமியையும் வெண்மையான திருமேனியுள்ள சரஸ்வதியையும் இவ்விடத்தில் அழைத்து வந்து விடுவாய் தோழியே!"

## தோழி பார்வதிக்குச் சொல்

### விருத்தம் பரணி

82. "அன்னையே உன்சொற் சென்னியிற் கொண்டு
பொன்னனை யிருவரும் நின்னிடங் கொணர்வோம்"

### வசனம்

"கேளுமம்மா, உமது வார்த்தையை நாங்கள் சிரசில் வைத்துக் கொண்டு அழகினையுடைய மகாலட்சுமியையும் சரஸ்வதியையும் உம்மிடத்தில் கொண்டு வந்து விடுகிறோம் எங்கள் நாயகியாகிய பார்வதியே!"

# தாதிகள் வருகிற பொது

## விருத்தம்

*இராகம் : தோடி*

83. அம்பிகை யுரைத்த மாத்திரம்
அழகுறு பாங்கி மார்கள்
வம்புடன் கலையு டுத்து
மாழையா பரணம் பூண்டு
விம்பவாய் தனிலே மிக்க
வெற்றிலை பாக்கும் இட்டு
சம்பிர மத்தோ டன்பாய்த்
தாதிகள் வருகின் றாரே!

## வசனம்

"அம்பிகையாகிய பார்வதியம்மன் சொல்லிய மாத்திரத்தில், தாதிப் பெண்கள் ரவிக்கையும் சேலையும் புனைந்து, பொன்னாபரணம் தரித்துக் கொண்டு, கொவ்வைப் பழம் போலும் சிவந்தவாயிலே வெற்றிலை பாக்கும் போட்டுக் கொண்டு சம்பிரமமாகத் தாதிகள் வருகிற விதம் காண்க!"

# தாதிகள் வருகிற தரு

*இராகம் : கல்யாணி* *தாளம் : ஆதி*

## பல்லவி

84. கமலைக் கலைமகனைக் காணக் கௌரியிட
கன்னிகள் வந்தனரே - உன்னதமான

## அனுபல்லவி

நிமைநேரத் திந்திறை சரஸ்வதியையும்
உமையழைந் தாளென்றே ஓத அதிவிரைவில் - கமலை

## சரணங்கள்

மெய்யிற் பணிதிபூண்டு துய்ய துகிடுத்தி
வையகம் புகழ்ந்திட தைய லிருவரும் - கமலை
தவமுனி நாரதர் சாற்றுஞ் சேதியாலே
அவமான மாச்சென்றே அறிவைய ராகிய - கமலை
கும்ப தனத்தழகி வம்பலர் குழலியர்
சம்பிரம தாகவே உம்பர் புகழ்ந்திடக் - கமலை

## கட்டியன் வசனம்

''பார்வதி யம்மனுடைய தோழிமார்கள் வைகுந்த நகரம் போய் மகாலட்சுமியைக் கண்டு துதி செய்கிற விதம்''

# தோழிமார் லட்சுமிக்குப் போற்றி

## விருத்தம்

85. செகத்தினில் உறைவோர்க் கெல்லாம்
செல்வமின் புடனே நல்கும்
அகத்தினில் கிருபை வாய்ந்த
அன்னையே போற்றி போற்றி
மகத்துவந் தனின்மி குந்த
மாயவ னுரத்தின் வாழும்
அகத்தினை யனைய செஞ்சொற்
சுந்தரி போற்றி போற்றி !

## வசனம்

"உலகத்திலுள்ள சகலமானவருக்கும் அன்புடனே ஐஸ்வரியத்தைக் கொடுத்து ரட்சிக்கும் கருணையுள்ள அன்னையே, சரணம், சரணம்! பெருமையினிலே மிகுந்த மாயவனாகிய மகாவிஷ்ணுவின் மார்பிலே வாசஞ்செய்யுங் கிளியைப் போலுந் செவ்வையாகிய சொல்லை யுடைய சுந்தரி சரணம், சரணம், அம்மா!"

# மகாலட்சுமி பார்வதி அனுப்பிய தாதிகளை வாழ்த்தும் கவி

86. பார்வதி யிடத்திற் பாங்கி வேலைசெய்
சீர்பெறு பெண்காள் சிரஞ்சீவி வாழ்க!

### வசனம்

''பார்வதி தேவியிடம் பணிவிடைகளைச் செய்யும் தாதிப் பெண்கலே, நீங்கள் சிரஞ்சீவியாய் வாழக் கடவீர் மாதே!''

## தாதிகள் மகாலட்சுமிக்குச் சொல்

### விருத்தம்

87. வானவ றெவரும் போற்றும்

வைகுந்த நகரந் தன்னில்

தீன தயாள னான

திருமாலின் உடனி ருக்கும்

மானெனும் விழியாய் உன்னை

மலைமகள் விரைந்த ழைத்தே

ஆனதோர் நொடிக்குள் வாவென்(று)

அனுப்பினாள் வருகு வீரே !

### வசனம்

''தேவர்கள் சகலரும் போற்றும் வைகுந்த நகரத்தில், தயாள குணம் பொருந்திய மகாவிஷ்ணுவின் பக்கத்தில் வீற்றிருக்கும் மான்போன்ற கண்ணினையுடைய மாதாவே, உம்மை பர்வதராஜன் குமாரத்தியாகிய பார்வதா தேவி சீக்கிரத்தில் அழைத்துக் கொண்டு வரும்படி சொன்னாள், வாருமம்மா எங்கள் நாயகியே!''

## மகாலட்சுமி, தோழிகளுக்குச் சொல் பரணி

88. மைப்புயல் குழலாள் வரும்படி சொன்னதால்
அப்படிக்கே யாங்கள் அன்புடன் வருவோம்.

### வசனம்

''கேளும், தோழிப் பெண்களே! மேகம் போலுங் கூந்தலையுடைய பார்வதாதேவி, என்னை அவ்விடம் வரும்படி அழைத்ததால், அந்தப்படிக்கு வருவோம் மாதர்களே!''

### கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரமாக, தாதிப் பெண்கள், மகாலட்சுமியைக் கைலாயத்திலிருக்கும் பார்வதியிடம்போகும்படி சொல்லி அனுப்பி விட்டுச் சத்திய லோகத்திற்குப்போய்ச் சரஸ்வதியம்மனைக் கண்டு வணங்கிப் போற்றி செய்கிற விதம்!''

## தாதிப் பெண்கள் போற்றிக் கொச்சகம்

89. சீராடும் ஈரேமு திண்பாரினிற் கல்வி
ஏராரும் படியருள்செய் ஏந்திழைநின் தாள்போற்றி
பேராடு நான்முகற்குப் பெட்ருலவு தாரமென
ஆராலுத் துதிபுரியும் அன்னையேநின் பதம் போற்றி!

### வசனம்

''சிறப்பு பொருந்திய பதினாறு லோகத்திலுள்ளவர்களுக் கெல்லாம் அழகுண்டாகும்படிக்குக் கல்வியைக் கொடுத்தருளும் ஏந்திழையாகிய சரஸ்வதி தேவி, உமது பாதமே சரணம்! பேரானது சகல இடங்களிலும் விளங்கிய நான்முகனாகிய பிரமதேவருக்குப் பெட்பாகிய அன்புள்ள மனைவி யென்று ஆராலும் யாபத்திராளுஞ் துதி செய்யும் உலக மாதாவே, உன் பதமே சரணம்!''

## சரஸ்வதி தேவி தாதிப் பெண்களுக்கு வாழ்த்துக் கவி

90. சத்திய லோகத்திற்குத் தருக்குடன் எனை நாடி
பத்தியாய் வந்தநல்ல பாங்கிகாள் வாழி வாழி!

## தாதிகள் சரஸ்வதியம்மனுக்குச் சொல்

### விருத்தம்

91. சாற்றரும் வெண்மை மேவும்
தாமரைக் கமலம் தன்னில்
வீற்றிருக் கின்ற பூர
மிசையிவர் தாயே போற்றி
நாற்றிசைப் புகழும் எங்கள்
நாயகி கௌரி உம்மை
போற்றியே அழைத்துக் கொண்டு
புரியுடன் வரச்சொன் னாளே!

## வசனம்

''சொல்லுதற்கு அருமையாகிய வெள்ளையாகிய தாமரைப் பொகுட்டில் வீற்றிருக்கும் படியான பூரவாகினியே போற்றி!நான்கு திக்கும் புகழப்பட்ட எங்கள் நாயகியாகிய பார்வதாதேவி உம்மை அழைத்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டாள். அன்பாகக் கைலைக்குப் போவோம் வாரும் சரஸ்வதித் தாயே!''

## சரஸ்வதி, தாதிகளுக்குச் சொல் பரணி

92. கவுரியும் அழைத்தாள் என்று

கனிவுடன் உரைத்த தாலே

அவசர மாக யானும்

அன்புடன் வருகு வேனே!

## வசனம்

''கவுரியாகிய பார்வதி என்னை வரும்படியாக அழைத்த படியால் நாமதி சீக்கிரமாக இப்பொழுதே போவோம் தாதிப் பெண்களே!''

## கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரமாகப் பார்வதாதேவி அனுப்பிய தாதிகள் சரஸ்வதியை அழைத்த பிறகு மகாலட்சுமியானவள் வைகுந்தத்தை விட்டுக் கைலாயத்திற்குக் கௌரியினிடம் வருகிற விதம் காண்க!''

# மகாலட்சுமி வருகிற தரு

*இராகம் : பந்துவராளி*

## பல்லவி

93. மதிநுத லிணைவாய்த்த அதிக வடிவழகி
மாது லட்சுமியும் வந்தாள்!

## அனுபல்லவி

துதிபுரிந்து பாங்கியர் தொழுதரு கினிற்சூழ
தூயருந் ததிக்கு மேலானவர் அடிதாழ - மதி

## சரணங்கள்

செய்ய கமலத்தைப் போற்சிறந்த வதனமும்
மையனைய குழலும் வாரணிந்த தனமும் - மதி
மின்னலென இடையும் விளங்குவாழைத் தொடையும்
கன்னலென மொழியும் கருதுமன நடையும் -மதி
பச்சை மூங்கிலைப் போற் பாங்குறு மிருதோளும்
இச்சகத்தை மதிக்கும் இலகுறு புரத்தாளும் - மதி

# மகாலட்சுமி பார்வதிக்குப் போற்றி

## விருத்தம்

*இராகம் : சாவேரி*

94. தண்ணருங் கூவி ளத்தார்
சடைதனில் தயங்கச் சூட்டி
வண்ணமான் மழுவை ஏந்து
மகேசன்பால் உறைவாய் போற்றி
திண்ணமார் பர்வ தேந்திரன்
செய்தவத் தாலு தித்த
எண்ணரும் வனப்பு வாய்ந்த
ஈசுவரி போற்றி போற்றி!

## வசனம்

"குளிர்ச்சி பொருந்திய வில்வமாலையைச் சடையிலே விளக்கமாய்த் தரித்துக் கொண்டு, மானும் மழுவையும் கரத்திலே ஏந்திய மகேஸ்வரனது இடப்பாகத்திலே யிருக்கின்ற பார்வதியே போற்றி! பலம்பொருந்திய பார்வதராஜன் செய்த பெரிய தவத்தினாலே அவதரித்த, நினைக்க அரிதாகிய சுந்தரமுள்ள ஈஸ்வரி போற்றி போற்றி!"

## பார்வதி மகாலட்சுமிக்குச் சொல்

### விருத்தம்

95. நறைகமழ் துளப மாலை
நகுகவுத் துவமும் பூண்ட
இறையவன் உரத்தில் வாழும்
இந்திரைப் பாதம் போற்றி
அறைகடல் சூழும் இந்த
அம்புலி தனிலே செல்வம்
நிறைவுடன் அளிக்கும் அன்பு
நிலவிய திருவே போற்றி!

### வசனம்

''வாசனை வீசப்பட்ட துளபமாலையும், பிரகாசமுள்ள கௌஸ் துவாபரணமும் தரித்த இறையவனாகிய மகாவிஷ்ணுவின் மார்பிலே வாசஞ்செய்யும் இந்திரையே போற்றி போற்றி! சப்திக்கப்பட்ட அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட உலகிலுள்ளவர்களுக்கு ஐஸ்வரியத்தை நிறைவாகக் கொடுத்து ரட்சிக்கும் கருணை விளங்கிய மகாலட்சுமியே போற்றி போற்றி அம்மணி!''

## கட்டியன் சொல் பரணி

*இராகம் : தோடி*

96. இந்திரை யம்மன் ஈசுவரி யிடத்தில்
வந்தனை தருணம் வாணிவந் தனளே!

## வசனம்

"மகாலட்சுமியம்மன் கைலாயத்தில் பார்வதியிடத்தில் வந்து ஆசனத்திலிருக்கும் போது, சத்தியலோகத்தை விட்டுச் சரசுவதி யம்மன் வருகிற விதங் காண்க!"

# சரஸ்வதி வருகிற

## விருத்தம்

*இராகம்: கல்யாணி*

97. குழலினை வாரிப் பின்னி
குளிர்முகந் திலத மிட்டு
இழைசகஸ் திரம்பொன் பெற்ற
இலகுறு துகிலு டுத்து
பழுதிலா மாணிக் கங்கட்
பதிந்தஆ பரணம் பூட்டி
எழிலுறு பனுவ லாட்டி
ஈஸ்வரி யிடம்வா றாளே!

## வசனம்

"இந்தப் பிரகாரமாகச் சரஸ்வதியம்மன் கூந்தலை வாரிப் பின்னிக் கொண்டு, குளிர்ந்த சந்திரனைப் போற்ற முகத்தில் திலதம் பொட்டு பிரகாசிக்க இட்டு, இழையாயிரம் பொன்பெற்ற ஒளியுள்ள வஸ்திரத்தை யுடுத்திக் கொண்டு, குற்றமில்லாத மாணிக்கங்கள்

பதித்த ஆபரணமெல்லாம் தரித்துக் கொண்டு பார்வதியம்மனிடம் வருகிற விதம் காண்க!''

## சரஸ்வதியம்மன் வருகிற தரு

*இராகம் : பந்துவராளி*

### பல்லவி

98. நறைமலர்க் கணையெய்யும்
நவமதன் துதிசெய்யும்
நங்கை சரஸ்வதி வந்தாள்!

### அனுபல்லவி

மறையவன் நாவில் வண்மையுட னேஉறை
இறைவிமா னிடவருக் கேற்றகல் வியைநிறை - நிறை

### (சரணங்கள்)

இட்டம் மிகுந்த பிரதிஷ்டை படைத்தவள்
மட்டவிழி வசைப் மொகுட்டில் இருப்பவள் - நறை

மின்னற் கொடி போலிடையாள் - எழில்
மேவும் கதலித் தொடையாள் - விதவித
வன்னம் பெருகி தேமல் மருவிய மார்பினள்
அன்ன நடையுடனே அம்பிகை தனைக்காண - நறை

அந்தர துந்துமி திந்திமி என்றிட

விந்தை அரம்பையர் வந்து பணிந்திட-நறை

கஞ்சமலர் போல் முகமும் இவள்வசனங்

கண்டு மருளஞ்சுகமும் - சிவந்தநிற

விஞ்சு மலர்க்கரத்தில் விளங்கும் தொடியொலிக்க

செஞ்ச ரணத்தில் சிலம்பு நனிதொணிக்க

சித்திர மயிலை நிகர்த்திடும் சாயல்மி

குத்த மடக்கொடி வித்தக நாயகி - நறை

சிலையைப் பழித்த நெற்றி - விழியால் மீனைச்

செலத்தில் ஒளிக்க அகற்றி

மலையைப் பழித்து சொர்ணவம் பிறுகுங் கொங்கை

வாரிச மலரினை மானஇரண்டு செங்கை

வால்வளை கமுகினைப் போல்வளர் கண்டமும்

ஆல்பத்திர மேயென மால்வயரே மிளிர - நறை

## சரஸ்வதி, பார்வதியைப் போற்றி

### விருத்தம்

99. தரும முப்பந்தி ரண்டும்

தரணியிற் றடையில் லாமல்

பெருமை யாகவே வளர்த்த

பெட்பு மாதாவே போற்றி

அருமையாய் மரக தம்போல்

அமர்ந்தநல் வடிவம் வாய்ந்த

மருமலர்க் குழலி கௌரி

மாதருக் கரசே போற்றி!

## வசனம்

''முப்பத்திரண்டு தருமங்களும் பூலோகத்திலே தடையில்லாமல் வளரும்படிக்குச் செய்த அன்பையுடைய அன்னையே போற்றி!யாவரும் சொல்லுதற்கு அருமையாய் பச்சை நிறமாகிய திருமேனியை யுடைய மலரணிந்த கூந்தலுள்ள பார்வதி பெண்களுக் கெல்லாம் அரசியாகிய தாயே போற்றி, போற்றி!''

## பார்வதி சரஸ்வதிக்கு வாழ்த்துப் பரணி

100. போற்றி யென்றுரைத்த புனித சற்குணியே

ஏற்றமாய் நீயும் என்றும் வாழ்வாயே!

## வசனம்

''என்னைப் போற்றிசெய்த பரிசுத்தமான நல்ல குணமுடைய பெண்ணே நீ சதா காலமும் வாழக் கடவது, சரஸ்வதி!''

101

# பார்வதி மகாலட்சுமிக்கும் சரசுவதிக்கும் சொல்

## விருத்தம்

101. மதிமிகு திருவே வித்தை
வாய்ந்தமா மடந்தை கேளும்
நதிகமண் டலத்தி லேந்தும்
நாரத னிவிடம் வந்து
துதிபுலோ மிசைவ றுத்துச்
சுண்டலும் செய்த ளித்த
சதியெடு கடலை காட்டித்
தானவ ரேகி னாரே!

## வசனம்

''விவேகத்திலே மிகுந்த மகாலட்சுமியே, கல்வி யஃதிகமாகத் தெரிந்த சரசுவதியே, நதியினுடைய நீரைக் கமண்டலத்திலே கொள்ளும் நாரத முனிவர் இவ்விடம் வந்து, புகழ்விளங்கிய புலோமிசை யிடத்திற்குப் போய் எஃகு கடலையைக் கொடுத்து வறுத்துச் சுண்டல் செய்து வாங்கி கொண்டு, அதையிவ்விடம் கொண்டு வந்து காண்பித்து அவர் போய் விட்டார், அதற்கு நாம் என்ன செய்யலாம்? சொல்லுங்கள்!''

# மகாலட்சுமி, பார்வதிக்குச் சொல்

## விருத்தம்

## (எண்சீர்க் கழிநெடிலடி விருத்தம்)

102. சீராகும் நமதுநா யகரே இந்தத்
திரிலோகத் துள்ளார்க்கும் கர்த்தா என்று
பேராகும் படிகீர்த்திப் பிரகா சித்துப்
பிரபலமுற் றேயிருக்க நம்மை யெல்லாம்
ஏராலும் கற்பினிலும் தெய்வத் தன்மை
ஏற்றமதி லுஞ்சிறந்த இறைவி என்றும்
பாராரும் புகழிருக்க முனிவ னம்மைப்
பழித்ததைநாம் பதிகளுடன் பாகர்வோ மம்மா

## வசனம்

''கேளும் பார்வதியே, சிறப்புப் பொருந்திய நமது பிராண நாதரே, சுவர்க்க மத்திய பாதாளம் என்னும் திரிலேகத்துக்கும் பரத்துவமாகிய கர்த்தாக்க ளென்று பேரும் கீர்த்தியும் பிரகாசித்து பிரபலமாக இருக்கவும், மகாலட்சுமி, பார்வதி, சரசுவதி யென்னும் மூவராகிய நம்மை யாவர்களும் அழகுள்ள கற்பினிலும் தெய்வத்தன்மையிலும் சிறந்த நாயகிகள் என்று உலகத்தார்கள் புகழ்ந்து கொண்டிருக்க, நாரதமுனிவர் நம்மைப் பழித்தல் புலோமிசையைக் கற்புள்ளவளென்று புகழ்ந்ததை நமது நாயகர்களுடனே சொல்லுவோமம்மா பார்வதியே!''

## பார்வதி, தோழிக்குச் சொல் பரணி

103. ஏவின வேலைசெய் தென்னிடத் திருக்கும்

பாவைய ரேஎன் பதிவரச் செய்வீர்

### வசனம்

"நான் சொல்லும் ஏவின வேலைகளைச் செய்து இவ்விடத்திலிருக்குந் தோழிமாரே! எனது பிராணநாதரை இவ்விடம் அதிசீக்கிரமாய் அழைத்துவாரும் பெண்களே!"

தோழிகள் வசனம் : அப்படியே அழைத்துக் கொண்டு வருகிறோம் நாயகியே!

## தோழிகள், சிவனுக்குச் சொல்

### பரணி

104. பொங்கர வணிந்த சங்கரா உம்மை

எங்கள் நாயகியு மிங்கழைத் திட்டார்!

### வசனம்

"மிகுந்த சர்ப்பாபரணம் தறித்த கர்த்தனே! தேவரீரை எங்கள் நாயகியாகிய பார்வதியம்மன் அழைத்து வரச் சொன்னாள், வாரும் சுவாமி!"

பரமசிவன் வசனம் : அப்படியே வருகிறேன் தாதிகளே!

# பரமசிவன் வருகிற

## விருத்தம்

இராகம்: கேதார கௌளம்

105. மதிநிறை கருக்கை வில்வம்
மாநதி சிரத்திற் சூடி
கதையொடு மான்மழு சூலங்
கபாலமும் கரத்தில் ஏந்தி
பதமுடன் புலித்தோல் ஆடை
பண்புட னேய ணிந்து
துதிபுரிந் திமையோர் தாழ
சோதியும் வருகின் றாரே!

## வசனம்

"அகோ தெப்படி யென்றால், மூன்றாம்பிறை, வாசனையுள்ள கொன்றை மாலை, வில்வம், கங்காநதி ஆகியவற்றைச் சடாபாரத்தில் தரித்துத் தெண்டாயுதமும் மழுவும் மானும் சூலமும் கபாலமும் கையிலே ஏந்திக் கொண்டு புலித்தோலானதை இடையிலே தரித்து தேவர்கள் தோத்திரஞ்செய்து வணங்க பரஞ்சோதியாகிய சிவபெருமான் வருகிறவிதம் காண்க!"

# பரமசிவன் வருகிற

## தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

106. வந்தார் விடையி லேறியே கைலாசவாசன்
வந்தார் விடையி லேறியே!

### அனுபல்லவி

அந்தமாய் முடியினில் அம்புலி யொளிதர
சொந்தாமாகப் பிடுங்கி தூய்முனி புடைவர - வந்

### சரணங்கள்

கருத்து மிகுந்தசிவ கணங்களும் சூழவே
மருத்திகழ் கொன்றைமாலை மார்பினில் தாழவே - விர்
முப்புர மெரித்தவர் முயலனை மிதித்தவர்
செப்பருந் தவத்தினர் சிந்தையிற் கதித்தவர் - வந்

வெகுளியாய் சேடனை மேதினியில் மோதி
தகுதியா யிரந்தலை தந்தருள் பிரக்கியாதி - வந்

# பார்வதி பரமசிவனுக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : முகாரி*

107. பக்தர்கள் கேட்டும் நல்ல
பாங்குறு வரங்கள் ஈந்து
கர்த்தன்என் றுலகே ழுக்கும்
கலித்திடும் பரனே போற்றி
இத்தலம் நார தன்வந்(து)
எகுகடலை யைக்காண் பித்த
தத்தினை யகற்றி என்னைத்
தற்காக்க வேணும் சுவாமி!

## வசனம்

''தேவரீர் அடியார் கேட்கும் பெருத்த வரங்களெல்லாம் கொடுத்துக் கர்த்தன் என்றும், பரத்துவன் என்றும் எழுலோகங்களிலும் பிரகாசிக்கின்ற பரனே, சரணம்! இந்தக் கைலாயத்திற்கு நாரதமுனிவர் வந்து எஃகுக் கடலையைக் காண்பித்தார். அந்தக் கடலையினால் இப்போது வந்திருக்கிற ஆபத்தை நீக்கி என்னை ரட்சித்து அருளவேண்டும் பிராண நாயகா!''

## சிவபெருமான் பார்வதிக்குச் சொல் பரணி

108. நாரதன் வந்துசெய் நடலையை எல்லாம்
வீரிய முடனே விவரமாய்ச் சொல்வாய்!

### வசனம்

''கேளும் பார்வதி! நாரதமுனிவ னிவ்விடம் வந்து செய்த வஞ்சனையாகிய காரியங்களை யெல்லாம் பயப்படாமல் விபரமாகத் தெரியச் சொல்லும் பிராண நாயகி!''

## பார்வதி, பரமசிவனுடன் இரங்கல்

### கண்ணிகள்

109. சொல்லுவேன் கேளுமென்று யாங்கள் யாவையும் பிராணநாதா
சரிதமாய் ஒத்தினம் தூய்முனிநாரதன் பிராணநாதா
நல்லவன் போல்வந்து நாழிஎகுகடலை பிராணநாதா
நலமுடன் நல்கியிந் நாழியிலே வறுத்துப் பிராணநாதா
சுண்டல்செய்தே அதிசுவையுடன் கொடுமென்றான் பிராணநாதா
தொகுத்த கடலையும் சுடுநெருப்பிலே பிராணநாதா
திண்மையுடன் வறுத்துச் சமையல் செய்து கொடுக்கப் பிராணநாதா
சிறிதுமுடியா தென்றுசெப்பினேன் அதைக் கேட்டுப் பிராணநாதா

அந்தக் கடலைதன்னை அன்புடன்எடுத்துப்போய்
பிராணநாதா
அறிவை புலோமிசைபால் அளித்துச்சமைக்கச்சொல்லிப்
பிராணநாதா

பந்தமாய்ச் சமைத்ததைப் பறிந்துவாங்கிவந்து பிராணநாதா
பருங்கடலைச் சுண்டலைப் பார்க்களனக்குக்காட்டிப்
பிராணநாதா

கார்குழல் புலோமிசை கற்புக்கு உன்றன்கற்பு பிராணநாதா
கனக்குறைச்சல் என்று கழறியவர் போனார் பிராணநாதா

ஏர்பெறு மவளிடம் எக்கணமே சென்று பிராணநாதா
இசைவாம் கற்புநிலையை இன்று சோதிப்பீரே பிராணநாதா!

## சிவபெருமான் சொல்வசனம்

"கேளும் பெண்ணரசே! உன்னிஷ்டப்படிக்கும் பிருகு முனிவர் பத்தினியாகிய புலோமிசையின் கற்பு நிலையை அறிகிறேன்; அதற்காக நீ பயப்பட வேண்டாம் பிராணநாயகி!"

# சிவபெருமான், பிருங்கி முனிவருக்குச் சொல்

## விருத்தம்

110. அந்தமாம் பிருங்கி கேளாய்
ஐம்படைக் கரத்து மாலும்

சுந்தர மான வேதன்

தொகுத்தஇவ் விருவர் தம்மை

பந்தமா யரைக்க ணத்தில்

பண்புடன் அழைத்து வந்து

எந்தன்பால் விட்டே நீயும்

எப்போதும் வீற்றி ருப்பாய் !

## வசனம்

''கேளும் பிரங்கி மகாமுனிவரே! பஞ்சாயுதங் கைவிடாத மகாவிஷ்ணுவையும் சுந்தரமுள்ள பிரமதேவரையும் அரைநிமிஷ நேரத்தில் அவ்விடம் போய் நான் அழைத்தேனென்று சொல்லி அழைத்து வந்து, நீர் என்னிடத்தே விட்டுப் போகாமல் இருப்பீர் பிரங்கி முனியே!''

## பிருங்கி முனி வசனம்

''அப்படியே அழைத்து வருகிறேன் எனது ஆண்டவராகிய கர்த்தனே!''

# பிருங்கி வருகிற தரு

*இராகம் : தான்யாசி* *தாளம் : ஆதி*

## பல்லவி

111. அறியயன் தன்னையும் அரனிடன் அழைத்திட

அன்புடன் நடந்தனரே - பிரங்கிரிஷி

இன்புற நடந்தனரே!

## அனுபல்லவி

பரிவாய் அரனுரைத்த படியே பயணமாகி
பெரிதாகிய தண்டைப் பெட்புடனே ஊன்றி - அரி

## சரணங்கள்

சிரத்திற் சடைதுலங்க சிறந்த முகந்தன்னில்
தரித்தவொண் ணீறலங்க தருபீதாம் பரன்முன்னில் - அரி
காற்றுஞ் சத்தியலோகஞ் தகைவைகுந் தபுரிக்கும்
காற்றென வேயரைக் கணத்தினிலே ஓடி - அரி

# பிரங்கிரிஷி மகாவிஷ்ணுவுக்குப் போற்றி

## விருத்தம்

112. பாற்றிரைக் கடலில் பாந்தன்
பள்ளியில் அறிது யில்கொள்
ஆற்றல் வாமனனே உன்தன்
அடியினைக் கமலம் போற்றி
நாற்றின புகழும் ஆதி
நாரண முகுந்தா போற்றி
சீற்றமில் அடியார் உள்ளும்
செறிபரம் பொருளே போற்றி!

### வசனம்

''அலைகளையுடைய பாற்சமுத்திரத்தில் ஆதிசேஷ சயனத்தில் போக நித்திரை கொள்ளாநின்ற வாமன அவதாரனே, உமது தாமரைக் கமலம் போன்ற இரண்டு பாதமே சரணம், நான்கு திசையும் புகழும் ஆதி நாராயணா முகுந்தா சரணம்! சாந்தகுணம் பொருந்திய அடியார்களின் மனத்தில் பரவிய பரப்பிரம்ம சொரூபனே சரணம் சுவாமி!

## மகாவிஷ்ணு பிரங்கி முனிவரை வாழ்த்தும்

### பரணி

113. பித்தநல் லருளைப்பெற்ற பிரங்கியே
தத்து வாராமற் சந்ததம் வாழி!

### வசனம்

''பரமசிவன் கிருபையைப் பெற்ற பிரங்கி முனிவரே ஆபத்து வராமல் சதாகாலம் கைலாயத்திலே வாழ்ந்திருக்கக் கடவது முனிவரே!''

## பிரங்கி முனிவர் விஷ்ணுவுக்குச் சொல்

### கவி

114. ஞான சுரூப நண்ணிய அடியார்
யானியந் துதித்தே யாவலாய்ப் பணியும்
தீன தயானா சிறப்புறு சிவபெரு
மானுமை அழைத்து வரச்சொனார் வருவீர்!

### வசனம்

''ஞானமே ஒரு சொரூபமாகப் பொருந்திய அன்பர்கள் சதாகாலமும் தெளத்தியம் செய்து ஆசையுடன் வணங்கும் தயாள குணமுடைய வஸ்துவே! சிவபெருமான் உம்மை அழைத்துவரச் சொன்னார்; வாரும் வைகுந்தபுரத் ததிபனே!''

## மகாவிஷ்ணு பிரங்கிக்குச் சொல் வசனம்

''சரிசரி, அப்படியே போவோம் பிரங்கி மகாமுனியே!''

## மகாவிஷ்ணு கைலைக்கு வருகிற பொது

### விருத்தம்

115. சக்கரம் கதை கோதனம்
சங்குடன் கட்கம் தாங்கி

பக்கம் பன்னிருவ ரோடு

பறிவுடன் அமரர் சூழ

மிக்கமா முனிவர் சித்தர்

விரும்பிப்பல் லாண்டி சைக்க

செக்க ருடன்மே லேறித்

திருமாலும் வருகின் றாரே!

## வசனம்

''சங்கு, சக்கரம், சார்ங்கம், கதை, வாள் என்னும் பஞ்சாயுதமுந் தாங்கிப் பன்னீற்றாழ்வாரும் பக்கத்திலே வர, தேவர்கள் புடைசூழ, மகத்தாகிய தவமுனிவர், சித்தர் விரும்பிப் பல்லாண்டு கூற, சிவந்த நிறத்தினையுடைய கருடனின் பேரில் ஏறிக் கொண்டு, மகாவிஷ்ணுவானவர் கைலைக்கு வருகிற விதங்காண்க!''

# மகாவிஷ்ணு வருகிற தரு

**இராகம் : மோகனம்**

## பல்லவி

116. பன்னீற் றாழ்வார்களும் பல்லாண்டு கூறவே

பதும நாபரும் வந்தார்!

## அனுபல்லவி

மன்னித் தேவரன்பர் மகிழ்வாய்த் துதிசெய்ய - பன்.

### சரணங்கள்

சிரத்தில் வயிரமுடி தினகரன் போலொளிர
பருத்த மகரக்குழை பாங்காய்க்கா தில்மிளிர - பன்
கனகவுத்துவ மணிகதித்த மார்பினில் மின்ன
வனமருவிய குல்லைமாலை புயத்தில் உன்ன - பன்
கவின்செய் இடையினில் காஞ்சனஉடை சேர
அவிரும் பஞ்சாயுதம் அஸ்திரத்திலே ஆர - பன்
வெண்மை இடபமேறும் விமலனழைத் தாரென்று
வண்மை பிருங்கிமுனி வந்துரைக்க இன்று - பன்

## பிருங்கி முனிவர் சிவபெருமானுக்குச் சொல்

### கவி

117. அரகரா உந்தன் அடியிணை போற்றி
முரகரி யான முகுந்தனும் வந்தார்

### வசனம்

''அரகராஅ பராபர மூர்த்தி, உமது இரண்டு பாதமே சரணம்! முரகரியாகிய மகாவிஷ்ணு வந்திருக்கிறார் சுவாமி!''

# சிவன் விஷ்ணுவுக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : மோகனம்*

118. அபயமென் றோடி வந்த
அதிகுண வீட ணற்கு
சுபசிரஞ் சீவி நல்ல
தூயஇலங் கையும் தந்த
விப்ரமாய் அவனே இந்த
மேன்மையாம் ஆச னத்தில்
உபயபா தத்தை வைத்தே
உட்காரும் உம்பர் கோவே!

## வசனம்

"அபயம் அபயம் என்று உம்மிடத்தில் ஓடி வந்த குணத்தில் சிரேஷ்டராகிய விபீஷணருக்கு சுபகரமான சிரஞ்சீவியும் நல்ல தூயதான இலங்காபுரிப் பட்டமும் கொடுத்த விபரமுள்ள ஸ்ரீ ராம அவதாரனே இந்த மேலான ஆசனத்தில் எழுந்தருளியிரும், தேவர்களைக் காக்கும் கருத்தனே!"

# விஷ்ணு, சிவனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

119. கண்ணப்ப நாயன் தன்னைக்
கனிவுடன் மனஞ்சோ தித்து
நண்ணுநின் அருள்தந் தருளும்
நாயகா உமைபங் காளா
வண்ணமாம் என்னை நீரும்
மகிழுடன் அழைத்த சேதி
திண்ணமாய் உரைக்க வேண்டும்
சிந்தையும் களிக்கத் தானே!

## வசனம்

"கண்ணப்பனென்னும் வேடனைக் கனிவாக மனஞ்சோதித்து உமது கிருபை செய்து ஆண்ட நாயகார பார்வதியை இடப்பாகத்தில் வைத்த முதல்வனே! அழகாக என்னை நீர் மகிழுடன் வரவழைத்த சேதியை உறுதியாக எந்தனுக்குத் தெரியச் சொல்ல வேண்டும், சிந்தை மகிழும்படிக்குக் கைலாச வாசனே!"

## கட்டியன் சொல் கவி

*இராகம் : மத்தியமாவதி*

120. பேர்பெறு மாயனைப் பிருங்கியும் அழைத்து
நீர்மலி அரன்பால் நிலையுடன் நிறுத்தி
பார்புகழ் நெடிய பரமேட்டி வாழும்
ஊர்புகுந் தயன்முன் னுரைத்திடு வானே!

### வசனம்

''கீர்த்தியில் மிகுந்த மகாவிஷ்ணுவை பிரங்கியுமழைத்துக் கொண்டு வந்து, கங்கையைச் சிரசினில் வைத்த பரமசிவனிடத்தில் ஆசனத்திலிருக்கும்படி செய்துவிட்டு, உலகமெல்லாம் புகழும் பிரமதேவர் வாசஞ்செய்யும் நகரமாகிய சத்தியலோகம் போய் பரமனுடன் பிரங்கி சேதிசொல்லுகிற விதங்காண்க!''

## பிரங்கிமுனிவர் பிரமதேவருக்குச் சொல்

### விருத்தம்

121. தோமிலாச் சுருதி நான்கும்
சோதித்த முதல்வா போற்றி
பூமியில் ஆத்ம கோடி
பொற்புடன் படைப்பாய் போற்றி

நாமகள் சரஸ்வதிக்கு
நாயகா விதியே போற்றி
நாமமாம் சத்திய லோகத்
தலைவனே போற்றி போற்றி!

### வசனம்

"குற்றமில்லாத நான்கு வேதங்களுஞ் சோதித்த முதல்வனே சரணம்; சர்வலோகத்திலு முள்ள ஆத்ம கோடிகளை யெல்லாம் அழகாகச் சிருஷ்டிக்கப்பட்ட கடவுளே சரணம்! நாமகளாகிய சரஸ்வதிக்கு நாயகனாகிய பிரமதேவனே சரணம்! பட்டணமாகிய சத்தியலோகத்தை யாளப்பட்ட நாயகனே, உமது பாதார விந்தமே சரணம் சுவாமி!"

## பிரமதேவர் பிரங்கிமுனிவன் வாழ்த்துக் கவி

122. உரம்பெறு சங்கரன் உயரருள் பெற்ற
பிரங்கிமா முனிவரே பல்லாண்டு வாழி!

### வசனம்

"வலிமை பொருந்திய சங்கரதேவரது உயர்வாகிய கிருபையைப் பெற்ற பிரங்கிமகா முனிவரே பல்லாண்டு வாழி!"

# பிரங்கி மகாமுனிவர் பிரமதேவருக்குச் சொல்

## விருத்தம்

123. சத்திய உலகை நாளும்
 தகையர சியற்றி வீறும்
சுத்தநிர்க் குணனே உன்தன்
 துணையடி போற்றி போற்றி
பக்தர்கள் இடத்தில் உள்ளப்
 பரிவுவைத் தென்றும் காக்கும்
பித்தனார் உமைய ழைத்தார்
 பெட்புடன் வருகு வீரே!

## வசனம்

''சத்தியலோகத்தைச் சதாகாலம் அரசுசெய்து பெருமை பொருந்திய சுத்தமாகிய நல்ல குணமுள்ள உமது உபய பாதமே சரணம், சரணம்! அடியாற்களிடத்தில் மனத்தில் அன்பு வைத்து,எப்போதும் காத்து ரட்சிக்கும் பரமசிவன் உம்மை அழைத்து வரச்சொன்னார்; மனோபீஷ்டத்துடன் வாரும் பிரமதேவரே!''

பிரமதேவர் சொல் வசனம்: ''அப்படியே போவோம் சிவபெருமானின் ஏவற்றொழில் செய்யும் முனிவரே!''

கட்டியன் வசனம்: ''அகோதெப்படி யென்றால், பிரங்கி மாமுனிவர் அழைக்க, பிரமதேவர் பயணப்படுகிற விதங்காண்க!''

# பிரமதேவர் வருகிற

## விருத்தம்

*இராகம் : தோடி*

124. கன்னல்வில் மதனை ஈன்ற
கண்ணன்நற் கமல உந்தி
தன்னிலே உற்ப வித்த
சதுர்முகம் உள்ள தேவன்
மன்னிய தேவர் சித்தர்
மாமுனி வரருஞ் சூழ
அன்னவா கனத்தில் ஏறி
அயனிதோ வருகின் றாரே!

## வசனம்

''கரும்பு வில்லைக் கொண்ட மன்மதனைப் பெற்ற மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திற் பிறந்த நான்கு முகத்தினை உடைய பிரமதேவர், தேவர்கள், சித்தர்கள், மகத்தாகிய ரிஷிகள் சூழ்ந்துவர, அன்னவாகனத்தில் ஏறிக்கொண்டு, கைலைக்கு வருகிற விதங்காண்க!''

# பிரமதேவர் வருகிற தரு

இராகம் : காம்போதி

## பல்லவி

125. சத்திய லோகத்தை நாளும்
பத்தி யுடனே ஆளும்
சதுர்முகத் தேவர் வந்தார்!

## அனுபல்லவி

சுத்தர் சற்குணமேற நித்தர்கள் யாற்றவும்
தத்துவ மறிந்த மிகுந்தவர் ஏற்றவும் – சந்

## சரணங்கள்

மான்மழு வையும் பிடித்தோன் வேணியில்
மதியும் கங்கையும் முடிந்தோன் விரைவில்
தானழைத் திட்டசேதி தவமுனி வந்துசொல்ல
மேன்மை யுடனேவரும் வேடிக்கை யாய்நல்ல – உத்
சிரத்தில் முடியுந் துலங்கக்
கரத்தினில் திகழும்தண்டு மியங்க – அழகுவாய்ந்த
பருத்த இடையிற் பீதாம்பரம் ஒளி தருகவே
திருத்திய செவியிற் குண்டலம் திகழ்பெறுகவே! – சத்
வேதங்கள் நான்கு மோதி உலகெங்கும்
விளங்கிய பிரக்கி யாதி மிகப்பெற்ற

போதனன் றாயனப் புள்ளின் மிசையேறி

நாதனரன் கைலை நாடிக் கொண்டாடி - சத்

## பிரங்கி முனிவர் சிவனுக்குச் சொல் பரணி

126. அன்பர்கட் கரசே அடியிணை போற்றி

எம்பிரான் பிரமன் இங்கு வந்தனரே!

### வசனம்

"அன்பர்களுக்கு நாயகனாகிய பரஞ்சோதியே, உம து பாதமே சரணம்! எனது நாயகனாகிய பிரமதேவர் வந்திருக்கிறார் தயாபரமூர்த்தி!"

## பிரமதேவர் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சொல் போற்றி

### விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

127. மாதரி வீரி யென்னும்

மாகாளி உள்ளம் நாண

தீதற நடித்த உந்தன்

செங்கம லத்தாள் போற்றி

காதக னான பொல்லாக்

காளிங்கன் படத்தி னின்று

நீத மாகவே நடித்த

நீரோரு கத்தாள் போற்றி!

### வசனம்

''மாதரி, வீரி, மகத்தான பத்திரகாளி என்றும் பெயர் பெற்றவள் மனது நாணித் தோல்வியடையும் படிக்குக் குற்றமில்லாமல் நடனஞ் செய்த உமது தாமரைக் கமலம் போன்ற பாதமே சரணம், சரணம்! காதகனாகிய பொல்லாத காளிங்கனென்னும் பாம்பின் படத்தில் நின்று நீதியாய்த் திருநடனஞ் செய்த நீரோருகமாகிய தாமரை மலரை யொத்த உமது பாதமே சரணம், சரணம் எனது பிதாவே!''

## பரமசிவன் பிரமதேவருக்குச் சொல் பரணி

128. திருமறை தேர்ந்த திறல்சதுர் முகனே

அரியவா சனத்தில் அன்புடன் இருப்பீர்

### வசனம்

''சிறந்த வேதங்களை யெல்லாம் குறைவில்லாமற் கற்றறிந்த சதுர்முகப் பிரமனே, இந்த ஆசனத்திலுட் காரும்!''

## சிவன், மகாவிஷ்ணுவுக்கும் பிரமதேவருக்கும் சொல்

129. பரம பதத்திற் பக்தர்கள் வணங்க

திறமுடன் இருக்கும் திறமிகு முதல்வா

சத்திய நரகிற் றங்கியா வற்றும்
சித்திரப் படைப்புச் செய்யும் நாயகனே

ஓர்தினம் நாரதன் உவப்புடன் வந்து
பார்வதி தேவியைப் பரிவுடன் கண்டு

வலியுள எஃகுவால் வன்மையாய்ச் செய்த
பலமுள கடலையைப் பண்புடன் கொடுத்து

சுண்டலாய்த் தளிகை சுருக்கினிற் செய்தே
அண்டரு மதிக்க அளிஎனச் சொல்ல

அம்பிகை கேட்டே அருந்தவ முனியே
செம்புறழ் எகுவால் செய்தகட லைதான்

வேகா ததனை வேவிப் பவரிலை
ஆகா ரமுமது ஆகிடா தென்று

கடலையை நாரதன் கரத்தினிற் கொடுக்க
திடமுடன் வாங்கிச் சீக்கிரம் சென்று

பிருகுமா முனிவர் பெட்புறு பத்தினி
அரிவையர்க் கரசிய ராகும் புலோமிசை

தாமரை மலர்க்கரந் தன்னிலே கொடுத்து
தாமத மின்றித் தண்கடலை யைநீர்

அன்புடன் சுண்ட லாகவே சமைத்து
இன்புடன் என்றனுக் கீவாய் என்ன

நல்லதப் படியே நானெகுக் கடலையை
மெல்லிதாய்ச் சுண்டல் விரைவுடன் சமைத்து

தருகிறேன் என்று தையலும் எடுத்து
... ... ... ...

கடலையைச் சுண்டல் களிப்புடன் செய்து
படபடப் பாகப் பரிந்தளித் திடவே

கொண்டுவந் திங்கு கொடுத்துமை யவட்குந்
கண்டிடும் என்று கழறிக்கற் பினிலே

ஏறுறு புலோமிசைக் கிணையா னவர்கள்
ஆரும் இல்லையென் றறைந்தவர் மோனகர்

ஆதலால் அதற்குங் கமைத்த யோசனைகள்
ஓதுவீர் என்றே உங்களை அழைத்தேன்!

## மகாவிஷ்ணு பரமசிவனுக்குச் சொல்

### விருத்தம்

130. அருந்தவ முனிவர் போற்றும்
அத்தனே உமைபங் காளா
உரமிடு லக்கு மித்தான்
ஓதினாள் இவ்வா றேதான்
விரவிய சேதி எல்லாம்
வீணைமா முனிவ னாலே
திரமென அறிய வேண்டும்
சீக்கிரம் அழைத்துக் கேட்போம்!

### வசனம்

''அரிதாகிய தவத்திலே சிறந்த முனிவர் துதிக்கும் பரமசிவனே! பார்வதி பாகனே மகாலட்சுமியும் இந்தப் பிரகாரமே என்னுடன் சொன்னாள்; நாம் அதை நம்பத் தகாது; இந்தச் செய்தி யெல்லாம் வீணையிற் சிறந்த நாரத முனிவரை யழைத்துவரச் சொல்லித் தெளிந்து கொள்ள வேண்டுங் கைலாச வாசரே!''

## பிரமதேவர் பிருங்கிக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

131. தத்துவக் குணமு ளத்தில்
சாந்தபி ரங்கி நீரும்

நித்தனாங் கைலை வாசர்

நிகழ்த்திய படிக்குச் சென்று

பத்தனார் அதனை இப்போ

பரிவுடன் அழைத்துக் கொண்டு

சுத்தமாம் வாயு வேகம்

தோன்றவே வருகு வாயே!

## வசனம்

''அகோ, வாரும் பிள்ளாய், பிரங்கி முனிவரே! கைலாசவாசராகிய பரமசிவன் உத்தரவுப் படிக்குச் சீக்கிரம் போய், நாரதமகா முனிவனைக் கண்டு, இப்பொழுதே அன்புடனே சுத்தமான வாயு வேகமாக அழைத்துக்கொண்டு வாரும் முனிவரே!''

# பிரங்கி முனிவர், பிரமதேவருக்குச் சொல் பரணி

132. வாணி நாயகனே

வார்த்தையின் படியே

பேணி நாரதரைப்

பெட்டிபுடன் அழைப்பேன்!

## வசனம்

''கேளும் வாணி நாயகரான பிரமதேவரே, உமது உத்தரவுப் பிரகாரம் நாரத முனிவரிடம் போய், அவரை அழைத்துக் கொண்டு வருகிறேன் சுவாமி!''

## பிரங்கி முனிவர் நாரதருக்குச் சொல்பரணி

133. சீர்பெறு வீணையில் தேர்ந்த நாரதரே

நீர்பெறும் வேணி நிமலனும் அழைத்தார்

### வசனம்

"சிறப்பாகிய வீணையிற்றேர்ந்த நாரத, மகாமுனிவரே! உம்மை, கங்கையைச் சடாபாரத்தில் வைத்த நிமலனாகிய பரமசிவன் அழைத்துவரச் சொன்னார், வாரும்!"

## நாரதர் பிரங்கி முனிவருக்குச் சொல் வசனம்

"அப்படியே போவோம் வாரும் பிரங்கிமகா முனிவரே!"

## நாரதர் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

134. வேத நிர்ணயமாக விளங்கும் அஷ்டாங்க யோக

நாதன் சிவனைப் போற்றி நாரதர் வந்தார்

அரனழைத்த சேதி அனைத்தும் தெரியவாதி

நரகரியைப் போற்றி நாரதர் வந்தார்

புலித்தோல் முதுகிலேற்றிப் போற்றிவெண் ணீறுசாற்றி

வலித்த மந்திரமோதி வந்து தோன்றினார்!

செபஞ்செய் ருத்திராட்சம் மாற்றிச்

சிவமந் திரத்தைப் போற்றித்

தவஞ்செய் வனத்தை விட்டுத்

தகைநாரதர் தோன்றினார்!

கண்டுகுண்டு என்னக் கண்டபேருஞ் சொல்ல

விண்டுவின் கீதம்பாடி வேதநாரதர் வந்தார்!

## நாரதர், பிரம்மா, விஷ்ணு சிவனுக்குப் போற்றி

### விருத்தம்

135. செந்திரு மார்பில் வைத்து

திணையினைக் காத்த ளிக்கும்

பைந்துள பத்தார் பூண்ட

பதுமநன் னாபா போற்றி

கந்தனை அளித்த நீல

கண்டபிஞ் ஞகனே போற்றி

சிந்தனை யில்லாப் பிரம

தேவனே போற்றி போற்றி

### வசனம்

''செந்திருவாகிய மகாலட்சுமியை மார்பிலே வைத்துச் சீவன்களை உலகங்களில் ரட்சிக்கும் பசுமையான தூபைமாலை பூண்ட உந்திக்கமலத்தை யுடையவனே, சரணம்! சுப்பிரமணியரைப் பெற்ற நீலகண்டனாகிய பிஞ்ஞகனே சரணம்! மனோ சஞ்சலங்களில்லாத பிரமதேவனே சரணஞ் சரணம் மும் மூர்த்தி சுரூபமே!''

# நாரதர் மூவருக்கும் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

136. தேவர்கள் முனிவர் சித்தர்

தேடரும் பொருளாய் வீறும்

மூவரே உங்கள் திவ்ய

முளரியம் மலர்த்தாள் போற்றி

ஆவலாய் அடியேன் தன்னை

அழைப்பித்த காரி யத்தைத்

தீவிர மாக நன்றாய்ச்

சிறியவனுக் கறிவிப் பீரே!

## வசனம்

''தேவர்கள், தவமுனிவர்கள், சித்தர் தேடுதற்கு அருமையான வஸ்துவாக விளங்கிய மூவராகிய பிரம்மா, விஷ்ணு, ருத்திரரே, உங்கள் தாமரைமலர் போன்ற அழகிய பாதங்களே சரணம்! அடிமையாகிய என்னை ஆசையுடனே அழைத்த காரியத்தை விவரமாகத் தெரியச் சொல்ல வேண்டும் சுவாமிகளே!''

## பிரமதேவர் நாரத முனிவருக்குச் சொல்

### விருத்தம்

137. அரனரி கிருபை யாலே
அதிகநீ டூழி காலம்
உரமுடன் வாழி வாழி
உசிதமாம் சேதி என்று
திறமுடன் கௌரி செய்யாள்
தேவிபா ரதியி னோடு
பிரியமாய் உரைத்த தென்ன
பெட்புடன் உரைசெய் வீரே!

### வசனம்

''பரமசிவன், மகாவிஷ்ணு இவர்கள் கிருபையினாலே, அதிகமாய் நீடூழிக் காலம் வாழக் கடவாய், தகுதியான ஒரு சமாசாரம் ஒன்று, பார்வதி, மகாலட்சுமி, சரஸ்வதி இவர்களுடன் அன்புடன் என்ன சொல்லினை? அதை என்னிடம் சொல்லும் நாரத முனிவரே!''

## நாரதன் மும்மூர்த்திகளுக்கும் சொல்

### விருத்தம்

138. அயனரி அரனே கேளும்
அன்புடன் உரைத்த சேதி

பயனுறு பிருகு தேவி

பண்புள புலோமி சைதான்

வியனுல கத்திற் கற்பு

மிகுந்தவள் என்று சொன்னேன்

நயமுடன் பின்னும் ஒன்று

நவிலவே இல்லை ஐயா!

## வசனம்

''கேளும் பிரமதேவரே, மகாவிஷ்ணுவே, சிவபெருமானே! உலகத்திலுள்ள ஸ்திரீ சாதிகளில் பிருகு மகாமுனிவர் பத்தினியாகிய புலோமிசையம்மாள் கற்பினில் மிகுந்தவள் என்று சொன்னேன்; மற்றொன்றும் நான் சொல்லவில்லை மும்மூர்த்திகளே!''

## பரமசிவன் நாரதருக்குச் சொல்

### விருத்தம்

139. காரண மொன்றில் லாமற்

கலகமே செய்தென் னாளும்

தாரணி சுவர்க்க மாம்பா

தாளருஞ் சஞ்ச ரிக்கும்

நாரத முனிவ ரேநீர்

நன்மைசேர் ஆசிர மத்தில்

தீரமாய்ப் போயி ருக்கச்

செலவுதந் தோம்போ வீரே!

### வசனம்

''யாதொரு காரணமு மில்லாமல் கலகங்களைச் செய்து கொண்டு எந்த நாளைக்கும் மூன்றுலோகமாகிய சுவர்க்க மத்திய பாதாளத்தில் சஞ்சரித்து வரும் நாரத மகாமுனிவரே, நீர் வாசஞ்செய்யும் ஆசிரமத்துக்குப் போயிருக்கச் செலவு தந்தோம்; போய் வாரும் முனிவரே''

### கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரமாக நாரத முனிவருக்குச் செலவு கொடுத்து, அவரது ஆசிரமத்துக்கு அனுப்பிவிட்டு, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் மூவரும் புலோமிசையம்மன் கற்பைச் சோதிக்க வேணுமென்று யோசனை செய்து கொண்டு, அவர்கள் சந்நியாசி ரூபம் எடுத்துக் கொண்டு வருகின்ற விதங் காண்க!''

## சிவன் சந்நியாசியாகி வருகிற

### விருத்தம்

140. அண்டர்கட் கிறைவன் ஈசன்

அத்தத்தில் திருவோ டேந்தி

குண்புகைச் குடையும் தாங்கிக்

கோலுமொன் றூன்றித் தேகம்

தண்டிகை போல்வ ளைந்து

தகைசிர வணந்தி ரண்டு

குண்டலந் தரித்து நீறு
குழைத்திட்டு வருகின்றாரே!

## வசனம்

"தேவர்களுக்கெல்லாம் நாயகனாகிய பரமசிவன் கையிலே திருவோடும் குடையும் எடுத்து, கோலொன்று ஊன்றிக் கொண்டு, முதுகு பல்லக்குப் போல வளைந்து இருக்க, அழகிய இரண்டு காதிலுங் குண்டலந் தரித்து, சரீரமெங்கும் விபூதிகளைப் பூசிக் கொண்டு, விருத்த சந்நியாசி ரூபம் கொண்டு வருகிற விதங் காண்க!"

## பரமசிவன் சந்நியாசியாகி வருகின்ற தரு

இராகம் : சௌராஷ்டகம்

### பல்லவி

141. விருத்த சந்நியாசியும் நானே - ஜகத்தினில்
விருத்த சந்நியாசியும் நானே!

### அநுபல்லவி

அடுத்த பாகம் உமைக்க ளித்துப் பத்தரிடத்தில்
அல்லும் பகலும் வாழும் எல்லையில்லா ஆனந்த - விரு

### சரணங்கள்

வனத்திற் கொடிய செய்கை
வனைந்து மனத்திற் கள்ளம்

வாய்ந்த சலந்தரனை வாட்டிய நலமுள்ள - விரு
வீறும் ஐங்கரனுடன் வேலவனை அளித்தேன்
மேவும் விழியில் வீரபத்திரனைத் துணித்தேன் - விரு
மயமிகு சுந்தரர் மாணிக்க வாசகர்
நயவப்பர் சம்பந்தர் நற்சுரர் பதிதந்த - விரு
தவமுனி மார்க்கண்டர் தன்னைப் பிடிக்கவந்த
பவமறி இயமனைப் பதமலரா லுதைத்த - விரு

## கட்டியன் சொல் பரணி

*இராகம் : கேதார கௌளம்*

142. விருத்த சந்தியாசியாய் விமலனும் வந்தபின்
திருத்தமால் சங்க தேகமாய் வந்தார்!

### வசனம்

"பரமசிவன் விருத்த சந்நியாசி ரூபம் கொண்டு வந்த பின்பு மகாவிஷ்ணு வானவர் சங்கம ரூபம் எடுத்து வருகின்ற விதம் காண்க!"

## மகாவிஷ்ணு சந்நியாசியாகிற

### விருத்தம்

143. சங்கு சக்கரமும் வாளும்
தண்டங்கோ - தண்டத் தோடு

கொங்குசேர் துளசி மாலை
கொப்பென மறைத்துக் கொண்டு
துங்கமா நீல கண்டன்
சொல்லிய மொழிப்ப டிக்கு
சங்கம ரூபங் கொண்டு
தகைபீ தாம்பரன் வந்தானே!

## வசனம்

''பாஞ்சசன்னியம், சக்கராயுதம், வாள், தண்டு, சாரங்கம் என்னும் பஞ்சாயுதமும், வாசனை கமழப்பட்ட துளசி மாலையையும் சீக்கிரமாக மறைத்து, பரமசிவன் சொல்லிய படிக்கு மகாவிஷ்ணுவானவர் சந்நியாசி ரூபங் கொண்டு வருகின்ற விதங் காண்க!''

## மகாவிஷ்ணு வருகிற தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

144. நாராயண சந்நியாசி நானே - உலகமுண்ட
நாராயண சந்நியாசி நானே!

### அனுபல்லவி

தோரா வடிவழகி துரோவதைக் கந்நாளில்
வாராத் துகிலளித்து மகிழ்ந்து புகழ்ந்திருந்த - நா

## சரணங்கள்

தடையின்றி மாபலிச் சக்கரவர்த்தி யாண்ட
படியைமூன் றடியிட்டுப் பாதலத்தில் விடுத்த - நா
காலபலத் தாற்கரா கருத்துயர் செயஆதி
மூலமென் றழைத்திட முன்வந்த பரஞ்சோதி - நா
தேவி சீதையைச் சிறையெடுத்த இராவணப்
பாவியை வென்றிலங்கைப் பதிவீட ணர்க்களித்த - நா
திரிலோக மும்வென்ற தீய இரணியன்
உரமுகிராற் பிளந்து உம்பரினைப் புரந்த - நா

## கட்டியன் சொல் பரணி

*இராகம் : தோடி*

145. தயவுள மாயவன் சங்கமன் ஆனபின்
அயனும் சந்நியாசி ஆகியே வாரான்!

## வசனம்

''கிருபா நிதியாகிய மகாவிஷ்ணு சந்நியாசியான பின்பு, பிரதேவரும் சந்நியாசி ரூபங்கொண்டு வருகிற விதங் காண்க!''

# பிரமதேவர் சங்கம ரூபங் கொண்டு வருகிற

## விருத்தம்

இராகம் : தோடி

146. ஐம்முகன் சொற்ப டிக்கு
அயனுந்தன் உருவ மாற்றி
கையுறு தண்டும் வேதம்
கலைமகள் தனைவி டுத்து
வையத்தில் எவருங் கண்டு
மாபெரும் யோகி என்ன
துய்யனாம் பிரம தேவன்
துரிதமாய் வருகின் றானே!

## வசனம்

''பஞ்ச முகத்தையுடைய பரமசிவன் சொல்லிய பிரகாரம், பிரமதேவரும் தன்னுடைய உருவங்களை மாற்றிவிட்டுக், கையிலே யிருக்கும் தண்டு, கமண்டலம், வேதம், சரஸ்வதி இதுகளை நீக்கி, உலகத்தில் யாவரும் பார்த்து மகத்தாகிய யோகீஸ்வரரென்று சொல்லிக் கொள்ளச் சந்நியாசி ரூபம் கொண்டு பிரமதேவர் வருகிற விதம் காண்க!''

## பிரமன் வருகிற தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

147. அரன் சொல்லிய படிக்கே - அயனும்
சந்நியாசியாகி விரைவில் வந்தார்!

### அநுபல்லவி

பரமென எவர்களும் பார்த்துத் தொழுதிட
உரமுடன் நீறுபூசி உகந்து சடைமுடித்து - அரன்

### சரணங்கள்

மார்பில் உருத்திராட்சம் மரவுரிதுன்ன
சீர்பெறு பஞ்சாட்சரம் செவ்வாயிற் பன்ன - அரன்
கையினில் திருவோடு கனிவாகவே எடுத்து
மெய்யில் விபூதி விளங்கும்படி அடுத்து - அரன்

## சிவனாகிய சந்நியாசி விஷ்ணுவுக்குச் சொல்

### விருத்தம்

148. நானிலம் அளந்த மாலே
நான்சொன்ன படியே நீரும்
வானுறை சித்தர் போலே
மாறுவேடம் பூண்டிருப்பீர்

தேனமர் வனசம் வந்த

செய்யவ ளுக்கு நேராய்க்

கானுறை பிருகு தேவி

கற்பினை அறிவோம் வாரீர் !

### வசனம்

''பூமியெல்லாம் ஓரடியாக அளந்த மகாவிஷ்ணுவே, நான் சொன்னபடிக்கு நீரும் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சித்தராதிகளைப் போல வேடம் மாறியிருப்பீர்; வண்டுகள் மொய்க்கும் கமலமலரில் உதித்த மகா லட்சுமிக்கு நிகராவாளோ, கானகத்திலிருக்கும் பிருகு மகா முனிவர் களத்திரமான புலோமிசையின் கற்பை அறிந்து வருவோம், வாரும் விஷ்ணுவே!''

## சிவசந்நியாசி பிரமனைப் பார்த்துச் சொல்

### பரணி

149. பிரம சந்நியாசியே பிருகு பத்தினியின்

அரிய கற்பினைநாம் அறிகுவோம் வாராய்!

### வசனம்

''கேளும், பிரமதேவரே! பிருகுபத்தினி யாகிய புலோமிசையின் அறிதாகிய கற்பை நாம் அறிந்து வருவோம், வாராய் பிரம சந்நியாசியே!''

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

150. களமிடற் றினிலே உற்ற
கங்காளன் மணஞ்செ றிந்த
வளமிகு தோட கத்தில்
மன்னிய பிரமதேவன்
துளபமா லையைத் தரித்த
தோன்றலின் மூன்று பேரும்
ஒளிர்புலோ மிசையம் மன்பால்
உவகையாய் வருகின் றாரே!

## வசனம்

"அகோ தெப்படி யென்றால், விஷத்தைக் கண்டத்திலே வைத்த பரமசிவனும், வாசனை மிகுந்த தாமரையாகிய கமலத்தில் நிலைபெற்றிருக்கும் பிரமதேவனும், துபைமாலையைத் தரித்த மகாவிஷ்ணுவும் இந்த மூவரும் சந்நியாசி வேஷத்துடன் பிருகு மகா முனிவரது பத்தினியாகிய புலோமிசையம்மாள் ஆசிரமத்திற்குப் பாடிக்கொண்டு வருகிற விதங் காண்க!"

# சந்நியாசியாகிய மூவரும் சொல்லுகிற

## ஆனந்தக் களிப்பு

151. தானாதனா தந்த னானா தந்த

தனதந்த னாதந்த னாதந்தா னானா

அன்பான தேமெய்யை நாடு - மிக

அதுக்கு வடக்காலாதி கேசந்தன் வீடு

முன்பாகப் பிரமாவைத் தேடு - அங்கே

மொழியுது வெள்ளீசர் பாதத்தைக் கூடு - தானாதனா

ஆயிரம் கண்வளர் சத்தி - அந்த

ஆனந்த வாழ்மாரி விடதைச் சுற்றி

சேயவா யாள்பதன் பற்றி - நாம்

தேடிப்பணியில் காயந்தெளிபாடும் சுத்தி - தானாதனா

காமாட்சி பாதத்தைத் தேடி - அரகரா

கண்டபேர்க்கு வரும்சம்பத்து தேடி

பூமாட்சி ஆசிரமம் பாடி

புகழ்ந்துபிச்சை வாங்கப் போகலாம் நாடி - தானாதனா

பேரான உச்சித நாடு - அரகரா

பெருமைக்குள தெற்காலே சதுரங்கங் கூடு

காராளர் புகழ்தொண்ட நாடு - அதைக்

காத்துக்கொண் டிருக்குது திருவரசர் வீடு - தானாதனா

# இதுவும் சந்நியாசியாகிற மூவரும் சொல்லுகிற வெண்பா

152. சத்தியவே தன்பதியோ சார்ந்தமாற் றம்பதியோ

சத்துள்ள இந்திரனார் தம்பதியோ - அந்த

மாதவ னாம்பிருகு மாதினிட - தம்பதியை

யாதென் றுரைப்போம் யாம்?

## வசனம்

''ஆ ஆ ! வேதனன்எம் பிரமதேவன் சத்திய லோகமோ, மகாவிஷ்ணு வினுட நகரமாகிய வைகுந்தமோ, வல்லமையுள்ள தேவராஜனுடைய அமராவதியோ, பரிசுத்த மனமுள்ள மாதவனாகிய, பிருகு மகாமுனிவர் பத்தினியாகிய புலோமிசையம்மாள் வாசஞ் செய்யும் ஆசிரமத்தை என்னவென்று சொல்லப் போகிறோம் நாங்கள்? ஆ ஆ ! நன்றாயிருக்கிறது! இந்த ஆசிரமத்தின் சிங்காரமே சிங்காரம்! ஆ ஆ!''

## கட்டியன் சொல் வெண்பா

*இராகம் : சங்கரா பரணம்*

153. அதிதிகளைக் கண்டே அருளும் புலோமிசையாள்

துதிபுரிந்து மிக்க துரிதத்தில் - பதிவிரதை

தன்மையாய்ப் பிச்சையிடத் தன்கழலை நோக்கியே

ஒண்மையுடன் இருக்கின்றாள் உகந்து !

### வசனம்

"அகோதெப்படி யென்றாள், அதிதிகள் ரூபங் கொண்டு வந்த பிரமதேவர், மகாவிஷ்ணு, பரமசிவன் இவர்களைப் புலோமிசையம்மன் கண்டு, சீக்கிரமாகக் கைநிறைய அமுதெடுத்துக் கொண்டுவந்து தனது பெருவிரலைப் பார்த்தபடிக்கு நிற்கிற அருமையான கற்புள்ள புலோமிசையம்மனைப் பார்த்து, மூவராகிய சங்கமர்கள் சொல்லுகிற விதம் காண்க !"

## பிரமன், விஷ்ணு, சிவன் மூவரும் சங்கமராய்ச் சொல்லுகிற விருத்தம்

*இராகம் : கேதார கௌளம்*

154. அன்புடன் இந்தத் தனப்பால்
அருந்திட மனதில் எண்ணி
இன்பமாய் இவ்வா சிரமம்
இன்றைய தினத்தில் வந்தோம்
கொன்பெறும் பலிமேல் இச்சை
கொண்டுபோம் வந்த நல்ல
பொன்புலோ மிசையே எண்ணம்
பூர்த்திசெய் தனுப்பு வாயே!

### வசனம்

"ஆசையுடனே உம்மிட முலைப்பால் சாப்பிட மனதிலே; நினைத்து இஷ்டமாக இந்த ஆசிரமத்திற்கு இன்றைய தினம்

வந்தோம் ! நீ கொண்டுவந்த அமுதின் பேரில் விருப்பமில்லை ! அழகினை உடைய புலோமிசையே நாங்கள் நினைத்துவந்த ஆசையை நிறைவேற்றி அனுப்புவாய் பிருகு பத்தினியே!''

### கட்டியன் சொல் வசனம்

''இந்தப் பிரகாரம் சங்கம ரூபம் கொண்ட மும்மூர்த்திகளும் முலைப்பால் கொடுக்கும்படி புலோமிசைம்மாளைக் கேட்க, தனக்கொன்றுந் தோன்றாமல் நின்று ஆலோசித்து, தனது பர்த்தாவினிடம் போய்ச் சொல்லுகிற விதம் காண்க!''

## புலோமிசை, பிருகு முனிவருடன் சொல்கின்ற விருத்தம்

155. நாதனே முனிவர் கோவே
ஞானமத னிற்சி றந்த
தீதிலாப் பரங்கள் மூவர்
திறமுறு நமதா சிரமம்
போதவே வந்து நின்றார்
புகழ்பலி கொண்டு சென்றேன்
காதலாய் நின்த னப்பால்
கருதியே வந்தோம் என்றார் !

### வசனம்

''கேளும் என் பிராணநாதா ! மெய்ஞ்ஞானத்தில் சிறந்த குற்றமில்லாத பரங்களாகிய சங்கமர் மூன்றுபேர்கள், நிலையான

நமது ஆசிரமத்தில் வந்து நின்றார்கள்; யான் அவர்களுக்குப் பிட்சை யிடும்படிக்கு அமுதும் கொண்டுபேனேன்; அதை அவர்கள் வாங்கிக் கொள்ளாமல், 'உம்முடைய முலைப்பால் சாப்பிட ஆசைகொண்டு வந்தோம்; அதைக் கொடும்' என்று சொன்னார்கள், முனிவர் கோவே!''

## இதுவும் புலோமிசை பிருகு முனிவரிடம் புலம்பல்

*இராகம் : முகாரி*

156. சித்த நிறுத்தித் தவஞ்செய்யும்
திறமுடைய முனிநாதா
திருத்த மாகிய நான்குசீர்
மறைகளும் தேர்ந்த முனிநாதா
அத்தனை உளத்தினில் அமைத்த ஞானமுள்ள முனிநாதா
அகிர்த்திய நடந்ததை அறைகுவேன்கேளு முனிநாதா!
உலகத்தினிற் பிச்சை உண்மையாய் எடுப்பவர் முனிநாதா
உன்தனப் பாலைத்தா உண்போம் என்று
முனிநாதா?
தலத்திற் பலிவாங்கும் சங்கமர் ஆனோர்கள் முனிநாதா
தனப்பால் அருந்துவோம்தா என்று கேட்பரோ
முனிநாதா?
அநியாய மாகவே அரிய சங்கமர்கள் முனிநாதா
ஆசிரமத் தேவந்து அடாவடியாய்க் கேட்டார் முனிநாதா

இனியிந்த வார்த்தையை இப்புவியிற் சொன்னால் முனிநாதா!
ஏளிதம் சொல்லியே என்னைநகைப்பாரே முனிநாதா!
இந்த வார்த்தைகேட்க என்தன் தலைவிதியோ முனிநாதா?
இவ்விதம் நடந்ததிங் கெவர்கள் செய்த சதியோ முனிநாதா!
வந்த சங்கமர்கள் மனதைரியம் தானே முனிநாதா
வாய்லேசியாய்ப் பால்வழங்கு என்று உரைத்தது முனிநாதா!

## பிருகு முனிவர், புலோமிசைக்குச் சொல்

### எண்சீரடி விருத்தம்

157. கற்பினுக்கோர் கடலாகு மாதே நன்றாய்
கருத்து தினையளவும் கலங்கிட வேண்டாநற்
பொற்புலவு கமண்டலமும் பிரம்பும் இந்தா
புகழுடனே கொண்டுபோய்ப் பரமாய் வந்த
நற்புகழ்சேர் மூவர்மிசை நீர்தெ ளித்து
நவில்பிரம்பி னால்தாட்டி னால்சே யாவார்
அற்புதமாய் குழந்தைகளை நீஎ டுத்துன்
அரியதனப் பாலதனை அளித்தி டாயே!

### வசனம்

"கற்பினுக்கு ஒரு சமுத்திரமாகிய பெண்ணே, தினைப் பிரமாணமும் கலங்கவேண்டாம்! நல்ல அழகு பொருந்திய

கமண்டலமும் பிரம்பும் தருகிறேன். அகமுடனே நீ கொண்டுபோய்ப் பரமாய் வந்த சங்கமராகிய நல்ல கீர்த்தியுள்ள மூவர் பேரிலும் கமண்டல நீரைத் தெளித்துப் பிரம்பினால் தட்டினால், குழந்தைக ளாவார்கள். அந்த அதிசயமான குழந்தைகளை நீ யெடுத்து உன்னுடைய முலைப்பால் கொடுப்பாய் பெண்ணே!''

## கட்டியன் சொல் விருத்தம்

*இராகம் : மோகனம்*

158. நாதனார் சொற்ப டிக்கு
நங்கையப் படியே செய்ய
சூதுமா லரனும் வேதன்
சுருக்கினில் மழலை ஆக
தீதிலாக் கரத்தில் ஏந்திச்
செருக்கியே முத்தம் இட்டு
மாதர சுந்த னப்பால்
மகிழுடன் கொடுத்திட் டாளே!

## வசனம்

''இந்தப் பிரகாரமாகப் பிருகு முனிவர் சொன்ன பிரகாரம், புலோமிசையம்மாள் கமண்டல ஜலத்தைத் தெளித்து, பிரம்பினால் தட்டின மாத்திரத்தில், சூதாக சங்கமராக வந்த மகாவிஷ்ணுவும், பரமசிவனும், பிரமதேவனும் அதிக சீக்கிரத்தில் குழந்தை வடிவமானார்கள். அவர்களைப் புலோமிசையம்மாள் கையிலெடுத்து

சந்தோஷத்துடன் முத்தமிட்டுத் தனது முலைப்பால் கொடுத்தாள்கின்ற விதம் காண்க!''

## புலோமிசை மூவருக்கும் பால்கொடுக்கிற தரு

### பல்லவி

159. அருந்துவீர்களே - முலைப்பால்
அருந்துவீர்களே !

### அனுபல்லவி

பரந்த அன்பொடு பயின்ற சூதர்போல்
பார்த்துக் கரத்தில் எடுத்தணைத் தேன்பால் - அரு

### சரணங்கள்

உருவத்தை மிகஉவந்து நோக்கியே
அரிஅயன் அரன்போல் அமர்ந்தீர் - அரு
வடிவேல் போல்விழி மாகந் தரமும்
நெடிய மால்போல நிகழ்ந்திடும் சேயே - அரு
இந்தக் குழந்தைகள் எழிலைச் சொல்லவே
அந்த ஆயிர நாவரவால் ஆகுமோ? - அரு

## கட்டியன் சொல் வெண்பா

*இராகம் : சங்கராபரணம்*

160. பாலளித்துச் சேய்க்குப் பரிவுடனே தன்கரத்தில்
சேல்விழி புலோமிசையாள் சேர்த்தணைத்து - கோலத்
தொட்டிலிலே இட்டுச் சுகிந்தமுடன் தாதி
சட்டமுடன் தாலாட்டி னார் !

### வசனம்

"இந்தப் பிரகாரம் புலோமிசையம்மாள், மூன்று குழந்தைகளுக்கும் முலைப்பால் கொடுத்துக் கையினால் சேர்த்தணைத்து முத்தமிட்டு அழகிய தொட்டிலில் வளர்த்தித் தாதிகளினால் கிரமமாகத் தாலாட்டுகிற விதம் காண்க!"

## புலோமிசை தாலாட்டுகிற தரு

*இராகம் : நீலாம்புரி*

161. ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ!
பேரான மாயவனோ? பிரியமுள்ள இந்திரனோ?
தாரார் புயமுடைய சங்கரனோ சண்முகனோ? - ஆரா
கண்ணே நவமணியே கற்பகமே மெய்ப்பொருளே
பண்ணார் கிளிமொழியே பாங்கான ரத்தினமே - ஆரா
மைந்தனிலா எவற்கு மைமைதனை நீக்கும்
சுந்தர மிகுத்துவந்த தோன்றலே கண்வளரீர் - ஆரா

தண்ணார் கமலமலர் தான்வசிக் கும்வரனே
விண்ணாரும் இந்திரனோ வெண்மையுள்ள சந்திரனோ? -
ஆரா

## கட்டியன்சொல் கவி

*இராகம் : மோகனம்*

162. கற்பினில் மிகுந்த கவின்புலோ மிசையும்
பொற்புறு குழந்தையைப் புகழ்தா லாட்டி
அற்புத மாகவே அங்குறை போது
விற்பன மூவரும் மிகவருந் துவரே !

## வசனம்

''அகோ தெப்படி யென்றால், கற்பிலே மிகுந்தவளாகிய புலோமிசையம்மாள் அழகுள்ள குழந்தை வடிவமாக இருக்கிற பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் என்னும் மூவர்களையும் புகழ்ந்து தாலாட்டிக் கொண்டு, பிருகு முனிவராசிரமத்தில் வைத்திருக்கும்போது, விற்பன முள்ள பார்வதி, மகாலட்சுமி, சரசுவதி என்று சொல்லப்பட்ட மூவரும் தங்கள் கணவரைக் காணோமென்று பிரலாபிக்கிற விதம் காண்க!''

## பார்வதி, இலட்சுமி, சரசுவதி புலம்பல்

## கண்ணிகள்

163. ஐயையோ என்ன செய்வோம்?
ஆவிவைத் தெவ்விதம் உய்வோம்?

மெய்ம்மையாம் தவமிகுந்த
வீணைமா முனிவன் சொன்ன
சேதியை அறிய வென்று
திரிமூர்த்தி தமைய னுப்பி
போதநா முளம்ம கிழ்ந்தே
பூரிப்பி னுடனி ருந்தோம்
மாதரசி மூவ ரையும்
வகையுடனே என்செய் தாளோ?
காதலி புலோமி சைதான்
கற்பினால் என்செய் தாளோ?
நன்றென நடந்த வர்இந்
நாளும்வந்து சேர வில்லை!
சென்றவர் நமதி டத்தில்
திரும்பிவந்து காண வில்லை!
போனவர் வருகு வாரோ?
பொன்முகம் காட்டு வாரோ?
ஆனவர் வருகு வாரோ
ஆனந்த மும்நாம் பெருக
நாரதன் கலகத் தாலே
நடந்ததிந்த மோசம் ஐயோ!
தீரமுறும் முனிவன் செய்த
சதிதனை நாம றியோம் !

## கட்டியன் விருத்தம்

இராகம் : கேதார கௌளம்

164. மூவரைக் குழந்தை யாக்கி
முனைந்துதா லாட்டும் போது
தேவிமார் மூன்று பேரும்
திகைத்துநம் மிறைவர் தம்மை
ஆவலாய்க் காணா ததாலே
அருமைநா ரதனையிப் போது
பாவையே விரைவில் ஓடிப்
பண்புடன் அழைத்துக் கேட்போம் !

## வசனம்

"அகோதெப்படி யென்றால், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று பெயரையும் சிசுக்களாகச் செய்து, தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டி வைத்திருக்கும்போது, மும்மூர்த்தி களுடைய தேவிமார்களாகிய சரசுவதி, லட்சுமி, பார்வதி மூன்றுபேரும் பிரபாவித்துத் தங்கள் நாயகர் தங்களிடம் வராததனாலே நாரத மகாமுனியை இப்போது அழைக்கச் சொல்லித் தோழியை விட்டு அழைக்கிற விதம் காண்க !"

# நாரதர் வருகிற பொது

## விருத்தம்

*இராகம் : சாவேரி*

165. திரிமூர்த்தி தேவி மார்கள்
தேடியே அழைத்த சேதி
விரைவினில் அறிவோம் என்று
மெய்யினில் நீறு பூசி
பரிவுடன் வீணை தண்டு
பணிமலர்க் கரத்திற் கொண்டு
அரிவையர் தம்ப திக்கே
அதிதிநா ரதர்வந் தாரே!

## வசனம்

"இந்தப் பிரகாரமாக சரசுவதி, லட்சுமி, பார்வதி மூன்றுபேரும் தேடித் தன்னை யழைத்த சங்கதியைச் சீக்கிரத்தில் தெரிந்து கொள்ளுவோம் என்று சரீர முழுவதும் விபூதி தரித்து, ஆசையுடனே வீணை, தண்டு, கமண்டலம், மலர் போன்ற கையிற் பிடித்து, பெண்ணரசியாகிய மூவருக்கும் கைலாயத்திற்கு அதிதியாகிய நாரத முனிவர் அதிசீக்கிரமாய் வருகின்ற விதம் காண்க!"

## நாரதர் வருகிற தரு

*இராகம் : சாவேரி*

### பல்லவி

166. கவுரி கமலையொடு கலைமகள் அழைத்திட
 கடிதில் நாரதர் வந்தார் !

### அனுபல்லவி

தவரில்லா மனமதைச் சார்ந்தநா ரதர்தானும்
விபரீத மாய்க்கலகம் விளைந்ததே எனஎண்ணி - கவுரி

### சரணங்கள்

இங்கித வீணையைச் சங்கீத மீட்டி
துங்க உருத்திராட்ச மங்கள சிரம்மாட்டி - கவுரி
தாய்மார் அழைத்ததைத் தானறிய நண்ணி
தூய்மையாம் எழுத்தைந்து துலங்கம னதில்எண்ணி - கவுரி
எண்டிசை யோர்களும் தெண்டனிட்டுப் போற்றும்
அண்டொ ணாதபுகழ் கொண்ட ஞானமுனி - கவுரி

## நாரதர் மூவர் பத்தினிக்குச் சொல் போற்றி

### விருத்தம்

167. சீருறும் அம்பு யத்தில்
 செனித்தபூ மகளே போற்றி

பாருறும் வரையோன் பெற்ற

பார்வதித் தாயே போற்றி

தேருறு பிரம தேவன்

தேவிதாள் இணைகள் போற்றி

தாருறும் எனைய ழைத்த

சங்கதி உரைசெய் வீரே !

### வசனம்

''சிறப்பாகிய செந்தாமரைக் கமலத்தில் அவதாரம் செய்த மகாலட்சுமியே சரணம் ! உலகத்தி லிருக்கிற பர்வதங்களுக்கு கெல்லாம் அரசன் பெற்ற பார்வதித் தாயே சரணம் ! நான்கு வேதமும் செவ்வையாக அறிந்த பிரமதேவன் மனைவியாகிய உமது பாதமே சரணம் ! உருத்திராட்ச மாலை தரித்த அடியேனை இவ்விடத்தில் அழைத்த சமாசாரத்தைத் தெரியச் சொல்லுங்கள், அம்மணி !''

## இலக்குமி, பார்வதி, சரசுவதி நாரதருக்குச் சொல்கிற

### விருத்தம்

இராகம் : பைரவி

168. பெருகிய தவத்தின் மிக்க

பிரபல முனிவ னேகேள்

கருதரும் பிருகு தேவி

கற்பினை அறியப் போன

அருமைசேர் கணவர் மூவர்
அறிந்தின்னம் வராத தாலே
வெருவியே யாங்கள் உம்மை
விரைவினில் அழைத்திட் டோமே!

### வசனம்

"தவத்திலே அதிக பிரபலமுள்ள நாரத முனிவரே கேளும் ! யாவரும் நினைப்பதற்கு அருமையான பதிவிரதா சிரோன்மணியான புலோமிசையின் கற்பை அறிந்து வருகிறதற்குப் போன எங்கள் கணவராகிய திரிமூர்த்திகளும் இன்னும் இவ்விடம் வந்து சேராதபடியால், நாங்கள் பயந்து உம்மை யழைத்தோம் முனிவனே!"

## நாரதர், இலக்குமி, பார்வதி, சரஸ்வதிக்குச் சொல்

### விருத்தம்

169. பயமடைந் தெனைய ழைத்த
பார்க்கவி மலைம டந்தை
அயன்மனைமூவ ரான
அன்னையே உங்கள் நாதர்
இயலுடன் எங்கும் போக
இல்லையப் பிருகு தேவி
மயமுள ஆசிர மத்தில்
மகிழ்ந்திருக் கின்றார் அம்மா !

## வசனம்

''புருஷர்களைக் காணாது, பயம் அடைந்து, என்னை அழைப்பித்த இலக்குமி, பார்வதி, அயன் மனைவியாகிய சரஸ்வதி என்னும் மூவரான தாய்மார்களே! உங்கள் பிராணநாதர் மனம் சலித்து எவ்விடங்களுக்கும் போய்விடவில்லை! அந்தப் பிருகு மகாமுனிவர் தேவியாகிய புலோமிசையம்மாள் ஆசிரமத்தில் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கிறார்களம்மா, உலக மாதாக்களே!

## மும்மூர்த்தி பத்தினிகள் நாரதருக்குச் சொல்

## பரணி

170. பிருகுமா முனிவன் பெருவா சிரமம்

பரிவுடன் முனியே பாங்குடன் போவோம் !

## வசனம்

''கேளும் நாரத முனிவரே! பிருகு மகாமுனிவர் ஆசிரமத்திற்குப் போகலாம் வாரும்!''

## நாரதர் வசனம்

''அப்படியே போய் வருவோம், வாரும் அன்னை மார்களே !''

# இலக்குமி, பார்வதி, சரஸ்வதி நாரதருடன் சொல்லிக் கொண்டு வருகின்ற தரு

இராகம் : காம்போதி

## பல்லவி

171. நாரதரே நீரும் - பிருகாசிரமம்
நாடிப் போவோம் வாரும்!

## அனுபல்லவி

பார மலைகளும் பரவிய கான்யாறும்
தீர முடன்கடந்து தீவிர மாய்நடந்து - நார

## சரணங்கள்

கொடியவேங்கை சிங்கம் குலவி அதம் செய்யும்
இடமுள்ள கானகம்யாவும் தாண்டி வேண்டி - நார
மாதவத்தில் ஓங்கும் வண்மையுள்ள பிருகு
காதலி கற்பினைக் காணமகிழ் பூண - நார
எத்திசையும் புகழ்எங்கள் கணவர்களை
பக்தியுடன் விரைவில் பார்க்கத் துயர்நீக்க - நார
என்ன வென்றுயாம் இயம்புவோம் மனத்துயர்
துன்னிடா தொழியச் சுருக்காக வேயுயர் - நார

## கட்டியன் சொல் வசனம்

"இந்தப் பிரகாரம் லட்சுமி, பார்வதி, சரஸ்வதி, மூவரும் நாரத முனிவரை யழைத்துக்கொண்டு, பிருகு மகாமுனிவர் ஆசிரமத்திற்கு வந்து, அவ்விடத்திலுள்ள புஷ்ப அலங்காரங்களும் ஆசிரமத்தின் சிங்காரங்களையும் பார்த்து, மனத்தில் களிப்படைந்து சொல்லுகிற விதம் காண்க!"

## மூவர் பத்தினிகளும் சொல் கொச்சகம்

*இராகம் : புன்னாகவராளி*

172. வச்சிர வண்ணன் பரவிவாழ் பதியோ மாயவனார்
இச்சை யுடன்வாழ் பதியோ இன்பமுட னேபுனிதன்
அச்சமற வாழ்ந்தி ருக்கும் அளகையெனும் நற்பதியோ
மெச்சுமிந்தப் பாராளும் வேந்தர் பதியோ அறியோம்!

### வசனம்

" ஆ ஆ ஆ! நன்றாயிருக்கிறது! வச்சிரவண்ணனாகிய குபேரன் வாழ்ந்திருக்கும் அளகாபுரியோ? மாயவனாகிய மகாவிஷ்ணு வாசஞ்செய்யும் நகரமாகிய வைகுந்தமோ? இன்பத்துடன் புனிதனாகிய இந்திரன் அச்சமில்லாமல் வாழ்ந்திருக்கும் வாசவ புரியோ? பூலோகமெல்லாம் ஒரு குடையிலாளப்பட்ட அரசன் வாழும் சிங்காரமுள்ள இருப்பிடமோ? அறிகிலோம் நன்றாயிருக்கிறது! இதனுடைய அழகே அழகு! ஆ, ஆ எவ்வளவு அழகு!

## கட்டியன் சொல் பொதுக் கவி

*இராகம் : தோடி*

173. ஆசிரமம் பார்த்தே அதிசயித் திருந்தே
தேசுள மூவர்கள் தேவியர் தமையும்
நேசமாய் அழைத்து நிலையுள பிருகுக்(கு)
ஆசைப் பத்தினியும் அன்புடன் உரைப்பாள் !

### வசனம்

"அகோதெப்படி யென்றால் ஆசிரமங்களைப் பார்த்து அதிசயம் அடைந்திருந்த பிரகாசமுள்ள மும்மூர்த்திகள் பத்தினிமார்களை இஷ்டமுடன் அழைத்து நிலைமையுள்ள பிருகு முனிவருக்கு ஆசையுள்ள பத்தினியாகிய புலோமிசையம்மாள் அன்புடன் அவர்களைப் பார்த்து சொல்லுகிற விதம் காண்க!"

## புலோமிசையம்மான் மும்மூர்த்தி பத்தினிகளைப் பார்த்துச் சொல்லுகிற

### விருத்தம்

*இராகம் : தோடி*

174. பங்கய மலர்க்கண் வந்த
பைந்தொடி செல்வி தானோ
சங்கரன் இடத்த மர்ந்த
தற்பறை என்னும் மானோ

துங்கநற் கல்வி வாய்ந்த
தூயநா மகளோ நீங்கள்
மங்கள குணஞ்சி றந்த
மனகன்னி மாரோ அம்மா!

### வசனம்

''தாமரைப் புட்பத்தில் உற்பவித்த பசுமை தங்கிய வளையலை யுடைய செல்வியாகிய மகாலட்சுமியோ? சங்கரனான பரம சிவனிடத்தில் அமர்ந்த தற்பறையாகிய பார்வதியோ? பரிசுத்தமான வித்தையினையுடைய நாமகளாகிய சரஸ்வதியோ? மங்கள குணம் பொருந்திய வனதேவதைகளோ? நீங்கள் யார்? சொல்லும் தாய்மார்களே!''

## மூவர் பத்தினியும் புலோமிசைக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : மோகனம்*

175. ஒருவரும் நிகர்இல் லாத
உயர்வுள கற்பு வீறும்
அரிவையர்க் கரசே உந்தன்
ஆசிரமந் தனிலி ருக்கும்
உருவமைந் தர்களே எங்கள்
உளமகிழ் பிராண நாதர்

மருவிய அவர்க ளுக்கு

மனைவியர் நாங்கள் அம்மா!

### வசனம்

''உலகத்திலே ஒருவரும் சமானம் இல்லாத உயர்வாகிய கற்பு விளங்கிய பெண்களுக்கெல்லாம் நாயகமே, உமது ஆசிரமத்தில் இருக்கும் குழந்தை உருவம் அமைந்தவர் எனது மனது மகிழும் பிராண நாதர், அவர்களுக்கு நாங்கள் பெண்சாதிகள், அறிந்துகொள்ளும் அம்மா புலோமிசையே !''

## புலோமிசை, மூவர் தேவிமாருக்குப் போற்றி

### விருத்தம்

176. காசினி தனிலுள் ளோர்க்குக்

கனத்த செல்வத்தை நல்கும்

மாசிலா வழகின் மிக்க

விமலையே போற்றி போற்றி

நேசமாய் வெள்ளை பற்பம்

நிலையுறு தாயே போற்றி

மீசுரக் கைலை வாழும்

விமலைமா தரசி போற்றி !

### வசனம்

''பூமியின்கண் உற்பவித்த சகலமானவருக்கும் அதிகமான பாக்கியங்களைக் கொடுக்கும் அழகின் மிகுந்த மகாலட்சுமியே சரணம்! சரணம்! வெள்ளையாகிய தாமரைக் கமலத்தில் நிலையாக இருக்கும் அன்னையே சரணம்! கீர்த்தியில் மீசுரமான கையினில் வாசஞ்செய்யும் பார்வதியாகிய பெண்கள் நாயகமே சரணம் அம்மா!''

## மூவர் தேவிமார் புலோமிசைக்கு வாழி

### விருத்தம்

177. பேசருங் கற்பும் பண்பும்
பிறங்கிய மாதே வாழி
பாசமாய்த் தருமம் செய்யும்
பைங்கிளி அனையாய் வாழி
தேசெகு கடலை தன்னைச்
சிறப்புடன் தளிகை செய்து
ஆசிலா தளித்துக் கீர்த்தி
அதிகமுற் றவளே வாழி!

### வசனம்

''ஒருவருஞ் சொல்லுதற்கு அருமையான கற்பும் குணமும் பிரகாசிக்கும் பெண்ணே வாழி! அன்புடனே தருமம் செய்யும்

தயவுள்ள கிளியைப் போலும் வசனத்தை யுடையவளே வாழி! பிரகாசமுள்ள எகுக்கடலையை நல்ல மதுரமாகச் சமையல் செய்து கொடுத்து, மிகுந்த கீர்த்தி பொருந்திய புலோமிசையே வாழி, வாழக் கடவாயம்மா!''

## புலோமிசை, மூவர் தேவிகளுக்குச் சொல்

### விருத்தம்

178. பிரமன்பால் சிவனென் றோதும்
பிரபல மூவர் தம்மை
தரமிகும் இவர்கள் தேவி
தன்னையும் அநேகக் காலம்
உரமுடன் தவம்பு றிந்த
உயருள்ள தவப லத்தால்
பரவுமென் ஆசிர மத்தில்
பரிவுடன் வந்தீ ரம்மா !

### வசனம்

''பிரமதேவன், மகாவிஷ்ணு, உருத்திரன் என்னும் பிரபலமுள்ள திரிமூர்த்திகளையும் வலிமையுள்ள அவர்கள் தேவிகளையும் அநேகக் காலம் ஞானத்துடனே தவங்களைச் செய்த உயர்வாகிய நல்ல பலனால் என்னுடைய இந்த ஆசிரமத்தில்

அன்புடன் வந்தீர்கள், அம்மணி ! உங்களை இவ்விடத்தில் கண்களைப் பார்க்கும்படி கிடைத்தது தாய்மார்களே !''

## மூவர் பத்தினிகள் புலோமிசைக்குச் சொல் தரு

### பல்லவி

179. பிச்சை கொடுத்தருள்வாய் - பெண்ணரசே
பிச்சை கொடுத்தருள்வாய் !

### அனுபல்லவி

அச்சமின் றெங்களுக்கு கதிகாரம் கைகூட
இச்சை நாயகனைத் தந்தெங்கணுங் கொண்டாட - பிச்
தங்கு புருடனின்றிப் பாரிலென்றும் வேதனை
எங்கும் புகழும்எங்கட் கிசைந்தபிராண நாதனை - பிச்
வாரிசங் கயலினை வண்டைக் கடலைமானை
நேரிடு வம்பக நேரிழையாய் எங்கோனை - பிச்
இனியகரும் பைப்பாலை இயங்குகிளி தேந்தனை
அனையமொழி உடையாய் அணையுமெல் காந்தனை - பிச்
மூர்த்தி யிவர்களென்று மூவுல கும்மகிழ
சீர்த்தி விளங்க எங்கட் தேவைதா ரும்புகழ - பிச்

### கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரம் இலக்குமி, பார்வதி, சரஸ்வதி மூவரும் புலோமிசையம்மாளைப் புருஷனைப் பிச்சை தாருமென்று கேட்க,

புலோமிசையம்மாள் தன் பர்த்தாவாகிய பிருகு முனிவரிடம் போய்ச் சொல்லுகிற விதங் காண்க!''

## புலோமிசை பிருகு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

180. நெஞ்சமோர் நிலைப்ப டுத்தி
நெடுந்தவம் செய்து நல்ல
பஞ்சவக் கரங்கள் ஓதும்
பண்புள நாதா போற்றி
கஞ்சவாண் முகத்த ரான
கவுரிபார்க் கவிபா மாது
விஞ்சுநம் மகத்தி லுற்றார்
மெல்லடி பணிவோம் வாரீர்

### வசனம்

''மனதை ஒரு நிலையில் நிறுத்தி நெடுங்காலம் பெரிய தவங்களைச் செய்து, நல்ல பஞ்சாட்சரங்களைச் செபிக்கும் பண்புள்ள பிராணநாதனே! சரணம்! செந்தாமரைக் கமலம் போலும் முகத்தினராகிய பார்வதி, மகாலட்சுமி, சரசுவதி என்று சொல்லப்பட்ட திரிமூர்த்திகள், பெண்சாதிகள் நம்முடைய ஆசிரமத்தில் வந்திருக்கிறார்கள்! அவர்கள் திருவடியைப் பணிந்து துதி செய்வோம் வாரும் நாதரே!''

## பிருகு முனிவர் சொல் வசனம்

"அப்படியே போய்ச் சேவித்துத் துதி செய்வோம், வருவாய் பிராண நாயகி!"

## பிருகு முனிவர், புலோமிசையம்மான் இருவரும் மூவர் பத்தினிமாரை வணங்கித் துதி செய்கிற தரு

இராகம் : தோடி

### பல்லவி

181. விமலையே வாணியே விளங்கும் இந்திரையே
நின்மெல்லடி சரணம் அம்மா !

### அனுபல்லவி

அமலன் வாமபாகம் அன்புடன் வாழ்சத்தி
கமலநான் முகன்நாவிற் கலந்துறை யருளத்தி - விம

### சரணங்கள்

பாரைச் சுருட்டிய பணையிரண் யாக்கதனை
தீரமுடன் செயித்த சீதரன் தேவியே! - விம
அன்பாய் உங்களைக் காண அநேக நீடூழிகாலம்
இன்பமாய்த் தவம்செய்தோம் இறைவியே என்றாயே - விம
தாய்நீங்கள் மூவரும் தமியேன் இடத்தைநாடித்

தூய்மையாய் வந்ததேது சொல்லுமெனக் கிப்போது - விம

## மூவர் பத்தினிகள் பிருகுமுனிவருக்குச் சொல்

### விருத்தம்

182. சொல்லுமென் றெமக்குரைத்த
தூயமா முனியே கேளும்
நல்லமும் மூர்த்தி எங்கள்
நாதரிவ் விடத்தில் நண்ணி
எல்லையிற் சிறுவர் ஆகி
உறைவதால் அவரைத் தேடி
மெல்லியர் யாங்கள் மூவர்
விரைவினில் வந்தோம் ஐயா!

### வசனம்

''வந்த காரியத்தைச் சொல்லு மென்று எங்களைக் கேட்ட பரிசுத்தமான பிருகு முனிவரே, கேளும்! எங்கள் பிராண நாதரராகிய திரிமூர்த்திகளும், இந்த ஆசிரமத்திற்கு வந்து சீக்கிரத்தில் சிறு குழந்தைகளாய் வாசஞ் செய்திருப்பதால், அவர்களை எங்குத் தேடிக் காணாமல் இவ்விடம் தேடிக்கொண்டு வந்திருக்கிறோம்! நாங்கள் மூவராகிய மகாலட்சுமி, சரஸ்வதி, பார்வதி ஐயா, முனிநாதரே!''

## இதுவும் மூவர் பத்தினிகள் பிருகு முனிவருக்குச் சொல்

### பரணி

183. மாதவஞ் செய்யு மாமுனி யேஎங்

காதலர் தம்மைக் களிதளிப் பீரே!

### வசனம்

''மகத்தாகிய தவத்தைச் செய்யும் பிருகுமகா முனிவரே, எங்கள் காதலராகிய பிராண நாதரைச் சந்தோஷத்துடனே பழைய உருவம் வருவித்துக் கொடுத்தருள வேணும், தயாள குணமுடைய தவசிரேஷ்டரே !''

## பிருகுமுனிவர் மூவர் பத்தினிக்குச் சொல்

### வசனம்

''அப்படியே கொடுக்கிறேன் உலக மாதாக்களே!''

## பிருகு முனிவர் புலோமிசைக்குச் சொல்

### விருத்தம்

184. சாந்தமும் கற்பும் மிக்க

சார்புலோ மிசையே கேளாய்

பாந்தமாய் மதலை யாய்நின்

பண்புறும் ஆசிர மத்தில்

வாய்ந்தநல் மூவர் தம்மை

வகையுடன் எழுப்பப் பாணி

ஏந்திய பிரம்பு இந்தா

இக்கணம் எழுப்பி வாராய் !

## வசனம்

''கேளாய் சாந்தகுணமும் மிகுந்திருக்கின்ற என்னுடைய பத்தினியாகிய புலோமிசையே ! உன்னுடைய ஆசிரமத்தில் சிறு குழந்தையாக இருக்கிற பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று சொல்லப்பட்ட மூவர்களையும், முன் உருவம் வரும்படி செய்வதற்குக் கமண்டல ஜலத்தைத் தெளித்துப் பிரம்பினால் தட்டி எழுப்பி வருவாய், பெண்கள் சிகாமணியே !''

## புலோமிசை சொல் வசனம்

''அப்படியே எழுப்பி வருகிறேன், என் பர்த்தாவாகிய மகா முனிவரே!''

## கட்டியன் சொல் பொது விருத்தம்

இராகம் : தோடி

185. கொழுநரும் உரைத்த வாறு

கோதையும் விரைவில் சென்று

பழுதிலாக் கமண்ட லத்துப்
பண்புநீர் தனைத்தெளித்து
எழிலுறு பிரம்பால் தட்ட
இயலுள மூன்று பேரும்
வழுவிலா விடைபுள் ளன்னம்
மகிழுடன் அழைத்து வாரார்!

## வசனம்

''அகோதெப்படி யென்றால், பிருகு மகா முனிவராகிய பிராணநாதர் சொல்லிய படிக்கு, அவர் பத்தினியாகிய புலோமிசையம்மாள் சீக்கிரமாகச் சென்று, குற்றமில்லாத கமண்டலத்திலிருக்கும் ஜலத்தைக் குழந்தைகளாக இருக்கின்ற மூவரின் பேரிலும் தெளித்து, அழகிய பிரம்பினால் தட்டின மாத்திரத்தில் பண்புள்ள திரிமூர்த்திகளும், பரிசுத்தமான ரிஷபவாகனத்திலும், புள்ளாகிய கருடாழ்வான் பேரிலும், அன்ன வாகனத்திலும் ஏறிக்கொண்டு, பிருகு முனிவர் புலோமிசையம்மாள் இருவருக்கும் பிரதியட்சமானார், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று அறிக!''

*இராகம் : மோகனம்*

## பல்லவி

186. அன்னம்புள் விடையேறி அயனரி அரனுமே
அருமுனி முன்னில் வந்தார்!

### அனுபல்லவி

மன்னுந் தேவியருடன் மாட்சி வாகனத்துடன்
மாதவ பிருகு புலோமிசை கண்காண - அன்

### சரணங்கள்

நண்ணுங் கற்பதை நாடி நாரதன் சொல்லாலே
வண்ணப் புலோமிசை மாது கீர்த்தி விளங்க - அன்
அவரவர் ஆயுதம் அங்கத்தினில் ஏற்றி
தவறிலா மாதுடன் தாங்கள் ஒருமிக்க - அன்
பன்னரும் யாழ்மீட்டிப் பரிவாய் முனிவர்பாட
நன்னயத் துடன்மலர் நாடியம ரர்போட - அன்

## பிருகு முனிவர் சிவனுக்குச் சொல்

### விருத்தம்

தேவாரப்பண்

187. கமலமும் இணையில் லாத
கலைமதி முகத்தாள் ஆன
விமலையை இடப்பா கத்தில்
விருப்புடன் வைத்த தேவே
அமலமார்க் கண்ட னுக்காய்
அன்றதி சினமி குத்தே
எமன்றனை உதைத்த உன்தன்
இண்டைபொற் சரணம் போற்றி !

## வசனம்

"அரகரா, கைலாச வாசா, தாமரைக் கமலமும், இணையில்லாத பூரண சந்திரனைப் போன்ற முகத்தினை யுடைய பார்வதா தேவியை இடப்பாகத்தில் விருப்பத்துடன் வைத்தருளிய கர்த்தனே ! அமலமென்னும் பரிசுத்த குணமுள்ள மார்க்கண்டருக்காக, முன் நாளையிலே கோபம் அதிகமாக உண்டாகி, எமனை வதைத்த உமது தாமரை மலர்போன்ற அழகிய சரணமே சரணமம்மா!"

# சிவன் பிருகுக்கு வாழி

188. வெள்ளியின் புதல்வன் என்ன
மேதினி தனிலு தித்து
உள்ளினிற் களங்கம் இல்லா
உத்தம குணத்தாய் வாழி
தெள்ளருங் கற்பின் மிக்க
தேன்மொழி புலோமி சைக்கு
எள்ளும்எண் ணையும்போ லொத்தே
இயலுடன் வாழி வாழி !

## வசனம்

"சுக்கிர பகவான் புதல்வனாக உலகத்தில் பிறந்த களங்க மில்லாத மனத்தை யுடைய உத்தம குணனே வாழி ! தெளிந்த அருமையான மிகுந்த கற்புள்ள தேன்போலும் இனிய வசனமுள்ள

புலோமிசையும், நீயும் எள்ளும் எண்ணெய்யும் போல மனது ஒத்து வாழ்ந்திருப்பீர் பிருகு முனிவரே !''

# பிருகு முனிவர் விஷ்ணுவுக்குப் போற்றி

## விருத்தம்

189. பொங்கமா யிரத்தண் டத்தை
புகழுடன் அரசு செய்த
பிங்கல நிறத்தோன் மார்பைப்
பிளந்தமா தவனே போற்றி
கொங்கவிழ் நறும்பி ருந்தைக்
கோதையைப் புனைந்தாய் போற்றி
அங்கண்மா நிலம ளந்த
அரவிந்த மலர்த்தாள் போற்றி !

## வசனம்

''ஹரி, ஹரி வைகுந்த வாசா! ஆயிரத்தெட் டண்டமும் ஆண்ட பொன்னிறமுள்ள இரணியன் மார்பைப் பிளந்த மாதவனே சரணம்! வாசனை வீசப்பட்ட நல்ல துளப மாலையைப் புனைந்த கர்த்தனே சரணம் ! அழகிய இடத்தை யுடைய பெரிய பூமியை ஓரடியினாலளந்த அரவிந்தமாகிய தாமரைமலர் போன்ற பாதமே எனக்குச் சரணம், சுவாமி!''

# மகாவிஷ்ணு பிருகுவுக்கு வாழி

## விருத்தம்

*இராகம் : தோடி*

190. சீற்ற மௌவியமும் நீக்கி
தெளிவுடன் சிந்தை தன்னில்
ஆற்றலென் பதைநி றுத்தி
அருந்தவம் செய்வோய் வாழி
மாற்றரும் பவத்தைப் போக்கும்
மாண்பினை உடையாய் வாழி !
ஏற்றமும் நனிசி றந்த
இருடியர் முதல்வா வாழி !

## வசனம்

''கோபமும் ஔவியமாகிய பொறாமையும் நீக்கித் தெளிவுடனே மனத்தில் ஞானமென்பதை நிறுத்தி அருமையாகிய தவம் செய்பவனே வாழி ! யாவரும் மாற்றுதற்கு அருமையான பாவங்களை நிவர்த்தி செய்யும் பெருமையுள்ளவனே வாழி ! மேன்மையானது மிகவும் சிறப்புற்ற மகாமுனிவருக் கெல்லாம் முதல்வனே வாழி!''

# பிருகு, பிரமதேவருக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : பைரவி

191. ஓதரும் வெள்ள மெய்யும்
ஓங்குவெண் தூவி வாய்ந்த
ஓதிம மிசையி லேறி
உலாசதுர் முகனே போற்றி
வேதநான் கினையு ணர்ந்த
மெய்பர மேட்டி போற்றி
தீதிலா மற்ப படைப்பு
செய்யுமுத் தமனே போற்றி !

## வசனம்

''சொல்லுதற் கரிதாகிய வெள்ளையான சரீரமும் உயர்ந்த சிறகினையு முடைய அன்னவாகனத்தில் ஏறி எங்குஞ் சஞ்சாரம் செய்யும் நான்கு முகமுள்ள பிரமதேவரே சரணம்! சதுர்வேதங்களு மறிந்த மெய்யனாகிய பரமேட்டியே, சரணம்! குற்ற மில்லாமல் உயிர்களைச் சிருஷ்டி செய்யும் உத்தம குணனே சரணம், சரணம் சுவாமி!''

# பிரமதேவர், பிருகுக்குச் சொல் வாழி

## விருத்தம்

192. நீங்கிடா தரும யோக
நிலையினில் இருந்து வன்மை
ஓங்குபஞ் சாட்ச ரத்தை
உச்சரிப் பவனே வாழி
பூங்கரும் பனைய செஞ்சொல்
பூவையர் மயற்க டந்து
தாங்கிய புகழுத் துங்கம்
சார்ந்தபண் ணவனே வாழி!

## வசனம்

"நீங்காத அருமையாயுள்ள யோகத்தில் ஒரே நிலையாக இருந்து, வண்மை யுயர்ந்த பஞ்சாட்சரத்தைச் செபிக்கும் முனிவனே வாழி! மதுரம் பொருந்திய கரும்பைப் போலும் சொல்வினை யுடைய மாதர்களின் மையலைத் தாண்டி உயர்ந்த புகழைப் பெற்ற பண்ணவனாகிய முனிநாதனே வாழி! வாழக் கடவாய் !"

# புலோமிசை, சிவனுக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

193. திரிபுரங் களையும் நென்னல்
சிரித்தெரித் திட்ட வீரப்
பரமனே உனது கஞ்சப்
பதமலர் போற்றி போற்றி
தரமுள தவத்தின் வீறும்
தாருக வனத்தர் விட்ட
கரியினை உரித்த எங்கள்
கடவுள்நின் சரணம் போற்றி

## வசனம்

"இராட்சதர் முப்புரங்களையும் முன்னாளையில் சிரித்து எரியச் செய்த பரமனே, உமது பாதார விந்தமே சரணம்! சரணம்! பலத்த மகா தவசிகளான தாருகா வனத்தர் விட்ட யானையினை உரித்த எங்கள் தேவனே, உம்மிட பாதமே சரணம், சரணம் சுவாம் !"

# சிவன், புலோமிசைக்கு வாழி

## விருத்தம்

194. கற்பினுக் குவமை இல்லாக்

காா்பரி சாரம் வான்மின்

னற்புரை மருங்கு கெண்டை

நயனமா ரரிவை வாழி

பொற்புறும் பூவும் பூவில்

பொருந்திய மணத்தைப் போல

நற்புகழ் பிருகி னோடு

நன்குநீ டூழி வாழ்க!

## வசனம்

''கற்பினுக்கு ஒருவரும் இணையில்லாத மேகம் போன்ற கூந்தலும், மின்னல் போன்ற இடையும், கெண்டை போன்ற விழியுமுள்ள பெண்ணே வாழி ! அழகு பொருந்திய புட்பம் போலும் புட்பத்திலுள்ள வாசனை போலும் நல்ல கீர்த்தி பொருந்திய பிருகு முனிவருடன் நன்றாக நீடூழி காலம் வாழக் கடவாய், மாதரசே!''

# புலோமிசை விஷ்ணுவுக்குச் சொல்

## விருத்தம்

195. புனிதன்கல் மாரி பெய்யப்
புயலினை விடுத்த போது
சினமுடன் கோவ ரத்தினச்
சிலம்பினைக் குடையா யேந்திக்
கனிவுடன் ஆயர் மிக்க
கதம்பமும் பரிவிற் காத்த
மனதயை உடைய வன்தன்
மரைமலர் அடிகள் போற்றி !

## வசனம்

''இந்திரன் கல்மாரி பெய்யும் படிக்கு, மேகங்களை அனுப்பியபோது, நீர் கோபத்துடனே கோவர்த்தின மென்னும் மலையைக் குடையாகக் கையி லேந்திக்கொண்டு இஷ்டத்துடனே யாதவர்கள் அதிகமுள்ள பசுக் கூட்டங்கள் சேதப்படாமல் அம்பினால் காத்த, மனத்திற் கருணையுள்ள உமது தாமரைமலர் போன்ற பாதமே சரணம், சுவாமி!''

# விஷ்ணு புலோமிசைக்கு வாழி

## விருத்தம்

196. பிறைநுதல் குவளை நேத்திரம்
பிகக்குரல் அவிர்பூண் கொங்கை
நறைமலர்ப் படலே கூந்தல்
நங்கையே வாழி வாழி
நிறையுடன் பாலும் நீர்போல்
நேயமாய்க் கலந்தே உன்றன்
இறையுடன் நீயும் ஒன்றாய்
இசைந்துநீ டூழி வாழி!

## வசனம்

''பிறைபோன்ற நெற்றியும், நீலோற்பலம் போன்ற கால்களும், குயில் போலும் குரலும், பிரகாசிக்கின்ற ஆபரணம் பொருந்திய தனபாரமும், வாசனையுள்ள மலர்மாலை தரித்த கூந்தலுமுள்ள பெண்ணாகிய புலோமிசையே வாழி, வாழி, குறைவில்லாமல் பாலும் நீரும் போல நேயமாய்க் கலந்து உன்னுடன் பிராண நாதனும் நீயும் நன்றாக இசைந்து, அநேக காலம் வாழக் கடவாய், பெண்களுக் கெல்லாம் அரசியாகிய புலோமிசையே !''

# புலோமிசை பிரமதேவருக்குச் சொல்

## விருத்தம்

197. இத்தலங் களுக்கு மேலாய்

இயம்பவே உயர்வில் வைகும்

சத்திய உலக மீது

தங்குமெண் கண்ணே போற்றி

சித்திர முடைய சாவித்

திரியைநா வினிலே வைத்து

சத்துவ மான பூமி

தந்தைநின் சரணம் போற்றி!

## வசனம்

''இந்த உலகங்களுக்கு எல்லாம் மேலாக இருக்குதென்று உயர்வாகச் சொல்லும், சத்திய உலகமீது தாங்கியிரா நின்ற எண்கண்ணாகிய பிரமனே சரணம் ! அழகினையுடைய சாவித்திரியை நாவிலே வைத்தருளிய வல்லபமுள்ள மண்பொது தந்தையே, நினது பாதமே சரணம் சுவாமி !''

# பிரமன் புலோமிசைக்குச் சொல்

## விருத்தம்

198. சுக்கிரன் புதல்வ னான

தொன்முனி பிருகுக் கன்பு

மிக்கபத் தினியாய் வாழ்ந்து

விளங்குபெண்ணமுதே வாழி

தக்கநா ரதன்கொ டுத்த

தகைஎகு கடலை வாங்கி

பக்குவ மாய்ச்ச மைத்த

பாவையே வாழி வாழி !

## வசனம்

"சுக்கிராசாரியின் புத்திரனான ஆதி நாளைய பிருகு மகா முனிவனுக்கு, அன்பு மிகுந்த பதிவிரதையாய்ப் பொருந்திப் பிரகாசிக்கா நின்ற, பெண்களுக்கெல்லாம் பெருமையுடையவளே வாழி ! தகுதியான நாரதமுனிவன் கொடுத்த அழகிய எஃகுக் கடலையை வாங்கிப் பக்குவமாய்த் தளிகை செய்து கொடுத்த பாவையாகிய புலோமிசையே வாழி, வாழி !"

# பிருகு முனிவர் மூவருக்கும் சொல்

## விருத்தம்

*இராகம் : முகாரி*

199. திருவுறை மூவ ருங்கள்
தேசுள வருவத் தோடு
மருவிய உங்கள் பத்தினி
மார்களின் வடிவத் தோடு
யிருவிழி யாரப் பார்த்தென்
இதயமும் களிக்க என்று
அருமையாய் நெடுங்கா லங்கள்
அடியனும் தவமே செய்தேன் !

## வசனம்

"கேளுங்கள் திரிமூர்த்திகளே! பிரகாசம் பொருந்திய உங்கள் திவ்விய சுருபத்தையும் உங்களிடத்திலிருக்கும் பத்தினிமார்களின் திவ்ய சுருபங்களையும் எனது இரண்டு கண்களாரப் பார்த்து என் மனது களிப்படைய வேண்டுமென்று அறிதான தவங்கள் அநேகக் காலம் அடியேன் செய்தேன், சுவாமிகளே!"

# இதுவும் பிருகு, மூவருக்குச் சொல்

*இராகம் : முகாரி*

200. செய்தநற் றவப்ப லத்தால்

திரிமூர்த்தி யான நீங்கள்

எய்தினீர் எனக்குச் சேவை

இஷ்டமாய்க் கொடுத்தீர் உங்கள்

மெய்தகை பதவி தன்னை

விருப்பமாய் அளிக்க வேண்டும்

கைதவம் செய்தி டாமல்

களிப்புடன் அருளு வீரே !

## வசனம்

''கேளுங்கள் சுவாமிகளே, அடியேன் செய்த தபோ பலத்தினால், பிரம்மா, விஷ்ணு, உருத்திரராகிய நீங்கள் பிரத்தியட்சமாகினீர். இஷ்டமுடன் எனக்குத் தெரிசனம் கொடுத்தீர்கள் ! உங்களுடைய அழிவில்லாத பதவியை விருப்பத்துடனே அடியேனுக்குக் கொடுத்தருள வேணும் ! கைதவமாகிய வஞ்சனை செய்யாமல் சந்தோஷத்துடனே அருள வேண்டுந் திரிமூர்த்திகளே !''

## மூவரும் பிருகு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

201. சித்தமோர் நிலைப்ப டுத்தி
திறமுள தவமே செய்யும்
மெய்த்தவ ருக்கு மேலாய்
வீறும்நற் பிருகு கேளும்
பத்தியாய்க் கொஞ்க காலம்
பாங்குறத் தவங்கள் செய்தே
இத்தலம் இருப்பாய் பின்னர்
எம்பதம் அளிப்போம் மெய்யே!

### வசனம்

"மனத்தை ஓர் நிலையாக ஸ்தம்பிக்கும்படிச் செய்து, திறமாகிய தவங்களைச் செய்யும் முனிவருக்கெல்லாம் மேன்மையாக விளங்கிய நற்குணமுள்ள பிருகு முனியே, கேளும்! பத்தியுடன் சிறிது காலம் தவங்கள் செய்து, இந்த உலகங்களில் இரும். கொஞ்ச காலம் பொறுத்து, எங்கள் பதத்தைக் கொடுக்கிறோம் முனிவரே!"

## மூவர் புலோமிசைக்குச் சொல் பரணி

202. அற்புத மிகுந்த கற்பினுக் கரசே
பொற்புடன் வரங்கள் சொற்படி தருவோம்!

### வசனம்

''யாவரும் அதிசயிக்கும்படியான மிகுந்த கற்பினையுடைய பெண்களுக்கெல்லாம் அரசியே ! அழகிய வரங்களைக் கேளும் ! சொன்னபிரகாரம் கொடுக்கிறோம், புலோமிசையே !

## புலோமிசை மூவருக்கும் சொல்வது

203. தேவரும் முனிவர் போற்றும்
திரிமூர்த்தி யான நீங்கள்
மூவரும் சிறுவ ராகி
மொழியுமென் ஆசிர மத்தின்
மேவியே என்ற னப்பால்
விரும்யுண் டிருந்த தாலே
ஆவலாய் நீங்கள் சேய்கள்
ஆயெற்கு வருகு வீரே!''

### வசனம்

''தேவர்களும் முனிவர்களும் துதி செய்யும் திரிமூர்த்திகளான நீங்கள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று பேரும் குழந்தைகளாகி என்னுடைய ஆசிரமத்தில் என்னுடைய் முலைப்பாலை விரும்பி யுண்டிருந்தபடியால், ஆசையுடன் நீங்கள் புத்திரராய் மூவரும் பிறக்கும்படிக்கு எனக்கு வரம் கொடுத்தருளும் மும்மூர்த்திகளே!''

# சிவன் புலோமிசைக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

204. விற்புலோ மிசையே கேளாய்
மேன்மறை யறிய நானும்
அற்புதப் பிரமன் தானும்
அறிந்திலை பிறப்பி றப்பு
பொற்றடன் யாங்கள் ஜென்மம்
பொருந்திடோ மவ்வ ரத்தை
நற்படி மாற்றி வேறே
நவிலுவாய் தருகு வோமே!

## வசனம்

''பிரகாசமான கற்புள்ள புலோமிசையே கேளும் ! மேலான வேதங்களறிய நானும் அற்புதமுடைய பிரமதேவனும் ஜெனன மெடுத்ததும் இல்லை, இறந்ததுமில்லை! பொற்புடனே நாங்களிருவரும் ஜெனன மெடுக்க மாட்டோம். நீ கேட்ட வரத்தை மாற்றி நல்லபடிக்கு வேறே ஒருவரம் கேளும் கொடுக்கிறேன்!''

## விஷ்ணு பரமசிவனுக்குச் சொல்வது

### கலிவிருத்தம்

205. பாவை கேட்ட படும்வரந் தன்னையும்
மூவர் வந்து மொழியாமற் போனமேல்
கேவல மிதைக்கேட் பவர்என் சொல்வார்?
யாவு மாதினுக் கியானே தருகிறேன் !

### வசனம்

''கேளும் சிவபெருமானே! பாவை போலும் உருவமுள்ள புலோமிசை கேட்ட வரத்தை மூவராகிய திரிமூர்த்திகளும் வந்து, அந்த மாதுக்கு வரங்கொடாமற் போய்விட்டோமானால் கேட்டவர்க ளெல்லாம் இதைக் கீழ்மையாகவே நினைப்பார்கள்; அதுவுமன்றி நமக்குக் கர்த்தா என்னும் பேரிராது! ஆகையால், கேட்ட வரத்தை நானே கொடுக்கிறேன் சிவபெருமானே !''

## விஷ்ணு புலோமிசைக்குச் சொல்

### விருத்தம்

206. அருந்ததி புகழுங் கற்பார்
அன்னைநின் சொல்லி னாலே
வருந்திய அரன்அ யற்கு
வருபிறப் பிறப்பும் இல்லை

பரிந்தெங்கள் மூவ ரைத்தான்

பாலராய்க் கேட்ட தாலே

தெரிந்துநீர் மூன்று சென்மம்

செனிக்கில்முச் சுதராய் வாரேன் !

### வசனம்

''கேளும்! அருந்ததியும் துதிக்கும் படியான கற்புள்ள புலோமிசை அம்மா ! உமது வார்த்தையினால் வருத்தப்படுகிற பரமசிவன், பிரமதேவன் ஒரு தாய் வயிற்றில் பிறப்பதுமில்லை; மறுபடி யிறப்பது மில்லை ! ஆகையால், அன்புடனே எங்கள் மூவரையும் உமது வயிற்றில் பிள்ளையாகப் பிறக்க வேணுமென்று வரம் கேட்டபடியால், நீர் மூன்று சென்மம் எடுத்தால், அந்தச் சன்மந்தோறும் நானே மூன்றுதரம் பிள்ளையாகப் பிறக்கிறே னம்மா, புலோமிசையே !''

## புலோமிசை சிவனுக்குச் சொல்

### விருத்தம்

207. சொற்படி நீரெ னக்குச்

சுதனாக வராத தாலே

விற்பன இருசபு ரத்தின்

விரல்நடு சந்தி னாலே

அற்புத அயனும் நீரும்
அல்குலென் றதில்நு ழைந்து
நற்பெரும் பதியே செல்லும்
நான்கேட்ட வரந்தப் பாதே !.

## வசனம்

''கேளும் சிவபெருமானே! நான் உம்மைக் கேட்ட வரப் பிரகாரம் எனக்குப் பிள்ளையாக வரச்சரிப்படாததால், இந்த இருகரத்தின் விரல்நடுச் சந்தில் பிரமதேவனும் நீரும் அதை அல்குலென்னும் யோனித்துவாரம் என்று பாவித்து, அதில் புகுந்து நல்ல பெரும்பதியாகிய உங்கள் பட்டணம் போய்ச் சேரும்; நான் கேட்ட வரம் தப்பாது சிவபெருமானே !''

# பிரமன் புலோமிசைக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

208. அருந்தகை கற்பின் மிக்க
அரும்புலோ மிசையே கேளும்
திருந்திய வான்மீ கத்தில்
திகமெழிற் குழவி யாகப்
பொருந்தியங் கிருப்பாய் உன்னைப்
புகலருந் திறந்து வேடர்

தெரிந்துபர் வதவி ராசன்

சிறப்புடன் வளர்ப்பா னம்மா!

## வசனம்

''அருமையான குணமும், கற்பு மிகுந்த பிரகாசமுள்ள புலோமிசையே! செவ்வையான வான்மீகமான புற்றில் இளமையுள்ள குழந்தையாக விளங்கி, அவ்விடத்திலே யிருப்பாய் ! உம்மை மிகுந்த வல்லமையுள்ள வேடர்களினால் பர்வத ராஜனுக்குத் தெரியவந்து, அவன் எடுத்துக் கொண்டுபோய் அரண்மனையில் உம்மை வளர்ப்பா னம்மா!''

## கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரமாக பிரமதேவர் சொல்லிய பிறகு, புலோமிசையம்மாள் கைவிரல் நடுத்துவராத்தை யோனித்து வாரமாகப் பாவித்து, அதில் நுழைந்து, சிவபெருமானும் பிரமதேவரும் ஆகாய மார்க்கமாய்த் தங்கள் பட்டணம் போய்ச் சேர்ந்திருந்தார்கள்; அதன்பின்பு, விஷ்ணுதேவன் முதலிய யாவர்களும் அவரவர்களிருப்பிடம் போயிருந்தார்கள் என்றறிக!''

# பிருகு புலோமிசைக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : மோகனம்*

209. நாகத்தின் பெண்ணே கண்ணே

நாரணன் சொற்ப டிக்கு

தேகத்தை நீக்கி மூன்று

சென்மம்நீ எடுத்த பின்னர்

வேகமா யெனத கத்து

மெல்லியாய் வருக யானும்

யோகத்தில் இருப்பேன் நீயும்

ஒருநொடி தனிலே வாராய் !

## வசனம்

''கேளும் ஆதிசேஷன் மகளாகிய புலோமிசையே ! மகாவிஷ்ணுவானவர் சொல்லிய பிரகாரம் உன்னுடைய இந்தச் சரீரத்தை நீக்கி, இன்னும் மூன்று சென்மம் நீ யெடுத்த பிறகு, சீக்கிரமாக என்னிட ஆசிரமத்திற்கு வந்து சேருவாய்! அதுவரையில் நான் யோகத்தில் இருக்கப் போகிறேன்; நீ யொரு நொடியில் போய் வருவாய் பிராணநாயகி !''

## கட்டியன் சொல்

## பொது விருத்தம்

210. இவ்வித மாகக் கொண்கன்

இயம்பிய மொழியைக் கேட்ட

அவ்விய மில்லா நெஞ்ச

அரிவைதன் தேக மாற்றி

நவ்விமே யுங்க டத்தில்

நண்ணிய வான்மீகத்தில்

செவ்விசேற் குழந்தை யாகிச்

சீக்கிர மவத ரித்தாள் !

## வசனம்

"இந்தப் பிரகாரம், கொண்கனான பிராணநாதன் பிருகுமுனிவன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட அறிவையாகிய புலோமிசையம்மாள், தன்னுடைய சரீரத்தைவிட்டு, மான்கள் மேயும் ஆரணியத்தி லிருக்கிற பெரிய புற்றில் அழகையுடைய ஒரு பெண் குழந்தை வடிவத்துடன் பிறந்திருந்தாள் என்றறிக!"

# இதுவும் கட்டியன் சொல்

## விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

211\. பூங்குயிற் குரலாள் ஆன

புலோமிசை வான்மீ கத்தில்

பாங்குடன் அவத ரித்துப்

பண்புடன் இருக்கும் போது

ஓங்கலுக் கரசன் வாசல்

உசிதமாய் அலங்கா ரம்செய்

தீங்கிலாக் குணஞ்சேர் கட்டியன்

சிறப்புடன் வருகின் றானே !

## வசனம்

"அகோதெப்படி யென்றால், குயிலைப்போலும் குரலினயுடைய புலோமிசையம்மாள், புற்றில் அழகாகப் பெண்குழந்தையாக அவதாரம் செய்திருக்கும்போது, மலைகளுக்கு எல்லாம் அரசனான பர்வதராஜன் கொலுவாசலை யலங்காரம் செய்யும் குற்றமில்லாத குணத்தினையுடைய கட்டியன் நல்ல அலங்காரத்துடன் வருகிற விதங் காண்க!"

## கட்டியன் வருகிற தரு

*இராகம் : மோகனம்*

### பல்லவி

212. திறமுறு வனராசன் திருவாசலைக் காக்கும்
தீரக் கட்டியன் வந்தான் - கெம்பீர
வீரக் கட்டியன் வந்தான்!

### அநுபல்லவி

பெருகும் வீரமுடைய பிரபலர் யாவரும்
வெருவி யொளிக்க கைவீசி வல்லமை பேசி - திற
தட்டிச் சல்லடங் கட்டியே - சுரமதில்
தங்கும் கத்தியைப் பற்றியே
அட்டியில் லாமல் அதோஅரசன் வாராரென்று
சட்டதிட்ட மாய்க்கொலு தானே அலங்கரிக்க - திற

சிரசில் குச்சுக் காட்டியே - மார்பினில்
சீராய்ப் பதக்கம் பூட்டியே
பரவு புயவரையில் பாங்குறு சால்வைமின்ன
நிரந்தரமாய் வேஷ்டி நிகநிகென் றேதுன்ன - திற
கந்தக் களப மணிந்து - கடவுளின்பொற்
கழலிணையைப் பணிந்து
விந்தையுடன் திலதம் விளங்க நுதயிலிட்டு
வந்தவர்களை எல்லாம் மயக்கும் ஜெயப்பிரதாபன் - திற

## கட்டியன் அரசன் வருமுன் கட்டியங் கூறல்

213. சீர்பரவு நிஷதபுரி அரசுபுரி கின்றசெய
செம்மல்மதி மந்தி ரியுடன்
பேர்பரவு தவமுனிவ ரருமறை யந்தணர்கள்
பிரியமுடன் அருகில் துன்ன
கார்பரவு முலகினைப் பரிபால னஞ்செயும்
கருணைமிகு பர்வ தேந்திரன்
தார்பரவு மார்பினான் சமுகமே வருகிறார்
சகலரும் எச்ச ரிக்கை !

## பர்வத ராஜன் வருகிற

### விருத்தம்

இராகம் : தோடி

214. திறமுள அமைச்சர் நன்மை
செய்யும்மா மறையோர் சூழ

கிரணமா மணியி ழைத்த

கேழ்முடி சிரத்திற் சூடி

விரவிசெங் கோல்பி டித்து

விகசிதக் கொலுவை நாடி

பரிவுடன் அரசி யற்றப்

பர்வத அரசன் வந்தான் !

## வசனம்

''திறமாகச் சதாகாலமும் தன்னிடத்திலே யிருக்கப்பட்ட மந்திரிகள், நன்மையுள்ள வேதத்தியானம் செய்யும் பிராமணர்கள் பக்கங்களில் சூழ, சூரிய கிரணம் போலே பிரகாசமுள்ள மாணிக்கங்களிழைத்த கிரீடம் சிரசிலே தரித்து, கையிலே செங்கோல் பிடித்து, விசேஷ அலங்காரமுள்ள கொலுவை வந்து அரசியற்றும் படிக்குப் பர்வதராஜன் வருகின்ற விதம் காண்க!''

# பர்வதராஜன் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

## பல்லவி

215. பாரில் நிஷதபுரி வாரமுடனே ஆளும்

பர்வத ராஜன் வந்தான் !

## அனுபல்லவி

பேர்பரவு மருவுமா முனிதன்னிட

பிள்ளையாக வந்தவள்ளல் கிருபாநிதி - பா

கதிர்முடி சிரமின்னவே - கரதமதில்
கதித்த செங்கோல் துன்னவே - பண்புள்ள
அதிரதர் சமரதர் மகாரதர் அடிதாழ
துரிபுரிந் தமரர்கள் தூய்மல ரதுதூவ - பா
மறையோ ராசிகள் கூறவே - தேவரம்மை
மார்கட்டிய ஒலி வீறவே - சிலைபோலும்
பிறைநுதல் வனிதையற் ஆலத்தி ஏந்தவே
பேடசந் திரவட்டக் குடைபுறந் தாங்கவே - பா
சுந்தரப் பணிபூண்டு - விகசிதர்
துலங்கும் கிரிகளாண்டு - நீட்சியுடன்
அந்தமுறும் கரத்தில் அடலுறு தனுசுடன்
பந்தமாக அம்பு பதித்த தூணியுடன் - பா
எண்டிசையோர் போற்றவே - கவிஞர்கள்
இன்பமுடனே ஏத்தவே - மிக
முண்டக மலர்தன்னைக் கண்டுவந்த பெண்ணை
அண்டர் புகர்வளர்த்த தரனுக் களித்திட்ட - பா

## பர்வத ராஜன் கொலுவிலிருந்து கடவுளைத் துதித்தல்

216. கண்ணினுள் மணியாய் நின்ற
காரணப் பொருளே போற்றி
தண்ணிறை துளப மாலை
தயங்கிய மார்பா போற்றி
நண்ணிய கரும மெல்லாம்
நடாத்துமுத் தமனே போற்றி

எண்ணுசெங் கோல்சா யாமல்

இருக்கச்செய் அரியே போற்றி !

## வசனம்

"கண்ணினுள் விளங்கிய மணியைப் போன்ற ஆதிகாரண வஸ்துவே சரணம்! குளிர்ச்சி நிறைந்த துளப மாலை பிரகாசிக்கும் மார்பனே சரணம் ! சர்வ காரியங்களையும் நடாத்தும் உத்தம குணனே சரணம் ! எப்பொழுது என் செங்கோல் சாயாமல் நிறைபெற்று நிற்கக் கிருபை செய்யும் திருமாலே சரணம், சரணம்!"

# முதல்மந்திரி பர்வத ராஜனுக்குச் சொல்

## விருத்தம்

217. மருவுமா முனித வத்தில்

மகிழுடன் உதித்து வந்த

பர்வத ராஜன் என்னும்

பண்புனும் அரசே போற்றி

உரமுள மன்னர் மன்னர்

உகந்தடி வணங்கி ஏற்ற

திறமிகு நிஷதம் வீறும்

செம்மல்நின் சரணம் போற்றி!

### வசனம்

''மருவு முனிவருடைய தபோ பலத்தினாலே மகிழ்ச்சியுடனே ராஜாவாகிய குணம் பொருந்திய அரசனே சரணம் ! பராக்கிரமமுள்ள அரசர்க்கரசர்கள் சந்தோஷத்துடன் உமது பாதத்தில் வணங்கி, தோத்திரம் செய்யச் சதாகாலமும் விளங்கி யிருக்கும் நிஷதப் பட்டணத்தை யாளுகின்ற அரசனே சரணம், சரணம் சுவாமி!

## இரண்டாவது மந்திரி ராஜனுக்குச் சொல்

### விருத்தம்

218. வானவர் முனிவ ரோடு
வந்துசூழ்ந் திருந்தென் னாளும்
தானமாய் வீற்றி ருக்கும்
தயாளநிர்க் குணனே போற்றி
மாநகர் நிஷத நாடாள்
மன்னனே வரைகூட் கெல்லாம்
தீனரட் சகனே உந்தன்
திருவடி போற்றி போற்றி !

### வசனம்

''தேவர்களும் முனியீஸ்வரர்களும் வந்து சூழ்ந்து இருக்கும் பெரிதான இடமாக எந்நாளும் வீற்றிருக்கும் கொலுவினையுடைய தயாள குணனே சரணம் ! பெருமை தங்கிய பட்டணமாகிய நிஷதத்தை யாளப்பட்ட இராஜனே! பர்வதங்களை யெல்லாம்

இரட்சிக்கப்பட்டவனே! உமது திருவடியே சரணம், சரணம் சுவாமி!''

## கட்டியன் ராஜனுக்குப் போற்றி

### விருத்தம்

219. போற்றினேன் நிஷத மாளும்
புண்ணிய அரசே நாளும்
போற்றினேன் உந்தன் பாதம்
புகழுறும் அரசர் வந்து
போற்றியே வீற்றி ருக்கும்
பூரணச் சபைக்கிப் போகது
போற்றினேன் பர்வ தேந்திர
பூபனே போற்றி போற்றி !

## பர்வதராஜன் தேச விசாரணையும் மந்திரி விடையும்

220. இராஜன் : கொண்டல்களெழுந்திந்தக்
குவலயத் தனில்மழை
குறைவிலாமற் பெய்யுதா?

மந்திரி : திண்டிறல் வீரனே
திங்கள்மும் மாரியும்
திரளாகவே பெய்யுது!

இராஜன் : அண்டொணாப் பகைவரால்
அளவிலா நமதுலகில்
அபவாதம் உண்டோ சொல்வாய்?

மந்திரி : வண்டடர் தாரணியும்
மார்பனே நமதுலகில்
மாட்சியிற் றாழ்வொன்றிலை !

இராஜன் : எமதுலகில் பயிரிடும்
குடிகளின் கப்பப்பணம்
இயல்பாகவே வருகுதா?

மந்திரி : நமதுலகில் கப்பப் பணம்
அவரவர் முறைப்படி
நலமாய்ச் செலுத்துகின்றார்

இராஜன் : பண்டாள நமதுலகில்
தேவாலயப் பூசை
பண்பாய் நடந்து வருகுதா?

மந்திரி : மண்டலம் தன்னிலே
மகதேவர் பூசைகள்
மகிழ்வாய் நடந்துவருது!

இராஜன் : வெள்ளிமலை தனில்மருகன்
விளங்கியே உமையோடு
வீற்றிருக் கின்றார்களா?

மந்திரி : வள்ளல் பரமேஸ்வரன்
மாதேவி உமையுடன்
மகிழ்ந்தே இருக்கிறாரகள்!

இராஜன் : வன்னமாம் பழனியில்
வாழ்கின்ற கந்தனும்
வள்ளிதெய் வானைசுகமா?

மந்திரி : உன்னிமயில் மீதினில்
உகந்தேறும் கர்த்தனும்
உத்தமிகள் மெத்தசுகமே!

இராஜன் : பொதியமலை தனில்மேவு
புகழுள்ள கும்பமுனி
பொருந்தியே இருக்கிறாரா?

மந்திரி : துதிபெருகு மிறைவனே
தூயலகத் தியமுனிவர்
சுகமாக வாழ்கிறாறே!

இராஜன் : நமதுமலை தனிற்சதா
நாடித் தவம்புரியும் நன்முனிவர்
சுகமோ சொல்வாய்?

மந்திரி : எமதிறைவ னேஉமது
ஆக்கினை முறைப்படி
இயலாய்த் தவம்புரிகிறார் !

இராஜன் : ஆழிதனில் அமைவுடன்
மைநாத பர்வதம்
அன்பாக உய்கின்றதா?

மந்திரி : தாழிவிலா மைநாக
சைலமும் சிறகுடன்
சமுத்திரத் துறைகின்றது !

இராஜன் : கோவர்த் தினகிரியைக்
குடையாகக் கொண்டஅரி
கோவிந்த நகரமுய்யுதா?

மந்திரி : ஆவிரட்சிக்க கிரி
அன்றே எடுத்தஅரி
அங்ஙனே வைத்துவிட்டார் !

## பர்வத ராஜன் மந்திரிகளுக்குச் சொல்

### விருத்தம்

221. மேகத்தால் உலகம் எங்கும்
மேன்மையாய் இருக்கு தென்று
வாகையாய் எனக்கு ரைத்த
மதிமந்தி மாரே கேளும்
நாகத்தை அணிவெள் ளீசர்
நன்கருள் மிகக்கி டைத்த
பாகொத்த மொழியாள் ஆன
பரத்தையை வரச்செய் வீரே !

### வசனம்

"மேகம் மழை பொழிவதனால் உலக மெங்கும் செழித்து மேன்மை யடைகிறதென்று எனக்குச் சொல்லிய மந்திரி மார்களே, கேளுங்கள் ! சர்ப்பா பரணம் அணிந்த வெள்ளீசர் என்னும்

பரமசிவனுடைய அருள் கிடைத்திருக்கும் பாகுவையொத்த வசனத்தை யுடையவளான நடன மாதாகிய தாசிகளை வரச்செய்வாய் மந்திரிமாரே!''

## மந்திரி கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

222. சித்திரக் கொலுவைக் காக்கும்
திண்டிறல் கட்டி யாகேள்
முத்தினை யனைய மூரல்
முழுமதி வதனம் வாய்ந்த
பத்தரை மாற்றுத் தங்கப்
பசும்பொன் மேனியர் களான
தத்தைநேர் வசனம் பெற்ற
தாசியை அழைத்து வாராய்!

### வசனம்

''அழகு பொருந்திய கொலுவைக் காக்கும் பராக்கிரமுள்ள கட்டியக்காரா! முத்துப் போன்ற தந்த வரிசைகளும் பூரண சந்திரனைப் போன்ற முகமும், பத்தரைமாற்றுத் தங்கத்தை யொத்த அழகுடைய மேனியும், கிளிப்பிள்ளை போலும் சொல்லும் அமைந்த தாசிகளாகிய நடனமாதரை அழைத்துக் கொண்டுவாடா!''

## கட்டியன் மந்திரிக்குச் சொல் பரணி

223. அமைச்சரே உங்களரிய சொற்படியே

இமைக்குளே அவரை இட்டிவண்வாரேன் !

### வசனம்

''கேளும் மந்திரி மார்களே ! உங்கள் உத்தாரப் படிக்கு நிமிஷ நேரத்துக்குள் நடனமாதரை யிட்டுக் கொண்டு இவ்விடம் வருகிறேனையா!''

## கட்டியன் நடன மாதருக்குச் சொல் பரணி

224. கச்சினைத் தரித்த கணிகை ரேஉமை

மெச்சிடும் சபைக்கு விழைவுடன் வருவீர் !

### வசனம்

''கச்சணிந்த தன பாரத்தை யுடைய தாசிகளே ! உங்களை யாவரையும் மெச்சும் பெருமை வாய்ந்த சபைக்கு ஆசையுடனே அழைத்து வரச் சொன்னார்கள், வாருங்கள் மாதர்களே!''

## நடன மாதர்கள் வருகிற

### விருத்தம்

*இராகம் : தோடி*

225. முத்தணி பதக்கம் பூட்டி

மோகன மாலை சூட்டி

சித்தசன் றனமை ருட்டிச்
சேல்விழி வலையைக் காட்டி
அத்தமாம் பணிகள் பூண்டு
சொன்னமாங் கொலுவி னிற்கு
சுத்தமாய்த் தேவ தாசி
தோகைபோல் வருகின் றாளே!

## வசனம்

''முத்துகள் அணிந்த பதக்கங்கள் மார்பிலே விளங்க, மோகன மாலையுந் தரித்து, மன்மதனை மருளும்படி செய்து, சேல்மீன் போலும் கண்ணைக் காண்பித்துப் பொன்னாபரணங்களைப் புனைந்து பொன்மயமாகிய கொலுவிற்கு பரிசுத்தமுடன், தேவதாசியாகிய மாதர்கள் மயில் போலும் வருகிற விதம் காண்க!''

## நடன மாதர் வருகிற தரு

*இராகம் : சௌராஷ்டகம்* *தாளம்: ஆதி*

## பல்லவி

225. வந்தாள் வடிவைப் பாரீர்-தேவதாசிகள்
வாரார் வடிவைப் பாரீர்!

## அனுபல்லவி

வந்தார் வடிவைப் பாரீர்
வச்சிந் தளதளென்ன

செந்தாமரைமுகத்தில் திலகம் பளபளென்ன - வந்
சித்திரக் கிளிபோல் பேசி-விழிவலையால்
சித்தசன் தனைவீசி - மிகச்சிறந்த
பத்திரம் பொற்கொலுசு பாதத்திலே சொலிக்க
பார்த்த மன்னரெல்லாம் பரிந்து மனஞ்சலிக்க - வந்
பச்சை மிகுந்த இரத்தினம் விற்செயு
மெச்சு சரப்பளி மெய்க்கண் அசைந்திட - வந்
கோங்கு மல்லிகையும் சூட்டி - பொன்னாற்செய்த
கொந்த ஓலையை மாட்டி
வாங்கு பிடியிடையில் வணைகலை ஒளி காட்டி
ஓங்கும் எழிற்திலதம் உயர்ந்த நுதலிற்தீட்டி
ஓவிய மாமெனப் பாவையர் வெண்ணிறத்
தூவி அன்னநடை மேவி அருஞ்சபை - வந்
சந்திர சூரியர்கள் தாவ - சிரசினிலே
தரித்த சசிபிறையு மேவ - யாரும்புகழ்
விந்தையாக இன்னும் வேணப் பணிகள் பூண்டு
தொந்தமாங் கிரிமன்னன் சொன்னகொலு வைநாடி
சுந்தர முற்றவ வந்திகுரற்குயம்
பந்தினை ஒத்தவர் வந்து புகழ்ந்திட - வந்

## நடனமாதர் பர்வத ராஜனுக்குச் சொல்

### விருத்தம்

227. தேவர்க்கும் தேவ னான
திரியகம் பகத்தோ னுக்கு

பாவையம் பகையை முன்னம்

பரிந்தளித் தவனே போற்றி

ஆவலாய் எங்க ளிற்றை

அழைத்திடுங் காரியத்தை

தீவிர மாக நன்றாய்த்

தெரியவே உரைப்பாய் போற்றி!

### வசனம்

"முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தேவனாக விளங்கிய முக்கட் பரமனுக்கு உமது புத்திரியாகிய பார்வதியை அன்புடனே முன்பு கலியாணம் செய்து கொடுத்த மகாராசனே சரணம்! ஆசையுடன் எங்களை யின்று அழைத்த காரியத்தைச் சீக்கிரமாகத் தெரியச் சொல்லும் ஐயா! உமது பாதமே சரணம்!"

## பர்வத ராஜன் நடணமாதருக்குச் சொல்

### விருத்தம்

228. போற்றிசெய் எதிரில் நிற்கும்

பொற்பமர் மாதே கேளாய்

நாற்றினை மன்னர் சூழ்ந்த

நம்மிட கொலுமுன் பாக

ஆற்றலாய்ப் பரத நாட்டி

யம்அடை வுடனே செய்து

காற்றருங் கீர்த்தி பெற்றுத்
தயவுநீ பெறுகு வாயே!

### வசனம்

"தோத்திரம் செய்து என் எதிரில் நிற்கும் அழகினையுடைய நடன மாதர்களே கேளும்! நாலு திக்கிலுமுள்ள அரசர்கள் வந்து சூழ்ந்திருக்கும் நம்மிட கொலுவின் முன்னே மிகுந்த பரத நாட்டியம் அடைவுடனே செய்து, சொல்ல அரிதாகிய கீர்த்தியைப் பெற்று, என்னுடைய தயவும் பெற்றுக் கொள்ளுவீர் நடன மாதர்களே!"

## நடன மாதர்கள் நாட்டியம் செய்கிற தரு

*இராகம் : சௌராஷ்டகம்*

### பல்லவி

229. நாட்டியம் செய்யலுற்றார் - நடனமாதர்
நாட்டியம் செய்யலுற்றார்!

### அனுபல்லவி

தாஷ்டிகக் கிரிராசன் ஈட்டுபுகழ் கொலுவினில்
காட்டியே கண்வலை ஆட்டிக்கரங் கள்பேசி - நாட்

### சரணங்கள்

பரதநாட்டிய மாதர் பாங்காய்ப் பதங்கள்பாடி
பார்த்தவர் யாவரும்கூறப் பந்துமுலையை மூடி

பாரினிலே பலரே மயலாகிட

பகதத் தகதத் திகுதத் திகுவென - நாட்

தங்கவளை துலங்க தரித்தசேலை மலங்க

தாளமணி இலங்க தானேதனம் குலுங்க

தண்டை சிலம்பு கலீலென ஒலிசெய

தகுர்தச் செனுதத் திமிதக தகவென - நாட்

குழலில் மலரணிந்து குயத்தில் சாந்தம் வனைந்து

பழுதிற் பன்னீர் நினைந்து பாங்காய்க் கச்சும் புனைந்து

பாணியைத் தானொடித் தேநய மாகவே

பாதிக தோதிக தாதிக தாவென - நாட்

## பர்வதராஜன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

230. வருகிற சேதி யாவும்

வழுத்தும்என் மந்திரி கேளாய்

கருமையம் புதத்தை ஒத்த

கதுப்புமுற் பலத்தைப் போன்ற

இருவிழி வசைச் செங்கை

ஏந்திழை யார்த மக்குச்

சரிகைவஸ் திரமும் வேண

தனமுமீந் தனுப்பு வாயே!

### வசனம்

''வருகிற காலம் நிகழ்காலம் அறிந்து சொல்லும் மந்திரி மீார்களே! நம்மிட கொலுவில் நாட்டியம் செய்த தாசிகளுக்கு விலை யுயர்ந்த சரிகைச் சேலைகளும் வஸ்துக்களும் கொடுத்தனுப்பும் மந்திரியார்களே!''

## மந்திரி கட்டியனுக்குச் சொல்

### விருத்தம் - மட்டு

231. தாங்குறு கட்டியக் காரா
பாங்குறும் சபைந டித்த
வாங்குறும் இடையா ருக்கு
ஓங்குடை தனம ளிப்பாய்!

### வசனம்

''கரத்தில் முப்பத்திரண்டு ஆயுதமும் தாங்கிக் கொலு முகத்தில் இருக்கும் கட்டியக்காரா, நம்மிட முன்னில் நிருத்தம் செய்த தேவதாசிகளுக்கு வேண்டிய ஆடை ஆபரணம் திரவியங்கள் கொடுத்து அனுப்பும் கட்டியக்காரா!''

## கட்டியன் மந்திரிக்குச் சொல்

### வசனம்

''அப்படியே கொடுத்தனுப்புகின்றேன் எனது ஆண்டவனே!''

# வேடர்கள் பர்வத ராஜனிடம் வருகிற

## விருத்தம்

232. மட்டிலாப் புகழ்பெற் றோங்கும்
மலைகளுக் கெல்லாம் வேந்தன்
சட்டமாய்க் கொலுவி ருக்கும்
சமயத்தில் மேருச் சார்பில்
திட்டமா யிருக்கும் வேடர்
சிறந்தசல் லடமும் கட்டி
வெட்டும்கத் தியும்வா ளம்பு
வில்லுடன் வருகின் றாரே!

## வசனம்

''அகோ தெப்படி யென்றால், அளவில்லாத கீர்த்தி பெற்று, உயர்ந்த மலைகளுக் கெல்லாம் அரசனான பர்வதராஜன் கொலுவிலிருக்கும் சமயத்தில் மகமேருகிரிச் சாரலில் இருக்கும் வேடர்கள், தட்டி, சல்லங்கள் கட்டி, கத்தி, வாள், அம்பு, வில் கையிலே பிடித்துக் கொண்டு வருகிற விதம் காண்க!''

# மேருகிரி வேடர் வருகிற தரு

## பல்லவி

233. வேடர் நாங்களே - மேருகிரி
வேடர் நாங்களே! - ஐயே வேடர்

## அனுபல்லவி

ஆடு மயிலேறும் ஆறு முகவற்குக்
காடுறை வள்ளியைக் கலியாணம் செய்வித்த - வேடர்
கர்ச்சித் தெழுகின்ற கடுஞ்சிம் மத்தினைக்
காலை வாரி அடிப்போம் - மிக்க
உர்ச்சித்து மேல்வரும் உக்கிரப் புலியிட
உசித வாயைக் கிழிப்போம் ! - உடல்
பருத்து மும்மதம் பொழியும் யானையைப்
பார்க்கில் வானில் எறிவோம் ! - வேடர்
வருத்தும் கரடி சிறுத்தை வேங்கையை
மக்களாடக் கொடுப்போம் - நல்ல
வரத்தில் மிகுந்த மகமேரு வில்வாழும்
திரித்த உமையாள் சேவடியில் தாமும்
சித்த முடையவர் சிலையும் அம்பினர்
மத்த முளத்து மலைவுள தென்பினர் - வேடர்

## கட்டியன் சொல் வசனம்

''அகோ வாரும் வேடர்களே! நீங்கள் எந்தத் தேசத்தில், எந்த இடங்களில் இருக்கிறது? அதை எனக்கு விபரமாகச் சொல்லுங்கள் பார்ப்போம் !''

# வேடர்கள் சொல்லுகிற தரு

## பல்லவி

234. குடியிருந்த மலையெல்லாம் யாம்
அடிதொடர்ந்து சொல்வோம் !

## அனுபல்லவி

கொன்றை முடியணிந்த வெள்ளீசர்தன் பாதத்தை
முந்திப் பணிந்திடுவோம் - குடியிருந்த
மேரு மலையிருந்தோம் ! - சிவன்
வில்லெனவே வளைத்தார் யாங்கள்
அந்த மலைவிட்டு வெள்ளி மலையில்
அமர்ந்திருந்தோம் சிலநாள் - நல்ல
வெள்ளிமலை தனையே - உமையாள்
வேணுமென்றே கேட்க - அதைத்
தந்து பழனி வந்தோம் ! - அந்தப்
பழனிமா மலையை எங்கள்
பைங்கொடி வள்ளி அம்மைதனக்
கழகு புருஷனான வேலருக் களித்தோம் சீதனமாய் ! -
சீதனமாகத் தந்து
கிரவுஞ்ச மீதில் குடியிருந்தோம் - அது
சோதனையாகவே முருகர் வடிவேல்விட்டு
துண்டிரண் டாச்சு தப்பா - துண்டமே
இரண்டாகி அம்மலை துள்ளி விழுந்திடவே - அதுகண்டு

கோவர்த்தன வெற்பில் குடிசைகட்டிக் கொண்டோம் -
இருக்கும் நாளையிலே

ஒருஇடையன் கைக்குடையாய் - பசு

இடுக்கத்துக்கு எடுத்தான் - விட்டு

மைந்நாக மென்னுங் கிரியில் வந்தோம் - வந்தபின்

அந்த மலை இந்திரன் வாளால் சிறகரிய - அது

புந்தி கலங்கிக் கடலில் ஒளிந்திடப்

பொதியமலை சார்ந்தோம் ! - அந்தப்பொதிய மலைதனையே
ஒரு

போத முனிக்கேட்க சம்மதியாகக் கொடுத்தே

புவியினில் சதுரை நகர் சேர்ந்தாம்! - குடி

## கட்டியன் வேடருக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : தோடி

235. மறைந்திருந் துழுவை தன்னை
வாட்டும் வேட்டுவ நரகேள்
தரைமரத் தினில்பூ வாது
தான்காய்க் கும்மர மியாது
நிறைமலர் மதுவில் வண்டு
நெருங்காத தருக்கள் யாது
குறைவிலா தியானுங் காண
கொப்பென உரைசெய் வீரே !

### வசனம்

"மறைவான இடங்களிலிருந்து கொண்டு புலியை வெல்லுகின்ற வேடர்களே கேளுங்கள் ! பூமியினிடத்திலிருக்கிற விருட்சங்களில் புட்பம் உண்டாகாமல் காய்க்கின்ற மரம் எந்த மரம்? நிறைவான மலர்களில் இருக்கும் தேனை உண்ண வண்டுகள் மொய்க்காத மரம் எது? இதுகளை யெல்லாம் நான் பார்க்கும் படிக்குச் சீக்கிரம் எனக்குத் தெரியச் சொல்லுங்கள் வேடர்களே !"

## வேடர்கள் கட்டியனுக்குச் சொல்வது

### எண்சீரடி விருத்தம்

236. துங்கமுள பர்வதக் கோன்வாசல் காக்கும்
சொல்லரிய விறலமை கட்டியனே கேளாய்
பொங்கமுடன் வனவிருட்சம் தன்னி லேதான்
பூவாது காய்க்கும் மரம்கோளி என்பர்
வங்கையிலா தேவண்டு மொய்க்காப் புட்பம்
வண்மையுள செண்பகமும் வேங்கையாகும்
சிங்கார அரசர்முடி யேறாப் பூவா
சிறந்தவெளி றுப்பெனவே தெரிந்து கொள்ளே !

### வசனம்

"உயர்ந்த மலைகளுக் கெல்லாம் அரசனான பர்வதராஜன் கொலு வாசலைக் காத்துக் கொண்டிருக்கும் அருமையான பராக்கிரமம் பொருந்திய கட்டியனே கேளும் ! வனத்திலே

மிகுதியாக இருக்கப்பட்ட மரத்திலே புட்பம் உண்டாகாமல் காய்க்கும் மரம் கோளிமரம்; வண்டுகள் வெறும்பில்லாதிருந்தும் அதன் உள்ளிருக்கின்ற தேனை யுண்ணப் போகாத மலர் வளம் பொருந்திய செண்பகமும் வேங்கையும் ஆகும் ! அலங்காரமான அரசர் முடியின் பேரில் தரியாத பூ உப்பு; தெரிந்து கொள்ளும் கட்டியக் காரா !''

## கட்டியன் சொல் வசனம்

''நீங்கள் சொன்னது சரிதான் ! போங்கள் வேடர்களே !''

## தலைவன் வேடன், மற்ற வேடருக்குச் சொல்

### விருத்தம்

237. அம்புவி பதங்க காணா
அடர்தரு கானம் தன்னை
நம்பியே வாழ்ந்தி ருக்கும்
ஞாட்புள விளங்கு டும்பை
தென்புட னாம்பி டிக்க
சிறுவலை கட்டிக் கையில்
கொம்புவில் லம்பு கொண்டு
கொல்லநீர் வருகு வீரே !

### வசனம்

"இதிராங், கானகக் கடம்பாங், ஏண்டாங், ஏசைத் துரம்பாங், சந்திர சூரியர் ஒளிவு காணாத இடந்த காட்டில் வாசமா யிருக்கும் ஞாட்பாகிய வலிமையுள்ள மிருகங்களையும், உடும்பு முதலியதையும் சந்தோஷமுடன் நாம் பிடிப்பதற்குச் சிறு வலையைக் கட்டி, அவரவர் கையில் தடி, வில்லம்பு எடுத்து வாருங்கள் மிருக வேட்டை யாடுவோம் வேடர்களே!"

## தலைவன் வேடன் மற்ற வேடருக்குச் சொல் தரு

*இராகம் : ஆனந்த பைரவி*

### பல்லவி

238. படுவலை எடடா ஐயே எந்தப்
பள்ளத்தில் விடடா ஐயே!

### அனுபல்லவி

படுவலை எடுத்திந்தப் பள்ளத்தில் விடுத்திதோ
வருமிரு கங்களை வாரி யடித்திட - படு

### சரணங்கள்

கொண்ட முயலைப் பாரடா - வனத்துப் புல்லை
உண்ட முயலைப் பாரடா - இடமகன்ற

அண்டம் வெடித்திடவே ஆர்ப்பரித் தோடுமிது
மிண்டு மிருகமெல்லாம் வெருண்டு விழுந்திடவே - படு

வாலை யரிக்குறு நேராய் - மலையிற் செந்நாய்
ஓரிக் கரிக்குது பாராய் - நெருங்கியபூஞ்
சோலைசூழ் வனமதில் தொடர்சிங்கம் யாளியும்
மாலைக்கண் போல்வந்து மயங்கி விழுமிதில் - படு

குள்ள நரியைப் பாராய் - அடர்புதரின்
உள்ள நுழையும் நேராய் - நீட்சியுடன்
வள்ளவாய்க் கரடி வந்திதோ - மேயுது
உள்ளங்கிட ஓடியடித்திட - படு

## தலைவன் வேடன், மற்ற வேடருக்குச் சொல் கவி

239. மட்டிகார் நீங்கள் கட்டிய வலையை
நெட்டுற விடாததால் நஷ்டமாய்ப் போச்சே !''

### வசனம்

''கேளும் வேடர்களே, நீங்கள் மட்டித்தனமாக வலைகட்டியதை யின்னம் கொஞ்சம் நிகளமாக விடாததால் மிருகம் உடும்பு, முயல் அகப்படாமல் நமக்குத் தின்னும் பலன் நஷ்டமாய்ப் போச்சுது, பார்த்தீர்களா வேடர்களே!''

# வேடர்கள், அவர்கள் தலைவனுக்குச் சொல்

## தரு

### பல்லவி

240. ஓடுதுபார் உடும்பு - வனத்திலே
ஓடுதுபார் உடும்பு

### அனுபல்லவி

ஓடுது விரைவினில் ஆரம்பரத்துடன்
நீடும் வலைதனில் கூடாமலே அதோ - ஓடுது

### சரணங்கள்

இருப்பு வலைதன்னில் எய்தாமல் தப்பித்து
பொருப்பெல்லாம் சுற்றியே புதரில் நுழைந்திட - ஓடுது
இரண்டு நாக்குள்ள உடும்புகள் பலத்தினால்
பெரும்வலை தப்பியே போகுது வேகமாய் - ஓடுது
வைத்த வலையினில் மாட்டிக்கொள் ளாமலே
புத்தினிலே அதுபோய் புகந்தது பாராய் - ஓடுது

# கட்டியன் சொல்

## விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

241. ஓடியே வேடர் எல்லாம்
உயர்ந்தபுற் றருகில் சென்று
நீடிய வளையைக் கண்டு
நெருங்கியே வெட்டும் போது
ஆடிய பாம்பின் பக்கம்
அரிவையும் இருக்கக் கண்டு
வாடிய வேடர் உள்ளம்
மயங்கியே தியங்கி நின்றார் !

## வசனம்

"அகோ தெப்படி யென்றால், வேடர்கள் எல்லாம் உயர்ந்த புற்றிடம் போய், பெரிய வளையல் நுழைந்த உடும்பைப் பிடிக்க வேணுமென்று வெட்டிப் பார்க்கும்போது, அந்தப் புற்றின் உள்ளே ஒரு பெண் குழந்தை இருக்கக் கண்டு, வேடர்கள் மனம் வாடி, மயங்கி, தயங்கி நின்றார்கள் என்றறிக!"

# கட்டியன் சொல் – பொது பரணி

242. தியங்கிய வேடர்
தெரியப் பெண்குழவி

இயலுளதி யாதோ

என்றெணி உரைப்பார்!

**வசனம்**

''மனத்தில் தியக்கம் கொண்ட வேடர்கள், பொண் குழந்தையை நல்ல 'லட்சுமிகர முள்ளது, யாவருடையதோ?' என்று நினைத்து, அதிசய மடைந்து சொல்லுகிற விதம் காண்க!

## வேடர் சொல்கிற

### விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

243. காருறும் பரிசா ரத்து

கவுரியோ கமலை தானோ

தாருறும் வாணி தானோ

தையலிந் திராணி தானோ

சீருறும் பானு போலத்

திகழுள வடிவைப் பாராய்

பாருறும் அரச ரோடு

பகருவோம் வருகு வீரே!

**வசனம்**

''அடா அண்ணேன்! இந்தப் பொண் குழந்தையைப் பார்த்தால், மேகம் போன்ற குழலுள்ள பார்வதியோ,

மகாலட்சுமியோ, மாலையணிந்த சரஸ்வதியோ, இந்திராணியோ சூரிய னொளியைப் போலும் காண்கிறது! இதை அரசனுடன் சொல்லுவோம், வாருங்களடா அண்ணேன் !''

## வேடர்கள் சொல் வசனம்

''அப்படியே போவோ மடா!''

## கட்டியன், பர்வதராஜனுக்குச் சொல்

### கவி

244. திறமுள அரசே குன்றைக்

குறைவிலா தரசி யற்றும்

செரிவான சேதி ஓத

மறவர்கள் வந்தார் சுவாமி !

### வசனம்

''மலைகளுக்குக் குறை உண்டாகாமல் அரசு செய்யும் பராக்கிரமமுள்ள பர்வத ராஜனே ! மிகுந்த வனங்களிலுள்ள சமாசாரங்களைத் தங்களுடன் சொல்லுகிறதற்குச் சமூகத்தில் வேடர்கள் வந்திருக்கிறார்கள் சுவாமி !''

## பர்வத ராஜன், கட்டியனுக்குச் சொல் பரணி

245. நிறைவான சேதி என்ன?

அறியவே வேண்டும் என்று

குறைவிலா வேடர் தம்மை

நெறியுடன் அழைத்து வாராய் !

### வசனம்

"ஆரடா அடா கட்டியக் காரா -! காட்டிலேயுள்ள சமாசாரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பதால், அவர்களை அழைத்துவாரும் பிள்ளாய்!"

## கட்டியன் இராஜனுக்குச் சொல் வசனம்

"அப்படியே வேடர்களை இவ்விடத்திற்கு வரவழைக்கிறேன் சுவாமி!"

## கட்டியன் வேடருக்குச் சொல் பரணி

246. வேடரே உங்களை வேந்தனும் அழைத்தார்

தேடியே வந்து சேதிசொல் வீரே !

### வசனம்

"ஆரடா, அடா வேடர்களே! உங்களைப் பர்வதராஜன் அழைத்தார்; அவரைத் தேடிவந்து தெரிசனம் செய்து, காட்டிலுள்ள சமாசாரங்களைச் சொல்லுங்கள் மறவரே !"

## வேடர் சொல் – வசனம்

"அப்படியே சொல்கிறோமையா !"

# வேடர்கள் பர்வத ராஜனுக்குச் சொல்

## விருத்தம்

247. வரைகளுக் கரசே போற்றி
வனத்தினில் ஒரு டும்பு
துரத்தினோம் அதுவான் மீகத்
துவாரத்தில் நுழைந்த தத்தை
விரைவினில் பிடிக்க எண்ணி
வெட்டியே புத்துட் பார்த்தோம்
அரவுடன் பெண்கு ழந்தை
அமர்ந்திருக் கின்ற தையா !

## வசனம்

''கேளும், மலைகளுக் கெல்லாம் அரசனாகிய எங்களாண்டவனே! சரணம், சரணம்! காட்டிலே ஒரு உடும்பைத் துரத்தினோம்! அது வான்மீகமாகிய புற்றின் துவாரத்தில் போய் நுழைந்தது! அந்த உடும்பைச் சீக்கிரத்திரத்திப் பிடிப்பதற்கு நினைத்து, வெட்டிப் புத்துக்குள்ளே பார்த்தோம்! அதில் ஒரு சர்ப்பத்துடன் கூட சூரியப் பிரகாசமாகப் பெண் குழந்தை ஒன்று இருக்கக் கண்டு தங்களுடன் சொல்லுவதற்கு இவ்விடம் வந்தோம், பர்வத ராஜனே !''

## இராஜன் வசனம்

''அப்படியா ! நல்லது; வந்து பார்க்கிறேன் !''

# இராஜன், மந்திரிகளுக்குச் சொல்

## விருத்தம்

248. உசிதமந் திரியே வேடர்
உரைத்தசங் கதியைக் கேட்க
விசிதமா யிருக்கு தந்த
விதத்தைநாம் அறிய வேணும்
பசிதவிர் பார்வ திக்குப்
பாகனார் அருளி னாலே
வசிகரக் குழந்தை வந்த
வாறதை அறிவோம் வாரீர் !

## வசனம்

"வாரும், மந்திரி மார்களே ! வேடர்கள் சொல்லிய சங்கதியைக் கேட்க, மிக சுபகரமா யிருக்கிறது ! அந்த மாதிரியை நாமும் போய்ப் பார்த்துவர வேணும் ! யாவருக்கும் பசி தவிரும்படிக்குத் தருமம் செய்த பார்வதிக்குப் பாகனாகிய சிவனருளால், ரூபலாவணியமுள்ள குழந்தை அந்தப் புற்றில் வந்த விபரத்தை அறிவோம், வாரும் மந்திரி !"

# பர்வத ராஜன் சொல்

## தரு

249. மந்திரிகளே நீரும் - மதலைவந்த
வகையறிவோம் வாரும் !

## அனுபல்லவி

தந்திர வகை ஏதோ?

தற்பரன் அருள் ஈதோ?

எந்த மார்கள் ஈன்ற

இந்த மதலை யாதோ? - மந்

## சரணங்கள்

தூதரே கர நீட்டும் - சுதனுதித்த

சுந்திர இடம் காட்டும் - வேதந்தெரி

போதன் உதித்திடும் பொற்றாமரை மேலோ

ஆதவன் காணாத அதலநாகத் தாலோ? - மந்

மாமுனிவரே வாரும் ! - குழந்தை வந்த

வரலாறு அறிந்து ஓதும்!

பூமிசைப் புத்தில் உதித்த

காரணம் யாது?

நேம நெறி உள்ளோரே

நிலையாய் இதை ஓதும்! - மந்

சோகியரே வாரும் - சுந்தரிவந்த

சூதை அறிந்து நீரும்

தேசு மிகுத்துச் செழிய - வான்மீகத்தில்

மீசுர சூரியர் விளக்கம் போலவந்த - மந்

## கட்டியன் சொல் – பொதுக்கவி

250. பொருப்பினுக் கிறைவன்
புற்றிடம் சென்று
விருப்பமாய்க் குழவியை
விழியினாற் பார்த்தான்!

### வசனம்

"இந்தப் பிரகாரமாகப் பர்வத ராஜன், புற்றினிடம் போய், ஆசையுடன் குழந்தையைக் கண்களினால் பார்த்துச் சொல்லுகிற விதம் காண்க!"

## பர்வத ராஜன், மந்திரிகளுக்குச் சொல்

### விருத்தம்

251. விண்ணவ ரேயா னாலும்
வேதன்த வஞ்செய் தாலும்
அண்ணல் சுதன ளிப்ப
அருமையல் லோமந் திரிகளே!
எண்ணரிய தேவர் இருந்து
மகவில் லாத தாலே
கண்ணுதலிச் சுந்த ரியைக்
கருணையில் எற்குஈந் தனரே!

## வசனம்

''கேளுங்கள், மந்திரிமார்களே ! தேவர்க ளானாலும், அவர்கள் அளவில்லாத தவத்தைச் செய்தாலும், பரமசிவன் புத்திர சந்தான மளிப்பது அருமையானது; ஆகையால், எனக்கு அநேகப் பெண்சாதிகள் இருந்தும் புத்திர னில்லாமையால், கண்ணுதலாகிய நெற்றிக் கண்ணாளர், இந்த அழகுள்ள குழந்தையைத் தயவுடனே எனக்குக் கொடுத்தருளினார், மதி மந்திரிகளே !''

# இதுவும் பர்வதராஜன் மந்திரிக்குச் சொல்

## வெண்பா

252. நன்று தெரிந்தெனக்குச் நாளுஞ்சொல் மந்திரியே
துன்று மிடர்நீக்கிச் சுதையீந் தார் - கொன்றை
புந்தண் மதிகங்கை யுரகம் புனைந்தபரன்
சந்ததமு யான்மகிழத் தான்!

## வசனம்

''கேளும் ! சதாகாலமும் நன்மை தீமைகளைத் தெரிந்து எனக்குச் சொல்லும் மந்திரிகளே ! புத்திரனில்லை என்கிற வருத்தத்தை நீக்கிப் பெண் குழந்தையை கொடுத்தார், கொன்றைமாலை, குளிர்ந்த பிறை, கங்கை, சர்ப்பம், இவைகளை அணிந்த பரமசிவன் எப்போதும் நான் சந்தோஷ மடையும் படிக்கு மதியூகிகளாகிய மந்திரிமார்களே !''

# பர்வத ராஜன் சொல் தரு

## பல்லவி

253. குழந்தையை எடுத்துப் போவோம் - வளர்த்திடவே
குழந்தையை எடுத்துப் போவோம் !

## அனுபல்லவி

தழைந்த புற்றினிடந் தானவ தரித்திட்டு
நுழைந்த உடும்பால்வேடர் நோக்கில் அகப்பட்ட - குழ

## சரணங்கள்

முந்தை நல்வினை முழுமதி போல்முகச்
சுந்தரம் விளங்கவே துரிதமுட னேமிகக் - குழ
சாற்ற அரியவெஞ் சர்ப்பமும் அருகினில்
வீற்றி ருக்கவெகு விந்தையாக இருந்த - குழ
கானாரும் பூங்குழல் கன்னல் வசனமுள்ள
மேனோ தேவியுள்ள மிகவும் ஆசைகொள்ள - குழ

## கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரம், பர்வத ராஜன், குழந்தை புற்றிலே யிருந்ததைக் கையிலே எடுத்துக்கொண்டு, மந்திரி பிரதானிகள், சேனைகள் வேடர்களுடன் தன் நகரம் வந்து சேர்ந்து, மனம் பூரித்து மந்திரிக்குச் சொல்லுகிற விதம் காண்க !''

## பர்வத ராஜன் மந்திரிக்குச் சொல்

### பரணி

254. மந்திரி கேளாயிந்த வனமுறை வேடருக்குச்
சந்திர ஆரம்தூசும் தந்துநீ அனுப்புவாயே !

### வசனம்

''கேளும் மந்திரி ! வனத்தில் வாசம் செய்யும் வேடர்களுக்குச் சந்தோஷமாய் ஆடை யாபரணமும் திரவியமும் கொடுத்தனுப்பும் மந்திரி !''

## மந்திரி வசனம்

''அப்படியே கொடுத்து அனுப்புகிறேன் சுவாமி !''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### பரணி

255. அழகுக் கட்டியனே
அடவி வேடர்க்கு
எழில்துகில் பணிபொன்
ஈந்து அனுப்புவாயே !

## வசனம்

"அழகினை யுடைய கட்டியக் காரா! வேடர்களுக்கு நல்ல வஸ்திரம், ஆபரணம், திரவியம் மிதமில்லாமல் கொடுத்தனுப்பும் பிள்ளாய், கட்டியக் காரா !"

## கட்டியன் வசனம்

"அப்படியே கொடுத்து அனுப்புகிறேன் எங்கள் ஆண்டவரே!"

## பர்வத ராஜன், மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

256. புத்திரி உதித்த சேதி
புகன்றிட வேணு மிந்து
வத்திரங் குரும்பை ஒத்த
வாரணி குருக்க ணம்பு
சத்திர நயனம் வேய்தோள்
தாமரை அணைய செங்கை
சித்திர மிகுந்த **மேனா**
**தேவி**யை அழைத்தி டீரே !

## வசனம்

"வாரும் மந்திரிமார்களே! எனக்குப் புத்திரியாகிய பெண்குழந்தை கிடைத்த சங்கதியைச் சொல்லவேணும் ! பூரணச்

சந்திரனை யொத்த முகமும், தென்னங் குரும்பை யொத்த ரவிக்கை யணிந்த தனபாரமும், அம்புவேல் நிகர்த்த விழியும், மூங்கில் போன்ற தோளும், தாமரைக் கரமும் பொருந்திய மிகுந்த அழகினையுடைய மேனா தேவியை அழைத்துவரச் சொல்லும் மதிமந்திரிமார்களே!''

## மந்திரி, கட்டியக் காரனுக்குச் சொல்

### பரணி

257. கட்டியக் காரா கடிதினிற் சென்று
திட்டமாம் இறைவன் தேவியை அழைப்பாய் !

### வசனம்

''அகோ வாரும் கட்டியக்காரா ! நீ சீக்கிரமாக அரண்மனைக்குச் சென்று, நமது மகாராஜன் அவர் தேவியை அழைத்துவரும்படி உத்தரவு செய்தார்; அழைத்துக் கொண்டு வாரும் பிள்ளாய்!''

## கட்டியன் வசனம்

''அப்படியே அழைத்துக் கொண்டு இவ்விடம் வருகிறேன் மந்திரிமார்களே !''

## கட்டியன் மேனாதேவிக்குச் சொல்

### பரணி

258. அன்னையே எங்கள் அரசனும் உம்மை
துன்னிய கொலுவில் துரிதமாய் அழைத்தார் !

### வசனம்

"கேளும் என் தாயாகிய மேனா தேவியே ! உங்களை எங்களரசன் கொலுவுக்கு அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார், வாரும் அம்மா !"

## மேனாதேவி, கட்டியனுக்குச் சொல் வசனம்

"அப்படியே வருகிறேன், கட்டியக்காரா !"

## மேனா தேவி பர்வதராஜனிடம் வருகிற

### விருத்தம்

259. அருந்ததி கற்பில் ஏங்க
அழகினில் இரதி வாட
பொருந்திய பூஷ ணங்கள்
பூண்டுள மகிழ்ச்சி பொங்க

தருகரப் பர்வ தேந்திரன்

தானழைத் திட்டார் என்று

தெரிவையர் சூழ மேனா

தேவியும் வருகின் றாளே!

### வசனம்

"அருந்ததி, கற்பைக் கண்டு ஏங்கவும், அழகைப்பார்த்து ரதிதேவி மனம் வாடவும், சகலமான ஆபரணங்கள் பொருத்தமாகவே தரித்து, மிகுந்த சந்தோஷத்துடன், பஞ்ச தருவைப்போலும் கொடுக்கும் கையினை யுடைய பர்வத ராஜன் அழைத்தாரென்று தெரிவையராகிய தாதிமார்கள் சூழத் தக்கதாய், மேனாதேவி வருகின்ற விதம் காண்க!"

## மேனாதேவி வருகிற தரு

*இராகம் : சௌராஷ்டகம்*

### பல்லவி

260. மேனா தேவியும் வந்தாள் - அதி

விதரண நயகுண மிலகிய வடிவுள்ள

மேனா தேவியும் வந்தாள் !

## அனுபல்லவி

ஞானா பரணான நாதன் அழைத்தசேதி
தானறிந் திடவேண்டிச் சந்தோஷத் துடனீதி
சத்திய நெறியுள உத்தமி ஆகிய
தத்தை மொழிச்சியர் சுற்றிலும் சூழ்ந்திட - மேனா

## சரணங்கள்

குவளை விழிகளோ பாணம் - செவ்விதழிற்குக்
கோவைக் கனிகளும் நாணும் ! - வரிசையாக
அவிர்வெண் பற்களைக் கொண்ட
அரும்பு முல்லை யொடுங்கும் - நலமிகு செவிகண்டு
நாடி வள்ளை அடங்கும் !
நாமகள் தாமரை யாமலர் மேவிய
பூமகள் மாமன மேமகி ழாய்ப்புகழ் - மேனா
கதலியைப் போலிரு தொடையும் - அழிவிலாது
சதமுள வருணன் செய்த
    தவமத னாலு தித்த
சுதையிணை இல்லாத
    சுபகரமே மிகுந்த
தோகையி னாற்பெறு
    சாயல்து லங்கிய
வாகை இளங்கிளி
    வாய்வச னம்புகல் - மேனா

மின்னற் கொடிபோல் இடையும் - சீவி வகிர்ந்து
பின்னிச் சாய்ந்தநற் சடையும்
வன்னக் கொங்கைக்கு மேரு
வடக்கோடி மறையவே
சின்ன வயிற்றுக் காலே
சிறியதென் றுறையவே
சீருறும் அல்குற் கோதரா பதுங்க
நேருறு கரங்கண்டு
வாரிசம் ஒதுங்க - மேனா

## மேனாதேவி, பர்வத ராஜனுக்குச் சொல்

### விருத்தம்

261. சுந்தர நிஷத நாட்டைச்
சுகிர்தமா அரசி யற்றும்
சுந்திர முடைய என்றன்
தலைவனின் தாள்கள் போற்றி
பந்தமாய் எனையிப் போது
பரிவுடன் அழைத்த சேதி
விந்தையாய் அடியே னுக்கு
விளம்புவீர் போற்றி போற்றி !

### வசனம்

''சுந்தரமான அழகுடன் நிஷத நாட்டை நல்ல பெருமையுடனே அரசு செய்யும் வல்லபமுள்ள என் பிராண நாதனே! உமது பாதமே சரணம்! பாச பந்தத்துடன் என்னை யிப்போது அழைத்த சமாசாரத்தை விநோதமாகவே சொல்லி யருள வேணுமய்யா பிராண நாதா !''

## பர்வத ராஜன் மேனாதேவிக்குச் சொல்

### விருத்தம்

262. விண்ணவர் மாதர்க் கொப்பாய்
விளங்கிய அழகின் மிக்க
தண்ணலர் குழலாள் ஆன
தகுமேனா தேவி கேளாய்
எண்ணறும் குலம்வி ளங்க
இயலுறும் புதல்வி தன்னை
நண்ணிய பரமன் ஈந்தார்
நலமுட னேவ ளர்ப்பாய் !

### வசனம்

''விண்ணவர் மாதராகிய தேவஸ்திரிகளுக்குச் சமானமாய், அழகு மிகுதியாய் விளங்கிய குளிர்ந்த மலர்களைத் தரித்த

கூந்தலுள்ள தகுதியான மேனா தேவியே, கேளும் ! எப்பொழுதும் நமது அருமையான குலம் விளங்கும் படிக்கு லட்சுமி கரமுள்ள ஒரு பெண்குழந்தையைப் பரமசிவன் கொண்டு வந்து கொடுத்தார் ! அதை நலமாக நீ வளர்த்துக் கொண்டு வாரும் பெண்ணே !''

## மேனாதேவி, பர்வதராஜனுக்குச் சொல்

### விருத்தம்

263. வளருமென் றுரைத்துச் சேயை
வழங்கிய பிராண நாதா
இளமையாஞ் சிசுதான் உந்தன்
இடத்திலே எப்ப டிக்குத்
தளர்விலா மற்கி டைத்த
சங்கதி எந்த னுக்கே
ஒளித்திடா தேயு ரைத்தால்
உள்ளமும் மகிழு வேனே !

### வசனம்

''வளர்த்து வாரும் இந்தப் பெண்குழந்தையை என்று என் கையிலே கொடுத்த பிராணநாதா, அதிக இளமையுள்ள சிசுவானது உங்களிடத்திலே எப்படிக் குறைவில்லாமல் கிடைத்தது? அந்தச் சமாசாரத்தை அடியாளுக்கு ஒளித்திடாமல் சொன்னால் எனது மனம் சந்தோஷ முண்டாகும் பிராண நாதனே !''

# பர்வதராஜன் மேனாதேவிக்குச் சொல் தரு

*இராகம் : தன்யாசி*

## பல்லவி

264. மாதே என்சேதி கேளடி - சுதையுதித்த

வரலாறு அறிந்து கொள்ளடி !

## அனுபல்லவி

ஆதவன் காணாத அதலமான புத்திலே

ஆவென்ற சத்தமதை அறிந்த வேடர்கள் சொன்னார் - மாதே

## சரணங்கள்

சூதை யறிந்திலேன்

சூட்சத்தில் உதித்தது

ஏதோ சிவன்செயலால்

இயல்புறப் பலித்தது - மாதே

பால சூரியன்

போலப் பளபளப்பாகிய

வாலம் பிறைநுதலாள்

வாய்ந்தது தெரிந்துகொள் - மாதே

வேடர் புற்றில் கண்டு

வினவினார் இங்குவந்து

ஓடி எடுத்து வந்தேன்

உற்ற சேதிஇது ! - மாதே

## பர்வத ராஜன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : தோடி

265. பெருமையும் பொறையும் பண்பும்

பிறங்கிய மந்திரி கேளும்

அருமையாம் எனது புத்திரிக்(கு)

அன்புடன் நாம தேயம்

உரிமையாய் வைக்க வேணும்

உகன்றவே தங்கள் ஆய்ந்த

இருடியாம் வசிட்டர் தம்மை

இக்கணம் வரச்செய் வாயே !

### வசனம்

"பெருமையும், சாந்தமும், நல்ல குணமும் பிரகாசிக்கின்ற மந்திரியே கேளும் ! சொல்லுவதற் கருமையான குமாரத்திக்கு ஆசையுடனே பெயர் வைக்க வேணும்! நான்கு வேதங்களும் ஆராய்ந்த முனிவராகிய வசிஷ்டரை இந்த நிமிஷம் சீக்கிரத்தில் வரவழைப்பாய் மந்திரியே !"

## மந்திரி, கட்டியங்காரனுக்குச் சொல்

### வெண்பா

266. கட்டியனே நீயும் கடுகென ஆசிரமம்
பொட்டென வசிட்டர்தம்மைப் போற்றி - இட்டமாய்
வரைகளுக்கு நாதன் வரச்சொன்னார் என்றே
உரைத்தே அழைத்தே வா !

### வசனம்

"ஆரடா அடா கட்டியக்காரா ! நீ சீக்கிரமாக வசிஷ்டர் ஆசிரமம் போய் அவரைத் தோத்திரம் செய்து வணங்கி ஆசையுடனே பர்வதராஜன் வரச்சொன்னா ரென்று சொல்லி அழைத்துக்கொண்டு வாடா கட்டியக்காரா !"

## கட்டியன் வசிஷ்டருக்குச் சொல் கலிப்பா

267. போற்றி வண்மைப் புகழ்கதிர் வேந்தர்க்கு
போற்றி சற்குரு போதம வசிஷ்டரே !
போற்றி திண்மை பொருப்புப் புரவலன்
போற்றியே அழைத்தார் சபை புல்குவீர் !

### வசனம்

"சரணம், சரணம்! கீர்த்தியுள்ள சூரியகுலத் தரசருக்குக் குருவாக விளங்கிய வசிஷ்ட மகா முனிவரே, சரணம், சரணம் !

பலம் பொருந்திய பர்வத ராசன் தேவரீரை அழைத்துவரச் சொன்னார், சபைக்கு வாரும் முனிநாதரே !''

## வசிட்டர் கட்டியனுக்குச் சொல் வசனம்

''அப்படியே போவோம், வாரும் பிள்ளாய் கட்டியக் காரா !''

## வதிட்டர் வருகிற

### விருத்தம்

*இராகம் : கலியாணி*

267. வரையிறை அழைத்தார் என்று
வழுத்திய சேதி கேட்டு
கரமலர் தலத்தில் தெண்டு
கமண்டலம் களிப்பில் ஏந்தி
மரவுரி இடைத ரித்து
மாயவன் பரம்ப ணிந்து
திறமுறு முனிவ திட்டர்
திகழ்கொலு விருக்கின் றாரே !

### வசனம்

''இந்தப் பிரகாரம் பர்வதராஜன் அழைத்தாரென்று கட்டியன் வந்து சொன்ன சங்கதியைக் கேட்டுக் கையிலே தண்டு, கமண்டலம் பிடித்து, இடையிலே மரவுரி யுடுத்து, மகா விஷ்ணுவின் பாதம்

வணங்கிச் சதா காலமும் இருக்கப்பட்ட வதிட்ட மகாமுனிவர் பிரகாசமுள்ள மலையரசன் கொலுவிற்கு வருகிற விதம் காண்க.

## வதிட்டர் பர்வத ராஜனிடம் வருகிற தரு

### பல்லவி

268. வந்தார் வதிஷ்ட முனிவர் - சீடருடனே
வாரார் வதிஷ்ட முனிவர் !

### அனுபல்லவி

வந்தார் வதிஷ்டமுனி
அந்தமதாய்ச் சடைமுடித்துச்
சிந்தை மகிழ்ந்துதண்டைச்
சீராய்க் கரம்பிடித்து - வந்

### சரணங்கள்

உழைத்தோல் ஆசனம் கொண்டு - மகிழுறவே
உயர்ந்த சபையைக் கண்டு - மிளிரிரண்டு
குழையைச் செவியில் மாட்டிக்
கோதி முடியைச் சூட்டி
அழகு துகிலைக் காட்டி
அஸ்தம் அதனை நீட்டி - வந்

சிரசில் உருத்திராட்சம் அணிந்து - தேகமெல்லாம்
சிறந்த வெண்ணீறு அணிந்து - மிகத்திகழு

மருவும்முப் புரிநூலும் மரஉரியும் அணிந்து

வைகுந்த நாதனை வாஞ்சையுடன் பணிந்து - வந்

பந்துறச் சீடர் தாழவே - சிறந்ததவப்

பண்ணவர் வந்த சூழவே

அந்தமா யோகம் விடுத்து

அனுஷ்டானமும் முடித்து

சிந்தை மகிழ்ந்து நல்ல

செபமாலையும் எடுத்து - வந்

## பர்வதராஜன் வதிஷ்டருக்குப் போற்றி

### விருத்தம்

269. செங்கதிர்க் குலத்து தித்த

திறமுள மன்னர்க் கெல்லாம்

துங்கநற் குருவாய் வீறுந்

தூயமா முனியே போற்றி

சங்குறழ் கண்டம் மங்குல்

தார்குழற் பவளச் செவ்வாய்

மங்கைநல் அருந்த திக்கு

மகிழ்நனே போற்றி போற்றி !

### வசனம்

''சூரிய குலத்து அரசர்களுக் கெல்லாம் உயர்வாகிய நல்ல குருவாக விளங்கிய வதிட்ட மகாமுனிவரே, சரணம் ! சங்கை

யொத்த கழுத்தும், நீர்கொண்ட மேகம் போன்ற கூந்தலும், செம்பவளம் போன்ற வாயுமுள்ள மங்கையாகிய அருந்ததிக்குப் பிராண நாயகனாகிய உமது பாதமே சரணம், சரணம் சுவாமி !''

## வசிஷ்டர் வாழி

### விருத்தம்

270. மருவுமா முனித வந்தால்
மன்னனே அவத ரித்து
பெருகியல் நிஷதம் காக்கும்
பிரபலம் உடையோய் வாழி
திருமதி முகத்தாள் மேனா
தேவிநெஞ் சங்க ளித்து
மருவுபு யாச லத்து
வனப்புறும் அரசே வாழி !

### வசனம்

''மருவு முனிவர் செய்த தபோபலத்தினால் பிறந்து, பெருத்த இயல்பினை யுடைய நிஷத நகரத்தைப் பிரபலமாக அரசு செய்யப்பட்ட மன்னனே வாழி! அழகிய பூரண சந்திரனைப் போன்ற முகமுள்ள மேனாதேவி மனம் சந்தோஷித்து அணையும் பெருத்த புயத்தினை யுடைய பர்வத ராஜனே வாழி, வாழி !''

## பர்வதராஜன் வதிஷ்டருக்குச் சொல்

### விருத்தம்

271. சீரணி தனிற்ற வம்செய்

திறமுள முனியே போற்றி

தாரணி தன்னில் புற்றில்

தகைமையாய் அவத ரித்து

நாரணி போல வந்த

நங்கைஎன் புத்தி ரிக்கு

பேரது வைக்க வேணும்

பிறங்குசாத் திரம்பார்ப் பீரே!

### வசனம்

"சீரணியாகிய காட்டிலே தவஞ் செய்யும் திறத்தினை யுடைய முனிநாதனே சரணம் ! உலகத்தில் ஒரு காட்டில் உண்டாயிருந்த புற்றில் பண்புடன் பிறந்து மகாலட்சுமியைப் போல் இருக்கும் என் குமாரத்திக்கு நாமகரணம் செய்யவேணும் ! பிரகாசமுள்ள சோதிட சாத்திரத்தைப் பார்த்துச் சொல்லுமையா !"

## வதிட்டர் பர்வத ராஜனுக்குச் சொல்

### விருத்தம்

272. பானுவின் குலத்து தித்துப்

பண்புறும் அரசே கேளாய்

கானுறும் வான்மீ கத்தில்
கன்னியாய் வந்த சேய்க்கு
தானிரே ணுகையென் றேபேர்
சாற்றினோம் இந்தப் பெண்ணை
ஞானவான் ஜமதக் கனிக்கு
நலமுடன் தருகு வாயே !

### வசனம்

''சூரிய குலத்திலுதித்துப் பண்பு பொருந்திய வரசனே கேளும்! காட்டினி லிருக்கின்ற புற்றில் கன்னிகையாய்ப் பிறந் திருந்த உன் குமாரத்திக்கு இரேணுகை என்னும் பேர் வைத்திருக் கிறேன்; இந்தப் பெண்ணை ஞானவானாகிய ஜமதக்கினிக்கு நன்மையான கல்யாணஞ் செய்து கொடுத்துவிடும் அரசனே !''

## இதுவும் வதிட்டர் பர்வத ராஜனுக்குச் சொல் பரணி

273. அயர்விலாப் பர்வத ராசனே கேளும்
செயமுடன் புகவே செலவுதந் திடுவாய் !

### வசனம்

''யாதொரு சமயத்திலும் வருத்த மில்லாத பர்வத ராஜனே ! வெற்றியுடன் போக வேண்டியதற்குச் செலவு தாரும் !''

## பர்வதராஜன் வசனம்

''அப்படியே செலவு கொடுத்தேன், போய் வாரும் வதிஷ்ட முனிவரே !''

## கட்டியன் வசனம்

''இந்தப் பிரகாரம் வதிட்ட மகாமுனிவர் பர்வத ராஜனிடத்தில் செலவு பெற்றுக் கொண்டு மெய்ஞ்ஞானத்திற் சிறந்தவராகிய ஜமதக்கினி மகாரிஷியிடம் வருகிற விதம் காண்க !''

## வதிஷ்டர் ஜமதக்கினியிடம் வருகிற தரு

### பல்லவி

274. தவமுனி வதிட்டர் வந்தார் - ஜமதக்கினியிடம்
தவமுனி வதிட்டர் வந்தார் !

### அனுபல்லவி

சுவகரமாய் எவர்க்கும் சுகுண நிலையைத்தரும்
அவனியில் புகழ்பெற்ற அருந்தவத்தில் மரும - தவ
கவுசிகமுனி பிரம்ம ரிஷியாகவே கேட்க
அவசிய மானால்நீ ஆகலாம் என்றுரைத்த - தவ

### சரணங்கள்

விசுவா மித்திரனுக்காய் விளங்க திருமாலிடம்
அசைவில் சேஷனுடனே ஆதித்தனை விருத்த - தவ

சந்திர குலத்துங்க சவ்வருணன் தனக்கு

சுந்திர பானுவின் சுதையைமணம் செய்வித்த - தவ

## ஜமதக்கினி வதிஷ்டருக்குப் போற்றி

### விருத்தம்

275. மிகுந்தசெந் தழலில் நின்று
வீரிய தவத்தைச் செய்யும்
மகத்துவ முள்ள எங்கள்
வயங்குசற் குருவே போற்றி
புகல்சதுர் மறைகள் முற்றும்
பூரண மாயு ணர்ந்த
தகையுறு வதிட்ட ரேயும்
தாளிணை போற்றி போற்றி !

### வசனம்

''மிகுதியான சிவந்த நெருப்பினிலே நின்று பெரிதான தவத்தைச் செய்யும் மகத்துவமுள்ள எங்கள் சற்குணம் பொருந்திய குருநாதனே சரணம்! சொல்லப்பட்ட நான்கு வேதங்களும் பூரணமாயறிந்த பெருமையுறும் வதிட்டரே, உமது இரண்டு பாதமே சரணம், சரணம், சுவாமி !''

## வதிட்டர் ஜமதக்கினிக்குச் சொல்

### வாழி

276. தவமிகும் ரிஷிகள் தந்த புத்திரனே
நவமதன் போலென் னாளும் நீவாழி !

### வசனம்

''கேளும் தவத்திலே மிகுத்தவரான ரிஷிகர் பெற்ற புத்திரனாகிய ஜமதக்கினி, புதுமையான மன்மதனைப் போல வாழக் கடவது !''

## வதிட்டர் ஜமதக்கினிக்குச் சொல்

### விருத்தம்

277. மிஞ்சுநல் யோகம் பண்பாய்
மேன்மையாய்ச் செய்தென் னாளும்
எஞ்சலில் லாதி ருக்கும்
இயல்ஜம தக்கி னிப்பேர்
அஞ்சித முனியே புத்தின்
அறிவையை மலையி ராசன்
மஞ்சுடன் வளர்க்கின் றான்நீ
மகிழ்ந்ததை மணம்செய் வாயே !

## வசனம்

''நல்ல யோகம் மிகுந்த பண்புடன் மேன்மையுண்டாகச் செய்து, சதாகாலமும் குறைவில்லாதிருக்கும் இயற்கையுள்ள ஜமதக்கினி என்னும் பேர் பெற்ற முனிவனே ! புத்தினிடத்தில் அவதரித்து வந்த பெண்ணைப் பர்வத ராஜன் வளர்த்துக் கொண்டிருக்கிறான்; அதை நீ மகிழ்ச்சியுடன் கலியாணஞ் செய்து கொள்ளுவாய் ஜமதக்கினியே !''

# இதுவும் வதிட்டர் சொல்

## விருத்தம்

இராகம் : கலியாணி

278. தெரியவே இன்னம் சொல்வேன்
சேதியை அன்பாய்க் கேளும்
பிருகுபத் தினிய ளான
பேருறு புலோமி சைதான்
அரிஅயன் அரனாம் மூவர்
அருளிலர வேந்த ருக்கு
பிரியமாம் புதல்வி யாக
பெரும்புற்றில் வந்த தோர்வாய் !

## வசனம்

''தெரியும்படி இன்னும் விவரமாகச் சொல்லுகின்றேன், கேளும் ஜமதக்கினி முனிவரே ! பிருகு மகா முனிவர் பத்தினியாகிய

புலோமிசை யம்மாளுக்குப், பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் திரிமூர்த்திகள் கிருபை செய்தது, அரவு ஏந்தலாகிய ஆதிசேடனுக்குப் புத்திரியாகப் பெரிய புற்றினிடமாக வந்தது தெரிந்துகொள்ளும் ரேணுகையின் வரலாறு''

## ஜமதக்கினி வதிஷ்டருக்குச் சொல்

### பரணி

279. இரவிதன் குலத்தோ ருக்கு
குருவாமும் சொற்ப படிக்கு
பர்வத ராஜன் சேயைத்
திருமணம் செய்து கொள்வேன்!

### வசனம்

''சூரிய குலத்து அரசர்களுக் கெல்லாம் குல குருவாகிய உமது சொற் பிரகாரம் பர்வதராஜன் குமாரத்தியைத் திருக்கல்யாணம் செய்து கொள்ளுகிறேன் வதிஷ்ட முனிவரே!''

## கட்டியக்காரன் சொல்

### விருத்தம்

280. வதிட்டரும் மணம்செய் யென்று
வகுத்தவர் போன பின்பு

துதித்தெ வரும்வ ணங்கும்
சுருதியை உணர்ந்தோர் ஆன
கதித்தஞா னத்தன் ஆன
கவின்ஜம தக்கி னிப்பேர்
பதித்தவன் தன்ம னத்தில்
பன்னுவான் உன்னு வானே!

## வசனம்

''அகோ தெப்படி யென்றால், இந்தப் பிரகாரம் ஜமதக்கினி முனிவரைப் பர்வத ராஜன் வளர்க்கிற பெண்ணைக் கல்யாணஞ் செய்யச் சொல்லி, வதிஷ்டர் போனபின்பு, யாவரும் துதித்து வணங்கும்படிக்கு வேதங்களை யுணர்ந்த ஞானத்தில் மிகுந்து அழகுள்ள ஜமதக்கினி யென்னும் பேருடையவர் தனது மனதில் எண்ணி, பெண்கேட்க வர எத்தனம்''

# ஜமதக்கினி பர்வத ராஜனிடம் வருகிற

## விருத்தம்

281. அஞ்செ ழுத்தை உன்னி
அருந்தவம் செய்து முன்னே
பஞ்சமா பாத கத்தைப்
பறந்தோடச் செய்தோன் தந்த
மஞ்சனும் சடைமு டித்து
மாமறை நான்கும் ஓதி

செஞ்சுடர் சோதி ஆன
சமதக்கினி வருகின் றாரே!

### வசனம்

"அஞ்செழுத் தாகிய பஞ்சாட்சரங்களைச் செபித்து, அரிதாகிய தவங்களைச் செய்து, பஞ்சபாதகங்கள் பறக்கும்படிக்குச் செய்யும் ரிஷிகர் பெற்ற புத்திரனாகிய ஜமதக்கினி முனிவர் சடைகளை முடித்துக் கொண்டு, பெரிய வேதங்களை ஓதிக்கொண்டு, சூரியப் பிரகாசம் போன்ற சமதக்கினி பர்வதராஜனிடம் வருகிற விதம் காண்க!"

## ஜமதக்கினி ரிஷி வருகிற தரு

### பல்லவி

282. ஜமதக்கினி ரிஷி வந்தனர் - மாதினைநாடி
ஜமதக்கினி ரிஷி வந்தனர் !

### அனுபல்லவி

ஜமதக்கினி ரிஷிவந்தார் சிந்தை மிகமகிழ்ந்து
தமியாக பரமனைச் சார்வதா பூசிக்கும் - ஜம

செஞ்சடை சிரமுடித்து - பஞ்சாட்சரம்
தீர்க்கமுடன் படித்து - பக்தியுடன்
தஞ்சமென் றவரைத்
தற்காத்து இரட்சிக்கும்

பஞ்சாக்கினி நாப்பண்

பரிந்து தவஞ்செய்யும் - ஜம

## சரணங்கள்

வேத நான்கு முணர்ந்தோன் - சர்வாங்கமும்

வெண்ணீறு நனிபு ரிந்தோன் - வைகுந்த

நாதன் பரமனை நாள்தோறும் மலர்தொட்டுப்

போதவே பூசிக்கும் ஆதாரம் பெருகிய - ஜம

இடையில் புலித்தோல் அணிந்து - ஆவலுடனே

இசைபஞ் சாட்சரம் நினைந்து - இளம்வெள்ளை

விடையேறும் பரமனை

விரும்பி மிகத்தொழுது

தடையின்றி மலையிராசன்

சுதையைக் கேட்க - ஜம

# பர்வதராஜன் ஜமதக்கினிக்குப் போற்றி

## விருத்தம்

283. தற்பரன் பதத்தை நாடி

தவமது நாளும் செய்யும்

அற்புதம் மிகுந்த எங்கள்

ஐயனே நின்றாள் போற்றி !

சொற்பெரும் புகழ்பெற் றோங்கு

தூயமா முனியே போற்றி !

நற்பெரும் ஆச னத்தில்

நலமுடன் இருப்பீர் ஐயா !

### வசனம்

"தற்பரனாகிய கடவுளை நாடி, தவங்களைச் சதாகாலமுஞ் செய்யும் அதிசய மிகுந்த எங்கள் அய்யனாகிய ஜமதக்கினி முனிவரே, சரணம் ! சொல்லப்பட்ட கீர்த்தியிலே மிகுந்த பரிசுத்த முள்ள முனிவரே சரணம், சரணம் ! பெரிதான இந்த ஆசனத்தில் எழுந்தருளி யிருமையா, மகாரிஷியே !"

## ஜமதக்கினி பர்வத ராஜனுக்குச் சொல்

### வாழி

284. பரமனுக் குமையை முன்னாள்

பரிவொடு பாணிக் கிராணம்

விரவுடன் செய்து தந்த

மேதகு நிருபா வாழி

உரமுறும் உனது செங்கோல்

ஓங்கஉன் தேவி கூடி

திறமுற எந்த நாளும்

சிறப்புற வாழி வாழி!

### வசனம்

''பரமசிவனுக்குப் பார்வதியை ஆதி நாளையில் அன்புடனே திருக்கல்யாணம் செய்து கொடுத்த மேன்மையுள்ள அரசனே! வாழி! வலிமையுள்ள உன்னுடைய செங்கோல் உயர்வுளதாயிருந்து உன்னுடைய தேவியாகிய மேனாதேவியுடன் சேர்ந்து நிலை பொருந்த எப்பொழுதும் சிறப்பு உண்டாகி, வாழி! வாழக் கடவது!

## ஜமதக்கினி பர்வத ராஜனுக்குச் சொல்

### கலிப்பா

285. ஆழி வேந்தன் அருஞ்சுதை தன்னைநீ
தாழ்வி லாமல் மணந்த தலைவனே
சூழ்புவி மெச்சு நின்புத்திரி யையாம்
வாழ்வு மன்னு மணஞ்செய்ய வந்தனன்!

### வசனம்

''சமுத்திர ராஜனாகிய வருண பகவான் குமாரத்தியை மணஞ்செய்த பர்வதராஜனே, நான் உம்மிட குமாரத்தி யாகிய இரேணுகா தேவியைக் கலியாணஞ் செய்ய வந்தேன் ராசனே!''

## பர்வதராசன் மந்திரிக்குச் சொல்கிற

### பரணி

286. சீருறும் அமைச்சே கேளாய்

பாருறு மறையோர் தம்மில்

பேருறும் வியாச ரையிந்

நேரமே அழைத்து வாராய்!

### வசனம்

''சிறப்புப் பொருந்திய மந்திரியே, கேளும்! உலகத்திலே யிருக்கிற பிராமணர்களில்விப்பிரர் என்னும் பேருடைய புரோகிதரை இப்பொழுதே அழைத்துவரச் சொல்லும்!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்கிற

### பரணி

287. கட்டியக் காரா

இட்ட வேதியரை

பொட்டென அழைத்துச்

சட்டமாய் வாராய்!

### வசனம்

"அகோ வாரும் பிள்ளாய், கட்டியக்காரா! நமக்கு இஷ்டமாகிய வேதியராகிய புரோகிதரைச் சீக்கிரமாக அழைத்துக்கொண்டு, இந்தச் சபைக்கு வருவாய் கட்டியக்காரா!"

## கட்டியன் மந்திரிக்குச் சொல்

288. மதிமந்திரி மாரே
வழுத்திய வண்ணம்
துதிபுரோ கிதரைத்
துரிதமாய் அழைப்பேன்!

### வசனம்

"மதியூகிகளாகிய மந்திரிமாரே, புகழும் புரோகிதரை, அதிசீக்கிரமாய்ச் சபைக்கு அழைத்துக் கொண்டு வருகிறேன் ஐயா!"

## கட்டியக்காரன், புரோகிதருக்குச் சொல்

### பரணி

289. சோதிடம் தேர்ந்த
தூய புரோகிதரே
பூதர வரசனிப்
போதுமை அழைத்தார்!

### வசனம்

''சோதிட சாஸ்திரங்களில் தேர்ந்தவராகிய புரோகிதரே! பூதரமாகிய மலைகளுக்கு அரசன் இப்பொழுது உம்மை அழைத்து வரும்படி ஆக்கிஞாபித்தார்! வாரும் புரோகிதரே!''

## புரோகிதர் பர்வத ராஜனிடம் வருகிற

### விருத்தம்

290. உலகத்தில் உள்ளோர்க்(கு) எல்லாம்
உயர்ந்திடும் குலத்தோர் ஆன
நலமிகு வேதி யன்தான்
நன்மைசேர் கலையின் உள்ள
பலன்களைப் பார்த்துச் சொல்லப்
பர்வத ராசன் மிக்க
இலகுறும் கொலுவி னிற்கு
இன்பமாய் வருகின் றாரே!

### வசனம்

''உலகத்திலுள்ள பிரம்ம, க்ஷத்திரி, வைசிய, சூத்திர ரென்று சொல்லப் பட்ட நான்கு குலத்திலும் உயர்ந்த பிராமணர் மரபினரான நலமுள்ள வேதியன் நன்மையான பல சோதிட சாஸ்திரத்திலுள்ள பலன்களை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுகிறதற்குப் பர்வதராசன் வீற்றிருக்கின்ற பிரகாசமுள்ள கொலுவிற்கு வருகிற விதம் காண்க!''

# புரோகிதர் வருகிற தரு

## பல்லவி

*இராகம் : பல்லவி*

291. வேதியர் வந்தனரே - வேடிக்கையாய்
வேதியர் வந்தனரே !

## அனுபல்லவி

வேத சாஸ்திரங்கள்
சோதனைசெய் தரசர்க்கு
ஓத வல்லவரான
சாதியிலே உயர்ந்த - வேதி

## சரணங்கள்

நாள்வாரம் திதியோகம்
நல்ல இலக்கணமும்
நீள்பஞ் சகத்தின்
நிலையைப் பார்த்துரைக்கும் - வேதி

எண்பது கோள்கட்கு
உச்சநீச மாட்சி
அன்புடன் பகைநட்பை
அறிந்தெவர்க் கும்புகல் - வேதி

ஓதல்ஓது வித்தல்

ஒடுவேட்டல் வேட்பித்தல்

ஈதல் ஏற்றலுடன்

இசைந்தசெந் தீவளர்க்கும் - வேதி

பட்டஞ்சி வேஷ்டியைப்

பாங்குடனே கட்டி

இட்டமுடன் குல்லாய்

இயலாய்ச் சிரத்திட்டு - வேதி

மார்பினில் சந்தனம்

வாசம் கமழவே

வார்திகழ் பூணுநூல்

வால்நிறம் இலங்கவே - வேதி

## பர்வத ராஜன் புரோகிதருக்குச் சொல்

## விருத்தம்

292. முப்புரி நூல ணிந்த

முதுமறை யோரே போற்றி

ஒப்பனை என்மகட் கிங்கு

உயர்சம தக்கி னிக்கும்

செப்பும்நீ பொருத்தம் ராசி

சீருறப் பார்த்து நல்ல

தப்பிலா மணமி யற்ற

தகைமுகூர்த் தமும்சொல் வீரே!

## வசனம்

''முப்புரி நூலாகிய பூணுநூல் தறித்த பழைய வேதங்க ளறிந்த பிராமணரே சரணம்! அலங்காரமுள்ள என் குமாரத்தியாகிய இரேணுகைக்கும் ஜமதக்கினி மகரிஷிக்கும் பொருத்தம் பார்த்து, நன்றாய்க் கல்யாணம் செய்து கொடுக்க முகூர்த்தம் பார்த்துக் சொல்ல வேணும், சோதிடந் தேர்ந்த புரோகிதரே!''

# புரோகிதர் பர்வத ராஜனுக்குச் சொல்கிற

## விருத்தம்

293. மருத்துவ முனித வத்தில்

மகிழுற உதித்தே யிந்த

பெருத்திரு நிஷத நாட்டைப்

பிரியாமாய் ஆளும் கோவே

தரித்திரும் உந்தன் செல்வி

தாழ்விலா எந்த நாளும்

கருத்துயர்ந் தன்பாய் இந்தக்

காசினி தனிலே வாழ்வாள்!

### வசனம்

"மருந்துவ மகாமுனிவர் செய்த தவப்பலத்தினாலே உற்பவித்து, இந்தப் பெருத்த நிஷத நாட்டை இன்புடனே அரசு செய்யும் அரசனே! உமது குமாரத்தியாகிய இரேணுகைக்கு ஒரு குறைவும் இல்லாமல் அநேக உயர்ந்த கருத்துடன் இந்த உலகத்திலே வாழ்ந்து இருப்பாள் இராஜனே!"

## புரோகிதர் முகூர்த்தம் சொல்கிற தரு

### பல்லவி

இராகம்: சௌராஷ்டகம்

294. பார்த்துச் சொல்லுவேன் நானே - முகூர்த்தத்தைப்
பார்த்துச் சொல்லுவேன் நானே!

### அனுபல்லவி

பார்த்தந்தப் பைந்தொடி
பாவை இரேணுகைக்கும்
படர்ந்த கானிலேதவம்
பண்ணும் செமதக்கினிக்கும் - பார்த்து

### சரணங்கள்

திருவோணம் சுவாதியும்
தேவகணம் அதுதான்

மருவும் இரண்டுகணம்

வாய்ந்திருக் கிறதென்று - பார்த்து

மேடமதி தேதிஏழில்

வெள்ளிக் கிழமை

தேடரும் கடகத்தில்

செய்யலாம் வதுவையும் - பார்த்து

வாரம் திதியோகம்

வரும்பஞ்சகம் பார்த்து

சீருடன் நின்றது

சென்ம நட்சத்திரம் - பார்த்து

ஒருகுறையும் இல்லாது

ஓங்கிவாழும் நாளில்

அருமையாக எவரும்

''அரிதுஅரிது'' என்றோத - பார்த்து

## புரோகிதர், பர்வதராசனுக்குச் சொல்

### விருத்தம்

295. பருவத அரசே கேளும்

பார்த்ததில் மேஷ மாதம்

திறமுறு சுக்கிர வாரம்

தேர்ந்தது கடகம் தன்னில்

ஒருகுறை இல்லை மாதுக்(கு)
உகந்தநாள் வதுவை செய்ய
இருமன தாயெண் ணாதே
இறைவனே செலவு தாரும் !

**வசனம்**

''கேளும் பர்வத ராஜனே ! நீர் சொன்னபிரகாரம் முகூர்த்தம் பார்த்ததில், சித்திரை மாதம் ஏழாந்தேதி சுக்கிரவாரம் கடக லக்கினம் ஜமதக்கினிக்கும் இரேணுகாதேவிக்கும் விவாகஞ் செய்தால் ஒரு குறைவு மில்லாமல், சிரஞ்சீவியாய் வாழ்ந்திருப் பார்கள்; நாம் போகவேண்டும்; செலவு கொடுத்தனுப்பும் இராஜனே !

## பர்வத ராஜன் மந்திரிக்குச் சொல்

**பரணி**

296. மந்திரி கேளும் வந்த வேதியருக்
கந்தமாம் பொருள்கள் அளித்தனுப் புவையே !

**வசனம்**

''கேளும் மதிமந்திரிமாரே ! முகூர்த்தம் பார்க்க வந்த வேதியராகிய புரோகிதருக்குத் திரவியங்கள் கொடுத்தனுப்பும் மந்திரி !''

## மந்திரி வசனம்

"அப்படியே கொடுத்தனுப்புகிறேன், எனது ஆண்டவராகிய பர்வத ராஜனே!"

## மந்திரி கட்டியக்காரனுக்குச் சொல்

### பரணி

297. கச்சு கட்டிய கட்டியக் காரா
மெச்சும் வேதியர்க்கு வேணபொன் நல்கும்!

(வேண - வேண்டிய)

### வசனம்

"ஆரடா அடா, கட்டியக்காரா! நமது மகாராஜன் உத்தரவுப்படிக்குப் புரோகிதருக்கு வேண்டிய திரவியங் கொடுத்து அனுப்பிவையும் பிள்ளாய், கட்டியா!"

## கட்டியன் வசனம்

"அந்தப்படியே நான் செய்கிறேன் சுவாமி!"

# பர்வதராஜன், மந்திரிகளுக்குச் சொல்

## விருத்தம்

298. மந்திரி கேளாய் மாது
மணத்துக்கு மன்னர் மன்னர்
இந்திர ராஜன் தேவர்
இருடிகள் மூவ ரோடு
சந்திரன் கதிரோன் எல்லாச்
சாதியும் வருக என்று
முந்தியே நிருபம் விட்டு
முழுதுமே அலங்க ரிப்பாய் !

## வசனம்

''கேளுங்கள், மதிமந்திரி மார்களே ! என் குமாரத்தியாகிய இரேணுகை திருக்கல்யாணத்துக்கு, இராஜராஜாக்கள், தேவேந்திரன், தேவர்கள், இருடிகளாகிய முனிவர்கள், பிரமதேவர், மகாவிஷ்ணு, பரமசிவன், சந்திரன், சூரியன், உலகத்திலுள்ள பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரும் வருக வென்று முன்னிட்டுக் கலியாண ஓலையை எழுதித் தெரிவித்து, பட்டண மெங்கும் அலங்காரம் செய்து, பந்தல் போட்டு வைப்பாய் மந்திரிமார்களே !''

## மந்திரிகள், பர்வதராஜனுக்குச் சொல்

### பரணி

299. வரையினுக்கு கரசே
வழுத்திய படிக்கு
பரிவுடன் நிருபம்
பந்தலும் அமைப்பேன் !

### வசனம்

''பர்வத ராஜனே, உமது உத்தரவுப்படிக்கு, அன்புடனே எவ்விடங்களுக்கும் நிருபமாகிய கல்யாண ஓலை எழுதியனுப்பிப் பட்டணம் முழுவதும் பந்தல் அமைத்து வைக்கிறேன் !''

## மந்திரி, கட்டியக்காரனுக்குச் சொல்

### பரணி

300. அவிரணி கட்டியா அமைந்த பந்தலிடச்செய்
கவினுறு இராயசக் காரனை அழைப்பாய் !

### வசனம்

''பிரகாசம் பொருந்திய ஆபரணம் தரித்த கட்டியக்காரா ! அழகு பொருந்திய ராயசக் காரனை அழைத்து வாரும் பிள்ளாய் ! அலங்காரமாகப் பந்தல் போடும்படி திட்டம் செய்யவும்''

## கட்டியன் வசனம்

''அப்படியே செய்கிறேன் மந்திரிமாரே !''

## கட்டியக்காரன் இராயசனுக்குச் சொல்

### பரணி

301. இனிமைய தாக இயலுள வேஷ்டியைக்
கனமதான மருங்கில் கட்டிக் கொண்டு
பணியுள சந்தனம் பலக்கப் பூசியே
புனித ராயசன் பூங்கொலு வந்தனன் !

### வசனம்

''இந்தப் பிரகாரமாக இஷ்டத்துடன் வேஷ்டியைப் பாரமாக இடையிலே தரித்துக் கொண்டு, குளிர்ச்சி பொருந்திய சந்தனங்களை மார்பிலும் தோளிலும் பூசிப், புனிதமான பரிசுத்த குணமுள்ள இராயசக்காரன் அழகிய கொலுவிற்கு வருகிற விதம் காண்க !''

## இராயசன் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

302. இராயசக் காரன் வந்தான் - இராசன் சபைக்கு
இராயசக் காரன் வந்தான் !

## அனுபல்லவி

பராவிய உலகினில் பருத்தகீர்த்தி கெம்பீரன்
பண்புள்ள கல்வியில் படர்ந்த உதாரமாரன் - இராயசக்

## சரணங்கள்

ஊர்மீதில் வேறொருவர் விழுந்தா லுந்தான்
ஒருகாசுந் தன்பேரில் விழாதென் றேயுரை - இரா

கலமேவிய நன்னகரத்திலே மிகுகொள்ளை
கருமென்றனக் கென்றுகனி வுடன்சொல்லும் - இரா
சிறுநுதலின் மிளிரத் திருநாமம் தன்னையிட்டுச்
சிறந்த பட்டஞ்சி வஸ்திரம் புயத்தில்விட்டு - இரா

ஆதித்தன் உதித்தெழுவது தானே கிழக்கு
அடைவுடன் யானெழுதுவதே கணக்கு என்று - இரா

# இராயசக்காரன் அரசனுக்குச் சொல்

## விருத்தம்

303. அகன்றபூ தலத்துக்(கு) எல்லாம்
அண்ணலென் றேவி ளங்கும்
புகலரும் பராக்கி ரமங்கள்
பொருந்திய முதல்வா போற்றி
நிகமணி மாடம் வீறு
நிஷமா புரியை அன்பாய்

தகைமையாய் அரசு செய்யும்
தலைவனே போற்றி போற்றி !

### வசனம்

"பெரிய மலைகளுக் கெல்லாம் இராஜனாகப் பிரகாசிக்கும் யாவரும் சொல்லுவதற்கு அரிய பராக்கிரமம் படைத்த முதல்வனே போற்றி ! ஒளியுள்ள ரத்தினங்கள் பதித்த மாளிகை பெருமையாக இருக்கிற நிஷதப் பட்டணத்தை அன்பாகப் பெருமையுடன் அரசு செய்யப்பட்ட இராஜனே, போற்றி போற்றி !"

## பர்வத ராஜன் இராயசக் காரனுக்குச் சொல்

### விருத்தம்

304. இணையிலா தெந்த நாளும்
இராயசம் செய்து வாழும்
திணியுள புயனே எந்தன்
செல்விஇ ரேணு கைக்கு
மணஞ்செய நிச்ச யித்த
வாரநீ தெரிந்து கொண்டு
துணிவுடன் திருமு கங்கள்
துரிதமாய் எழுது வாயே !

## வசனம்

''உலகத்திலே ஒருவரும் சமானமில்லாமல் சதாகாலமும் இராயசத் தொழில்களைச் செய்து வாழும்படியான பலம் பொருந்திய, புயமுள்ள கணித வல்லவனே! எனது குமாரத்தியாகிய இரேணுகைக்குத் திருக்கல்யாணம் செய்ய நிச்சயஞ் செய்த முகூர்த்தத்தினைத் தெரிந்துகொண்டு, கல்யாண ஓலை சீக்கிரமாய் எழுதும் பிள்ளாய், இராயசம்!''

## இராயசக்காரன் வசனம்

''அப்படியே எழுதுகிறேன் பர்வத ராஜனே!''

## இராயசன் ஓலையெழுதி, மஞ்சன் கால்லிட்டு, வாசிக்கிற திருமணப் பத்திரிகை விவரம்

''அக்ஷய வருஷம் மேஷ மாசம், ஏழாந்தேதி, சுக்கிர வாரம், பஞ்சமி திதி, திருவோண நட்சத்திரம் உதயமாய், மூன்றரை நாழிகைக்கு மேல், ஒன்பதேகால் நாழிகைக்குள், ரிஷப லக்கினத்தில், பர்வதராஜன் குமாரத்தி இரேணுகைக்கும் ஜமதக்கினிக்கும் பாணிக்கிரண முகூர்த்தம் நிஷதப் பட்டணத்தில் நடக்கிறது. சகலமானவரும் வந்து முகூர்த்தத்தைச் சிறப்பாய் நடத்த வேண்டியது!

இங்ஙனம் பர்வதராஜன்''

# இராயசக்காரன், கட்டியனுக்குச் சொல்

## பரணி

305. தீர்கட் டியனே திருமண ஓலையை
வாரமாய்த் தூதர்பால் வழங்கியே அனுப்பும் !

## வசனம்

''தைரியசாலியாகிய கட்டியக்காரா ! நான் சுருள்போட்டுக் கொடுத்த கல்யாண ஓலையை அன்புடனே தூதரிடத்தில் கொடுத்து அனுப்பும் பிள்ளாய், கட்டியக்காரா !''

## கட்டியன் வசனம்

''அப்படியே அனுப்புகிறேனையா !''

# கட்டியன் சொல்

## நிலைமண்டில ஆசிரியப்பா

306. திருமண ஓலை செகமெலாம் அனுப்பி
மருவிய நான்கு வருணர்மா முனிவர்
சுரனிந் திரனரி சோமனோ டேபலர்
திரிமூர்த் திகளும் சிறப்புடன் வந்தார் !

### வசனம்

"இந்தப் பிரகாரமாக இரேணுகையின் கல்யாண ஓலை அனுப்பின மாத்திரத்தில் அதைப்பார்த்த நான்கு வருணராகிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பெருமை பொருந்திய முனிவர்கள், தேவர்கள், இந்திரன், சூரியன், சந்திரன் முதலிய கிரகங்களுடன் இன்னம் அநேகரும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளும் சிறப்புடனே திருக்கல்யாணத்துக்கு வந்தாரென்று அறிக !"

## மந்திரி கட்டியக்காரனுக்குச் சொல்

### விருத்தம்

307. கட்டியக் காரா கேளாய்
காவலன் மனைக்குள் சென்று
வட்டமா மதிமு கத்து
மாதுரே ணுகைக்கு நல்ல
திட்டமாய் அலங்கா ரங்கள்
செய்துதா திகளும் சூழ
தட்டிலா தழைபச் சைபந்
தற்குளே வருக தானே !

### வசனம்

"ஆரடா, அட, கட்டியக் காரா ! நமது மகராஜன் அரண்மனைக்குள்ளே சென்று வட்டமாகிய சந்திரனைப் போன்ற முகத்தினையுடைய பெண்ணாகிய இரேணுகைக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை சர்வாபரண அலங்காரம் செய்து, தாதிப் பெண்கள் பக்கங்களில் சூழ, குற்றம் இல்லாமல் அழைத்து வருவாய், இந்தப் பச்சைப் பந்தற்குள்ளே வரும்படிக்கு, கட்டியா !"

## கட்டியன் வசனம்

"அப்படியே அழைத்துக் கொண்டு வருகிறேன், எனது ஆண்டவராகிய கர்த்தனே !"

## கட்டியன் மேனாதேவிக்குச் சொல்

### பரணி

308. அம்மணி உந்தன்
அரும்புத்திரியைச்
செம்மணியாய் அலங்காரம்
செய்தனுப்பும் !

### வசனம்

"கேளும் எனது அன்னையாகிய மேனா தேவியே ! உமது புத்திரியாகிய இரேணுகை யம்மாளை இரத்தினாபரண அலங்காரஞ் செய்து, கல்யாணப் பந்தலுக்கு இட்டு வாரும் அம்மணி !"

## மேனா தேவி வசனம்

"அப்படியே அழைத்து வருகிறேன், கட்டியக் காரா!"

## இரேணுகா தேவி வருகிற தரு

இராகம் : கலியாணி

309. முத்தினாற் பதக்கம் பூண்டு
முன்கையில் வளையல் மின்ன
சித்திர மான சேலை
சிறுத்ததோர் இடையில் கட்டி
பத்தியாய்ப் புற்றில் வந்த
பாவைரே ணுகைதன் னோடு
உத்தம குணத்துத் தாதி
உடன்வர வருகின் றாளே!

### வசனம்

"அகோ தெப்படி யென்றால், முத்துக்கள் பதித்த பதக்கங்களணிந்து, முன் கையில் பொன் வளையல்கள் பிரகாசிக்க, அழகாகிய சரிகைச் சேலையைச் சிறுத்த இடையிலே தரித்து, இன்பத்துடன் புற்றிலே யவதாரம் செய்த பாவையாகிய இரேணுகையும், சிரேஷ்டமான குணம் பொருந்திய தோழிகள் சூழ்ந்துகொண்டு வர, மணப்பந்தலுக்கு வருகிற விதம்!"

# இரேணுகா தேவி வருகிற தரு

*இராகம் : பந்துவராளி*

## பல்லவி

310. வந்தாள் இரேணுகாதேவி - தந்தையின் முன்
வந்தாள் இரேணுகாதேவி !

## அநுபல்லவி

முந்தவால் மீகந்தன்னில்
மொழியும் சேஷனாலப்போ
பந்தாய் உதித்தண்ணல்
பைந்தொடி ஆகவிப்போ ! - வந்
நந்தான கழுத்துற்ற
நவமணிப் பூண்மின்ன
செந்தா மரைமுகத்தில்
திலதம் பளபளென்ன - வந்

## சரணங்கள்

சித்திரம் விண்ணுல கத்துள மாதர்கள்
சித்தமதிற் பிரமித்து மயங்கெழில் - வந்
கொஞ்சும் கிளியைப் போன்ற
குரலினையே உடையாள் !

தஞ்சம் என்று அம்சமும்

தாழும் நன்மை நடையாள் !

தார்குழலின் அணிசடை

பில்லை மாமணி

ஏர்பெறும் சூரியன்

எனப்பொன் சிகாமணி - வந்

தண்டை சிலம்பு

தாளில் சமுத்திர மாப்பென்ன

அண்டி அமலைசெய

அமைவுள தாதிதுன்ன - வந்

கந்தம்கமழ களப

கஸ்தூரியும் புனித

சந்தனங்களும் மார்பில்

தரித்துமகா உன்னதம்

தங்கிய வம்பிறு குந்தனம் அசைய

செங்கையில் கடகம் விங்கியே அசைய - வந்

# இரேணுகை பர்வத ராஜனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

311. எந்தனைப் பெற்றெடுத்தே

இயலுடன் பாது காக்கும்

தந்தையே உமது செய்ய

தாளிணைக் கமலம் போற்றி

சிந்தையும் மகிழ்ச்சி கூர்ந்து

சீக்கிர மாக என்னை

அந்தமாய் அழைத்த சேதி

ஆதர மாய்ச்சொல் வீரே !

## வசனம்

''கேளும், என்னைப் பெற்றெடுத்துப் பண்புடனே சவரட்சணை செய்து வருகின்ற பிதாவே, உமது செந்தாமரைக் கமலம் போன்ற இரண்டு பாதமே சரணம் ! தேவரீர் மனது மகிழ்ச்சியுடன் சீக்கிரம் அடியேனை வரவழைத்த சமாசாரத்தை அன்புடனே சொல்ல வேணும் பிதாவே !''

## பர்வத ராஜன் ரேணுகைக்குச் சொல்

## விருத்தம்

312. சந்திர வதனம் முல்லை

தந்தம்வில் புருவம் நீரார்

கந்தரப் பரிசா ரம்பூங்

கமுகென மிடறும் வாய்ந்த

சுந்தர மங்கை யேநீ

தொல்லுல கினில்நீ டுழி

அந்தர இமையோர் போல

அழியாது வாழி வாழி !

### வசனம்

"பூரணச் சந்திரனைப் போலும் முகமும், முல்லையரும்பு போன்ற தந்த வரிசையும், வில்லைப் போல் புருவமும், நீருண்ட மேகத்தைப் போன்ற கூந்தலும், அழகிய பாக்கு மரம் போன்ற கழுத்தும் அமைந்த அழகினை உடைய எனது குமாரத்தியே ! இந்த உலகத்தில் நீ நீடூழிகாலம் தேவர்களைப்போல் எப்போதும் வாழி, வாழி, இரேணுகையே !".

## இதுவும் பர்வதராஜன் ரேணுகைக்குச் சொல்

### பரணி

313. தெரிவையே மறையோர்

திணைஜம தக்கினிக்(கு)

அருமை மன்றல் செய்ய

அழைத்தனன் உனையே !

### வசனம்

"கேளும், எனது குமாரத்தி யாகிய ரேணுகையே ! பிரம்மகுலத்திற் பிறந்த ஜமதக்கினிக்கு, உன்னை விவாகஞ் செய்து கொடுக்க அழைத்தேன், ரேணுகையே !"

# பர்வத ராஜன் மந்திரிக்குச் சொல்

## கலி

314. புத்தியில் அதிகம்
 பொருந்திய மந்திரி
இத்தலம் யாவும்
 எழில்அலங் காரம்
சுத்தியாய்ச் செய்யச்
 சொல்சாம் புவனை
கத்திய பாறையுடன்
 கடிதினில் வரச்செய் !

## வசனம்

''கேளும், அறிவிலே மிகுந்த மந்திரி ! இந்த நகரமெல்லாம் செவ்வையாய்ப் பந்தலிட்டு அலங்காரஞ் செய்யும்படி திட்டம் செய்து, தமுக்குப் போடுவதற்குச் சாம்புவனைச் சீக்கிரமாய் வாத்தியத்துடன் வரச்செய்யும் மந்திரி !''

## மந்திரி வசனம்

''அப்படியே வரவழைக்கிறேன், எனது ஆண்டவராகிய பர்வத ராஜனே !''

## மந்திரி கட்டியனுக்குச் சொல்வது

### வெண்பா

315. சட்டமுட னேவாயில் சார்ந்திருக்கும் கட்டியனே
பொட்டெனவே ஓடியூர் புறமிருக்கும் - வெட்டியனைப்
பாறையுட னேஇந்தப் பட்டணங்கள் எங்கும்
அறையவே ஓடியழைப் பாய் !

### வசனம்

''ஆரடா, அடா கொலுவாசல் காத்திருக்கும் கட்டியக்காரா ! இந்தப் பட்டண முழுதும் அலங்காரம் செய்யத் திட்டம் பண்ணுவதற்கு, மேளத்துடன் சாம்புவனை யழைத்துக்கொண்டு வாடா, கட்டியா !''

## கட்டியன் மந்திரிக்குச் சொல்

### வசனம்

''அப்படியே அழைத்துக் கொண்டு வருகின்றேன், மந்திரிமாரே !''

## கட்டியக்காரன், சாம்புவனுக்குச் சொல்

### பரணி

316. பட்டணம் முழுதும்

பறையறை விக்கும்

வெட்டிய னேநீ

வேகமாய் வருவாய் !

### வசனம்

"ஆரடா, அடா வீரசம்புவா ! நகரங்களுக்குப் பறையறைவிக்கும் கருவியுடன்வாடா, சம்புவா !"

## வீரசாம்புவன் வசனம்

"அப்படியே நான் வருகிறேன் ஐயா !"

## வீரசாம்புவன் வருகிற பொது

### விருத்தம்

*இராகம் : தோடி*

317. மேகத்தைப் பழித்த தேகம்

மேருவை நிகர்த்த வாகு

தீகதிர் சொலித்த கண்கள்

செம்பொட்டு முகத்தில் இட்டு

நாகத்தைப் போலே நீண்ட
நல்தடி கோணி கொண்டு
வாகையாய் அடிக்கும் மேள
வாச்சியத் துடனே வாரான் !

### வசனம்

"அகோ தெப்படி யென்றால், மேகத்தைப் பார்க்கிலு மதிகமாகக் கறுத்த சரீரமும், மலைகளை நிகர்த்த இரண்டு புயங்களும், அக்கினியைப் போலச் சிவந்த கண்களும், செம்மையான திலகம் முகத்திலிட்டுப் பாம்புபோல நீண்ட தடியும், கோணியும், நன்மையான பறை முழக்கம் செய்யும் தோற்கருவியும் கையிற் பிடித்து, வீரசாம்புவன் வருகிற விதம் !"

## வீரசாம்புவன் வருகிற தரு

*இராகம் : கலியாணி*

### பல்லவி

318. சாம்புவன் வந்தானே - வீர
சாம்புவன் வந்தானே !

### அனுபல்லவி

சாம்புவன் வந்தான்
தோம்பு றேனென்று

தம்புகழ் தெரியவே

அதும்பு றேனென்று - சாம்பு

ஆண்டைகளே கேளீர் - நான்ஒரு

அடையாளம் சொல்லுகிறேன்

தாண்டிய மாலிட சோதரியான

சத்தியும் பறையில் உதித்தவளே என்று - சாம்பு

**சரணங்கள்**

நாட்டில் ஆதியில்

நடந்த சேதியை

நவிலுவன் கேளும்

நாரணி பார்வதி !

கூட்டமாய் வந்த

குதிரைப் பாகனைக்

கூடிப் பெற்றது

குஞ்சரம் ஒன்று - சாம்பு

அண்டம் பிறந்தபோதும் - பாறையை

அண்டியே நானடித்தேன் !

அருமறைகள் பிறந்தபோதும் - பறையை

அன்றும் நானடித்தேன் ! - உலகு

உண்டோன் பிறந்த போதும் - பறையை

ஓடியே நானடித்தேன் !

மண்டையிலே மயிர்முளைத்த நாளுமே

பண்டைக் கதையிலும் பரவும் ஒருவன்நான் ! - சாம்பு

உலகம் பிழைப்பதும் என்னாலே - தேவர்

ஓங்கிப் பிழைப்பதும் என்னாலே - மோட்சம்

கொண்டு செழிப்பதும் என்னாலே - மிக்க

நிலையரிச் சந்திரனை

நீணிலம் தன்னிலே

விலைகொடுத்து வாங்கி

வேலைநடத்தும் கெட்டிச் - சாம்பு

## கட்டியக்காரன், மந்திரிக்குச் சொல்

### பரணி

319. கட்டளைப் படியே

பொட்டென ஏகி

வெட்டியான் தன்னை

இட்டுவந் தேனே !

### வசனம்

"கேளும், மந்திரிமாரே ! தேவரீர் ஆக்ஞாபித்த பிரகாரம் சீக்கிரமாகப் போய், வெட்டியானை இதோ அழைத்துக்கொண்டு வந்தேன், சுவாமி !"

# வீரசாம்புவன் அரசனுக்கும் மந்திரிக்கும் சொல்

## விருத்தம்

320. தும்புறே னாச வாண்டே
தொய்வுறேன் மந்தி யாண்டே
சம்புமா சவையி னில்லும்
சகலத்திர மான பேர்க்கும்
கொம்புறேன் தமக்கு என்னே
கொண்டுகுனு வைத்த சேதி
தம்பிடா வையே வாண்டே
ராசாவே நானுதும்புறேன் ஆண்டே !

## வசனம்

"ஆண்டே ராசாவே ! நானு தும்புறேன் ஆண்டே ! மந்தி தொய்வுறேன் ! சம்பமாகச் சபையில் நிக்கிற சணலத்திர எல்லா பேர்க்கும் கொம்புற்றேன் ! உங்களுக்கு மனசிலே என்ன கொண்டு என்னை வயத்திங்க? அந்தச் சமாசாரத்தைச் சொல்லுங்க சேஞ்சுடுறேன், சாமி !"

(தும்புறேன் - கும்பிடுகிறேன்; தொய்வுறேன் - தொழுகின்றேன்;
சணலத்திர - சகலத்திர; கொம்புற்றேன் - கும்பிடுகிறேன்;
வயத்திங்க - வரவழைத்தீங்க; சேஞ்சுடுறேன் - செய்துவிடுகிறேன்)

# மந்திரி, வீரசாம்புவனுக்குச் சொல்

## விருத்தம்

321. வீரசாம் புவனே கேளாய்
விளங்குமிந் நாட்டை ஆளும்
தீரனாம் பர்வ தேந்திரன்
செல்வியாம் இரேணு கைக்கும்
மாரனாம் சமதக் னிக்கும்
மணமது நாளை என்று
பாருளோர் அறிய இன்று
பறையது அடித்தி டாயே !

## வசனம்

''ஆரடா, அடா வீர சாம்புவனே ! பிரகாசமுள்ள இந்தத் தேசத்தை அரசாட்சி செய்யா நின்ற தீரனாகிய நமது மகாராஜன் குமாரத்தியாகிய இரேணுகைக்கும், மன்மதனைப் போன்ற அழகினையுடைய ஜமதக்கினிக்கும், திருக்கல்யாணம் நாளையென்று இந்த நிஷதபுரி முழுமையும் அலங்கிருதம் செய்து, முகூர்த்தத்திற்கு வரும்படிக்குப் பறை யடித்துத் திட்டம் செய்வாய் வீர சாம்புவனே !''

## வீரசாம்புவன் மந்திரிக்குச் சொல்

### பரணி

322. தேவரீர் எனக்குத்

திட்டம்செய் வண்ணம்

ஆவலாய்ச் செய்தே

அமைவுடன் வருவேன் !

### வசனம்

"கேளும் மந்திரிமாரே ! தேவரீர் ஆக்ஞாபித்த கட்டளைப்படிக்கு அன்புடன் செய்து சீக்கிரம் வந்து தெரிவிக்கிறேன், சுவாமி !"

## வீரசாம்புவன் தமுக்குப் போடும்போது சொல்லுகிற சந்த

### விருத்தம்

*இராகம் : மத்தியமாவதி*

323. பலமுள நிஷதபுரி ஆளும்

பார்வத ராஜன்தன் சுதைக்கும்

நலமுள ஜமதக்னி ரிஷிக்கும்

நடக்கும் நாளை கல்யாணம்

குலமுள கிரிநகர் தன்பதியில்

குடியிருக் குமனை வோரும்

தலமுதல் தெருவுந கர்முழுதும்

சலிதியாக அலங்க ரிப்பீர் !

### வசனம்

''கேட்டீரோ, கேட்டீரோ ! கேளுங்கள், கேளுங்கள் ! நிஷதப் பட்டணத்தை யரசு செய்யும் பர்வத ராஜன் குமாரத்தியாகிய இரேணுகாவுக்கும் சுபகரமான ஜமதக்கினிக்கும் நாளைய தினம் திருக்கல்யாணம் நடக்கிறபடியால், ஊரிலுள்ள யாவரும் அறியுங்கள் ! உற்ற தோரணங் கட்டுங்கள் ! தெரு, வீடு, வாசல் அலங்கிருதம் செய்யுங்கள் ! கேட்டீரோ, கேட்டீரோ !''

## கட்டியன் சொல்கின்றது

### எண்சீர்க் கழிநெடிலடில் விருத்தம்

324. இந்தவிதம் வீரசாம் புவனும் வந்து

இணையில்லா மேளத்தின் தொனியினாலே

அந்தநக நிறைபலர்க்கும் தெரியச் செய்தே

அலங்காரம் பட்டணங்கள் முழுதும் செய்தார்

விந்தையுடன் பலவரசர் திசையுள்ளோர்கள்

விருப்பமுடன் வந்து நிறைந்தார் அதன்பின்

முந்தைமறை வதிட்டமுனி வன்கலி யாண

முறைசெய்தார் அதற்குரிய நிறைசெய் தாரே !

### வசனம்

''இந்தப் பிரகாரம் வீர சாம்புவன் நாளையதினம் முகூர்த்தம் நடக்கிற தென்று, பறையை அறைவித்து, நிஷதப் பட்டணம் முழுதும் அலங்காரம் செய்த பிறகு, அநேக ராஜாக்கள், அஷ்ட திக்கில் உள்ளவர்கள் யாவரும் வந்து நிறைந்த பின்பு, பழைமையாகிய வேதங்களை அறிந்த வதிட்ட முனிவர் ரேணுகைக்கும் ஜமதக்கினிக்கும் கல்லியாண விதிகள் நடத்த வேண்டியதற்குள்ள மார்க்கங்களைக் கிரமப்படிக்கு நடத்த ஆரம்பிக்கிற விதம் காண்க !''

## ஜமதக்கினிக்கும் ரேணுகைக்கும் கல்யாணத் தரு

### பல்லவி

325. கலியாணம் இயற்றினரே - வதிஷ்டர்வந்து
கலியாணம் இயற்றினரே

### அநுபல்லவி

மலிமதி பர்வத மகாராசனைப் பார்த்து
மாமுனி ஜமதக்கினிக்கும் இரேணு கைக்கும் - கலி
வலிவாம் பவழக்கால் வரிசையாக நாட்டி
வனப்பாய்த் தென்னங்குலை வகையுடனே பூட்டி - கலி

## சரணங்கள்

சொலிக்கும் பந்தலினில் புஷ்பச்சரத்தை மாட்டி
சோதி மின்னலென்ன அலங்கிருதம் மிகக்காட்டி - கலி
கதலி கமுகுகள் காலுக்குக்கால் நாட்டி
கடைக்கோடி முதல்கோடி பந்தல் நீட்டி
மிதமில்லா லஸ்தர் குளேப்புகள் வால்செட்டு
விகசிதக் கண்ணாடி கட்டியிப் படியாக - கலி
கம்பங்களிற் பதுமை காணவே பந்தல்களுக்குத்
தங்கரேக்கு ஒட்டினார்கள் மிஞ்ச
உம்பருலகம் இதற்கிணை இல்லையென்று சொல்ல
உசிதபுஷ்பம் சவ்வாதத்தர் மிகமிஞ்ச - கலி
டங்கா மேளம் டவில் சிறக்கவே பஞ்ச
தாளம் பம்பை பேரிகை யோசையே மிஞ்ச
மங்கையர் ஆலத்தி மகிழ்ச்சியுடன் எடுக்க
மன்மதனும் இரதியும் என்றுபலர் படிக்க - கலி
வேதியர்கள் மறையோதி ஓமம் செய்ய
வித்தியாதரர் தூய விபுதர்களும் உய்ய
தீதிலாச் சித்தர்கள் கந்திருவர் கூட
சிறந்த கீதங்களைப் பாட, கொண்டாட ! - கலி
நடந்த விதங்களை ஞாலத்துள்ளோர் கண்டு
நன்றுநன்றெனக் கைகொட்டி ஆனந்தம் கொண்டு -
கலி

திடந்த வல்லவர் சிரஞ்சீவி யெனச்சொல்ல
தேசிக ரானவர் மீசரச் சுபம்கூற - கலி

## கட்டியன் சொல் எண்சீர்க் கழிநெடில்

### விருத்தம்

326. பொன்னுலகோர் மலர்தூவி ஆசி சொல்ல
புகழ்பெருகு நிஷதபுரி கோலம் வந்து
பன்னரிய அரசர்களும் உலகில் உள்ள
பலர்கண்டு மகிழ்வெய்த இரேணு கைக்கு
மின்னு ஜமதக்கினி மங்கலத்தைச் சூட்டி
மேன்மையுள அரசாணி வலமும் வந்து
மன்னுமனை தனிலமர்ந்து விருந்த ருந்தி
மகிழ்ந்திட்டார் பர்வதனைப் புகழ்ந்திட்டாரே !

### வசனம்

''இந்தப் பிரகாரமாகப் பொன்னுலக வாசிகளாகிய தேவர்கள், கற்பகப் புஷ்பங்களைச் சொரிந்து, ஆசீர்வாதம் சொல்ல, கீர்த்தி பெருகிற நிஷதப் பட்டணத்தை மணக்கோலம் வந்து, சொல்லுதற்கரிய அரசர்கள் உலகத்தில் உள்ளவர் பலருங் கண்டு, சந்தோஷம் அடைய, இரேணுகாவுக்கும் பிரகாசமுள்ள ஜமதக்கினிக்கும் திருக்கலியாணம் செய்து, மேன்மையுடனே அரசாணியைப் பிரதட்சணம் வந்து, அரண்மனையில் அமர்ந்து, 'சட்சுவை' பதார்த்தத்துடன் போசனம் செய்து, மகிழ்ச்சி யடைந்திருந்தார்; பர்வதராஜனைப் புகழ்ந்தார்கள் என்றறிக !''

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

*இராகம் : தோடி*

327. மாமனும் மனம்பூ ரித்து
மதம்பெருகி யானை சேனை
தாமத மில்லா மாற்றான்
தாதியும் அனுப்பத் தேரின்
மாமுனி வரர்கள் ஆசி
வழங்கஆ சிரமம் போக
பூமகள் போல மாது
பொருந்தினாள் திருந்தி னாளே !

## வசனம்

''அகோ தெப்படி யென்றால், மாமனாகிய பருவத ராஜன், மனது சந்தோஷித்து, மும்மதங்கள் பொழியப்பட்ட யானை சேனைகளும், பணி செய்தவற்குத் தோழிகளும் இன்னம் அநேகப் பொருள்களும் கொடுத்துப் பர்வதராஜன் அனுப்பி வைக்க, இரேணுகையானவள், மகத்தாகிய முனிவர்கள் ஆசீர்வதிக்க, ஜமதக்கினி வாசம் செய்யும் ஆசிரமத்திற்கு வருகின்ற விதம் !''

## ஜமதக்கினி முனிவர் இரேணுகைக்குச் சொல்

### கவி

328. பத்தின மாதே
பரந்தஇவ் வழியில்
எத்தனை விதங்கள்
இருக்கிற அதனை
மெத்தவும் உனக்கு
விளம்பிடுகின்றேன்
அத்தனை யும்கண்டுபிடி
அதிசயம் அடைவாய்!

### வசனம்

''கேளும்,எனது பத்தினியாகிய இரேணுகாதேவியே, நெடிதாகிய இந்த வழிகளில் பலபல மாதிரியான காரியங்களிருக்கின்றது;அதுகளை உனக்குத் தெரியும் படிக்குச் சொல்லிக்கொண்டு வருகிறேன்! அதுகளை யெல்லாம் பார்த்து, மனம் பூரித்துச் சந்தோஷ மடைவாய் பெண்ணே!''

## சமதக்கினி முன்வர் சொல் தரு

இராகம்: தோடி

### (பல்லவி)

329. பாராய் பெண்ணே பாராய் பெண்ணே
பர்வத ராஜன் கண்ணே!

## அனுபல்லவி

சீராகவே நமக்கு
நேராகத் தோன்றுது
சிறந்த கைலையிது
பரந்த மேருஅது! - பாராய்

## சரணங்கள்

இந்தக் கானத்தில்
இருந்தவைங் கிள்ளைகள்
எதிரில் ஆணும்பெண்ணும்
ஏதேதோ பேசுது! - பாராய்

வந்திடும் என்னுடன்
சுந்தர மங்கையே
மலிந்த சுகுணத்தை
வழங்கு மார்க்கமிது! - பாராய்

உற்ற ஆகாயத்தில்
உலவும் சுந்தரத்தை
உயர்ந்த மயில்நோக்கி
உள்ளம் மகிழ்வெய்தி
நற்றிற மாகவே
நடக்கிற சொகுசையும்
நயமுடன் ஆணும்
பெண்ணும் குலாவுதிதோ! - பாராய்

மஞ்சையளா வளர்ந்த பொழிலினில்

வாசஞ்செய்யும் கருங்கோகிலம் ஆணும்பெண்ணும்

இன்சொலுடனே குலாவுது நின்றுபார்

யானையும்பிடியும் புளருது வரையோரம் - பாராய்

(வரை - மலை)

பொன்புரை கொன்றைகள்

பூத்திருக் கின்றது

புகலும் மல்லிமுல்லை

பாரிசாதம் கோங்கும்

இன்புடன் பாராய்

தென்புடனோராய்

இலகுது ஆசிரமம்

இயலினை நீயுற்றுப் - பாராய்!

## இரேணுகாதேவி சொல்

### கொச்சகம்

*ராகம்: புன்னாகவராளி*

10. கொடியிடையாம் சேடியரே

கோதமனார் முனிராதர்

கடிகமழும் நந்தவனம்

காண்பாய்நற் சோலைகளும்

படிமீதில் விந்தையுறும்
பண்புடைய வாவியினில்
நெடியாம்பல் பங்கயமும்
நீலமல ரைப்பாராய்!

## வசனம்

''கேளும் மின்னற்கொடி போன்ற இடையினையுடைய தோழிகளே! கௌதம மகா ரிஷியினுடைய வாசனை வீசும் நந்தவனத்தைப் பார்! நல்ல பூஞ்சோலைகளும், உலகத்தில் வேடிக்கையுள்ள தடாகத்தில் நீட்சியுள்ள ஆம்பலும் தாமரை மலரும் நீலோற்பல மலரும் பார்! என்ன அலங்கார மாயிருக்கிறது! இதனுடைய அழகே அழகு தோழி!''

## கட்டியன் பொது வசனம்

''அகோதெப்படி' யென்றால், ஜமதக்கினி முனிவர் இரேணுகாதேவியைக் கல்யாணஞ்செய்துகொண்டு, தனக்கு மாமன் பர்வதராஜன் கொடுத்த சதுரங்கத் தலித்தோடும் ஆசிரமம் சேர்ந்த பிறகு, இரேணுகையானவள் ஆசிரமத்தைப் பார்த்துச் சொல்லுகிற விதம்!''

# இரேணுகாதேவி தோழிகளுக்குச் சொல்

## தரு

*இராகம்: சௌராஷ்டகம்*

### பல்லவி

331. வனப்பினைப் பார்தோழி-ஆசிரமமுறும்
வனப்பினைப் பார்தோழி !

### அனுபல்லவி

கனத்த சோலைசாலை
கற்பக வரிசையும்
இனித்த சாதிமல்லி
எழிலான பாரிசாதம் - வனப்

### சரணங்கள்

அனந்த முனிவர்வாழ்
அமைவுள்ள ஆசிரமம்
மனந்தனில் எண்ணி
வழுத்தவும் அரிதிந்த - வனப்

இந்தத் தடாகத்தில்
இருக்கும் அம்போருகம்

கந்தம் வரியாம்பல்

கைரவம் நெய்தலை

பஞ்சவர்ணக் கிளிகள்

கொஞ்சுது பாரதோ

இஞ்சொல் லாலேகுயில்

இசையாகக் கூவுதிதோ – வனப்

## இரேணுகை தோழிகளுக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

332. வனப்புடன் குணமு மிக்க

மாண்புறு தாதி கேளாய்

கனத்த பூங் காவனத்தில்

கடிந்தவர் மடவா ரோடு

இனிப்புடன் ஒன்றாய்க் கூடி

இருந்துபந் தடிப்போம் நீயும்!

மனத்துளே மகிழ்ந்துபந்தை

வாஞ்சையுற் றெடுத்து வாராய்!

### வசனம்

"அழகிலும் நல்ல குணத்திலும் பெருமையுள்ள தோழியே! இந்தப் பூங்காவனத்தில் மகாரிஷிகளுடைய பத்தினிமாருடன் இஷ்டத்துடன் ஒன்றாகச் சேர்ந்து, பந்து விளையாடலாம்! நீ ஆசிரமத்திற்குப் போய்ப் பொற்பந்தை எடுத்துக்கொண்டு வருவாய் தோழி!

# தோழி இரேணுகைக்குச் சொல்

## பரணி

333. எனது நாயகிஉன்
இஷ்டத்தின் படியே
இனியதோர் பந்தை
எடுத்திங்கு வருவேன்!

## வசனம்

''எனது எஜமானியாகிய இரேணுகாதேவியே! உனது இஷ்டம் பிரகாரம் யாவருக்கும் பிரியமுள்ள பந்தை எடுத்துக்கொண்டு இந்தக்ஷணமே வருகிறேன் நாயகியே!''

# கட்டியன் சொல் விருத்தம்

*இராகம் : மோகனம்*

334. திங்கள்நேர் முகமும் சாலத்
திருநுதல் கழைபோல் தோளும்
பைங்கிளி வசனம் உள்ள
பாவைபந் தடுத்து வந்து
துங்க நாயகி முன்வைக்கத்
தூயவள் அவளைப் பார்த்தே
இங்குறை மாதர்பால் சென்று
இவணழைத் திடச்சொன் னாளே!

### வசனம்

"பூரணச் சந்திரனைப் போன்ற முகமும் வில்லைப் போலும் அழகிய நெற்றியும், பச்சை மூங்கிலைப் போலத் திரண்ட தோளும், பச்சைக் கிளியைப் போல் வசனிக்கும் சொல்லும் உள்ள தோழியானவள், பந்தை எடுத்துக்கொண்டு வந்து, தன் எஜமானியான இரேணுகைமுன் வைக்க, இரேணுகை, தோழியைப் பார்த்து, நீ இந்த இடத்தில் வாசம் ரிஷி பத்தினிகளை இவ்விடம் அழைத்து வரும்படி திட்டம் செய்தா ளன்றறிக!"

## தோழி, ரிஷிபத்தினிகளை அழைக்கிற

### பரணி

335. கடிந்தவர்க் குரிய
கற்புப்பத் தினிகள்
மடந்தை நாயகியுமை
வரவழைத் திட்டாள்!

### வசனம்

"கடிந்தவர்களாகிய ரிஷிகளுக்கு உரிய பத்தினிமார்களே, எனது நாயகியாகிய ரேணுகாதேவி உங்களைப் பந்து விளையாட அழைத்துவரச் சொன்னாள்! சீக்கிரம் வாருங்கள், போவோம், மாதர்களே!"

## ரிஷிபத்தினிமார், தோழிக்குச் சொல்

### பரணி

336. மாதுநீ அழைத்த
வாக்கினிற் படியே
காதலாய் யாங்கள்
கடிதினில் வருவோம்!

### வசனம்

''கேளும், தோழியே! நீ அழைத்த பிரகாரம் ஆசையுடன் எல்லோரும் சீக்கிரத்தில் வருகிறோம் தோழியே!''

## ரிஷிபத்தினிகள் வருகிற

### விருத்தம்

*இராகம் :கலியாணி*

337. சுரியிலை வாரிப் பின்னி
சுடர்சடைப் பில்லை வேய்ந்து
வரிவிழிப் புறம்பை யிட்டு
மரைமுகக் குயங்க ளுக்குச்
கரியுறு கச்ச ணிந்து
சந்தனம் களபம் பூசி
இருடிபத் தினியாம் மாதர்
இரேணுகை இடம்வா ராரே!

(சரி - சரிகை)

## வசனம்

"இந்தப் பிரகாரம் கூந்தலை வாரிப் பின்னிக் கொண்டு, அதன் பேரில் பிரகாசம் பொருந்திய சடைப்பில்லை தரித்துக் கண்களின் புருவங்களுக்கு மையிட்டுத் தாமரை மொக்கையொத்த தனபாரங்களுக்குச் சரிகை யுள்ள ரவுக்கை யணிந்து, சந்தனம், களப, கஸ்தூரிக ளணிந்து, ரிஷிகளுடைய பத்தினிகள் இரேணுகையிடம் வருகிற விதம் காண்க!"

## ரிஷி பத்தினிகள் வருகிற தரு

*இராகம்: பந்துவராளி*

### பல்லவி

338. மாமுனி பத்தினிகள் வந்தார் - பொன்
மலர்க்கணை களைஎய்யும்
மதன்ரதி துதிசெய்யும்!

### அனுபல்லவி

தாம மணிந்தகுழல்
தையல் இரேணுகையும்
சேம முடனழைக்கச்
சேடியை விட்டனுப்ப - மா

### சரணங்கள்

தாளிணை தண்டை தரித்து - அதனொலி
சமுத்திரம் போலார்ப் பரித்து - வரவேயிடை
நீளொளி உரிசைத் துயில்
நிறம் பளபாளன்ன
நித்திலச் சுட்டியும்
முகத்தின் முன்னேமின்ன - மாமுனி

திலதப் பொட்டையும் வனைந்து - தனங்களுக்குச்
சிறந்த பட்டிகை புனைந்து
கலவை கஸ்தூரி சாந்தம்
கமழநனி பூசியே !
கனத்த பொழிலுறு மஞ்சுகத்தைப்
போலப் பேசியே ! - மாமுனி

சொல்லற் கருமின் னிடையும் - சுவேதநிறத்
தூவியன்னம் போல் நாடையும் - திரண்டமுத்து
முல்லை முருந்துறமும் மூரலும் - ஒளிகாட்டி
முளர்விழிப் புருவங்களிலே அஞ்சனம் தீட்டி! - மாமுனி

## இரேணுகை ரிஷிபத்தினிக்குச் சொல்

### விருத்தம்

339. அழகில்செந் திருவைப் போன்ற
அருந்தவர் பத்தினி மாரே

பழுதிலா உமது செய்ய
　　பங்கய மலர்த்தாள் போற்றி
எழிலியு மளவுஞ் சோலை
　　இலதிய இடத்தி லுள்ளம்
விழைந்து பந்தாட உம்மை
　　விரைவினில் அழைத்தேன் அம்மா!

**வசனம்**

''அழகினிலே மகாலட்சுமியைப் போன்ற ரிஷிகளுடைய பத்தினிமார்களே! உமது தாமரை மலர்போலுந் சிவந்த திருவடிகளே சரணம்! மேல் மண்டலத்தை யளாவிய சோலைகள் விளங்கிய இந்த இடத்தில் மன வாஞ்சையுடன் பந்தாடுவதற்கு உங்களை அழைத்துக் கொண்டு வரச் சொன்னேனம்மா!''

## ரிஷிபத்தினிகள் இரேணுகைக்குச் சொல்

**பரணி**

340. ஜமதக் கினியின்
　　திகழு பத்தினியே
அமைவுடன் பந்தெடுத்(து)
　　ஆடலாம் அம்மா!

**வசனம்**

''கேளம்மா, இரேணுகா தேவியே! உமது இஷ்டப்படிக்குப் பந்தெடுத்து, சற்று நேரம் விளையாடலாம் வாருமம்மா!''

## இரேணுகை வசனம்

''அப்படியே ஆடலாம் வாருங்களம்மா!''

## இரேணுகை ரிஷிபத்தினிகளுடன் பந்தாடுகிற தரு

341. ஆடுவம் வாராய் - பந்துவிளை
ஆடுவம் வாராய்!

நாடி இருடியர்
தேவியரும் நாமும்
கூடி மனமுவந்து
ஓடி மகிழுடன்
நாடுவம் ஆடுவம்
தேடுவம் கூடுவம் - ஆடுவம்

வந்த பந்தை விட்டாயே - சேடியே நீ
இந்தப் பந்தைத் தொட்டாயே
முந்த வந்த பந்தை
முடுகியே பிடியாதே
நொந்து திகைத்து விட்டாய்
நீதமோ உனக்கிது?
சேடி சொல்லடி
ஓடி நில்லடி
நீர மாதர்கள்
வாடப் பந்ததை - ஆடுவம்

இந்திர லோகம் போலே - செழித்திடும்
இந்தவனத் தன்பாலே!
அந்தம் மிகுந்துள
சுந்தர மாதர்கள்
பந்தமாய் மகிழுற
விந்தைய தாகவே
சுந்தரக் கரமதில்
பைந்தொடிச் சசிகளே
சந்தத மும்மகிழ்
சிந்தையில் மன்னவே! - ஆடுவம்

## இரேணுகை ரிஷிபத்தினிகளுக்குச் சொல்

### கலிப்பா

342. பந்தை ஆடிய
பத்தினி மார்களே
வந்து நாம்வெகு
நேரமும் வாய்ந்தது
சொந்த மாமுனி
தோன்றிக் கோபியாமுன்
அந்தமாம் நமது
ஆசிரமம் சேருவோம்!

## வசனம்

“கேளுங்கள், பந்து விளையாடிய ரிஷிபத்தினிமார்களே, நாம் இவ்விடம் வந்து வெகு நேரமாச்சுது! நாம் இன்னம் இவ்விடத்தில் இருக்கக் கூடாது! முனிநாதர் வந்து கோபஞ்செய்யாமுன் நமது ஆசிரமம் போயிருக்க வேணும், ரிஷிபத்தினிமார்களே!

# கட்டியன் பொதுக் கவி

*இராகம் : காம்போதி*

343. கந்துக மாடக்

கனிவுடன் அழைத்த

பைந்தொடி யாரைப்

பரிவுடன் அவரில்

தொந்தமாயச் செல்ல

துரிதமாய் அனுப்பி

அந்தமாம் ரேணுகை

ஆசிரமம் வந்தாள்!

## வசனம்

“இந்தப் பிரகாரமாகக் கந்துக மென்னும் பந்து விளையாடிய பசிய வளையலை அணிந்த ரிஷி பத்தினிகளை அன்புடனே அவரவர் ஆசிரமத்திற்கு அனுப்பிவிட்டு, அழகினையுடைய இரேணுகா தேவி, தனது ஆசிரமத்திற்கு வந்த பிறகு நடந்த விவரம் காண்க!”

## இதுவும் கட்டியன் சொல்

*இராகம் : தோடி*

344. மதனும்நல் இரதி என்ன
மகிழுடன் தினமும் சேர்ந்து
அதிவிதச் சரச வேலை
அதனில்ஆழ்ந் திருக்கும் நாளில்
முதுமறை அறிய தெண்ணா
முத்தர்தன் அருளி னாலே
பதுமாமன் முகத்தாள் ஆன
பாவையும் கர்ப்பம் உற்றாள்,

### வசனம்

"அகோதெப்படி யென்றால், ஜமதக்கினி மகாரிஷி மன்மதனும் ரேணுகையானவள் ஒரு ரதிதேவி போலும் மகிழ்ச்சியுடன் நாள்தோறும் சேர்ந்து, அதிக விதமான சரச சமுத்திரத்தில் பொருந்தியிருக்கின்ற நாளில், முதுமறையாகிய பெரிய வேதங்களும், அறிதற் கருமையான கடவுளின் கிருபையினாலே தாமரைமலர் போன்ற முகத்தினையும், பாவை போலும் வடிவும் பொருந்திய இரேணுகைக்குக் கர்ப்பம் தரித்தது என்றறிக!"

## கட்டியன் பொது அகவல்

*இராகம் : காம்போதி*

345. சமதக்கினி முனியைச் சேர்ந்த இரேணுகை
அமைவுள கர்ப்ப மாகவே அவளுக்கு

அன்னமும் வெறுப்பாய் அம்புய வதனம்
சின்வெண் பிறைபோல் திகழ்வேய் போன்ற
நிகரிலாத் தோளும் நேர்ந்துமின் னலைநேர்
பகந்து டியிடை பணைத்துவித் துரும
வாயினில் திகழும் மௌவல் அரும்பை
துயமுத் துறழ்பல் தோமழுக் கடைந்து
கனதன முகங்கள் கறுப்புமிக் குற்று
அனவர தம்பயில் அனநடை சோர்ந்து
மங்கையற் கரசி மாதிரே ணுகையும்
அங்கமும் பருத்தே அயர்ந்துவா டுவளே!

(வேய் - மூங்கில்; முத்துறழ்-முத்துப்போன்ற)

## பொது விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

346. மையெனச் சைவ லம்போல்
வார்சுரி யலுங்க தித்த
தையங்கி ரேணு கைக்குத்
தகைமையாய் நிறைந்த கர்ப்பம்
ஐயிரண் டென்னும் மாதம்
ஆகையால் நனிம ருங்கு
தொய்யவே நோகு தென்று
தோகையும் விளம்பு வாளே!

### வசனம்

''கருத்த மேகம் போலும், நீண்ட கூந்தலுள்ள இரேணுகா தேவிக்குப் பண்புடனே நிரம்பியமாதம் பத்து ஆனதால், இடைபெருத்துச் சோர்வுண்டாக நோகு தென்ற சொல்லுகிற விதம்!''

## இரேணுகை சொல்

### விருத்தம்

இராகம் : கெண்டா

347. இன்னிசைக் கிளியைப் போற்சொல்
ஏய்ந்தஎன் சகியே கேளாய்!
வன்னஎன் அடிவ யிற்றில்
மாறியே உளைக்கு திந்தத்
துன்னிய இரண்டு பக்கத்
தொடைகளும் வலித்தி டுப்பைப்
பன்னவே நோகு(து) இந்தப்
பான்மைக்கு நான்என் செய்வேன்?

### வசனம்

''கேளுங்கள், கிளிப்பிள்ளையைப் போலும் வசனத்தையடைய சகிகளே! இருந்தாற்போல் இருந்து என் இடுப்பை யுளைக்கிறது! தொடைகள் இரண்டையும் நோகிறது! ஆயாசம் மெத்த உண்டாகிறது! பொறுக்கக் கூடவில்லையடி சகிமார்களே!

# தோழிகள் இரேணுகைக்குச் சொல்

## விருத்தம்

348. சீரும் உலகில் பெண்கள்
சிறந்திடும் முதற்பிள் ளைக்கு
பேருற வருத்தம் தானே
பிரபல மாக உண்டாம்
காருற குழலி னாளே
கருத்தினில் தயங்க வேண்டாம்
நீருறு மரன்க டாக்ஷம்
நிறைவன்றிக் குறைவ ராதே!

## வசனம்

''கேளும், எனது நாயகியே! உலகத்திலுள்ள பெண்கள், தலைச்சன் பிள்ளை, குளிகுளிக்கிற பேரெல்லாம் என்னமோ ஏதோ வென்றுதான் விசனப் படுவார்களோ? கங்கையைத் தரித்த பரமசிவன் கடாக்ஷத்தினால் நிறைவேயல்லாமல் குறைவு ஒருபொழுதும் வராது பயப்பட வேண்டாமம்மா!''

# இரேணுகை சொல் தரு

*இராகம் : கெண்டா*

## பல்லவி

349. என்ன மாயமோ? - அடியம்மா
எது மாயமோ? - அம்மா அம்மா
ஏது மாயமோ?

## அனுபல்லவி

துன்னும் இடையும் அடிவயினும் மெத்த
பன்னிப்பன்னி என்னை உன்னித் துளைக்குதே - என்ன

## சரணங்கள்

இரண்டு காலும் துவண்டே
இடைநோகுது!
பிரண்டு வயிற்றில் உருண்டே
உதைக்குது! - என்ன

கள்ளங்கள் ஒன்றும் அறியா(து)
இருந்தேன்!
பிள்ளை வந்தது போதும்
போதுமடி! - என்ன

அற்புதமாய் அன்று
அன்பால் அணைந்தேனே!

விற்பனம் இப்படி

விளையுமென்(று) அறியேனே! - என்ன

இந்தத் துயரம் ஒருவரோடு சொல்ல

இதுவெட்கம் ஆகுதடி ஒருபக்கம் நோகுதே! - என்ன

## இரேணுகை, தோழிக்குச் சொல்

### பரணி

350. அந்தமாம் சேடி

விந்தையாய் ஓடி

சொந்மாம் முனிக்குப்

பந்தமாய் ஓதாய்!

### வசனம்

"கேளும், அழகினையுடைய தோழியே நீ அதிக சீக்கிரமாகப் போய், எனது பிராண நாதராகிய ஜமதக்கினி முனிவருக்குப், பிரசவ வேதனைப் படுகிறதை விவரமாகச் சொல்லுவாய், சகியே!"

(சகி - தோழி)

## தோழி இரேணுகைக்குச் சொல்

### வசனம்

அப்படியே சொல்லி வருகிறேன் அம்மா!"

## தாதி ஜமதக்கினி முனிவருக்குச் சொல்

### பரணி

351. திருத்தமா முனியே போற்றி
வருத்தமாய் ரேணு கைக்கு
மருத்துவம் பார்க்கும் போது
மருத்தியே அழையும் சுவாமி!

### வசனம்

"கேளும், சிறந்த பெருமையுடைய முனிநாதரே! சரணம், சரணம் பிரசவ வருத்தப் படுகிற எனது பிராட்டியாகிய ரேணுகையம்மாளுக்கு மருத்துவம் பார்க்கும் படிக்குக் கிழவியை அழைத்துக் கொண்டு வரச் சொல்லும் முனி நாதரே!"

## ஜமதக்கினி, தமது சீடருக்குச் சொல்

### பரணி

352. கருத்தில் சிறந்த பெருத்த சீடர்களே
மருத்துவ மாதைத் திருத்தமாய் அழைப்பாய்!

### வசனம்

"கேளும், கருத்திலே மிகுந்த சீடர்களே! நீங்கள் மருத்துவக் கிழவியை அதிசீக்கிரமாய் இப்போதே அழைத்து வாருங்களடா!"

## சீடர்கள் மருத்துவக் கிழவிக்குச் சொல்

### பரணி

353. கெட்டியா மருத்துவக்

கிழவியே உன்னை

இட்டு வரும்படி

இருடி உத்தரவே!

(இருடி - ரிஷி)

### வசனம்

''கேளும், மருத்துவத் தொழிலில் வல்லமை சாலியான கிழவியே! உன்னை அழைத்து வரும்படி ஜமதக்கினி ரிஷி உத்தரவு செய்தார்! போவோம் வாரும் கிழவியே!''

## மருத்துவக் கிழவி சீடருக்குச் சொல்

### வசனம்

''அப்படியே போவோம் சீடர்களே!''

# மருத்துவக் கிழவி வருகிற

## விருத்தம்

*இராகம் : தோடி*

354. தழைத்திடு நாணல் பூப்போல்
தலைமயிர் மிகவும் தொங்க
விழித்திடும் கண்கள் ஆழ்ந்து
விரைந்துமே பூளை சிந்த
குழைந்திடு தேகத் தோடு
கூனும்விற் போல்வ ளைந்து
மழத்தனம் இல்லா மூப்பு
மருத்துவ மாது வாராள்!

## கட்டியன் வசனம்

''அகோதெப்படி யென்றால், தழைந்த நாணற் பூவைப் போலத் தலை மயிரானது நரைத்துத் தொங்க, விழித்த கண்களிலே சுண்ணாம்புக் கட்டியைப் போலப் பூளை சிந்தவும், தேகமானது வில்லைப் போல் வளைந்து, கையிலே தடியொன்று பிடித்து ஊன்றிக் கொண்டு மருத்துவக் கிழவியானவள் வருகிற விதம் காண்க!''

# மருத்துவக் கிழவி வருகிற தரு

இராகம் : மோகனம்

## பல்லவி

355. கிழவி வந்தாளே - மருத்துவக்
கிழவி வந்தாளே!

## அனுபல்லவி

இழையைப்போல் துவண்ட
இடையும் குனிந்திட
தழையும் தனங்கள்
தாழ்ந்துமே தொங்கிட - கிழவி

## சரணங்கள்

இருடிகள் பத்தினி மார்கள் தமக்குத்
திறமாய் மருத்துவஞ் செய்யும் திறமுள - கிழவி

கரத்தினில் தடியும்
கடுகவே எடுத்துப்
பரத்தைக் கருத்தில்
பரிவாய்த் துதித்து - கிழவி

எனைப்போல் மருத்துவம்
செய்யஇப் புவியில்

நினைத்தாலும் கிடையா(து)

என்றுமே நிகழ்த்தி - கிழவி

## சீடர்கள் வசனம்

''அடிபாட்டி!''

## கிழவி

''என்னமா பேராண்டி?''

## சீடர்கள் வசனம்

''ஜமதக்கினியின் பாரியாளான இரேணுகா தேவியம்மாள் கர்ப்ப வேதனைப் படுகிறாள்; உன்னை அழைத்தவரச் சொன்னார், வாடி, பாட்டி,''

## கிழவி சொல் வசனம்

''அப்படியே போவோம் சீடர்களே!''

## கிழவி, ஜமதக்கினி முனிவருக்குச் சொல் பரணி

356. முனிவர் கோவே

கனிவுடன் என்னைத்

தனிமையாய் அழைத்த

தனை எனக்(கு) ஓதும்!

### வசனம்

''சரணம், சரணம் முனிநாதரே! அடியாளை அழைப்பித்த சேதியைச் சொல்ல வேண்டுமய்யா, மகா முனிவரே!''

## ஜமதக்கினி, மருத்துவச்சிக்குச் சொல்

### விருத்தம்

357. மருத்துவ மாதே நீயும்
மகிழ்வுடன் மனைக்கும் சென்று
திருத்தமாம் எனது தேவி
சீருறும் ரேணு கைக்கு
வருத்தமில் லாமல் நீதான்
மகிழ்வொடு மருத்து வத்தில்
உருத்தியே பார்த்து நன்றாய்
உகந்துவந்(து) ஓதுவாயே!

### வசனம்

''கேளும், மருத்துவ மாதே! நீ சந்தோஷமாக நமது ஆசிரமத்துக்குச் சென்று செவ்வையான குணமுள்ள எனது பிராண நாயகியாகிய ரேணுகைக்கு அதிக வருத்தமில்லாமல் மருத்துவம் பார்த்துப் பிரசவமானபின் அந்தக்ஷணம் வந்து சொல்லுவாய் மாதே!

## மருத்துவக் கிழவி சொல்

### வசனம்

''அப்படியே வந்து சொல்லுகிறேன் ஜமதக்கினி ரிஷியே!'' கிழவி ரேணுகையிடம் போய்ச் சொல்லுதல் ''ஆரடியம்மா, இந்த வளவிலே?

இப்படி வாடி!''

''அடிபாட்டி!''

''ஏண்டி பேத்தி?''

''என்ன செய்வேனடி பாட்டி?

எனக்கு இடைவிட்டுப் நோகுது! பக்கமெல்லாம் நோகுது! சரீரமெல்லாம் வேர்க்குது! தாகமெடுக்குது! இருந்திருந்து எனது அடிவயிற்றில் முட்டுது! எனக்கு மிகவும் பயங்கரமாயிருக்குதடி என் பாட்டி!''

## இரேணுகை சொல் தரு

*இராகம் : முகாரி*

### பல்லவி

358. என்ன செய்வேனம்மா? - அடிபாட்டி

என்ன செய்வேனம்மா?

## அனுபல்லவி

துன்னும்என் இடையது
துவண்டு கத்தரிக் கோலால்
பன்னியறுத் தாற்போற்
பக்கமும் நோகுதே! - என்ன

## சரணங்கள்

சற்றாகிலும் என்மனம் தைரியப் படவில்லை
பற்றாவ லுடனே என்பக்கத்தில் இருமம்மா - என்ன
கர்ப்பம் உண்டாகில் இக்கேதம் வருமென்று
சொற்பணம் தன்னிலும் தோன்றாமல் போச்சுதே! - என்ன

# மருத்துவக் கிழவி சொல்

## வசனம்

''காக்கை ஏறின கொம்பல்லவோ அமையுது? கைப்பட்ட கண்ணல்லவோ கரிக்குது? காலம் வந்தால் நிற்குமா? பயப்படாதே அம்மா!''

# இரேணுகை தரு

359. உந்திமிக நோகுது
உருண்டிங்கே புரண்டு

இந்தவலது பக்கம்

இயல்பாக முட்டுது! - என்ன

(உந்தி-வயிறு)

## வசனம்

''அடிபேத்தி, வலது பாரிசத்தில் நொந்தால் ஆண் பிள்ளையைப் பெறுவாய், இப்பவோ சற்று நேரமோ என்று இருக்கச்சே உளைக்காமலும் துளைக்காமலும் இருக்குமா? சற்றே மனம் பிடித்து இருமம்மா பேத்தி!''

## தரு

360. என்னறை தனிலிருந்து குடஜலம்

மன்னி வருகுது! வருகுது! வயறுமிக நோகுது! – என்ன

## கிழவி வசனம்

''அடி போடியம்மா!

நீதான் அதிசயமான பிள்ளை பெறத் தலைப்பட்டாய்! கரைபுரண்ட வெள்ளம் கையிலடங்குமா? காற்றும் மழையும் கலந்து அடித்தால் கல்லானாலும் கரையாமற் போகுமா? பத்தெட்டுப் பெற்றவளெல்லாம் பயப்படச்சே, தலைச்சன் பிள்ளைக்காரிக்குத் தைரியம் இருக்குமா? இராது! பயப்படாதே இரு!

எந்தனுக்குச் சொகம்

இயல்பதாக மிஞ்சி

சுந்தரக் கால்களும்

துவண்டுபின்னிக் கொள்ளுதே!

என்னை மிகவும் நீங்கள்

இப்போ(து) அலட்டாதே

என்ன மருங்கை

வலித்துப் பிடியுங்கள்

### வசனம்

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக இரேணுகாதேவியம்மாள் கர்ப்பவேதனைப் பட்டு, ஆண்பிள்ளை பிறக்க, அந்த சங்கதியைக் கேட்டு, சீடர்கள் ஜமதக்கினி மகரிஷியிடம் வந்து சொல்லுகிற விதம் காண்க!"

## சீடர் ஜமதக்கினிக்குச் சொல்

### விருத்தம்

361. கம்பீர மான பிள்ளை

கீர்த்தியில் மிகுந்த பிள்ளை

உம்பர்கள் புகழ்ந்த பிள்ளை

ஒருவரொப் பில்லாப் பிள்ளை

நம்பின பேரைக் காக்கும்

நங்கைரே ணுகையாள் பிள்ளை

எம்பிரான் ஜமதக்கி னிக்கே

இசைந்தஆண் பிள்ளை தானே!

### வசனம்

"சத்துருக்களை வெல்லும் தன்மையுள்ள பிள்ளை! நல்ல கீர்த்தியுள்ள பிள்ளை! தேவர்களும் புகழப்பட்ட பிள்ளை! யாவரையும் சமானமென்று நம்பி வந்தவரை ரட்சிக்கும் தயாள குணமான பிள்ளை! பெண்ணாகிய ரேணுகையின் பிள்ளை! எம்பிரானாகிய உமது தவபலத்திலுதித்த பிள்ளை! பிறந்திருக்கிறது ஆண்பிள்ளை ஐயா முனிநாதரே!"

## ஜமதக்கினி சீடருக்குச் சொல்

### வசனம்

"சீடர்களே, மகாசந்தோஷம், மகா சந்தோஷம்! பழம் பாலில் நழுவி விழுந்தது போலச் சொன்னீர்களே, அதுவே எனக்கு மகாபாக்கியம் சீடர்களே!"

## சீடர்கள் வசனம்

"சுவாமி தேவரீரது ஆசிரமத்தில் உமது ஆசீர்வாதத்தினால் அடியேனுக்குத் தம்பி பிறந்தான்! தம்பி பிறந்தான்! நான் முறுக்கு வாங்கிக் கொடுப்பேன்! சந்தோஷம் சந்தோஷம்! எனது ஆண்டவராகிய குருநாதரே!

# கிழவி இரேணுகைக்குச் சொல்

## விருத்தம்

362. உன்னைப்போல் மாதர் இந்த
உலகத்தில் கண்ட(து) இல்லை!
வன்னமால் தனக்கொப் பான
மாட்சியும் வனப்பும் பெற்று
மன்னும்நின் மைந்த னுக்கு
மஞ்சன நீரை ஆட்டி
பன்னிய மையும் இட்டுப்
பாங்குடன் வளர்த்தி டாயே!

## வசனம்

"கேளுமம்மா, இரேணுகா தேவி! உலகத்தில் அநேகம் பெண்களுக்கு மருத்துவம் பார்த்தேன்! உன்னைப் போல் ஒருவரையும் பார்க்கவில்லை! மகாவிஷ்ணுவுக்குச் சமானமான பெருமையும் அழகும் மிகுதியாகப் பெற்றிருக்கும் உன் குமாரனுக்கு மஞ்சள் நீரால் ஸ்நானம் செய்து வைத்து மையும் நிலத்திலதப் பொட்டுமிட்டு வளர்த்திடு மம்மா!"

# இரேணுகை சொல் வசனம்

"அப்படியே சிசுவுக்கு நீராட்டி வளர்த்தினேன் பாட்டி?"

## கிழவி ரேணுகைக்குச் சொல்

### பரணி

363. மெய்யறி(வு) உடைய
தையலுக்(கு) அரசே!
ஐயருக் குரைத்துப்
பையப்போய் வாறேன்!

### வசனம்

"கேளும், மெய்யாகிய உண்மையும் ஞானமும் மிகுந்த மாதர்களுக்கு நாயகமே! ஜமதக்கினி வேதியருக்கு இங்கு நடந்த சங்கதிகளைச் சொல்லி, உத்தரவு பெற்றுக் கொண்டு, என் வீட்டிற்குப் போய் - விட்டு வருகின்றேன், இரேணுகையே!"

## இரேணுகை வசனம்

"அப்படியே போய்
வாருங்கள் பாட்டி!"

## மருத்துவக் கிழவி முனிவருக்குச் சொல்

### விருத்தம்

364. ஐயரே முனிவர் கோவே
அறிவை ரேணுகை தனக்குத்

துய்யசெங் கதிர வன்போல்

துலங்குறான் சுதனு மக்கு

வையாகம் தன்னில் மிக்க

மாபெரும் புகழே மிஞ்சி

செய்யநற் றிறமுண் டாகித்

திறமுடன் வாழ்வான் சுவாமி!

### வசனம்

"கேளும், பிரமகுலத்தினராகிய முனிநாதரே! அறிவையராகிய இரேணுகாதேவிக்கும் தேவரீருக்கும் செங்கதிரோனாகிய சூரியனைப் போல ஒரு புத்திரன் பிறந்திருக்கிறான்! அவன் உலகத்திலே மிகுந்த பெருமையும் கீர்த்தியும் புஜபல பராக்கிரமமும் உள்ளவனாகித் திறமுடன் எப்போதும் அழிவில்லாமல் வாழ்ந்திருப்பான், சந்தேகமில்லை, ஜமதக்கினி ரிஷியே!"

## ஜமதக்கினி சொல் வசனம்

"ஆஆஆ! மகா சந்தோஷம்! மகா சந்தோஷம்! மருத்துவக் கிழவியே, உனக்கு வேண்டிய மட்டில் வெகுமதி தருகிறேன்!வாங்கிக் கொண்டு போய்வாரும் கிழவி!"

"அப்படியே போய் வருகிறேன், ரிஷியே!"

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

365. மகிழுடன் மருத்து வஞ்செய்
மங்கையு மவள்வீட் டிற்குப்
புகவதன் பின்த வத்தில்
பொலிவுறு முனிவ னான
தகைஜம தன்னி சால
சாஸ்திரங் களைக்கண் ணுற்று
இகன்மிகு பரசு ராமன்
எனப்பெயர் அமைத்திட்டாரே.

## வசனம்

"இந்தப் பிரகாரமாக மருத்துவக் கிழவி வெகுமதி பெற்றுத் தன் வீட்டிற்குப் போயிருந்தாள்; அதன் பின்னர் தவத்திலே மிகுந்த ஜமதக்கினி மகரிஷியானவர், சோதிட சாஸ்திரங்களைப் பரிசோதித்துக் குமாரனுக்குப் பரசுராமன் என்று நாமகரணம் வைத்தாரென்றறிக!

# ஜமதக்கினி, சீடருக்குச் சொல் வசனம்

"ஆரடா அடா சீடரே! எனது புத்திரன் உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தபடியால், அவனுக்கு இப்பொழுது பரசுராமன் என்று பேர் கொடுத்திருக்கிறேன் சீடர்களே!"

# கட்டியன் பொது

## விருத்தம்

*இராகம் : தோடி*

366. பங்கய முகத்தாள் ஆன
பாவையாம் இரேணு கைக்கு
செங்கதிர் போல மைந்தன்
சனித்ததை எடுத்துத் தாதி
மங்கையர் வாஞ்சை உற்று
மங்கள உதகம் ஆட்டி
துங்கநல் தொட்டில் ஏற்றித்
தோகைதா லாட்டு வாளே!

## வசனம்

''அகோதெப்படி யென்றால், தாமரை மலர் போன்ற முகத்தினை யுடைய இரேணுகா தேவிக்குச் செங்கதிராகிய சூரியனைப் போலக் குழந்தை பிறந்ததை யெடுத்து, அவள் தாதிப் பெண்கள் மனவாஞ்சையுடன் மங்களகரமாக ஸ்நானம் செய்து வைத்து இரேணுகை கையில் கொடுக்க, அவள் பொற்றொட்டிலில் வளர்த்தித் தாலாட்டுகிற விதம் காண்க!''

# இரேணுகை தாலாட்டுகிற தரு

*இராகம் : நீலாம்பரி*

367. ஆராரோ ஆரரரோ

ஆராரோ ஆரிரரோ!

சீராரும் நவமணியே

செல்வத் திரவியமே!

பாரார் அடியளந்த

பங்கயக்கண் மாதவனோ? - ஆரோ

பஞ்சாயுதம் கரத்தில்

பரிவுடனே தாங்கிநின்ற

விஞ்சும் புகழ்படைத்த

விமலன் உதித்தானோ? - ஆரா

அன்று மறையெடுத்தே

ஆழியினில் போய்ப்புகுந்த

துன்றும் இராக்கதனைத்

துணித்தெழுந்த சுந்தரனோ? - ஆரா

விரிவான நான்மறையை

வேதனுக்குப் போதிக்கப்

பரிவாய் எகினமெனப்

படிவமுற்ற நாரணனோ? - ஆரா

கிரண நனிபெருகும்

கேழார் எழிற்கவுத்வா

பரண மணிந்தஅரி

பத்மநா பன்தானோ? — ஆரா

## கட்டியன் சொல் பொதுக் கவி

*இராகம் : மோகனம்*

368. நடைமலர்க் கோதை

நங்கை இரேணுகை

பிறையெனச் சுதனைப்

பெட்புடன் வளர்க்க

நிறையுடன் வயது

நிகழுமைந்தாக

மறைசொல் வேண்டி

வாத்தியை யழைப்பார்!"

### வசனம்

"இவ்விதமாக வாசனை பொருந்திய, மாலை தரித்த, கூந்தலுள்ள பெண்ணாகிய இரேணுகையானவள், மூன்றாம்பிறை போலத் தான் பெற்ற பிள்ளையை நாளொரு மேனியாக அன்புடனே வளர்க்க, அந்தப் பிள்ளைக்குப் பூரணமாய் ஐந்து வயதாகவே பிராமண குலமாதலால், வேதபாராயணம் முதலானதுகளைச் சொல்லி வைக்க வேண்டியதற்குக் கல்வித் திறமுள்ள உபாத்தியாயரை ஜமதக்கினி மகரிஷி, சீடரை அனுப்பி அழைக்கச் சொல்லுகிற விதம் காண்க!"

## ஜமதக்கினி முனிவர் சீடருக்குச் சொல் பாணி

369. பக்குவ மாகவே

இக்கணம் சென்று

அக்கினி முனிவரை

முக்கியமாய் அழைப்பாய் !

### வசனம்

''ஆரடா, அடா சீடர்களே ! நீங்கள் அதிசீக்கிரமாகப் போய், இப்பொழுதே சென்று, அக்கினி முனிவரை அழைத்துக்கொண்டு வாருங்கள் சீடர்களே !

''அப்படியே அழைத்துக் கொண்டு வருகிறோம், சுவாமி !

## சீடர்கள், அக்கினி முனிவர்க்குச் சொல்கின்ற

### விருத்தம்

370. ஆணவ மாயைக் காமியங்

களைக்க டிந்தோய் போற்றி !

சேணுல கத்தோர் போற்றும்

செமதக்கினி முனிவர் உம்மைக்

காணவே வேணும் என்று

கடிதினில் அழைக்கச் சொன்னார்

நீணில மதிக்க நீரும்

நிமிஷத்தில் வருவீர் சுவாமி !

### வசனம்

"கேளுங்கள் ! ஆணவம், மாயை, காமியமென்னும் மும் மலங்களையும் வென்ற முனிநாதரே சரணம் ! தேவர்களெல்லாம் துதி செய்யும் படியான சமதக்கினி மகாரிஷி, தேவரீரை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார் ! சீக்கிரம் போகவேண்டும், வாரும் முனிவரே !"

## அக்கினிகோத்திர முனிவர், சீடருக்குச் சொல் பரணி

371. திறமுள ஞானச்
சமதக் கினியின்
உறமுள சீடரே !
உவந்துநாம் போவோம் !

### வசனம்

"அழிவில்லாத மெய்ஞ்ஞானமுள்ள ஜமதக்கினியின் சீடர்களே! சந்தோஷத்துடன் போவோம், வாருங்கள் !"

## அக்கினி முனிவர் வருகிற

### விருத்தம்

இராகம் : தோடி

372. சமதக்னி அழைத்தார் என்று
சீடரும் வந்து கூற

தமதுள மிகம கிழ்ந்து

தன்னகம் விட்டு நீங்கி

அமைவுடை நடைந டந்து

அஸ்தத்தில் தண்டம் ஏந்தி

இமையவர் போற்றும் அக்கினி

எழில்முனி வருகின் றாரே!

### வசனம்

''இந்தப் பிரகாரமாக, ஜமதக்கினி முனிவர் அழைத்தாரென்று, சீடர்கள் வந்து சொல்ல, அக்கினி முனிவர், மனது மகிழ்ச்சி அடைந்து, தனது ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு அமைவுடன் நடை நடந்து, கையிலே தண்டு, கமண்டலம், பிடித்துக் கொண்டு, தேவர்கள் போற்றும் வல்லபமுள்ள, கல்வியுள்ள அக்கினி முனிவர் வருகின்ற விதம் காண்க!''

## அக்கினி முனிவர் வருகிற தரு

*இராகம் : கலியாணி*

### பல்லவி

373. அவனி எங்கும் புகழ

அருமுனிவர் மகிழ

அழல்கோத்திர

முனிவர் வந்தார் !

## அனுபல்லவி

தவநிதானஞ் சாந்தம்
சங்கத்தினிற் சிறந்த
பவசாகரம் ஒழித்துப்
பரிவாய் மனதுகந்த - அவனி

## சரணங்கள்

தண்டு கமண்ட லத்தைத்
தன்கரமதிற் கொண்டு
அண்டர் புகழும் கீர்த்தி
அதிக மாகவே அண்டு - அவனி
காசினி அரசர்க்கும்
கவின்மறை யவர்க்கும்
மாசிலாக் கல்வியும்
வான்வில் வித்தை யுரைக்கும் - அவனி
சிரத்திற் சடைமுடித்துத்
திருமந்திரம் படித்துப்
பருத்த மிதியடியைப்
பாதத்தினில் தரித்து - அவனி

# சமதக்கினி, அக்கினி கோத்திரருக்குச் சொல்கிற

## விருத்தம்

374. மண்டலத் தினில்ஒப் பில்லா
மாதவ முனியே போற்றி
வண்டணி ரேணு கைதன்
மதலையென் சுதனுக் கிப்போ
திண்திறல் வயதைந் தாச்சு
திறமுடன் கல்வி ஓத
தொண்டனான் அழைத்தேன் உந்தன்
துணையடி போற்றி போற்றி !

## வசனம்

''கேளும், உலகத்தில் ஒருவரும் நிகரில்லாத மகா தவமகிமையுள்ள முனிநாதரே! சரணம், சரணம்! வண்டுகள் மொய்க்கப்பட்ட கூந்தலுள்ள இரேணுகைக்கும் எனக்கும் உற்பவித்த குமாரனான பரசுராமனுக்குச் சரியாய் ஐந்து வயது ஆனபடியால், திறமான அக்ஷராப்பியாசம் செய்ய உம்மை அழைத்துவரச் சொன்னேன், தவ முனிவரே !''

## அக்கினி கோத்திர முனிவர் சொல்

### விருத்தம்

375. போற்றியே பணிந்து நின்ற
புகழ்ஜம தக்னி யேகேள்!
நாற்றிசை துதிவ னப்பு
நண்ணுநின் சுதனுக் கின்று
ஆற்றல் விற்கல் வியோடு
அருந்தகை வித்தை சொல்ல
ஏற்றமாம் இத்தி னத்தில்
இவ்விடம் அழைப்பிப் பாயே !

### வசனம்

''கேளும், ஜமதக்கினி முனிவரே ! அழகில் மிகுந்தவா என்று சொல்லும் உமது புத்திரசிகாமணியாகிய பரசுராமனை வித்தியாரம்பம் செய்ய அழைத்துவரச் சொன்னார் ! அனுப்பும் அம்மா தாயே !''

## இரேணுகை, சீடருக்குச் சொல்

''அப்படியே அனுப்புகிறேன் அழைத்துப் போவீர் சீடர்களே !''

# இரேணுகை, பரசுராமருக்குச் சொல்

## விருத்தம்

376. அப்பனே பரசு ராமா
அழகிய புதல்வா கேளும் !
துப்புறும் தந்தை என்று
சுகுணமாம் கல்வி ஓத
ஒப்புடன் அழைத்திட் டாராம்
உகந்துநீ விரைவில் சென்று
செப்பமாய்க் கல்வி யாவும்
சீருடன் கற்று வாராய் !

## வசனம்

"கேளாய், அழகினையுடைய குமாரனாகிய பரசுராமா ! உனது தகப்பனார் இன்று சுபகரமான வித்தியாரம்பம் செய்ய, உன்னை அழைத்துவரச் சொன்னாராம் ! நீ சந்தோஷமாய்ச் சீக்கிரம் போய்ச் செம்மையாய்ச் சகல கலை ஞானமும் சிறப்புண்டாகப் படித்துக் கொண்டு வருவாய் மகனே !"

## பரசுராமன் வசனம்

"அப்படியே சகல கலைகளும் கற்று, வித்தையும் கற்று வருகிறேன், தாயே !"

## பரசுராமர் வருகின்ற

### விருத்தம்

*இராகம் : தோடி*

377. ஆதிமூ லத்தைப் போற்றி
அரியநல் திருமண் சாத்தி
தீதிலாச் சிறத்தி லேநீள்
செஞ்சடை முடித யங்க
நீதியம் புவிம திக்க
நிகழ்கலை தனுகாஸ் திரங்கள்
ஓதிடப் பரசு ராமன்
உகந்திதோ வருகின் றானே !

### வசனம்

''அகோதெப்படி யென்றால், ஆதிமூலமாகிய பகவானைத் துதித்து, சொல்லுதற்கரிய திருமண் காப்பிட்டுக், குற்றமில்லாத சிரசிலே நீண்டு வளர்ந்த சடைமுடி பிரகாசிக்க, பூமியில் உள்ள யாவரும் மதிக்கும்படிக்கு வித்தையும், தனு சாஸ்திரங்களும் கற்றுக்கொள்ளப் பரசுராமன் சந்தோஷத்துடனே ஜமதக்கினி முனிவரிடம் வருகிற விதம் காண்க !''

## பரசுராமர் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

378. அன்னை சொற்படிக்கு அய்யன் பரசுராமன்
அருங்கலை ஓத வாரான் !

### அனுபல்லவி

துன்னும் இடையில் காவி
துகிலினை யேயு டுத்தி
தன்னு டைய பிதாதான்
அழைத்தது அதையே உன்னி - அன்னை

### சரணங்கள்

சிரத்தினில் விளங்கிய
சிகையை முடித்துநல்ல
திருத்த சிறுகளிறுபோல்
திகழாய் நடைநடந்து - அன்னை
முன்னா ளரன் அயன்
என்னால் முடியாதென்ன
பன்னிப் பதுமநாபன்
பகர்ந்த படிக்குவந்த - அன்னை
துவாதசித் திருமண்
துலங்கவே மெய்யினில்

அவாவுடனே தரித்த

அன்பாய்த் தந்தைமுன்னே - அன்னை

## அன்னை சொற்படிக்குப் பரசுராமர், தந்தைக்குப் போற்றி

### விருத்தம்

379. சிந்தையில் இடைவி டாமல்

செம்மலின் சரணம் தன்னை

வந்தனன செய்தே போற்றும்

வாஞ்சையுள் ளவரே போற்றி !

மந்திர வேதம் ஆய்ந்த

மறையவர் குலத்தில் தோன்றி

எந்தனைக் கனிந்த ளித்த

எந்தைநின் பாதம் போற்றி !

### வசனம்

''மனத்தில் சதா காலமும் கர்த்தனை வணங்கித் தெளத்தியம் செய்யும் பண்புள்ள பிதாவே, சரணம் ! வேத மந்திர முதலியதுகளை ஆராய்ந்த பிரம குலத்திற் றோன்றி என்னை அன்புடன் பெற்றுக் காத்தருளிய எனது தந்தையாகிய உமது பாதார விந்தமே சரணம், சரணம் ஐயா !

# சமதக்கினி, பரசுராமருக்குச் சொல்கிற வாழி

### பரணி

380. மன்மதன் போல

வடிவஞ் சிறந்த

என்மதை லாய்நீ

எந்நாளும் வாழி!

### வசனம்

"மன்மதனைப் போல ரூபலாபண்யத்திற் சிறந்த எனது புத்திர சிகாமணியே ! எப்பொழுதும் வாழக் கடவாய் !"

# ஜமதக்கினி பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

381. அருமையும் புகழும் மிக்க

அறிவுள பரசு ராமா

திறமுள உபாத்தி யாயரின்

சேவடி மலரைப் போற்றி

உரமுடன் கல்வி கற்று

உயர்தனு சாத்தி ரத்தைப்

பரிவுற அறிந்து கொள்வாய்

பாரெலாம் மதிக்கத் தானே!

(தனுசாத்திரம் - வில்வித்தை)

## வசனம்

"கேளும், சொல்வதற்கு அருமையான கீர்த்தியும், மிகுந்த அறிவும் பொருந்திய பரசுராமா ! நான் உனக்கு வித்தை சொல்ல வரவழைத்த உபாத்தியாயரின் பாதார விந்தத்தில் வணங்கி, அவரனுக்கிரகத்தினால் வித்தை கற்று, உயர்வாகிய ஆயுத பரீட்சையும் அறிந்து கொள்ளுவாய், உலகத் தாரெல்லாம் கெட்டிக்காரனென்று மதிக்கும்படிக்கு மகனே!"

## பரசுராமர் சொல் வசனம்

"அப்படியே தெரிந்து கொள்கிறேன் என் தந்தையே !"

## பரசுராமர் உபாத்தியாயருக்குச் சொல்

382. கல்வியில் வித்தை
கருத்துடன் உரைக்கும்
வல்லவ ரேயுன்
மலரடி போற்றி !

## வசனம்

"கேளும், வித்தையும் வில் முதலிய ஆயுதப் பரீட்சையும் கருத்துடனே அடியேனுக்குச் சொல்லிவைக்கும் வல்லவராகிய குருவே ! உமது பாதார விந்தமே சரணம், சுவாமி !

## உபாத்தியாயர், பரசுராமருக்கு வாழி

### பரணி

383. பிரம குலத்துப்
பரசு ராமன்எனப்
பெரியபேர் பெற்றோய்
திறமுடன் வாழி !

### வசனம்

''பிராமண குலத்திற் செனித்து, பரசுராம ரென்று பெரிதான பெயரைப் பெற்ற சிறுவனே, சிரஞ்சீவியாய் வாழி !''

## ஜமதக்கினி, உபாத்தியாயருக்குச் சொல்

### விருத்தம்

384. வேதங்கள் முழுதும் ஓதி
விளங்கிய முனிவர் கோவே !
ஆதவன் போல எந்தன்
அன்புறு தவத்து உதித்தோன்
தீதிலா விளங்கும் கல்வி
சிலைமுதற் பயிற்சி எல்லாம்
நீதமாய்ச் சொல்லி வைக்க
நின்னிடம் அழைத்துப் போவீர் !

### வசனம்

"நான்கு வேதங்களும் பூரணமாக அறிந்து, உலகத்தில் பிரகாசிக்கும் முனிநாதரே ! சூரியனைப் போல் என்னுடைய தவத்திலே யவதரித்த பரசுராமனுக்குக் குற்ற மில்லாமல் கல்வி விளங்கும்படிக்கும், வில் முதலிய பல ஆயுதப் பரீட்சையும் கிரமமாகச் சொல்லி வைக்க வேண்டியதற்கு உமதுஇடம் அழைத்துக் கொண்டு போவீர், முனிவரே !"

## உபாத்தியாயர் சொல் வசனம்

"அப்படியே அழைத்துக் கொண்டுபோய் வித்தையும், ஆயுதப் பரீட்சையும் சொல்லி வைக்கிறேன், ஐயா, முனிவரே !"

## அக்கினி கோத்திர முனிவர் பரசுராமருக்குச் சொல்வது

385. மதியும் நதியும் தரித்தோனை
மனத்தில் துதித்தோன் மைந்தாநீ
பதியும் நிதியும் படைத்திடுவாய்
பாலா பரசு ராமாவா!

### வசனம்

"சந்திரனையும் கங்கையையும் தரித்த பரமசிவனை மனத்தில் தௌத்தியம் செய்யும் ஜமதக்கினியின் மைந்தனாகிய பரசுராமா ! பதியும் அநேகத் திரவியமும் உள்ளவனாகப் போகிறாய் ! உனக்கு

வித்தை சொல்லி வைக்கிறேன் ! என்னுடனே வருவாய் புத்திர சிகாமணியே !''

## அக்கினி கோத்திரராகிய உபாத்தியாயர் பரசுராமருக்குச் சொல் தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

386. பாலா பரசு ராமா
பகரும் அச்ச ரத்தைப்
பரிவாய் அறிந்து கொள்வாய் !

### அனுபல்லவி

சீலா மூலா தார
யானை முகவன் சரண்போற்றி
மூன்றுதரம் குட்டிக் கொண்டு
தோப்பணம் ஏத்திப் - பாலா

### சரணங்கள்

ஓம் கணபதி என்று
ஓதுவாய் மைந்தா !
உலகோர் யாவரும் உனக்கு
எதிரில்லை மைந்தா! - பாலா

ஓம் கலைமகள் என்று

ஓதுவாய் மைந்தா !

உற்ற ராம னல்லாது

எதிரில்லை மைந்தா ! - பாலா

அரிஓம் நமோஸ்து என்று

அஞ்சலி செய்து

அகரம் ஆகாரம்

அறிந்துகொள் மைந்தா ! - பாலா

இகரம் ஈகாரம்

இதாகுமே மைந்தா !

இசைந்த உகாரம்

ஊகாரமாம் மைந்தா ! - பாலா

எகரம் ஏகாரம்

ஐகாரம் மைந்தா

ஒகரம் ஓகாரம்

ஔகாரம் மைந்தா ! - பாலா

அண்டர் புகழ்ந்திடும்

அக்ஷரம் இதுவே

அறிந்துகொள் உள்ளத்தில்

அன்பாகப் பொதுவே ! - பாலா

## அக்கினி முனிவர் பரசுராமருக்குச் சொல்

### பரணி

387. தைரியப் புதல்வா

தண்மையாம் கலையில்

உயிர்மெய் முப்பதும்

உணர்ந்திடு வாயே !

### வசனம்

''கேளும், மனத் தைரியமுள்ள பரசுராமா ! தன்மையுடனே உலக கலைகளையும் உயிர்மெய்யெழுத்து முப்பதும் தெரிந்து கொள்ளுவாய், புத்திர சிகாமணியே !

## பரசுராமர், உபாத்தியாயருக்குச் சொல்

### பரணி

388. இறைவரே நீர்எனக்கு

இயம்பிய படியேயானும்

குறைவிலா துணர்ந்தேன் துரோணங்

குறிப்புடன் அறிவிப்பீரே !

### வசனம்

''சரணம், சரணம் எனது குரு சுவாமியே ! தாங்கள் எனக்குச் சொல்லி வைத்த பிரகாரம் பதினெண் பாஷையும், குறைவில்லாமற்

தெரிந்து கொண்டேன் ! வில் வித்தை, யாயுதப் பரீட்சையுஞ் சொல்லிவைக்க வேணுஞ் சுவாமி!''

## உபாத்தியாயர் சொல் வசனம்

''அப்படியே சொல்லி வைக்கிறேன், கற்றுக் கொள்ளும், விவேக சாலியான பரசுராமனே!''

## அக்கினி முனிவர் சொல் தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

389. இடதுகையில் வில்லைப் பற்று - அதில்
எடுத்தொரு நாணியை ஏற்று !

### அநுபல்லவி

சடுதியில் ஒருபாணம்
தகுதியாய் எடுத்துக்கொள் !
சத்திராதி மார்புக்குச்
சரியாகப் பார்த்துக் கொள் ! - இடது

### சரணங்கள்

மார்புக்கும் நாபிக்கும் நேரு - அதன்
மத்தியிலே குறி பாரு !

ஆர்பெறு தேவரை

அணுவாகப் பார்த்திரு !

தார்பெறு மூவரைத்

தவிடாகக் கொழித்திரு - இடது

பாணம் வருங்குறி பாரு - பின்பு

பார்த்துக் கதுக்கது நேரு !

நாணமதை வைத்திடாதே

மானமது போகும் !

வேண சாதுரியம்

காணவேணும் இப்போ ! - இடது

ஆரியர் எதிர்வந்தால் மேவு - மவர்க்கு

அறிக்கைசெய்யப் பாணம் மேவு !

வீரியம் தனைவிட்டால்

வேண கெடுதிவரும் !

கூரிய பாணத்தால்

கொல்லுவாய் எதிரியை - இடது

## இதுவும் உபாத்தியாயர் பரசுராமருக்குச் சொல்

### பரணி

390. துன்னிய அஸ்திரம்

உன்னதம் அளிப்பேன்

நன்னயம் ஆகவே

மின்னநீ கொள்வாய் !

## வசனம்

''வாருமப்பா, பரசுராமா ! உனக்கு வேண்டிய வில்லும் ஆயுதமும் அஸ்திரமும் தருகிறேன் ! வாங்கிக் கொள்ளும், பரசுராமா!''

## உபாத்தியாயர் பரசுராமருக்குச் சொல் தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

391. வாராய் பரசுராமா ! - இந்திரவில்
வாங்கிக்கொள் முகசோமா !

### அனுபல்லவி

வாருங் கவசமும்
வச்சிரமும் வேலும்
பாரு முனிவர்
தெண்டுபா சாங்குசம்இதோ ! - வாரும்

### சரணங்கள்

மோகன சந்திராயுதம் - இந்திரனிட
முனைபெறு வச்சிராயுதம் ! - வேகமிகுந்த
நாக பாணமிது

நான்முகத்தோன் பாசம் !

வேக மாகும்சக்தி

விஷ்ணு கதாயுதம் ! - வாராய்

பிரமம் பிண்டி பாலம் - சூலாயுதம்

பிறைமுகப் பாண மாலம் - போலவரும்

மருவும் கூரிய கத்தி

வலிய தண்டாயுதம் !

மந்திர ஞானசரம்

மாயாஸ் தரமிந்தா ! - வாராய்

இந்திர னெமனக்கினி நிருதியும்

ஈசன் குபேரன்தனிப் புகழ்மேவும்

சுந்தர வருணன் வாயு

சொந்த மலர்களிட

மந்திர மோடஸ்திரம்

மகிழுடன் நான்தாரேன் ! - வாராய்

## உபாத்தியாயர், பரசுராமருக்குச் சொல்

### வசனம்

"கேளாயப்பா, பரசுராமா ! மும்மூர்த்திகளும் கொடுத்த ஆயுதமும், அஷ்டதிக்குப் பாலகரிட ஆயுதம், இன்னம் மற்றவர்களிட ஆயுதமும் உன்னிடத்தில் கொடுத்தேன் ! அதைப் பத்திரமாய் வாங்கிக் கொண்டு, சத்துருக்களைச் சம்ஹரிப்பாய், சிறுவனே !"

## பரசுராமன் வசனம்

“அப்படியே சகல பாணங்களையும் பெற்றுக் கொண்டேன், குரு நாதா!”

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

*இராகம் : கலியாணி*

392. மூலமாம் முனியி டத்தில்
முக்கியமாய்ப் பரசு ராமன்
காலவில் வித்தை யோடு
சாஸ்திரம் கற்று ணர்ந்து
சீலமா முனிவர் தந்த
சிலையுடன் அம்பு கொண்டு
ஞாலமே புகழும் தந்தை
நற்பத மலர்ப ணிந்தான் !

### வசனம்

“இந்தப் பிரகாரமாக, அக்னி முனிவரிடத்தில் சகல கலைகளும் கற்று, வில்லம்பு முதலிய ஆயுதமும் மந்திர உபதேசமும் பெற்று, உலகமெல்லாம் புகழும்படியான தந்தையின் பாதத்தில் சேவித்துக் கொண்டான், பரசுராமன் !”

## சமதக்கினி, பரசுராமருக்குச் சொல்

393. செப்பு கல்வியிலும்
செஞ்சிலை வித்தையும்
ஒப்பிலா துணர்ந்த
உத்தமா வாழி !

### வசனம்

"யாவரும் சொல்லும் கல்வித் திறத்திலும், செவ்வையாகிய வில்வித்தை சாதுரியத்திலும், பூமியில் ஒருவரும் சமானமில்லாமல் அறிந்திருக்கின்ற பரசுராமனே, வாழி ! வாழி !"

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

*இராகம் : தோடி*

394. மைக்குழல் முத்த மூரல்
வனிதை ரேணுகை தன்நாதன்
அக்கினி முனிவ ருக்கு
அருஞ்சுதர் நால்வர் தோன்றி
மிக்கவே புகழ்பெற் றோங்கி
மேன்மையாய் இருக்கும் காலை
பக்குவ மனைவி தன்னைப்
பண்புடன் அழைக்க லுற்றார் !

### வசனம்

"அகோதெப்படி யென்றால் மேகம் போன்ற கூந்தலும், முத்துப் போன்ற தந்த வரிசையும் பொருந்திய ரேணுகாதேவியின் புருஷனாகிய சமதக்கினி முனிவருக்கு அருமையான நான்கு பிள்ளைகள் பிறந்து, மிகுதியாகிய கீர்த்தி பெற்று, யாவருக்கும் மேலாக இருக்குங் காலத்தில், இரேணுகையாகிய தன் மனைவியைச் சமதக்கினி அழைத்துவரச் சொல்லிச் சீடர்களுடன் சொல்லுகிற விதம் காண்க !"

## சமதக்கினி மகாமுனிவர் சொல்

### பரணி

395. அரிய சீடர்களே
பிரியமாய் ஓடி
உரிய ரேணுகையைப்
பரிவுடன் அழைப்பீர் !

### வசனம்

"கேளுங்கள், எனது சீடர்களே ! என் மனைவியாகிய ரேணுகாதேவியை, நான் அழைத்ததாகச் சொல்லிச் சீக்கிரமாக இவ்விடம் இட்டுக் கொண்டு வாருங்களப்பா, சீடர்களே !"

## சீடர்கள் முனிநாதருக்குச் சொல்

### பரணி

396. கத்தனே உந்தன்

உத்தர வினிலும்

பத்தினி மாதினை

இத்தலம் அழைப்போம் !

### வசனம்

''சரணம், சரணம், குருநாதனே ! தேவரீர் உத்திரவு செய்தபடி, உமது பத்தினியாகிய ரேணுகையம்மாளை யழைத்து வருகின்றோம், சுவாமி !''

## சீடர்கள் இரேணுகைக்குச் சொல் பரணி

397. அம்மணி போற்றி

செம்மையாய் முனிவர்

உம்மையே அழைக்க

எம்முடன் உரைத்தார் !

### வசனம்

''சரணம், சரணம், தாயே ! ஜமதக்கினி முனிவர் உம்மை அழைத்து வரச் சொன்னார் ! பிராண நாதரிடம் நீங்கள் வாருமம்மா!''

## இரேணுகை சொல் வசனம்

''அப்பபடிமெய எனது நாயகரிடம் போவோம், சீடர்களே !''

## இரேணுகை வருகிற விருத்தம்

*இராகம் : தோடி*

398. வரன்அழைத் திட்ட சேதி
மகிழுடன் அறிய என்று
விரைவினிற் பணிதி பூண்டு
விளங்குபட்டு உடைஉ டுத்து
தரமிகு தாதி சூழத்
தலைவனாம் முனியைக் காண
அருமனம் எனந டந்தே
அரிவைரே ணுகைவந் தாளே !

### வசனம்

''இந்தப் பிரகாரமாக புருஷனாகிய ஜமதக்கினி மகாரிஷி அழைத்த சங்கதியை அறியவேண்டியதற்காகச் சீக்கிரத்தில் சந்து ஆபரணங்களும் தரித்துப் பிரகாசம் பொருந்திய பட்டு வஸ்திரம் புனைந்து, தோழிமார் சூழ்ந்துவர, அருமையான அன்னம் போல நடை நடந்து, இரேணுகாதேவி கணவனாகிய முனிவரிடம் காண வேண்டி வருகின்ற விதம் காண்க!''

# இரேணுகை வருகிற தரு

*இராகம் : பந்துவராளி*

## பல்லவி

399. தாணுவின் தேவி போல
வேண பணிகள் பூண்டு
தையல் ரேணுகையும் வந்தாள் !

## அனுபல்லவி

காணுதற் கரிதான
நீணில மங்கையரில்
கதித்த சுந்தரமாக
உதித்த அதிவைபோக - தாணு

## சரணங்கள்

குவளை நேத்திரம் பாணம் - இவள் வசனம்
குயில்கண்டு மிகவும் நாணும் ! - ஒருபெருகு
நவமணி தங்கத் தோடு
நன்னடை அன்னப் பேடு
அவனியில் இல்லை ஈடு
அரிவைக் கரிவை சோடு ! - தாணு

மின்னல்போற் சிற்றிடையும் - சீப்பினால்வாரிப்
பின்னித் தொங்கிய சடையும் - இணையில்லாத

அன்னை இவளுடைய

அளகத்தில் அளிக்கூட்டம் !

உன்னித் தினமும் கூடி

உகந்திடும் கொண்டாட்டம் ! - தாணு

கான்மயிற் சாயற் பருவம் - இவளதிகக்

கன்னி இளந்தைப் பருவம் ! - விசாலமுள்ள

வான்மின்னல் ஒளிபோல

வனிதை இவளுருவம் !

மாதரசி ரேணுகை

மகிழ்நன் அழைத்தாரென்று ! - தாணு

## இரேணுகை ஜமதக்கினிக்குச் சொல்

### விருத்தம்

400. போற்றிவெள் விடையில் ஏறும்

புனிதனைக் காண நாளும்

போற்றிசெய் நாதா உந்தன்

பொற்கழல் போற்றி என்னை

போற்றியே சீடர் வந்து

புகழுடன் அழைத்த சேதி

போற்றியே பணியும் இந்தப்

பூவைக்கு விளம்பு வீரே !

### வசனம்

''வெள்ளை ரிஷபத்தில் ஆரோகணிக்கும் பரமசிவனைத் தரிசனம் செய்யச் சதாகாலமுந் தோத்திரம் செய்யும் பிராண நாதனே! உமது அழகிய திருவடியே சரணம் ! சீடர்கள் என்னிடம் வந்து போற்றி செய்து, அழைத்த சமாசாரம் என்ன? அதைத் தேவரீருக்கு ஊழியஞ் செய்யும் அடியாளுக்குச் சொல்லும் பிராண நாதா !''

## ஜமதக்கினி இரேணுகைக்குச் சொல்

### விருத்தம்

401. பத்தியாய்ப் பணிந்த பெண்ணே
பரமனை நினைந்து பூசை
இத்ததி செய்ய வேணும்
இக்கணம் விரைவில் சென்று
புத்தியாய் நதியில் உள்ள
புண்ணிய ஜலந்தி ரட்டி
சுத்தியாய் இவிடத் திற்குச்
சுகிர்தமாய் வருகு வாயே !

### வசனம்

''கேளும், பத்தியுடனே என்னை வணங்கிய பிராண நாயகி ! நான் பரமசிவனை நினைத்துப் பூசை செய்ய வேணும்! இப்பொழுது

சீக்கிரமாய்த் தடாகத்திற்குச் சென்று, அதிலுள்ள ஜலந் திரட்டிக் கொண்டு, அத்தியான ஆகார நேமத்துடன் இவ்விடத்திற்கு வருவாய் என் பிராண நாயகி !''

## இரேணுகை தோழிக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : பைரவி*

402. பாங்கியே எனது கேள்வன்
பகர்ந்தசொற் படியே நாமும்
ஓங்கிய நடைந டந்து
உயர்ந்திடு நதியைக் கண்டு
தீங்கற ஸ்நானம் செய்து
திடமுடன் ஜலந்தி ரட்டிப்
பூங்கையால் எடுத்து வந்து
பூசைக்குத் தருவோம் வாராய் !

### வசனம்

''கேளும், தோழியே ! எனது கேள்வனான ஜமதக்கினி முனிவர் சொல்லிய வார்த்தைப் படிக்கு, நாம் சீக்கிரமாக நடை நடந்து போய், தடாகத்திலிறங்கி, பரிசுத்தமாக ஸ்நானம் செய்து, மனோ தைரியத்துடன் ஜலத்தைக் கையினால் திரட்டி, யெடுத்துக்

கொண்டு வந்து, என் பிராண நாதர் செய்யும் சிவபூசைக்குக் கொடுப்போம் சகியே!''

## தோழி, இரேணுகைக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

403. அப்படித் தானே நாமும்
அடைவுடன் விரைவிற் புக்கி
மெய்ப்புவி தண்ணி லேதான்
விளங்கிய நதியை நாடி
கொப்பென ஸ்நானம் செய்து
கூந்தலை முடித்துக் கொண்டு
தப்பாமல் ஜலம்தி ரட்டித்
தக்ஷணம் வருகு வோமே !

### வசனம்

''கேளும், எனது நாயகியாகிய இரேணுகையே ! நீங்கள் சொல்லிய பிரகாரம் சீக்கிரமாகப் போய், மெய்ம்மையா யிந்த உலகின் கண்ணுள்ள மகிமை விளங்கிய நதியில் ஸ்நானம் செய்து, தலை மயிரை முடித்துக் கொண்டு, தவறாமல் இரண்டு கையினாலும் ஜலத்தைத் திரட்டி எடுத்துக் கொண்டு, இந்த க்ஷணமே இவ்விடம் வருவோம், வாரும் நாயகியே !''

# இரேணுகை சொல் தரு

*இராகம் : தன்யாசி*

## பல்லவி

404. நடப்போம் நதியை நாடி
நடப்போம் மகிழுடனே !
நடப்போம் அதிவிரைவில்
நடப்போம் பாங்கி வாராய் !

## அனுபல்லவி

திடத்துடன் முனிசெய்யும்
சிவபூசை தப்பாமல்
திறமாய்ச் சலம்திரட்டிச்
சீக்கிர மாகவர - நட

## சரணங்கள்

கடந்த சித்தருக் கெட்ட
திடந்தரு மரன்பூசை
தொடர்ந்த முனிவருக்குத்
தோயங் கொணரவின்று - நட

தேவர் முனிவர்களும்
ஸ்திரமாய் ஸ்நானம்செய்யும்

வாவி அதனைநாடி

மனவேக மாயிப்போ - நட

நேத்திய தினம்போலச்

சாஸ்திரப் படியாகத்

தோத்திரம் நனிசெய்து

தீர்த்த மதையெடுக்க - நட

## இரேணுகை தோழிக்குச் சொல்கிற வஞ்சி

### விருத்தம்

405. பாங்குறு பாங்கி கேளாய்

ஓங்கிநாம் நடக்கும் போது

தீங்கதமாய்ப் பட்சி வந்து

தேங்கியே கட்டு தம்மா !

### வசனம்

''கேளுமம்மா, தோழிமார்களே ! நாம் செலம்திரட்டி வருவதற்கு அவசரமாக நடக்கும்போது, கெடுதியாகப் பட்சிகள் வந்து, தேங்கியிருந்து கட்டுகிறது, நமக்குச் சகுனம் விரோதமாயிருக்கிறது ! பார்த்தையா சகிமார்களே !''

# இரேணுகை சொல் தரு

*இராகம் : மகாரி* *தாளம் : ரூபகம்*

## பல்லவி

406. என்ன செய்வேன் தாதிமாரே? - நான்
ஏது செய்வேன் பாங்கிமாரே?

## அனுபல்லவி

துன்னுமா முனிவர் சொல்லால்
தூயமா நதிக்கு ஏக
வன்னமாம் வலியன் வந்து
மாறிடமாய்க் கட்டு தம்மா! - என்ன

## சரணங்கள்

கன்னிகையே தோழி நன்றாய்க்
கருடனிதோ கட்டுதுபார் !
மாமறையோன் ஒருவனொரு
வணிகனிதோ வாரானையோ !
சொல்லொணா அபசகுனம்
தோன்றுதடி பாங்கிரமாரே !
இத்தனைநாள் இச்சகுனம்
இவ்விடத்தில் கண்டறியேன் !
நித்தநித்தம் இச்சகுனம்
நேரிழையே கண்டதில்லை !

எவ்வகைத் தீங்குவருமோ?

ஏதொன்றும் அறியேனம்மா !

நாயகர்க்கோ? மைந்தருக்கோ?

நானறியேன் ! எனக்கோ?

எவர்களுக்கோ இச்சகுனம்

ஏதொன்றும் தரிசிலனே ! – என்ன

## தோழி இரேணுகாதேவிக்குச் சொல்

### விருத்தம்

407. வரும்விதி அறிய நம்மால்

வழுத்தவும் போமோ அம்மா?

பெருநிதி ஆன உன்தன்

பிராணநா யகர்பூ சைக்கு

அருந்ததி ஜலம்தி ரட்டி

அன்புடன் போவோம் நாமும்

திருமதி நுதல்ப டைத்த

தேவியே நடந்து வாராய் !

### வசனம்

''கேளும் எனது பெருமாட்டியே ! வரப்பட்ட விதிவசத்தைத் தெரிந்து சொல்லுவதற்கு நம்மால் கூடியதல்ல! உமது பிராண நாதருக்குச் சிவபூசை செய்யச் செலம் கொண்டு போகிறதற்குக்

காலதாமத மாகிறது! தடாகத்திற்குப் போவோம்! வாரும், அம்மா தாயே!''

## கட்டியன் சொல் விருத்தம்

*இராகம் : ஆனந்த பைரவி*

408. கங்கையைக் கண்டு மாதர்
கடிதினில் ஸ்நானம் செய்து
பொங்கமாய் அனுஷ்டா னங்கள்
பூசைகள் முடித்துப் பின்பு
திங்களை அணிந்தான் தாளைச்
சிந்தையில் துதிக்க வானில்
மங்கையி னுடனே கந்தர்
வனும்விரை வினில்வந் தானே !

### வசனம்

''அகோ தெப்படி யென்றால், இரேணுகா தேவியும் தாதியும் நதியிலே ஸ்நானம் செய்து, பூசை முடித்துக்கொண்டு கைவிரலால் ஜலத்தைச் சுழற்றுகின்ற போது, ஆகாயத்தில் கந்தர்வனும், கந்தர்வஸ்திரியும் வருகின்ற விதம் காண்க !''

# கந்தருவன் வருகிற

## விருத்தம்

*இராகம் : தோடி*

409. கையினில் வீணை பாட
கனமுறு சிறுகும் ஆட
துய்யகந் தருவ ராசன்
துரிதமாய்ப் பூலோ கத்தில்
நைவிலாப் புண்ணிய தீர்த்த
நதிகளைப் பார்க்க என்று
தையாள் தேவி யோடு
தருக்குடன் வருகின் றானே !

## வசனம்

''இந்தப் பிரகாரமாகக் கையிலே வீணையானது மீட்டிப்பாட, பாரமுள்ள இறகுகள் தோள்மீதிலிருந்து ஆட, பரிசுத்தமான குணமுள்ள கந்தருவ ராஜன் சீக்கிரமாகப் பூலோகத்தில் இருக்கிற குறைவில்லாத புண்ணிய தீர்த்தமுள்ள நதிகளைப் பார்க்க வேண்டும் என்று, தன் மனைவியுடனே சந்தோஷகரமாய் கந்தர்வராஜன் வருகிற விதம் காண்க!''

# கந்தர்வ ராஜன் வருகிற தரு

*இராகம் : கலியாணி*

## பல்லவி

10. இராசகந் தருவச் சித்திர ராசன் வருகிறான் !

## அனுபல்லவி

தேச மணிபுரம் அரசாளும் நாயகன்
வாச தேவியுடனே திசையேக வானதிலே - இராச

## சரணங்கள்

பாரில் வாழ்கின்ற
பரிமளத்திலே மிகுந்த
காரிகை பெற்றெடுத்த
கனபாலர் மூவரிலே
வீரன் **சித்திரசேனன்**
தலைதீரக் கொய்துசென்ற - இராச
சிரத்தில் மகுடம் திசையாளும்
செங்கோலைமலர்க்
கரத்திலே பிடித்துத் துரியன்
கானகத்தில்வர
இரத்திலே முடுக்கி அவனை
உதைத்து விடுத்த - இராச
தேச தேசமெல்லாம்மிக

வாசமா இருக்கும்

மாசில் கின்னரராய்

ராச இந்திரனார்

நேசமாய்ச் சபையில்மிக

வாசமாய் இருக்கும் ! - இராச

## கந்தர்வராஜன் தன் மனைவிக்குச் சொல்

### விருத்தம்

411. தேனயிர்க் கண்டோ உள்தெ

விட்டாத கரும்போ கெண்டை

மீனெனும் நயனம் வானில்

மின்னே இரதியே கண்ணே

நானதி மையல் உற்றேன்

நைகிறேன் மதிதென் காற்றால்

மாநய முடனே இங்கும்

மருவியே அணைவோம் வாராய் !

### வசனம்

''வாரும், என் பிராண நாயகி ! மன்மதனுடைய புஷ்பபாணத்தினால் காமவிகாரம் ஆகினேன் ! அந்த மையல் நீங்கும்படிக்கு நாமிருவரும் கருவி மருவி இன்பம் பெருக விளையாடுவோம், கண்மணியே ! கற்கண்டே ! சர்க்கரையே ! செங்கரும்பே !''

# கந்தருவன் சொல் தரு

**இராகம் : தோடி**

## பல்லவி

412. மதன்கணை மிகவிடுக்கிறான் ! – ஒளிர்
மானே நானினி என்செய்வேன்?

## அனுபல்லவி

அதன மயலாய் வருகுது!
மதன சலமிகப் பெருகுது!
சிதறிப் பாணம் வருகுதே!
தேவியே என்மனம் உருகுதே! – மதன்

## சரணங்கள்

பதறிடாத சொல் கரும்பியே !
பாவையே வருவாய் விரும்பியே !
சித்திரமே நாம் நாடுவோம் !
ரத்தினமே வா கூடுவோம் ! – மதன்
பத்தரை மாற்றுச் சொன்னமே !
சொல்தவறாத அன்னமே !
வந்து நேரம் ஆச்சுது ! – மாதே
வெய்யிலாப் போச்சுது !
சிந்தை மகிழ்ந்து ஏகலாம்
தேவ சபைக்குப் போகலாம் ! – மதன்

## கட்டியன் பொது வசனம்

"அகோ தெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாகக் கந்தருவனும் அவன் மனைவியும் கூடி விளையாடிய சாயலான நிழலைத் தண்ணீரில் பார்த்த ரேணுகா தேவியானவள், தன்னுடன் வந்த தாதிக்குச் சொல்லுகின்ற விதம் காண்க"

## இரேணுகாதேவி, தோழிக்குச் சொல்

### விருத்தம்

413. தாதியே நாமிக் கங்கை
        தன்னிலே ஸ்நானம் செய்து
    தீதிலாச் செலந்தி ரட்டச்
        செறிகக னத்திற் போன
    ஓதிய நிழலைக் கண்டேன்
        உதகமும் திரள வில்லை
    நாதனுக் கிதைஎன் என்று
        நவிலவும் போறேன் அந்தோ !

### வசனம்

"கேளும், எனது சகியே! நாம் இருவரும் இந்தக் கங்கையிலே ஸ்நானம் செய்து பரிசுத்தமான ஜலந் திரட்டும்போது, ஆகாயத்தில் பறந்து கொண்டு போன கந்தருவனுடைய சாயலாகிய நிழல் நீரிலே காணப்பட்டது ! அதன் பின்பு இந்த ஜலமானது, கையில் இத்தனை

நாளாய் எடுத்தது போலத் திரள இல்லையே ! எனது பிராண நாயகருக்கு இதை என்னவென்று நான் சொல்லப் போகிறேன், தோழியே ?"

## இரேணுகை, தோழியுடன் பிரலாபிக்கிற தரு

*இராகம் : ஆனந்தபைரவி* *தாளம் : ஆதி*

### பல்லவி

414. இந்த விந்தைக் கென்னசெய்குவேன்? - தாதிமாரே !
இத்தனைநாள் இவ்வாறில்லையே !

### அனுபல்லவி

வந்திடும் வழியில் பொல்லா
அபசகுனங்கள் காண்டோமே!
சிந்தை தனிலேமிக்க
தயக்கமும் ஆச்சுதே! - இந்த

### சரணங்கள்

சுந்தர மாகஇந் நாளாய்ச்
சுபமாய்த் செலந்தி ரட்டி
அந்த முனிவர் பூசைக்கு
அளித்துமே இருந்தோமே? - இந்த
சம்பிர மாக இந்நாள்
சலத்தைத் திரட்டும் போது

அம்பர மதனிற் றோன்றிய

அதிசயம் கண்ட தாலே - இந்த

திரண்ட தண்ணீர் பிரிந்து

திகைக்குதே எந்தன் மனது

தேவர் பூசைக்கு நாம்

செய்வ தென்னினி மேலே? - இந்த

எந்தன் இறைவ னாலே

இயாது கேடு நண்ணுமோ?

பந்தமாம் சாயல் கண்டு

நொந்தோமே நாமிப் போது! - இந்த

## இரேணுகை தோழிக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : கனடா*

415. என்னுயிர்த் தோழி கேளாய் !

இத்தனை நாளாய் நாமும்

பன்னிய முனிவ ருக்குப்

பருநீரைத் திரட்டித் தந்தோம் !

வன்னமாம் உருவை நீரில்

மகிழுறக் கண்ட தாலே

உன்னியே திரண்ட தண்ணீர்

உற்றிடா தொழிந்து போச்சே !

## வசனம்

"கேளும், என்னுயிருக்கு உயிராகிய தோழிமார்களே ! நாமிது வரைக்கும் ஜலத்தை உண்டையாகக் கீறிக்கொண்டுபோய்ப் பிராண நாதர் பூசைக்குக் கொடுத்தோம் ! இன்று ஆகாயத்தில் பறந்து சென்ற கந்தவரை நீரில் கண்டதில், நம்மிட கற்புக்கு விருச்சனமாகிறது ! தண்ணீருந் திரளாமற் பிரிந்து ஓடிப்போயிற்று ! என்ன செய்வேனம்மா?"

## கட்டியன் சொல் பொது கவி

*இராகம் : தோடி*

416. இவ்விதம் இரேணுகை
ஏங்கியே வருந்தச்
செவ்விய முனிவர்
செய்தியை உரைப்பாம் !

## வசனம்

"இந்தப் பிரகாரமாகத் தடாகத்தில் ஜலந்திரட்டி வரப்போன இரேணுகாதேவி, புலம்பிக்கொண்டு இருக்கும்போது, செவ்வையாகிய தவ மகிமையுள்ள சமதக்கினி முனிவர் ஆசிரமத்தில் நடத்துகிற சங்கதியைச் சொல்லுகிற விதம் காண்க!"

# கட்டியன் சொல்லல் பொது

## விருத்தம்

*இராகம் : தோடி*

417. அரும்புனல் திரட்டிக் கொண்டே
அரிவையும் வராத தாலே
மருவிய வெகுளி ஆகி
மாமுனி ஞான திருஷ்டி
கருதியே உற்றுப் பார்த்துக்
கங்கையில் நடந்த சேதி
தெரியவே அருகி ருக்கும்
சீடருக்கு குரைசெய் வாரே!

## வசனம்

''அகோதெப்படி யென்றால், இரேணுகாதேவியானவள், ஜலந்திரட்டிக் கொண்டு ஆசிரமம் வராதபடியால், சமதக்கினி முனிவர் கோபம் கொண்டு, தமது ஞான திருஷ்டியினால் தியானித்துப் பார்க்கும்போது, அவ்விடத்தில் நடந்த சங்கதி தெரிந்து, அருகிலே யிருக்கும் தன்னுடைய சீடர்களுக்குச் சொல்லுகிற விதம் காண்க!''

## ஜமதக்கினி முனிவர் சீடருக்குச் சொல்

### பரணி

418. அன்பினில் மிகுந்த

அழகுச் சீடர்களே!

இன்புறு பரசு

ராமனை அழைப்பீர்!

### வசனம்

"கேளும், எனது அன்பு மிகுந்த சீடப்பிள்ளைகளே! இன்பமுள்ள குமாரனாகிய பரசுராமனை அழைத்துக்கொண்டு வாருங்களப்பா!"

## சீடர்கள் ஜமதக்கினிக்குச் சொல்

### பரணி

419. முனிநாதாநீர்

மொழிந்த அப்படியே

இனிதாம் பரசு

ராமனை அழைப்போம்!

### வசனம்

''கேளும், முனிநாதராகிய எங்கள் குருவே! தேவரீர் உத்தாரப்படிக்கு நாங்கள் போய் இஷ்டமுள்ள புத்திரனாகிய பரசுராமரை அழைத்துக் கொண்டு வருகிறோம் சுவாமி!''

## சீடர்கள் பரசுராமருக்குச் சொல்

### பரணி

420. ஐயரே போற்றி !

மெய்யதாய் உம்மைத்

துய்ய பண்ணவரும்

பையவே அழைத்தார் !

### வசனம்

''கேளும், பிரமகுவத்தலராகிய பரசுராமரே ! உமது பாதார விந்தமே சரணம்! பரிசுத்தராகிய ஜமதக்கினி மகாரிஷி, உம்மை அவரிடத்திற்கு அழைத்து வரச் சொன்னார், வாரும் ஐயா, சுவாமி !''

## பரசுராமர் சீடர்களுக்குச் சொல்

### பரணி

421. திடமுள என்பிதா

தேடி அழைத்தால்

தடையின்றி யானும்

சலிதியில் வாரேன் !

(சலிதியில் - சடுதியில் - உடனே)

## வசனம்

"கேளும், சீடர்களே ! திடச்சித்தம் பொருந்திய எனது பிதாவாகிய ஜமதக்கினி முனிவர் அழைத்தபடியால், அவரது வார்த்தைக்கு யாதொரு தடையு மில்லாமல் சீக்கிரமாக வருகிறேன் சீடர்களே !"

## பரசுராமர் வருகிற

## விருத்தம்

இராகம் : தோடி

422. தந்தையும் அழைத்த சேதி

தனையனும் காதில் கேட்டு

சிந்தையும் மிகம கிழ்ந்து

சிறந்தஆ பரணம் பூண்டு

முந்தியே ஆயு தங்கள்

முண்டகக் கரத்தில் ஏந்திப்

பந்தமாய்த் திருமண் மின்னப்

பரசுரா மரும்வந் தாரே!

## வசனம்

"இந்தப் பிரகாரமாக, தந்தையாகிய ஜமதக்கினி முனிவர் அழைத்த சங்கதியைத் தனையனாகிய பரசுராமர் காதிலே கேட்டு, மனமகிழ்ச்சி யடைந்து சிறப்பாக ஆபரணாதிகளைத் தரித்துத் தாமரை மலர்போன்ற அஸ்தத்தில் ஆயுதங்களை யெடுத்துக் கொண்டு முகத்திலே திருமண் பிரகாசிக்கப் பரசுராமர் தகப்பனிடம் சீடர்களுடன் வருகிற விதம் காண்க!"

## பரசுராமர் வருகிற தரு

இராகம் : தன்னியாசி

### பல்லவி

423. பாரில் அரசர்களும்

பயந்து நடுநடுங்கப்

பரசு ராமரும்

வந்தார் !

### அனுபல்லவி

ஆரவா ரத்துடனே

ஐயர் அழைத்தசேதி

அதிவிரைவில் ஏறிய

அரசர்யார்க் கும்தெரிய - பாரங்

### சரணங்கள்

எண்டிசையோர் போற்றவே - தந்தையினிட
தொண்டர் பணிந்து ஏற்றவே - நிகரில்லாத
தண்டமிழ் வாணர்கள் அண்டித் துதிபுரிய
முண்டகக் கையிற் படைகொண்டு வேகமதாக - பாரில்
அண்டர்கள் வந்து நாடவே - சூரியகுல
மண்டலீகரும் ஓடவே - கொடியமனத்
துண்டக அவுணர்கள் தெண்டனிட்டுச் சூழ
கண்டக மகிபரெல்லாம் கஞ்சவடியில் தாழ - பாரில்
திருமண் நுதலில் விளங்க - மார்பினிலே
சிறந்த முப்புரி துளங்க - எவர்களுக்கும்
அருமையுள்ள வேதம் அன்புடன் உச்சரித்துப்
பெருமையுடைய தோளில் பிறங்கு துகில்விரித்து - பாரில்

## பரசுராமர் ஜமதக்கினிக்குச் சொல்

### விருத்தம்

124. வேதமோர் நான்கும் ஓர்ந்து
விரும்பியே பூசு ரர்க்குப்
போதனை செய்ய வல்ல
புனிதனே சரணம் போற்றி
மாதவம் தனிற்சி றந்த
மாட்சியாய் விரைவில் என்னை

நீதமாய் அழைத்த சேதி

நிகழ்த்திடும் கனவில் தானே!

### வசனம்

"நான்கு வேதங்களும் குறைவில்லாமற் றெளிந்து தேவரீரை விரும்பிவரும் பிராமணருக்குப் போதனை செய்யும் பராக்கிரமமுள்ள புனிதனாகிய உமது பாதமே சாரணம்! அடியேனை இவ்விடத்திற்கு அழைத்த சமாசாரத்தைத் தெரியச் சொல்லும் என்னுட பிதாவே!"

## சமதக்கினி, பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

425. உரியஎன் தவத்தில் வந்தே

உதித்தஎன் புத்திரனே கேளாய்!

பிரியமாம் உளது தாயும்

பெருநதிக் கேகி அங்கே

அரிகந் தருவன் சாயல்

அறிந்துகற் பழிவ தானாள்!

தெரிவையை வெட்டி நீயும்

சீக்கிரம் வருகு வாயே!

### வசனம்

''கேளும், எனது தவபலத்தினாலே உற்பவித்த புத்திர சிகாமணியாகிய பரசுராமனே ! உனது தாய் இரேணுகை, நதிக்குப் போய்ச் சலம் திரட்டும்போது, ஆகாயத்தில் பறக்கின்ற கந்தருவன் உருவத்தைத் தண்ணீரிலே பார்த்துத் தயங்கினதில், அவளது கற்புக்கு விக்கினமுண் டாச்சுது ! ஆனதால், அவளது சிரசை இப்போது வாங்கிப்போட்டு வாடா, மகனே!

## கட்டியன் சொல் பொது

### பரணி

426. இவ்வணம் தந்தை
இயம்பிய சொற்கேட்டு
ஒவ்விலாச் சுதனும்
உளம்அயர் வானே!

### வசனம்

''இந்தப் பிரகாரமாகத் தந்தையாகிய சமதக்கினி முனிவர் சொல்லிய சங்கதியைக் கேட்ட அவரது புத்திரனாகிய பரசுராமர் மனவருத்தத்துடனே புலம்புகின்ற விதம் காண்க !

## பரசுராமர் புலம்பல்

*இராகம் : புன்னாக வராளி*

427. அரிஅரி நான்என்ன செய்வேன்? - அன்னையைக்

கொல்லவும் காலம் ஆச்சுதே! - நெறி போச்சுதே !

பெரிய தவம் செய்து பேரரசி தன்னை

வெட்ட லாகுமோ - பழி போகுமோ?

தந்தைசொல் தடுத்தேனானால் வந்திடுமே

சாபமையோ மாயனே - கனி வாயனே!

சிந்தையும் மகிழ்ந்தே எனைத்தந்த அன்னையை

எப்படி வெட்டுவேன்? - புகழ் தட்டுவேன்?

நானிலம் எல்லாம் பழிக்க - தாதையும்

நானும் செழிக்க ஞாயமோ? - என்ன மாயமோ

மானனை விழியாள் என்தாய்க்காகும் - இப்படி

என்றேமுன் வரைந்ததோ? - தலையில் கரந்ததோ?

மைந்தன் தன்கையால் மாதா சிரம்மாள - என்றுநீ

இட்டதோ மறையவா - என்தன் இறையவா

நிந்தை என்ன செய்தோ - இந்த

சுந்தரி வயிற்றினில்யான் நேர்ந்தனே - களி கூர்ந்தனே!

இப்படிக்கு நடக்கவே எந்தனை யனுப்பி

விட்டாய் ஏகனே - வை போகனே!

ஒப்பிலாம லேயிந்தத் தப்பிதம் எனக்குவர

உண்மையோ? - இதுவும் தன்மையோ?

# பரசுராமன் சொல்

## கட்டளைக் கலிப்பா

*இராகம் : புன்னாகவராளி*

428. ஐயினே எனையாள் பரமாத்மனே
அழகிய படையைந்துள மாதவா!
வெய்யஇந்த விதிக்கென்ன செய்வேன்?
வேட்கையாய்ப் பெற்ற அன்னையை வெட்டிட!
துய்யனே ஜமதக்கினி சொல்லினார்
துணிவுடன் அதையின்று தடுத்திடில்
வையகம் பழிச்சல் பெருஞ்சாபமும்
வந்து நேர்ந்திடும் மாழ்கிய லையவே!

## வசனம்

''அரிஅரி சர்வேஸ்வரா,ரட்சிக்கும் பரமாத்மனே! அழகிய பஞ்சாயுதங் கொண்ட மாதவா! கொடிதாகிய இந்த விதிக்கு என்ன செய்யப் போகிறேன்? ஆசையுடனே பெற்று வளர்த்த தாயாரை வெட்டும் படிக்கு என் தந்தையாகிய ஜமதக்கினி முனிவர் சொல்லுகிறாரே! துணிவாக அவரது வாக்கைத் தடுத்துச் சொன்னால், இந்த உலகம் பழிக்கும்படிக்குச் சாபமும் வந்து நேர்ந்து வருத்தப்பட வேண்டுமே? என்ன செய்வேன் சுவாமி ஐயா, அரி அரி?''

# கட்டியன் சொல்

## பொது விருத்தம்

இராகம் : தோடி

429. தீரமும் பலமும் வீறும்
சிறுவனாம் பரசு ராமன்
வாரமாய்ப் பெற்ற தாயை
வலிதினில் வெட்டப் போகும்
நேரமவ் வனத்தில் வாச
நிருதியும் அவள்ப யந்த
ஆரபுத் திரனும் ஆங்கே
துரிதமாய் வருகின்றாரே!

### வசனம்

''அகோதெப்படி யென்றால், தைரியமும் பராக்கிரமும் பொருந்திய சிறுவனான பரசுராமன் அன்பாகப் பெற்று வளர்த்த தாயை வெட்ட வரும்போது, அந்தக் காட்டிலே வாசம் செய்திருக்கும் இராட்சசியும் அவள் பிள்ளைகளும் வருகிற விதம் காண்க!''

# இராட்சசி வருகிற

## விருத்தம்

**இராகம் : மோகனம்**

**430. அளகம் செவ்வலரி போல**
**அடர்ந்த பல்பிறையை ஒத்த**
**கிளர்இராட் சசிஒ ருத்தி**
**கேதம்செய் மைந்த ரோடே**
**களத்தினில் திரிந்து பிரேதம்**
**கண்டதைப் புசிப்போம் என்று**
**இளைப்புடன் னிருதி ஆங்கே**
**இக்கணம் வருகின் றாளே!**

## வசனம்

''இவ்விதம் பரசுராமர் வரும்போது, செவ்வலரிப் பூவைப் போல மயிரும், மூன்றாம் பிறைபோலும் தந்தமுமுள்ள ஒரு இராட்சசி, கொடிய காரியங்கள் செய்யும் பிள்ளைகளுடனே இரணகளத்திற்குப் போய்ப் பிணங்களைப் புசிக்க இராட்சசி அவ்விடம் வருகிற விதம் காண்க!''

# இராட்சசிவருகிற தரு

*இராகம் : சங்கராபரணம்*

## பல்லவி

431. அரக்கி வந்தாளே - அசுரரோ(டு)
அரக்கி வந்தாளே!

## அனுபல்லவி

பெருத்த மைந்தோ
டுருத்தி கானிலே
வெருக்கொ ளாமலே
சிரித்த முகமாய் - அரக்கி

## சரணங்கள்

அட்டகாசம் செய்தால்
அண்டம் இடித்திடும்
முட்டினாலும் வெற்பு
முழுதும்தூள் ஆகுமே!- அரக்கி
சத்த சாகரத்தை
வற்றிடச் செய்பவள்
சுத்த மேகங்களைப்
பற்றியே பிழிபவள்! - அரக்கி

இருடிகள் உடம்பினை
உருசியென்று மெத்தப்
பரிவுடன் பட்சிக்கத்
துரிதமுடனே எத்தி! - அரக்கி
பிள்ளைகள் ஆயுத
பாணிகளாய்ப் பிறங்கி
நள்ளிடு கானிலே
நண்ணிவேட்டை ஆட - அரக்கி

## கட்டியன் வசனம்

''அகோதெப்படியென்றால், இராட்சசியானவள், காட்டிலே வேட்டை யாடிக்கொண்டு, அவள் பிள்ளைகளுடனே இருக்கும்போது, பரசுராமன், தன்னைப் பெற்ற தாயாராகிய இரேணுகையுடன் சொல்லுகிற விதம் காண்க!''

## பரசுராமன் தாயருக்குச் சொல்

### விருத்தம்

432. திங்களைப் போல்வி ளங்கும்
திருமுகம் உள்ள தாயே
துங்ககந் தருவன் சாயல்
சொகுசுடன் கண்ட தோஷம்
பொங்கமாம் உனது கற்பு
போச்சுதாம் அதனால் உன்னைத்

தங்காமல் வதைக்கச் சொன்னார்
தான்ரண களத்தில் வாராய்!

## வசனம்

"கேளும், எனது மாதாவே! நீ ஜலத்துக்கு வந்தவள், கந்தருவன் சாயலைக் கண்டு அதிசயப்பட்டையாம்! அதனால் உமது கற்பு அழிந்து போச்சென்று உனது சிரசைத் துணிக்கும்படி, என் தந்தை அனுப்பினார் ! நீர் இரணகளம் வாருமம்மா, தாயே!"

# கட்டியன் சொல்

## பொது விருத்தம்

*இராகம் : தோடி*

433. விப்பிர குலஉத் துங்க
விடலையின் வசனம் கேட்ட
மைப்புயல் அளக முற்ற
மங்கைரே ணுகையும் அப்போ
எப்படி உய்வோம் என்று
இதயமும் மிகக்க லங்கி
செப்பிஇராட் சசிஇ டத்துச்
சேர்ந்திதைப் புலம்பு வாளே!

### வசனம்

''இந்தப் பிரகாரம், விப்பிர, குலனான பரசுராமரின் வார்த்தையைக் கேட்ட மேகம் போன்ற கறுத்த கூந்தலுள்ள இரேணுகையும், இனி எப்படி யுயிர் வாழப்போகிறோ மென்று மனது மிகுதியாகக் கலங்கி, அருகில் காட்டினிடமாக இருந்த இராட்சசி பக்கலில்போய்ச் சொல்லுகிற விதம் காண்க!

## இரேணுகை, ராக்ஷசிக்குச் சொல்

### விருத்தம்

434. சந்திரன் போலே கோணல்
தந்தமார் நிருதி கேளாய்!
மைந்தன்என் தனைஇப் போது
வாளினால் வெட்ட வாரான்!
அந்தமாய் உன்னி டத்தில்
அடைக்கலம் புகுந்தேன் வாடி
எந்தனைப் பாது காத்தே
இரட்சிக்கும் கடன்உ னக்கே!

### வசனம்

''கேளும், மூன்றாம் பிறை போலும் தந்த வரிசையுள்ள இராக்ஷசியே!என் பிள்ளை பரசுராமன் இப்போது வெட்ட வருகிறான்! அதற்குப் பயந்து வந்து உன்னிடத்தில்

அடைக்கலமானேன்! எனக்கு உயிர்ச்சேதம் வாராமல் காத்து இரட்சிக்கிறது உன்னுடைய கடமையாயிருக்கிறது, அரக்கியே!''

## அரக்கி, இரேணுகைக்குச் சொல்

### விருத்தம்

435. அப்படித் தானே நல்ல(து)
ஆகட்டும் பயப்ப டாதே
சொற்படி உனைஇப் போது
துரிதமாய் வெட்ட என்று
விற்பிடித் தோடி வார
வீரனாம் பரசன் தன்னைக்
கைப்பிடி யாய்ப்பி டித்துக்
கட்டவே சொல்வேன் அம்மா!

### வசனம்

''வாருமம்மா, இரேணுகையே! நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை! ஜமதக்கினியின் சொற்படிக்கு உன்னை வெட்ட வருகிற உன் குமாரனாகிய பரசுராமனை என் பிள்ளைகளைவிட்டுக் கைப்பிடியாகப் பிடித்துக் கட்டிப் போடும்படி சொல்லுகின்றேன் அம்மா!''

## அரக்கி பிள்ளைகளுக்குச் சொல்

### விருத்தம்

436. கம்பனே இடும்பா டும்பா
காளையே குருதிக் கண்ணா
வம்பனே சம்பு வீரா
மாசிலாப் பருதிக் கண்ணா
கும்பலாய் நீங்க ளுந்தான்
கூடியே நின்றி ருந்து
தம்பனாம் பரசு ராமன்
தன்னையே கட்டி வாரும்!

### வசனம்

''அடாவாடா, கம்பா, குடும்பா, இடும்பா ரத்தக்கண்ணா, கரியக்கண்ணா, நீங்கள் கும்பலாய்ப் போய், அதோ ஓடி வருகிற முனிகுமாரனான பரசுராமனைப் பிடித்துக் கட்டிக் கொண்டு வாருங்களடா, மைந்தர்களே!''

## பிள்ளைகள் அரக்கிக்குச் சொல்

437. அன்னையே ஓடி வார
வன்னமார் பரசு ராமன்
தன்னையே யாம்பி டித்துன்
முன்னிலே கட்டு வோமே!

**வசனம்**

''கேளும், எங்கள் மாதாவே! இரேணுகா தேவியை வெட்ட வேண்டி ஓடி வருகிற வலிமையுள்ள பரசுராமனை நாங்கள் பிடித்து உன் முன்னமே கட்டிப் போடுகிறோம்! நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் தாயே!''

## கட்டியன் சொல் பொது

**பரணி**

*இராகம் : மோகனம்*

438. தாயினுக் கிவ்விதம்
சாற்றியே சிறுவர்
தூயரா மன்முனம்
தொடுவழக் குரைப்பார்!

**வசனம்**

''இந்தப் பிரகாரமாகத் தாய்க்குத் தைரியம் சொல்லி, அவள் குமாரர்கள் பரிசுத்த குணமுள்ள பரசுராமர் முன் வந்து, எதிர்த்துத் தொடுவழக்குப் பேசுகிற விதம் காண்க!''

# பரசுராமருக்கும், அரக்கி பிள்ளைகளுக்கும் தருக்கம்

## தரு

*இராகம் : ஆனந்த பைரவி*

439. **அரக்கன் :**

ஆரடாநீ அதட்டி வருகிறாய்? - கானகத்தில்

அறிய எனக்குத் தெரியச் சொல்லடா! - முனி குமாரா!

**பரசுராமர் :**

சொல்லுமென்று என்னைக் கேட்கிறீர், - இராக்ஷதர்களே!

சொந்த மாதாவைத் துணிக்கப் போறேண்டா - துஷ்டப்பயலே!

**அரக்கன் :**

பெற்ற மாதாவை வெட்டப் போகிறாய்! - உந்தனை இப்போ

பிடித்துக் கட்டவந்தோம் யாங்களே - முனிகுமாரா!

**பரசுராமன் :**

கட்டினால்உன்னை வெட்டி எறிவண்டா! - அடா இராக்ஷதர்களே!

ஒட்டிப்பிழைத்தே ஓடிப்போங்கடா! - அடா துஷ்டப்பயலே!

**அரக்கன் :**

ஓடிப்போங்கள் என்று சொல்லுகிறாய்; - முனிகுமாரா
உன்னைக்

கடித்துத் தின்று போடுவோம்! - அடா பரசுராமா!

**பரசுராமர் :**

தின்னும் வாயைக் கிழித்து எறியவே - நவியம்

தண்ணம் தொடுக்கிறேன்பார் உங்கள் மீதிலே -
இராக்ஷதர்களே!

**அரக்கன் :**

தொடுத்த பாணம் நவியந் தண்ணத்தை - யான் விலக்கி
இப்போ

துவத்திப் பஞ்சாகப் பறந்து போகவே

தொடுத்தேன் பாராய் தூணியாவத்தை - அடா இராக்ஷதர்களே!

**அரக்கன் :**

விருத்ததூணி யவத்தைக் கையாலே - இதோ

பிடித்தெறிந்து விட்டேன் பாராய் சுரிகைக் குறும்பிடி -
பரசுராமா!

**பரசுராமர் :**

பரசு என்கிற பாணம் வருகுது! - இராக்ஷதர்களே!

பாவிகாலன் புரமேயோடுவீர் - அடா துஷ்டப்பயலே!

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

*இராகம் : தோடி*

440. இப்படி இலட்சம் பேரை
　　எதிர்த்துப்போர் செய்து கொன்றான்
செப்பமாய்க் காப்பேன் என்ற
　　தீங்குறும் அரக்கி யோடு
தப்பிலா தாயும் சேர்த்துத்
　　தனித்தனி சங்க ரித்துக்
கொப்பெனத் திரும்பும் போது
　　குணவசு மன்னன் வந்தான்!

## வசனம்

"அகோதெப்படி யென்றால், காட்டிலே எதிர்த்துச் சண்டை செய்த இராக்ஷதர்கள் இலட்சம் பேரையும் சங்கரித்து, இரேணுகையையும் அவளை ஆதரித்த இராக்ஷசியையும் சங்கரித்துப் பரசுராமர் அதிசீக்கிரமாகப் பிதா இடத்திற்கு வருகிற போது, அவனது தம்பியாகிய குணவசு மன்னன் நடுவழியில் வருகிற விதம் காண்க!"

# இதுவும் கட்டியன் சொல் பொது

## விருத்தம்

இராகம் : தோடி

441. தந்தைசொற் படியே ராமன்
தாய்தனை வதைக்கப் போன
நிந்தையைக் கேட்டு நெஞ்சில்
நிகரிலா வெகுளி யாகி
தந்திரமாய்ப் பார்ப்போம் என்று
சகலஆ யுதங்கள் கொண்டு
மந்திர முனிவர் அஞ்ச
வசுமன்னன் வருகின் றானே!

## வசனம்

"அகோதெப்படி யென்றால், தந்தையாகிய ஜமதக்கினி சொல்லிய படிக்குப் பரசுராமன், தாயாரான இரேணுகையை வெட்டும்படி போன நிந்தையாகிய வார்த்தையைக் கேட்டு, மனத்தில் அதிகக் கோபமானது பிரவேசித்துத் தந்திரமாகச் சில காரியங்களைப் பார்ப்போ மென்று யுத்தம் செய்வதற்குரிய எல்லா ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு பயங்கொள்ளும் படிக்கு வசுமன்னன் வருகிற விதம் காண்க!"

# வசுமன்னன் வருகிற தரு

இராகம் : மத்தியமாவதி

## பல்லவி

442. வசுமன்னன் வந்தானே! - அதிவேகமாய்
வசுமன்னன் வந்தானே!

## அனுபல்லவி

அசைவில்லாப் புகழும்
பராக்கிரமும் இந்தத்
திசையெங்கும் பரவிய
ஜமதக்கினி தந்த - வசு

## சரணங்கள்

கரத்தில் அநேகமான
கனத்த ஆயுதத்துடன்
உரத்த இராமன்தன்னை
உருத்திக் காணஎன்று - வசு

ஐயன் உரையால் தன்னை
அளித்த வன்னைசிரம்
கொய்யுவேன் என்றுபோன
கொற்றவனைத் தடுக்க - வசு

அப்படி அவன்செய்தால்

அவன்சிரம் விழச்செய்வேன்

இப்படிச் செய்யவா

இவனைப் பெற்றதென்று - வசு

நெஞ்சினிலே வெஞ்சினமே கொண்டு

கஞ்சமுகமதில் விஞ்சவும் வேர்க்கவும் - வசு

## கட்டியன் வசனம்

"வசுமன்னனானவன், அதிகக் கோபமாக வந்து, தமையனாகிய பரசுராமனைத் தாயை வெட்டியதைப் பற்றிக் கேட்கின்ற விதம் காண்க!"

## வசுமன்னன் பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

443. அன்னைதன் சிரம்து ணிக்க

அருளிய தந்தை சொல்லை

முன்னிநீ தள்ளி யாமல்

முடியது துணித்து விட்டாய்

என்னையோர் பேச்சுத் தானம்

என்வந்து கேட்ட வில்லை

பன்னிய தோஷம் என்ன

பகருவாய் எனக்கிப் போதே!

## வசனம்

"கேளும், தமையனே! தாயினுடைய சிரசை வெட்டிவரும்படி, தகப்பன் சொல்லியதை நீர் மனத்திலே யோசித்துப் பார்த்துத் தள்ளிவிடாமல், நமது தாயாச்சுதே என்று நினையாமல், சங்கரித்துவிட்டாய்! அப்படிச் செய்ய உமக்கு எண்ணமிருந்தாலும் என்னை ஏன் கேளாமற் போனாய்? அவள் பேரில் ஏற்பட்ட தோஷம் என்ன? இப்போது எனக்குத் தெரியும்படிக்குச் சொல் தமையனே!"

## பரசுராமர் வசனம்

"அப்படியே சொல்லுகிறேன் மனம் பொறுத்துக்கேளும் வசுமன்னனே!"

## பரசுராமருக்கும் வசு மன்னருக்கும் தர்க்கம்

### கண்ணிகள்

*இராகம் : நாட்டைக்குறிச்சி* *தாளம் : ஆதி*

444. **வசுமன்னன் :**

சொந்த மாதாவைக்
கொல்லத் துணிந்ததோ?
உந்தனுக்குத் தோஷமென்ன
சொல்லடா என்தமையா!

**பரசுராமன் :**

அந்தமாம் தந்தைசொல்லால்
அன்னையை வெட்டினேன்
யானதற்குத் தோஷமென்ன
சொல்வாய் வசுமன்னா?

**வசுமன்னன் :**

துஷ்ட முனிவன்பேச்சை
நிச்சயமதாக எண்ணித்
துணிந்து வெட்டலாமோ
என் தமையா?

**பரசுராமன் :**

கஷ்டமாய்ப் பெற்றபிதாவை
துஷ்ட முனிவனென்று
கடிந்து கொள்ளலாமோ
வசுமன்னா?

**வசுமன்னன் :**

கெட்ட முனிவன்தன்னை
நெட்டாகப் பேசுகிறாய்
துட்டல் பயலேபோடா
பரசு ராமா!

**பரசுராமன் :**

கெட்ட முனிவன்என்று
சட்டை பண்ணாமல்

நீயும் துஷ்டப்பேச்சுப்

பேசாதே சபித்திடுவார்!

**வசுமன்னன் :**

சாபம் வந்தேஎந்தன்

தலையை அறுத்திடுமோ?

பாவி அப்புறம்போடா

பரசு ராமா!

**பரசுராமன் :**

பாவி போடாஎன்று

பதறிப் பேசுகிறாய்!

கோபம் வந்தால்உன்னைக்

கொல்லுவேன் பாராய்!

**வசுமன்னன் :**

கொல்லுவேன் என்றுகுதிக்கிறாய்! - மாதாவைக்

கொன்ற பாவியுனக்குக் கோபமேன்? போடா!

**பரசுராமன் :**

போடா என்று

என்னைப் பினத்துறாய்! - உன்மேலே

புகழாம்பரிதி

இதோ விடுகிறேன் பாராய்!

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

இராகம் : மோகனம்

445. புயபலத் தினில்மி குந்த
புகழுள பரசு ராமன்
இயலுடன் மனதில் சற்றும்
இரக்கமில் லாமல் போர்செய்(து)
அயலிலர் தம்பி தன்னை
ஆவியைப் போக்கி விட்டு
பயமுடன் தம்பி தாயைப்
பார்த்துமே புலம்பு வானே!

## வசனம்

"இந்தப் பிரகாரம் புஜபல பராக்கிரமத்தில் சிறந்த கீர்த்தியுள்ள பரசுராமன் தன் மனத்தில் கொஞ்சமாவது ஈவிரக்கம் இல்லாத கொடிய மனத்துடன் யுத்தம் செய்து, வேற்றுமையில்லாத கூடப் பிறந்த தம்பியை உயிரைப் போக்கிவிட்டு அதன்பின்பு தன்கோபம் தணிந்து, தாயையும் தம்பியையும் நினைந்து பரசுராமர் புலம்புகிற விதம் காண்க!"

## பரசுராமர் இரங்கல்

இராகம் : ரூபகம்

### கண்ணிகள்

446. அரகரா சிவனே என்னை
ஆதரியும் நாரிபாகா!
திரிபுரம் எரித்தசோதி
சிறியவன்நான் என்னசெய்வேன்?
பெற்றதாய் அனுஜனையும்
பிஞ்சகனே கொன்றுவிட்டேன்!
பற்றிலா திலகும்ஐயா
பாவமதைத் தீருமய்யா!
கொல்லமாட்டேன் என்றுசொன்னால்
வல்லவர் சாபம்வருமே?
தல்லிமையான் கொன்றதோஷம்
அல்லலை அகற்றுமையா!
கூற்றுவன் தனையுதைத்த
கோகனப் பாதத்தோனே
ஏற்றுவா கனத்திலே
ஏறுமன்புறு சோதியே!
என்துயரைத் தீரும்ஐயா
இமையவர்க் கரியதேவே!

மன்றலமரும் கருக்கை

மாலையணி வேணியானே!

பார்வதிக்குப் பாகமீந்த

பரம்பொருளே பாதுகாப்பாய்

சீர்வதியவே எனக்குச்

செவ்வையுற அருள்புரிவாய்!

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

*இராகம் : தோடி*

447. அருமையாய்த் தவத்தைச் செய்தே

அளித்த அன்னையின் எழிற்சேர்

சிரத்தையும் உடன்பி றந்த

திறத்தம்பி மாரை உள்ளம்

உறுத்தியே அறுத்த வீரம்

உடையநற் பரசு ராமன்

கருத்தினில் வருத்தம் நண்ணிக்

கனபிதா உடன்செல் வானே!

### வசனம்

"இந்தப் பிரகாரமாகச் சொல்லுதற்கு அருமையான தவத்தைச் செய்து பெற்ற தாயினுடைய சிரத்தையும் தன்னுடன் கூடப் பிறந்த

தம்பியினுடைய சிரத்தையும் அறுத்து வீரத்துவமுள்ள பரசுராமன் தன் உள்ளத்தில் எண்ணி வருத்தமுண்டாகித் தகப்பனிடம் வந்து சொல்லுகிற விதம்!''

## பரசுராமன் ஜமதக்கினிக்குச் சொல்லுகின்ற

### எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

*இராகம் : முகாரி*

448. சித்தமதில் மூவாசைக் கடலை நீங்கித்
திறமாக மெய்ஞ்ஞானத் தினில்நின் றோர்க்கு
முத்தியளிக் குங்கங்கை அணிந்தோன் தாளை
முன்னியன் பினிற்பணியும் முனிவ ராமன்
அத்தனே உமதுரையைச் சிரத்தில் வைத்து
அன்னையையும் தம்பியையும் வெட்டி வந்தேன்
சித்தம் வைத்து எந்தனுக்குக் கிருபை செய்து
செகத்தினில்எந் நாளும்வைகச் செய்கு வீரே!

### வசனம்

''கடல் போலும் அளவில்லத மூன்றாகிய மயக்கத்தை நீக்கி அமைவாக மெய்ஞ்ஞானத்தைச் சித்தத்தில் நிலைப்படுத்தி நின்றோர்களுக்கு முத்திஸ்தலத்தைக் கொடுக்கும் பரமசிவனது திருவடியைத் தியானித்து அன்பினால் வணங்கும் மகா ரிஷியாகிய எனது பிதாவே! உமது வார்த்தையை என் சிரமேற் கொண்டு,

தாயையும் தம்பியையும் வெட்டிப்போட்டு வந்தேன்! மனத்தில் தயவுண்டாகி அருள் செய்து, பூமியின்கண் எப்போதும் இருக்கச் செய்யவேணும் தந்தையே!''

## ஜமதக்கினி பரசுராமருக்குச் சொல்

### பரணி

449. செப்பிய வடிவே
ஒப்பியே செய்தாய்
அப்பனே உன்னிஷ்
டப்படி வரங்கேள்!

### வசனம்

''வாரும் அப்பா, பரசுராமா? நான் சொல்லிய பிரகாரம் சம்மதித்துச் செய்தபடியால் உனக்கு இஷ்டமுள்ள வரங்கள் கேட்டுக் கொள், புத்திரனே!''

## பரசுராமன் தகப்பனுக்குச் சொல்

### பரணி

450. வையகம் புகழும் எந்தன்
ஐயனே தம்பி தாயை

மெய்யுடன் எழுப்ப வேணும்

ஸ்பயவே வாக்குத் தாரும்!

### வசனம்

"சரணம், சரணம் தந்தையே!என்னுடைய கையினால் மடிந்த தாயையும் தம்பியையும் எழுப்பவேணும்! வாக்குத் தரவேணும் சுவாமி!"

## ஜமதக்கினி பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

451. மைந்தருக் குள்ளே மாட்சி

வாய்ந்தகண் மணியே வாடா

சுந்தர மாக வரத்தைச்

சூட்சும மதாகக் கேட்டாய்

சுந்தநற் ஜலந்த ளித்துக்

சுழறும்இம் மந்திரம் ஓதி

இந்தாஇப் பிரம்பால் தட்டி

எழுப்பி நீ வருடு வாயே!

### வசனம்

"கேளும், எனதுபுத்திரருக்குள்ளே பெருமைபெற்ற கண்மணி போன்ற பரசுராமா, நீகேட்ட வரம் எனக்குச் சந்தோஷமாச்சுது! நீ கிட்டவா, நான் சொல்லுகிற மந்திரத்தைத் தெரிந்து கொள்ளு, இந்த

மந்திரத்தை துதி ஜலத்தைத் தெளித்து நான் கொடுக்கும் பிரம்பினால் தட்டினால் உயிர் பெற்று வருவார்கள்! அழைத்துக் கொண்டு வாருமப்பா!''

## பரசுராமர் ஜமதக்கினிக்குச் சொல்

### விருத்தம்

452. தந்தையே உமது செய்யத்

தாட்டுணைக் கமலம் போற்றி

சிந்தையும் மகிழ்ந்தெ னக்குச்

செம்பிய உயிர்கொ டுக்கும்

மந்திரம் உணர்ந்தேன் தீர்த்தம்

மகிமையாம் பிரம்பும் பெற்றேன்

நிந்தையா மாண்ட பேரை

நேசமாய் அழைத்து வாரேன்!

### வசனம்

''கேளும், எனது தந்தையே! உமது தாமரை மலர் போன்ற பாதமே சரணம்! தேவரீர் மகிழ்ச்சி கூர்ந்து, உபதேசித்த சஞ்சீவி மந்திரத்தைத் தெரிந்துகொண்டேன்! கமண்டல ஜலமும் பிரம்பும் பெற்றுக் கொண்டேன்! நிந்தையாய் மாண்டு இருக்கிற தாயையும் தம்பியையும் எழுப்பி அழைத்து வருகிறேன் பிதாவே!''

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

*இராகம் : கலியாணி*

453. தந்தைசொல் மந்தி ரத்தைத்
தனையனும் கற்று ணர்ந்து
சிந்தையிற் களிப்பு நண்ணிச்
சீக்கிர மாகச்சென்று
அந்தமாம் அரக்கி தேகத்
தன்னையின் சிரத்தை வைத்து
முந்தனை உடல ரக்கி
முகம் வைத்தே எழுப்ப லுற்றான்!

## வசனம்

''அகோ தெப்படி யென்றால், தந்தையாகிய ஜமதக்கினி முனிவர் சொன்ன மந்திரத்தைப் பரசுராமர் மனதிலே யறிந்து சந்தோஷம் அடைந்து, சீக்கிரமாகப் போய் இராக்ஷசி தேகமும் அன்னையாகிய இரேணுகையின் முகமும், இராக்ஷகி முகமும் ரேணுகைத் தேகமும் ஒன்றாக வைத்து மந்திரம் சொல்லி, நீரைத் தெளித்துப் பிரம்பினால் தட்டி எழுப்பினார் என்றறிக!''

## பரசுராமர் சொல் பரணி

*இராகம் : தோடி*

454. ஓம் நீலகண்டா போற்றி!

ஓம் காலகாலா போற்றி!

ஓம் சிவப்பொருளே போற்றி

ஓம் சிவமே உயிரதுதாராய்!

## கட்டியன் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

455. வலிவுட னேபோர் செய்தே

மடிந்ததா னவர்இ னத்தைச்

சலமுடன் அமர்பு ரிந்த

தம்பிமார் தனையும் இந்த

நிலமதில் அங்கு மாண்ட

நிலயுள ஆத்து மாக்கள்

பலரையும் எழுப்பித் தம்பி

பகரனை உடனும் வந்தான்!

### வசனம்

''அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக யுத்தம் செய்து மடிந்த இராக்ஷசர்களையும் தம்பிமாரையும் அந்தக் களத்தில்

அப்போது இறந்த மற்றவர்களையும் எழுப்பி அனுப்பிவிட்டுத் தாயாரையும் தம்பிமாரையும் அழைத்துக் கொண்டு, ஜமதக்கினி முனிவரிடம் வந்துநிற்க, அவர் சொல்லுகிற விதம் காண்க!''

## ஜமதக்கினி பரசுராமருக்குச் சொல்

### கவி

456. அப்பனே உனதுதாயின்
ஒப்பனை உளசரீரம்
இப்படி மாறினத்தால்
தப்பித மாகப் போச்சே!

### வசனம்

''கேளுமப்பா, பரசுராமா! உன் தாய் ரேணுகையின் அலங்காரமான தேகம் மாறி, அரக்கி தேகத்தை வைத்து எழுப்பினதில் குற்றமுண்டாச்சுதே! என்ன செய்கிறது மகனே?''

## பரசுராமன் சொல் தரு

இராகம் : கௌடா

### பல்லவி

457. தப்பிதம் வந்ததையோ- எந்தனாலே
தப்பிதம் வந்ததையோ!

## அனுபல்லவி

தப்பிதம் வந்தது செப்புகிறேன் என்மேல்
கொப்பெனப் பணிகிறேன் ஒப்பிநீர் ஆண்டிடும்! -தம்பி

## சரணங்கள்

முந்தி தலைவிதியோ உந்தனுக்கு
வந்த தெனக்கு மதியோ?
சிந்தை தளர்ந்துநான்
 செப்பவும் கேட்கிலை
வந்த துனக்கிந்த
 வாறுநான் என்செய்வேன்?-தம்பி

அத்தனே என்செய்வேனே - பிறையணி
 கத்தனே நம்பினேனே!
பத்தன் பத்திக்கிந்தப்
 பாவம் வந்ததேது?
சித்தம் வைத்தாளவே
 செய்வாய் சிவகுருவே!-தம்பி

மெய்யிலே இக்கறுப்பாய்- வந்த குற்றம்
 அய்யனே நீபொறுப்பாய்!
தையலென் அன்னையால்
 சற்றும் பிசகில்லை
பையலென்னால் இந்தப்
 படியே விளைந்தது!-தம்பி

## ஜமதக்கினி, பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

458. மைந்தனே புலம்ப வேண்டாம்
மகிழுள பரசு ராமா!
சுந்தரக் கமலக் கண்ணன்
தொலைமுப் பிறப்பு தந்தான்
அந்தமாம் ஒருபி றப்பு
இங்காச்சின்ன மிரண்டு ஜென்மம்
பந்தமாய்ப் பிறக்க வேணும்
பாரினில் உன்தா யப்பா

### வசனம்

''கேளும், எனது புத்திரனாகிய பரசுராமா ! நீ மன வருத்தப்பட வேண்டாம்! ஆதிநாளையில் கமலக் கண்ணனாகிய விஷ்ணுவானவர் உன் தாய்க்கு மூன்று செனனம் எடுக்கும்படி செய்திருக்கிறார்! அதில் ஒரு செனனம் இவ்விடத்தில் ஆச்சுது, இன்ன மிரண்டு ஜெனனம் எடுக்க வேணும் உன் தாய்! அதற்கு நான் என்ன செய்வேன் குமாரனே?''

## பரசுராமர், ஜமதக்கினிக்குச் சொல்

### விருத்தம்

459. ஈங்கிரே ணுகை என் தாயர்க்(கு)
இதுவரையி லும்ந டந்த

பாங்கினை அறிந்து கொண்டேன்

பண்புடன் வைய கத்தில்

தாங்கிய இரண்டு சென்மம்

தையலாய் அவத ரித்தே

ஆங்கமை யும்வி தத்தை

அடியனுக் குரைசெய் வீரே!

## வசனம்

''கேளும், எனது பிதாவே! இவ்விடத்திலே என் தாயார் இரேணுகைக்கு இதுவரையில் நடந்த விருந்தாந்தம் தெரிந்து கொண்டேன்! பண்பாக உலகத்தில் இனி யிரண்டு ஜன்மம் பெண்ணாக ஜெனன மெடுத்து, அந்த இடத்தில் நடக்கப் போகிற காரியங்களை எனக்குச் சொல்லி யருள வேணும் எனதன்புள்ள தந்தையே!''

## ஜமதக்கினி பரசுராமருக்குச் சொல்

## அகவல்

460. சீர்பெறும் எந்தன் செல்வனே கேளாய்

தார்பெறு சுரியல் தையலி ரேணுகை

முற்சன னத்தில் மொழியாதி சேடன்

நற்சுதை யாக நனிநாக வல்லி

என்றொரு பெயருடன் எய்தியே பிருகு
மன்றன் மனைவியாய் வாய்ந்துறை போது

திருமூர்த் திகளும் சேவை யளித்து
அரிவரத் தாலே ஆரணி யத்தில்

வன்மீ கத்திடம் மாதென உதித்து
நன்மலை அரசன் நகரினில் வளர்ந்து

எழிலிரே ணுகைப்பேர் எய்திஎன் தனையும்
பொழிலுடன் விவாகம் புரிந்துஉம்மை ஈன்றாள்

இனியொரு செனனம் இயலுள கோசலத்
தனிநா டாளும் தலைவன் தவத்தில்

பெண்ணென உதித்துப் பேர்கோ சலையென
நண்ணிய தயரத நராதிபன் மனைவியாய்

இசைந்திவள் வயிற்றில் இராமன்என் றேமால்
பசையவ தாரம் பண்புடன் செய்வார்

பின்புதிண் டிறல்சேர் பேர்**உக்கிர சேனன்**
தன்பின்ன வனெனும் தகைமையுள தேவகன்

புத்திரி யாகிப் புகலரும் **தேவகி**
மெய்திரு நாமம் மேவியே வளர்ந்து

வசுதே வருக்கு மாலை புனைந்து
இசையுடன் வாழ்நாள் எதிரிலா மாயன்

கிருஷ்ணனாய் அவள்பால் கேண்மையாய் உதித்து
... ... ... ...

ஆனபின் முன்போல அவிர்நாக வல்லி
தானென ஆகியே தவமுள பிருகுவின்

பத்தினி யாகப் பகர்ந்தநல் வரமே
புத்திர னேநீ புலம்பவே வேண்டாம்!

பரன்செய் படியே பாரில்எந் நாளும்
சிரஞ்சீவி யாகச் செழித்திருப் பாயே!

## இரேணுகை ஜமதக்கினிச் சொல்

### விருத்தம்

461. அழிவிலாச் சுருதி யாவும்
ஆராய்ந்து மிகமெய்ஞ் ஞான
வழியில்அத் விதமாய் நின்ற
மகிழ்நரின் சரணம் போற்றி
வழுவிலா தினிந டக்கும்
மார்க்கத்தை எந்த னுக்கு
விழைவுடன் உரைத்தே நல்ல
மேன்மையைப் பெறச்செய் வீரே!

## வசனம்

"உலகத்தில் ஸ்திரமாக விளங்கிய வேதங்களை யெல்லாம் ஆராய்ந்து மெய்ம்மையான நல்ல வழியில் அத்விதமா யிருக்கின்ற நாயகனே! உமது பாதமே சரணம்! குற்ற மில்லாமல் இனிமேல் நடக்க வேண்டிய காரியத்தை அடியேனுக்குத் தெளிவுண்டாகச் சொல்லி, மேன்மை யடையும்படிக்குக் கிருபை செய்ய வேணும் பிராணநாதா!"

## அகவல்

462. பத்தினி யான பாவையி ரேணுகா
இத்தலந் தன்னில் எண்பது வருஷம்

பாரியா யெந்தன் பதிதன்னி லிருந்தாய்
ஆரிய அரசர்கள் அன்புடன் துதிக்க

**எக்கலா தேவி** என்றிப் புவியிடத்தில்
புக்கவே நாமமு உவந்துநீ பெற்று

ஓர்சட் சமயத் தேவர்களும் வணங்க
சீர்சக மதனிற் சிறப்புடன் ஓங்க

ஊர்தொறு நன்றாய் உகப்புடன் இருந்து
பேர்தர ணியினில் பிரபலம் வாய்ந்து

வேப்பிலை முதலாக மிகமலர் அணிந்து
தாப்பொரு பாம்பைத் தான்பணியாய்க் கொண்டு

உடுக்கை சிலம்பை உயர்ந்த சவுளிகை
நடுக்கை பிரம்பு நவிலருஞ் சூலமும்

முப்பத் திரண்டு முழங்க வாத்தியங்கள்
தப்பிலா வரங்கள் தையலே ஈந்து

பால்சோறு மாவும் பதித்த தேங்காயும்
மால்கனி வாகவே மாந்தியே இருப்பாய்

உந்தனை வணங்காது உள்ளமா னிடர்க்கு
விந்தையாய் வரச்செய் வெண்குட்ட நோயை

விந்தையாய்ச் செடிலை விருத்துநீ யாட்டி
இந்தமா நிலத்தில் இருப்பவர்க் கெல்லாம்

திரட்சியாய் முத்தைச் செவ்வையாய் இட்டு
பிரட்டி எடுத்துப் பெட்புடன் காத்து

ஏவல் செய்யக் கொள்என்னிட பாரியே
நாவலர் போற்றும் நங்கையர்க் கரசே!

மைப்படி உடலை மறைத்துப் பூமியிலே
இப்படி யாகவே இருந்திடு வாயே!

## கட்டியன் சொல்வது

### எண்சீரடி விருத்தம்

*இராகம் : தோடி*

463. திமிரமதை ஒழுத்துத் தவநிலைமை நண்பணும்
சேதன ராகிய முனிவருக்கு மேலாம்
சமதக்கினி நாயகரின் உரைப்ப டிக்கு
சேயிழை ஆகிய இரேணுகை இருந்தாள்
அமைவுள தம்பியருடன் பரசு ராமன்
ஆசிரமத்தில் இருந்தால் இப்பால் ரத்தின
விமலமு டியிறைக் கார்த்தவீ ரியன்தான்
மேவுகொலு காக்கும் கட்டியன் வாரானே!

### வசனம்

''அகோதெப்படி யென்றால், அஞ்ஞானமாகிய இருளை யொழித்து, தவநிலையில் நின்ற மெய்ஞ்ஞானருக் கெல்லாம் மேன்மையுள்ள ஜமதக்கினி முனிவருடைய உத்திரவுப் படிக்கு, இரேணுகா தேவியானவள் இருந்தாள்!

பொருத்தமுள்ள தம்பிமார்களுடன் பரசுராமரும் ஆசிரமத்திலே யிருந்தார்! இப்பால், நவரத்ன கீரீடந் தரித்த சிரத்தினையுடைய அரசனான கார்த்தவீரியன் கொலுவைக் காக்கும் கட்டியன் வருகிற விதம் காண்க!

(கொலு-அவை)

# கட்டியன் வருகிற

## விருத்தம்

*இராகம் : கலியாணி*

464. தட்டிசல் லடமும் கட்டி
தகுந்தவேத் திரத்தி னோடு
வெட்டுநற் கத்தி கூர்மை
மேவிய வாளும் பற்றி
அட்டியில் லாமல் கார்த்திய
அர்ச்சுனன் வாசல் காக்கும்
கட்டியக் காரன் வந்து
களரியில் தோன்றி னானே!

## வசனம்

"இந்தப் பிரகாரம், தட்டி சல்லடம் இடையிலே வரிந்து கட்டிக்கொண்டு, தகுதியான பிரம்பும், கூர்மையுள்ள கத்தி, வாள் கையிலே பிடித்துக்கொண்டு, தடையில்லாமல் கார்த்தவீரி யார்ச்சுனன் கொலு வாசலைக் காக்கும் கட்டியக்காரன் மகாசபையில் வந்தானென் றறிக!"

# கட்டியன் வருகிற தரு

இராகம் : கலியாணி　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

## பல்லவி

465. கட்டியக் காரன் வந்தான்! - உதாரகுணக்
கட்டியக் காரன் வந்தான்!

## அனுபல்லவி

கட்டியக் காரன் வந்தான்
கார்த்த வீரியனிட
கெட்டி வாசல் தன்னைக்
கட்டியே காக்கின்ற - கட்டியக்

## சரணங்கள்

பட்டு ஜெகதாரு
பாங்கான பாஷிபந்து
சட்டமான சரிகை
சாலுவையும் அணிந்து - கட்டியக்

எட்டுத் திக்கிலுமுள்ள
இராஜரீகத் தார்க்கும்
பொட்டெனவே அவர்
பொருந்த இடம்அமைக்கும் - கட்டியக்

அரசனை எதிர்த்தோரை
அப்போதைக் கப்போதே
சிரசைத் துணித்துமிகு
செயம்பெற்ற சிங்கக்குட்டி - கட்டியக்

## கட்டியக்காரன் கட்டியம் கூறல்

*இராகம் : தோடி*

466. அஷ்ட நலமுள ஐஸ்வரியத்தை ஒருவரால்
அழியாது வரம்வாங்கினோன்
அனுதினம் தன்னுயிர் அழியா திருக்கவே
அகத்தினில் எண்ணம்வைத்தோன்
துஷ்ட னாகிய இராவணனைச் சிறப்புள்ள
தூதரால் கட்டிவந்து
துக்கமுற் றதிககாலம் அமைவுடன் சிறையினில்
தொல்லைநாளில் அடைத்தோன்
இட்டமாய் மலரயன் விட்டுவிடும் என்று சொல்
இராவணன் தனைவிடுத்தோன்
இணையிலாச் சொர்க்க மத்தியம் பாதாளம்
எங்கணும் சஞ்சரிப்போன்!
மட்டிலாப் புகழ்கொண்ட மாஷிஷப் பதியாளும்
வல்லமை மிகுத்தபெருமான்
மணிகசித பொன்மயம் வயங்குகொலு விற்கிதோ
வருகிறார் எச்சரிக்கை!

## கட்டியக்காரன் சொல்லுகிற வசனம்

''அகோதெப்படி யென்றால், ராஜமார்த்தாண்டன், ராஜ கம்பீரன், ராஜாதி ராஜன் ஆகிய மாஷிஷப் பதிக்கு அரசனான கார்த்தவீரிய மகாராஜன் நவரத்தின கசித சிம்மாசனக் கொலுவிற்கு வருகிறார்!''

(நவரத்தின சகித-நவரத்தினங்கள் பூண்ட)

## கார்த்தவீரன் வருகிற

### விருத்தம்

467. ஏயநற் குலத்தில் தோன்றி
ஈரேழு லோகம் காக்கும்
நாயகன் மணியி ழைத்து
நருமகு டம்த ரித்து
தூயமாம் செங்கோல் கையில்
துலங்கவே பிடித்துக் கொண்டு
நேயமந் திரிதி றத்து
நிருபர்கள் சூழ வாரான்!

### வசனம்

''இந்தப் பிரகாரமாகச் சூரிய குலத்தில் தோன்றி, பதினாலு லோகமும் காக்கும் நாயனாகிய கார்த்தவீரியன் ரத்தினங்கள் பதித்த

கீரீடந் தரித்துப் பரிசுத்தமான செங்கோல் கரத்திலே பிடித்து பாசமுள்ள மந்திரிமார் பராக்கிரம முள்ள அரசர்கள் சூழ்ந்துவர கொலுவிற்கு வருகிற விதம் காண்க!''

## இராஜன் வருகிற தரு

*இராகம் : மத்யமாவதி*

### பல்லவி

468. கதிரவன் ஒளியென்ன - முடி
சிரத்தில் துன்ன
கார்த்த வீரியன் வந்தான்!

### அனுபல்லவி

அதிபதி இவரென்றே
அரசர்கள் வந்துதொழ
துதிபுரிந் தமைச்சர்கள்
தொடர்ந்தரு கிற்சூழ
துய்யன் மெய்யன்
ஆயிரம் கையன் - கதிரவன்

### சரணங்கள்

துங்க இலங்கையாளும் இராவணனைத்
துடிக்கச் சிறையில்நாளும் இட்டகாலம்

இங்கிதப் பிரமனால்

இசைக்கச் சிறைவிடுத்த

வீரன் தீரன்

உதாரன் செம்பீரன் - கதிரவன்

பண்டுரமுள வேற்றி லிவர்பரமன்

முண்டகத் தாள்போற்றி - விபுலமுள்ள

எண்டிசை எங்கணும் எனக்கெதிரிலையென

தண்டரணியிலுளோர் சாற்றும் படிக்குவரம்

தாரும் நீரும்

கூறும் என்றுபோற்ற - கதிரவன்

அண்டம் அவனிநடுங்க - இரணியன்போல்

ஆன மூவர்கள் பதுங்க - இணையில்லாத

திண்டிறல் நனிபெற்ற

துண்டர்களை அடக்கும்

வன்னிறலுள வன்மலர்க்கையில் செங்கோலை

வைத்தோன் பதினாயிரம் புத்திரர்களைப் பெற்றோன்! - கதிரவன்

## கார்த்தவீரியன் கடவுளைத் துதித்தல்

### விருத்தம்

*இராகம் : பைரவி*

469. சந்தத முனிவர் தேவர்

சதுர்மறை யவரும் நாளும்

வந்தனை செய்து போற்றும்

மகத்துவப் பொருளே போற்றி

சிந்தையும் மகிழ்ச்சி கூர்ந்திச்

செங்கோலின் முனைசா யாமல்

இந்தநற் கிருபை செய்வாய்

இறைவனே போற்றி போற்றி!

(சந்ததமும் - எப்போதும்)

### வசனம்

''சதாகாலமும், ரிஷிகள் தேவர்கள், சதுர்மறையோராகிய பிராமணர் யாவரும் பணிந்து, தோத்திரம் செய்யும்படியான மகத்துவம் பொருந்திய கர்த்தனே சரணம்! தேவரீர் திருவுளம் சந்தோஷித்து என்னுடைய செங்கோல் முனை சாயாமற்படிக்கு இந்த நன்மையான வருள்செய்ய வேண்டுகிறனே், எப்பொருட்கும் நாயகனே!''

## முதல் மந்திரி கார்த்தவீரனுக்குச் சொல்

### விருத்தம்

470. பற்றலர் இனத்தை எல்லாம்

பறந்திடக் கணைகள் எய்து

வெற்றிசேர் அலங்கல் கொண்ட

விறலுள வேந்தே போற்றி!

சற்றுநெஞ் சங்க லங்கா

தசமுகன் தனைய டைத்த

நற்றிற முள்ள எங்கள்

நாயகா போற்றி போற்றி!

(அலங்கல் - மாலை; விறல் - வெற்றி; தசமுகன் - பத்து முகங்களை உடையவன்)

## வசனம்

''சத்திராதிகள் கூட்டங்களை யெல்லாம், பறந்து ஒடும்படிக்குக் கூர்மையான அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்து, வெற்றிமாலை தரித்த, விறலுள்ள அரசனே, சரணம்! கொஞ்சமுங் கலங்காத மனமுடையவனாகிய தசமுகனான இராவணனைச் சிறையிலே அடைத்த, நல்ல திராணி பொருந்திய கார்த்தவீர மகாராஜனே! சரணம்! சரணம்!

(சத்திராதிகள்-பகைவர்கள்)

# இரண்டாவது மந்திரி கார்த்த வீரனுக்குச் சொல்

## விருத்தம்

471. ஐயனே அரனா லேஅன்(று)

ஆயிரம் கரம்ப டைத்த

துய்யனே உலக மெல்லாம்

துன்பமே அணுகி டாமல்

உய்யவே செங்கோல் கொண்ட

உத்தம குணனே போற்றி

மெய்யனே உமது செய்ய

வேரிய மலர்த்தாள் போற்றி!

(அரன்-சிவன்)

### வசனம்

''ஐயனே! பரமசிவனாலே முன்னம் ஆயிரம் கரம் பெற்றுக் கொண்ட பரிசுத்தம் உள்ளவனே! உலகத்தில் உள்ள சர்வாத்மாக்களுக்கும் வருத்தம் இல்லாமல் ஜீவித்திருக்கும் படிக்குக் கையிலே செங்கோல் ஏந்திய சத்திய வசனமே! உமது சிறந்த தாமரை மலர்போன்ற பாதமே சரணம், சுவாமி!''

(சத்தியவசனன்-நேர்மையான வாக்கு உள்ளவன்)

## கட்டியன் அரசனுக்குச் சொல் போற்றி

### விருத்தம்

472. கரியமென் சிறவைண் டார்க்கும்

கடிமலர்ப் பாணம் கொண்ட

அரியமன் மதனைப் போல

அழகுறு நிருபா போற்றி

பெருகுநன் னீதி வாய்ந்து
பிரபல அரசு செய்யும்
தருமசு குணனே உந்தன்
தாமரைச் சரணம் போற்றி!

(நிருபன்-அரசன்)

**வசனம்**

''கறுத்த சிறகினையுடைய வண்டுகள் ரீங்காரம் செய்து மொய்க்கும் மணமுள்ள புஷ்பங்களைப் பாணமாகக் கொண்ட மன்மதனைப் போல அழகுள்ள அரசனே சரணம்!

நல்ல நீதி மார்க்கத்துடன் பிரபலமான இராஜரீகம் செய்து வருகின்ற தரும குணத்தனே! உமது பாதார விந்தமே சரணம், சரணம், சுவாமி!''

(இராஜரீகம் - ஆட்சி)

## கார்த்தவீரன் தேச விசாரணை

### மந்திரி விடை

473. **அரசன் :**

மங்களா கரமாக நமதுலகில்
மாதமும் மாரிநனி பெய்கின்றதா?

**மந்திரி :**

தங்கள்உத் திரவுபடி திங்கள்மும் மாரியும்

தகுதியாய்ப் பெய்து வருது!

**அரசன் :**

நான்மறைகள் உணர்வேதியரும் அரிய ஜெபதபம்

நன்றாய் நடத்து றாரா?

**மந்திரி :**

தேன்பொழிற் கான்முனிவர் பூசுரர்கள் தப்பாது

திரிகாலம் செய்து வாரார்!

**அரசன் :**

அரனயன் மாயவன் ஆலயத்தில் பூசை

அன்பாய் நடத்து றாரா?

**மந்திரி :**

அரியரன் வேதனுக காறுகாலம பூசை

அன்புடன் நடத்தி வாரார்!

**அரசன் :**

நமதுலகில் வாழ்குடிகள் சுகமுடன் எந்நாளும்

நன்றாய் இருக்கிறாரா?

**மந்திரி :**

எமதிறைவனேஉமது நாட்டில்வாழ் குடிகளுக்(கு)

எய்துமொரு துன்பம் இல்லை!

**அரசன் :**

பயிரிடும் குடிகளிட பகுதிப் பணங்களும்

பாக்கியில் லாமல் வருதா?

**மந்திரி :**

இயலிறைவனே குடிகள் பகுதிப் பணம்பாக்கி

இல்லாமல் கட்டு கின்றார்!

## கார்த்தவீரன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

474. திரிகாலம் அறிந்து உரைக்கும்

திறமைமந் திரியே கேளாய்

பெரியதோர் கொலுமுன் பாகப்

பெட்டிடன் நிருத்தம் செய்யும்

விரைமலர்ச் சுரியல் வாய்ந்த

வேசையர் தம்மை இப்போ

பரபரப் பாக நாட்டியம்

பண்ணவே வரச்செய் வாயே!

(திரிகாலம் - கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற மூன்று காலங்கள்)

### வசனம்

''இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிந்து சொல்லும் வல்லமையுள்ள மதிமந்திரிமாரே! இந்தப் பெரிதாகிய கொலு முன்பாக நாட்டியம் செய்யும் விரைமலராகிய வாசனை பொருந்திய புஷ்பமாலை தரித்த கூந்தலுள்ள, தாசிகளை அதிசீக்கிரமாக அழைத்துவரச் சொல்லும் மந்திரிமார்களே!''

## மந்திரி, கார்த்தவீரியனுக்குச் சொல்

### பரணி

475. தேவரீர் சொற்படியே தேவ தாசிகளை
ஆவலாய் விரைவில் அழைத்திடச் செய்வேன்!

### வசனம்

''கேளும், மகாராஜனே! உமது உத்தரவுப் படிக்கு நடன மாதர்களை அதிசீக்கிரமாக அழைத்துவரச் செய்கிறேன் ஐயா!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### பரணி

476. வாசல் கட்டியனே நேசமாய்ச் சபையில்
கூசிடா தாடும் தாசியை அழைப்பாய்!

(நேசமாய் - அன்பாய்)

### வசனம்

''ஆரடா அடா, கட்டியக்காரா! நமது கொலு முன்பாக நேசமுடன் நடனஞ் செய்யும் பரத்தையர்களை அழைத்து வாரும் பிள்ளாய்!''

## கட்டியன் மந்திரிகளுக்குச் சொல்

### பரணி

477. உரவமைச் சர்களே
உமதுசொற் படிக்கு
அருநட மாதரை
அழைத்திதோ வாரேன்!

### வசனம்

''கேளும், அறிவிலே மிகுந்த மந்திரிமார்களே! உமது உத்தரவுப்படிக்கு அரிதாகிய நடனஞ் செய்யும் ஸ்திரீகளை இப்போதே அழைத்துக் கொண்டு வருகிறேன், சுவாமி!''

## கட்டியன், நடனமாதருக்குச் சொல்

### விருத்தம்

478. விஞ்சிய புகழான் கார்த்த
வீரியன் கொலுமுன் பாக
செஞ்சிய நடனம் செய்யும்
தேவதா சிகளே உம்மை
தஞ்சமென் றெவரும் சொல்லத்
தகுந்தநாட் டியங்கள் செய்ய
வஞ்சியே அழைக்கச் சொன்னார்
மகிழுடன் வருகு வீரே!

(செஞ்சிய - செம்மையான; வஞ்சி - பெண்)

### வசனம்

''மிகுந்த கீர்த்தியுள்ள கார்த்தவீரியன் கொலு முன்பாக நிருத்தம் செய்யும் தேவதாசிகளே! நீங்கள் நடனஞ் செய்வதைப் பார்த்தவர்கள் அடைக்கலமென்று சொல்லும்படிக்கு அதிசீக்கிரம் வந்து, மகாராஜன் சபையில் நிருத்தம் செய்ய வாருங்கள் மாதர்களே!''

## நடனமாதர்கள், கட்டியனுக்குச் சொல்

479. கட்டியனே நீ கழறிய படியே
அட்டி இல்லாமல் அடைவுடன் வருவோம்!

(அட்டி-தடை)

## வசனம்

"கேளும் அப்பா, கட்டியக்காரா! நீ சொல்லிய பிரகாரம் தடையில்லாமல் மகாராஜன் சபைக்கு வருகிறோம், அப்பா!"

## நடனமாதர் வருகிற

## விருத்தம்

*இராகம் : மோகனம்*

480. மதுகரி மத்தகம்போல்
            மார்புறு தனத்தில் நல்ல
கதிரொளி யாபரணங்கள்
            களமுடன் அணிந்து கொண்டு
பதமுள துகில்உடுத்து
            பகரன மெனநடந்தே
அதிபதி கொலுமுன் பாக
            அரிவையர் வருகின் றாரே!

(கரி - யானை; கலங்கள் - அணிகலன்கள்; பகர் + அனம் = பகரனம்; அனம் - அன்னம்; இடைக்குறை)

## வசனம்

"ஆனை மத்தகம் போல் மார்பிலிருக்கும் ஸ்தன பாரத்தின் பேரில் பிரகாசமான மணிக ளிழைத்த ஆபரணங்கள் அதிகமாகத்

தரித்து, அழகிய சரிகை வஸ்திரம் உடுத்தி, அன்னம் போல் நடை நடந்து, நடனமாதர்கள் கார்த்தவீரன் கொலுவுக்கு வருகிற விதம் காண்க!''

## நடனமாதர் வருகிற தரு

*இராகம் : மோகனம்*

### பல்லவி

481. நடன மாதர்கள் வந்தனர் - கொலுவைநாடி
நடன மாதர்கள் வந்தனர்!

### அனுபல்லவி

தடையில்லமல் அரசன்சபையிலே நிருத்தம்செய்து
மிகுபொருள்தான் பறிக்கவல்ல - நடன

### சரணங்கள்

கடகக் கங்கணம் பூட்டியே - விழிவலையில்
கண்ட மன்னரை மாட்டியே - மின்னலொத்த
இடையில்துகில் துன்ன
எங்கும்பணிகள் மின்ன
நடையில்அன்னம் என்ன
நயசொற்கிளி மன்ன! - நடன
மின்னல்துடியாம் இடையும்-கருங்குழலை
மேவப் பின்னிய சடையும் - உருசியுள்ள

கன்னல்வில்லோன் மயங்க

கனிவாயிழ் துலங்க

சின்னக்கொங்கை குலுங்க

செஞ்சரணம் இலங்க - நடன

கழலில் தண்டையும் ஒலிக்க - கமலமொத்த

கரத்தில் பைந்தொடி ஜொலிக்க - மிகச்சிறந்த

பழுதிலா முகங்கண்டு

பங்கயமும் பதுங்க

விழியிரண்டையும் கண்டு

வேல்வண்டினம் ஒதுங்க - நடன

புருவத்தினில் மையிட்டு - மலர்வதனம்

பொருந்தவே திலதப்பொட்டு - ஒளிசெய

மருவுமிரு தொடையும்

வாழைத்தண்டாய் ஒக்க

உருவபுயத்தைக் கண்டு

உவந்துமனம் பிரமிக்க! - நடன

(கன்னல் - கரும்பு: கன்னல் வில்லோன் - மன்மதன்; கமலம் - தாமரை; வதனம் - உடல்)

# நடனமாதர், கார்த்த வீரனுக்குச் சொல்

## விருத்தம்

482. மாயிரு ஞாலம் தன்னை
வாஞ்சையின் உடன்பு ரக்கும்
ஆயிரம் புயம்ப டைத்த
அண்ணலே போற்றி போற்றி!
தீயமாற் றலரை வாட்டும்
திறமுள முதல்வா போற்றி!
நேயமாய் அழைத்த சேதி
நிகழ்த்துவீர் போற்றி போற்றி!

(ஞாலம் - உலகம்; வாஞ்சை - அன்பு; புரக்கும் - பாதுகாக்கும், மாற்றலர் - பகைவர்)

## வசனம்

“பெருமை பொருந்திய புயம்படைத்த மகாராஜனே, சரணம்! சரணம்! கொடிய மனதுள்ள சத்துருக்களை வெல்லும் திராணி பொருந்திய முதல்வனே, சரணம்! அடியார்களை இவ்விடத்திற்கு அழைத்த சமாசாரத்தை அன்புடனே சொல்லுமையா சுவாமி!”

# கார்த்தவீரியன், நடனமாதருக்குச் சொல்

## விருத்தம்

483. கொண்டலைப் பழித்த கூந்தல்
கொடிதுடி எனம ருங்கு
வண்டென இரண்டு நேத்திரம்
வடவிலை எனவே குக்கி
என்டொடிக் கரத்தி னாளே
உயருள கொலுமுன் பாக
மண்டலத் தரசன் காண
மகிழ்ந்து நிருத்தம் செய்வாயே!

(கொண்டல் - மேகம்; மருங்கு - இடை; நேத்திரம் - கண்; நிருத்தம் - நாட்டியம்; வடவிலை - வட இலை - ஆலம் இலை; குக்கி - வயிறு)

## வசனம்

''நீர்கொண்ட மேகம்போற் கூந்தலும், வஞ்சிக் கொடியையும், உடுக்கையையும் போலும் இடையும், வண்டையொத்த இரண்டு கண்களும், ஆலந்தளிர் போன்ற வயிறும், அழகிய வளையலணிந்த கரமுள்ள மாதர்களே! உயர்வான மேன்மை பொருந்திய கொலுவின் முன்பாகப் பூவுலகத்து இராசாக்கள் பார்த்து அதிசயப்படும் படிக்கு நடனஞ் செய்வீர் மாதரே!''

# நடனமாதர், அரசனுக்குச் சொல்

## பரணி

484. மன்னவ னேஉன் வாக்கியப் படியே
அன்னமென்ன இங்(கு) அருநடஞ் செய்வோம்!

## வசனம்

"மகாராஜனே! உமது வார்த்தைப்படிக்கு இந்தச் சபைக்கு முன்பாக நிருத்தம் செய்கிறோம், பாரும்? இராஜகாண்டீரவா!"

# நடனமாதர் சொல் தரு

*இராகம் : பந்துவராளி*

## பல்லவி

485. பரத நாட்டியம் பாரீர்! - அதிவிசேஷ
பாரத நாட்டியம் பாரீர்!

## அனுபல்லவி

சுரதகீதம் என்னும்
சுருணசங்கீதம் மீட்டி
சுந்தர கரங்களைச்
சொகுசுடனே காட்டி - பரத

## சரணங்கள்

இச்சபை யுளமன்னர்

இதயம் மிகக்களிக்க

மெச்சி மறைமுனிவர்

வியப்புடனே பிரமிக்க - பரத

எத்தலத் தோர்களும்

இயலென் றகமகிழ

அத்தமதனை நீட்டி

அபிநயங்கள் காட்டி - பரத

கொண்டை மலரிலுள்ள

வண்டரும் அசையாது

அண்டையில் இருக்கின்ற

அரசரே பிசகாது - பரத

கந்தரு வர்களும்

கண்டிந்தச் சுரங்களுக்கு

வந்தவர் இவரென்று

சிந்தையில் மகிழுற - பரத

(அத்தம் - கை)

# கார்த்தவீரியன், மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

486. புத்தியில் இணையில் லாத

புகழுறு மந்திரி கேளாய்!

சித்தமு மிகப்பிர மிக்க

/ சிறப்புடன் நடனம் செய்த

வித்தகி மடமா தர்க்கு

வேண்டிய மட்டில் காசும்

வத்திர முங்கொ டுத்து

மனைதனக் கனுப்பு வாயே!

(வத்திரம்-ஆடை)

## வசனம்

''புத்தியிலே நிகர்ஒருவரும் இல்லாத மந்திரியே, கேளும், 'பார்த்தவர்கள் மனம் பிரமிக்கும் படிக்குச் சிறப்பாக நிருத்தம் புரிந்த வித்தகி மாதராகிய தாசிகளுக்குத் தேவையுள்ள வரைக்கும் திரவியமும் சேலைகளும் கொடுத்தனுப்பும் மந்திரி!''

# மந்திரி, இராஜனுக்குச் சொல் வசனம்

''தேவரீர் உத்திரவுப் படிக்குத் திரவியமும் வஸ்திரமும் ஆபரணங்களும் கொடுத்தனுப்புகிறேன், எனது ஆண்டவராகிய

மகாராஜனே!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

487. கத்தியைக் கரத்தில் ஏந்திக்
காக்கின்ற கட்டி யாகேள்!
பத்தியாய்க் கொலுமுன் பாகங்
பாடியே நடித்தோர்க் கின்று
மெத்தவே தூசும் காசும்
வேணதும் கொடுத்த னுப்பி
சுத்தமாய் இவிடம் தன்னில்
துரிதமாய் வருகு வாயே!

### வசனம்

''ஆரடா அடா, கட்டியக்காரா! நமது மகாராஜன் கொலு முன்னில் சங்கீதங்கள் பாடியும், நடனமும் செய்த மாதர்களுக்கு வஸ்திராபரணமும் வேண்டிய திரவியமும் கொடுத்து அனுப்பி விட்டு, இவ்விடம் வந்து இரும்பிள்ளாய் கட்டியக் காரனே!''

## கட்டியன், மந்திரிக்குச் சொல் பரணி

488. ஆண்டவ னேஉன்
அருட்படி அவர்க்கு

வேண்டிய தளித்து

விரைந்தனுப் புவனே!

### வசனம்

''கேளும், எனது ஆண்டவனாகிய கர்த்தனே! தேவரீர் உத்தரவுப் படிக்கு நடனமாதருக்கு வேணமட்டில் சரிகைச் சேலைகள், ஆபரணங்கள், திரவியங்கள் கொடுத்து அனுப்பிவைக்கிறேன் ஐயா எனது ஆண்டவனாகிய சுவாமி!''

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

*இராகம் : தோடி*

489. வளங்கெழு நடன மாதர்

மாளிகை புகுந்த பின்பு

விளங்கெழில் குடிகள் எல்லாம்

விகசிதத் துகிலு டுத்து

பளப்பளப் பான பாகை

பாங்குடன் புனைந்து சிந்தை

அளிவிலாக் கிலேசத் தோடே

அரசனைக் காண வாரார்!

## வசனம்

''அகோதெப்படி யென்றால், நிருத்தம் செய்வதில் வல்லபமுள்ள மாதர்கள் அவரவர்கள் மனைக்குப் போனபின்பு, அழகும் பிரகாசமு முள்ள குடிகள் எல்லாம், விஷேமான சரிகை வஸ்திரம் தரித்து, பளபளப்பான பாகை சிரசிலே அழகுடன் தரித்துக் கொண்டு, மனது மதமில்லாதவருத்தத்துடன் கார்த்த வீரனைக் காண வருகிற விதம் காண்க!''

# குடிகள் வருகிற தரு

*இராகம் : கலியாணி* *தாளம் : ஆதி*

## பல்லவி

490. குடிகள் வந்தாரே! - பயிரிடும்
குடிகள் வந்தாரே!

## அனுபல்லவி

படர்தாண பணையில்
பாங்குள சாலியை
அடியோடே விலங்(கு)
அழித்ததைச் சொல்லக் - குடிகள்
இட்ட பயிர்களை
நட்டமே செய்கிற
துட்ட மிருகத்தை
வெட்டி அதம்செய்ய - குடிகள்

காட்டில் மிருகத்தை
வாட்டியே ஓட்டிய
நாட்டுக் கிறைவனை
வேட்டையாடச் சொல்ல - குடிகள்
அப்படி மிருகம்
அதஞ்செய்யிற் கப்பம்
எப்படிக் கட்டுவம்
என்றுள்ளி இரங்கியே - குடிகள்

## கட்டியன் கார்த்த வீரனுக்குச் சொல்

### பரணி

491. ஈசனே உமது பேட்டி
நலமுடன் காண என்று
தேசத்துக் குடிகள் எல்லாம்
சிறப்புடன் வந்தார் ஐயா!

### வசனம்

''கேளும், இராஜாதி ராஜனே! உமது பேட்டி காண்பதற்கு இந்தத் தேசத்தில் உள்ள குடிகள் எல்லாம் தேடி வந்திருக்கிறார் ஐயா!''

## கார்த்த வீரியன் கட்டியனுக்குச் சொல்

### பரணி

492. ஆசையாய் நம்மைக்காண
அதிதுரித மாய்வந்த
மாசிலாக் குடிகள் இங்கே
வந்திடச் செய்குவாயே!

### வசனம்

"ஆரடா அடா, கட்டியக்காரா! மனவாஞ்சையுடன் நம்மைத் தரிசிக்க வேணுமென்று சீக்கிரத்தில் நமது கொலுவுக்கு வந்த களங்கமில்லாத குடித்தனக்காரரை இவ்விடம் வரச்சொல்லுவாய் கட்டியா!"

## கட்டியன் சொல் வசனம்

"அப்படியே வரச் சொல்லுகிறேன் ராஜபரமேஸ்வரா!"

## கட்டியன் குடிகளுக்குச் சொல் பரணி

493. திருவளர் குடிகாள்
செம்மலும் இன்று
பரிவுடன் அழைத்தார்
பாங்கொடு போவீர் !

### வசனம்

"கேளும், செல்வ மிகுந்த குடிகளே ! கார்த்தவீர மகாராஜன் இன்றைய தினம் கொலுவிற்கு அன்புடன் வரமுபடி சொன்னார் ! அலங்கிருதராகப் போவீர், தருமவான்களே !

## குடிகள் கார்த்த வீரனுக்குச் சொல்

### விருத்தம்

494. தரணியின் மரபு தன்னில்
சந்ததி யாகத் தோன்றி
பிரபல அரசு செய்யும்
பெருமாநின் சரணம் போற்றி
பரவிய பழனம் தன்னில்
பரிந்துசெய் பயிரை எல்லாம்
சுரமுள விலங்கு பட்சி
தோன்றியே அழிக்கு தையா!

### வசனம்

"கேளும், சூரிய குலத்தில் புத்திரனாக அவதரித்துக் கீர்த்தி மிகுந்த அரசு செய்யும் மகாராசனே! உமது பாதமே சரணம்! விசாலமுள்ள கழனியிலே நாங்கள் பரிந்து செய்த பயிர்களை யெல்லாம் காட்டிலே யிருக்கிற மிருகங்களும் பறவைகளும் வந்து அழித்துப் போடுகிறது. நாங்கள் என்ன செய்யப் போகிறோம், சுவாமி?"

# இராஜன், குடிகளுக்குச் சொல்

## விருத்தம்

495. சீருறு குடிக ளேநீர்
செய்தபைங் கூழை இந்தப்
பாருறு மிருகம் வந்து
பலசேதப் படுத்தா மல்தான்
தீரமாய் வேட்டை ஆடச்
செய்யவே டுவரை இன்று
சேரவே அழைத்துக் கொண்டு
சீக்கிரம் வருகு வேனே!

(கூழ் - பயிர்)

## வசனம்

''கேளுங்கள், பாக்கியத்திற் சிறந்த குடிகளே! நீங்கள் செய்த பசுமையான பயிர்களை, இந்த உலகத்தின்கண்ணுள்ள விலங்குகள் வந்து அழிக்காமற்படிக்கு மனோதைரியத்ததுடனே வேட்டையாடுவதற்கு, வேடர் கூட்டங்களை விசேஷமாகச் சேர்த்துக் கொண்டு, நான் வேட்டைக்கு வருகின்றேன் குடிகளே''

# இராஜன், மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

496. மதிமந்திரி மாரே கேளாய்
மாநகர் குடிகள் நண்ணி
துதிசெய்து சொன்ன சேதி
துரிதமாய் அறிய வேணும்
விதவித வாள்வேல் அம்பு
வில்வலை கரத்தில் கொண்டித்
திதியினில் திறமார் வேடற்
சங்கமும் வரச்செய் வாயே!

(நண்ணி - நெருங்கி; திறமாற் திறம் கொண்ட; சங்கம் - கூட்டம்)

## வசனம்

"கேளும், புத்தியில் மிகுந்த மந்திரிமார்களே! பெரிதாகிய நகரத்தில் உள்ள நமது குடிகள் இவிடம் வந்து தோக்திரம் செய்து சொல்லிய சங்கதிகளைச் சீக்கிரத்திலறியவேணும்!

பலவிதமான வேலும், வாளும், வில்லும், இரும்பு வலையும் கையிலே எடுத்துக்கொண்டு இந்தச் சமயம் பலம் பொருந்திய வேடர்கள் கூட்டத்தை வரச்செய்வாய் மதிமந்திரி!"

(தோக்திரம் - தோத்திரம்)

## மந்திர், கவர்ந்த வீரனுக்குச் சொல்

### பரணி

497. உத்தம னேஉன்
உத்திர வின்படி
மெத்தவே டுவரை
விரைவினில் அழைப்பேன்!

### வசனம்

"கேளும், உத்தம குணமுள்ள இராஜ கண்டீரவா! தேவரீர் உத்தாரப் படிக்கு, கூட்டமாக வேடுவர்களை அதிசீக்கிரமாக துழைத்துவரச் செய்கிறேன் சுவாமி!"

(உத்தாரப்படி - உத்தரவுப்படி)

## மந்திர் கட்டியனுக்குச் சொல்

### கவி

498. கட்டியக் காரா
அட்டியில் லாமல்
சட்டமாய் வேடரை
இட்டுநீ வருவாய்!

(அட்டி - தடை)

## வசனம்

"ஆரடா அடா, கட்டியக் காரா! நீ அதிசீக்கிரமாகப் போய் வேட்டைக்காரர்களை அழைத்துக் கொண்டு வாடா!"

## கட்டியன் வசனம்

"அப்படியே அழைத்துக் கொண்டு வருகிறேன் மதிமந்திரி மாரே!"

# கட்டியன், வேடர்களுக்குச் சொல்

## பரணி

499. வனத்தினில் வாழும்
மறவரே உம்மை
கனத்தவில் வாள்வேல்
கணையுடன் அழைத்தார்!

## வசனம்

"கேளுங்கள், காட்டினில் வாழும் வேடர்களே! உங்களைப் பாரமான வில், வாள், வேல், அம்பு, வலையுடன் நமது மகாராஜன் அழைத்துவரச் சொன்னார்! சீக்கிரம் வாருங்கள் வேடர்களே!"

(பாரமான - மிகுதியான)

## வேடர்கன் வசனம்

"அப்படியே போவோம், கட்டியக்காரா!"

## வேடர்கன் வருகிற

### விருத்தம்

இராகம் : தோடி

500 மானுரி குல்லா போட்டு
வல்லிய தோலு டுத்திக்
கூனுள்ள சிலைகட் கம்வாள்
கோல்வளை கரமும் ஏந்தி
கானத் தினிலே வாழும்
கடுஞ்சின விலங்கை வெல்ல
நூனமே உள்ள வேடர்
நொறிலுடன் வருகின் றாரே!

(சிலை - வில்; கட்கம் - கத்தி; கூன் - வளைவு; நூனம் - நுட்பம்;
நொறில் - வளைவு)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், மான்தோலைக் குல்லா போட்டு, புலித் தோலை ஆடையாகத் தரித்து, வளைந்த வில்லும், கத்தி, வாள், அம்பு, இருப்புவலை முதலியதும் கையிலெடுத்துக் கொண்டு, காட்டில் வாழும் மிருகத்தை வென்று துரத்தும், தின்னும்

ஈனத்துவமுள்ள வேடர்கள் நொறில் என்னும் சீக்கிரமாக அரசனிடம் வருகிற விதம் காண்க!''

(இருப்பு - இரும்பு)

## வேடர்கள் வருகிற தரு

*இராகம் : மோகனம்*

### பல்லவி

501. வேடர் நாங்களே ! - ஐயே மலை
வில்லியர் நாங்களே !

### அனுபல்லவி

காடதனில் உள்ள காண்டா மிருகத்தை
வாட அடித்து வதைத்துத் தின்றிடும் - வேடர்

### சரணங்கள்

வீறி வருகின்ற வேழத்தினை வாரி
வீமனைப் போலவே விண்ணில் எறிகின்ற - வேடர்
சீறி வருகின்ற சிங்கத்தினை வாரி
திறமுட னேவிண் திசையில் எறிகின்ற - வேடர்
பாய்ந்து வருகின்ற யாளிப் புலிகளைப்
பக்கமாக நின்று பாய்ந்து பிடித்திடும் - வேடர்

மரையின் குட்டியை வாஞ்சையாய்ப் பிடித்து

மக்களுக்கு விளையாடக் கொடுத்திடும் - வேடர்

(வில்லியர் - வில்லாளிகள்; வேழம்-யானை; மரை-மான்)

## கட்டியன் விடு வசனம்

"அகோ வாருங்கள், வேடர்களே! நீங்கள் எங்கே யிருக்கிறது? என்ன வேடர்கள் சொல்லுங்கள் பார்ப்போம் !"

## வேடர் சொல் தரு

502. அரன்விழி அதனில்

அருநீர் சொரியவே

இருவிழி நல்கியே

இனியகனி தந்த - வேடர்

தரமாஞ் சிவன்பெற்ற

சண்முக வேலற்குத்

திறமாக வள்ளியைத்

திருமணம் செய்திட்ட - வேடர்

கதிர்முக இராமரும்

கங்கை கடந்தபின்

அதிகபிரி யத்தோடு

அன்பாய்த் தோழரென்ற - வேடர்

சீராமன் சீதையைத்

தேடி வருகையில்

சாரக் கனிதந்த

சவுரி குலம்வந்த - வேடர்

(அரன்-சிவன்; கதிர்-சூரியன்; இத்தருவில், கண்ணப்பன், நம்பிராசன், குகன், சவரி ஆகிய வேடர் குலத்தோர் சுட்டப்படுகின்றனர்)

## கட்டியன், கார்த்தவீரியனுக்குச் சொல்

### பரணி

503. நாடதை ஆளும்

நராதிபன் அவைமுன்

வேடர்கள் குழுமிக

மேவின தையா !

(நராதிபன் - மக்கள் தலைவன்; மேவினது - அடைந்தது)

### வசனம்

"கேளும் , நாட்டையாளும் மகாராஜனே! தேவரீர் சபை முன்பாக, மிகுதியாக வேடர் கூட்டங்கள் வந்திருக்கிறது சுவாமி !"

## இராஜன் வசனம்

"அப்படியே நல்லது இருக்கட்டும் ! வேட்டையாட அழைத்துக் கொண்டு போகலாம் !"

# இராஜன், மந்திரிகளுக்குச் சொல்

## விருத்தம்

504. புத்தியிற் சௌமி யன்பொன்
போன்ற மந்திரியே கேளும்
மெத்தவும் குடிகள் இங்கு
விளம்பிய குறையை நீக்க
அத்தமே விரைவில் புக்கி
அடல்விலங் கினைவில் பட்சி
சித்தமும் கலங்கச் செய்தே
திறவேட்டை ஆடு வேனே !

(சௌமியன்-புதன்; பொன்-பிரகஸ்பதி)

## வசனம்

"கேளும், அறிவிலே புதனையும், பிரகஸ்பதியையும் நிகரான மந்திரியே ! அதிகமாகக் குடித்தனக் காரர்கள் இவ்விடம் வந்து, நமது முன்பாகச் சொல்லிக்கொண்ட குறைகளை ஒழிப்பதற்கு தத்தமாகிய கானகத்தில் சீக்கிரம் போய், வலிவுள்ள மிருகங்களையும், துஷ்டப் பறவைகளையும் மனது கலங்கும்படி பாணப்பிரயோகஞ் செய்து, திராணியுடனே வேட்டையாடுவேன் பாராய், எனது மதிமந்திரி !

## இதுவும் கார்த்த வீரன் சொல்

### மந்திரிக்குக் கவி

505. வனம்புகுந் திங்கு
வருமள வும்திகழ்க்
கனமுள செங்கோல்
கையினில் பிடிப்பாய் !

### வசனம்

"காட்டிற்கு வேடர்களுடன் சென்று வேட்டையாடி நான் வருகிற பறியந்தம், பிரகாசமும் பெருமையுமுள்ள இந்தச் செங்கோலைப் பிடித்து, அரசு செய்யும், மந்திரி !"

### மந்திரி வசனம்

"தேவரீர் வருமளவும் அரசு செய்துவருகிறேன் ! போய்வாரும் சுவாமி !"

## கட்டியக்காரன் சொல்

### பொது விருத்தம்

506. ஐயனாம் கார்த்த வீரன்
ஆடலுறு எயின ரோடு

வெய்யஆ ரணியம் புக்கு

விலங்குவல் பறவை தன்னை

நையவே செய்வ தற்கு

நராதிபன் தொடங்கல் உற்றான் !

(அடலுறு - வீரமுள்ள; எயினர் - வேடர்; ஆரணி - காடு)

## வசனம்

"அகோதெப்படி யென்றால், பூலோக முழுவதும் பரிசுத்த குணமுள்ள மந்திரியை அரசு செலுத்தும்படிக்கு ஒப்புவித்த, கார்த்தவீரியராஜன், பராக்கிரமமுள்ள வேடருடனே, கொடிதான பாலை நிலமான காட்டிலே போய் மிருகங்களையும், தீதான பட்சிகளையும் நலியும்படிக்குக் கிருபை செய்யப், பாலைப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தான் என்றறிக !"

## கார்த்தவீரன் தரு

*இராகம் : சங்கராபரணம்*

### பல்லவி

507. ஆடவே வாரீர் - வனத்தில் வேட்டை

ஆடவே வாரீர் !

### அனுபல்லவி

ஆடவே வாரும் - நீங்கள்

நீடிய கானகத்தில்

கூடிய மிருகத்தை

நாடி யதம்செய்ய ! - ஆடவே

### சரணங்கள்

காட்டானை புலியுடன்

கரடிமான்களை ஓட்டி

கூட்டமாய் வருமுயல்

கொல்லவே கணைஎய்து - ஆட

பன்றியும் திறமுடன்

பாயும் தருஞ்சிங்கம்

நின்று விளையாடி

நிமிஷத்தில் வருவோம் ! - ஆட

## இராஜன், வேடருக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : தோடி**

508. வேடரே கேளும் இந்த

விளங்கிய கான கத்தில்

கூடியே வாழு கின்ற

கூட்டமாம் விலங்கை எல்லாம்

வாடவே செய்தி ருப்பு

வலைகட்டி வழியில் லாமல்

ஆடுவோம் வேட்டை நாமும்

அன்புடன் வருகு வீரே !

### வசனம்

''கேளுங்கள், வேடர்களே ! இந்தக் கானகத்திலே வாசம் செய்து கொண்டிருக்கும் மிருகக் கூட்டங்களை யெல்லாம் வாடி மடியும்படிக்குப், பாணங்களைப் பிரயோகம் செய்து, இருப்பு வரைகளைக் கட்டி, வழிவிடாமல் மடக்கி, வேட்டையாடலாம் வாருங்கள், வன வேடர்களே !''

## முதல் வேடன், வேடருக்குச் சொல்

### கந்தார்த்தம்

509. வரைமுழை மேவி

வல்லியங்கள் உறுமுதையே !

நிரைநிரையாய் மடங்கல்

நீள்மலைக் கோடுதையே !

விரைவுடன் சம்புமானும்

விசேஷமாய் மேயுதையே !

உரைசெய்நீ ளெண்கினங்கள் பாய்ந்தே

ஓடுது பாராய் - பெருங்செடியைக்

கூடுது நேராய் ! - அதிகமாக

நீடியவாய் முனைநிலவு - பெறப்புள்ள

ஈடிலா நாலுகால் இசைந்த பலமுடன் - ஓடுது

(வரை - மலை)

# இரண்டாவது வேடன், மற்றவர்களுக்குச் சொல்

## கந்தார்த்தம்

510. வம்பனே முரடா கோளா
        வலிதில்வாய் பேச மாட்டா
    கும்பனே கரடா சிங்கா
        குருதிநேர் சிவந்த கண்ணா
    கம்பனே கறளா தொட்டிக்
        காலனே சால்வ யிற்றா !
    தம்பிநீ வலிவுள இருப்பு வலையை யாங்கு
        சலிதியில் கட்டே - முளையைநன்றாய்
        வலிவிதாய் நட்டே !

மரைக்கூட்டம - மலயம குளளநா! மருணட,
நவ்வியினம் - பலமுள வான் கோழி பருத்த, முயல்வரும் ! - சலிதியிற்கட்டே!

## வேடர்கள் வசனம்

"இதிராங் கானகக் கடம்பா !"

"ஏண்டாங் ஏனகந் துரும்பாங் !

"கேளடாங் நம்புளைப் பார்த்துக் குள்ளநரி பெதறி ஓடுதுபார்!"

"ஆமாண்டாங் தெரேல் என்றுபோய் வளையடா !"

# வேடர் சொல் தரு

*இராகம் : மத்தியமாவதி* *தாளம் : அடதாளம்*

## பல்லவி

511. பரும்வலை எடுத்திடுவா - ஐயே இந்தப்
பள்ளத்தில் விடுத்திடுவாய் !

## அநுபல்லவி

பருமிருப்பு வலையைப்
பாங்குடனே கட்டி
வருமுயல் பன்றியை
வாட்டலாம் நாமிப்போ ! - பரும்

## சரணங்கள்

கொண்ட முயலைப் பாரடா ! - வனத்துப்புல்லை
உண்ட முயலைப் பாரடா ! - தருவர்க்கு
கண்டக இராமனைக் கருகி மோசம்செய்த
துண்டத் தனமான் சுருண்டு விழுந்திட - பரும்

வாலையரிக்குறு நேராய் - மரையைச்செந்நாய்
ஓரிக்கரிக்குரு பாராய் - வளமுள்ள
சோலைசூழ் வனத்தினில்
துன்னிய மிருகங்கள்

காலை மாட்டிக்கொண்டு

கவிழ்ந்து விழுந்திட - பரும்

பருமத யானை பாரடா - சிங்கக்குட்டி

பாய்ந்து குதிக்கு நேரடா - நம்மிட

அருகே கௌதரிப்புள் அதோ பதுங்குது

தரமான பன்றியும் தான்வந்து விழுந்திடப் - பரும்

## வேடர்கள் சொல் தரு

**இராகம் : மோகனம்** **தாளம் : அடதாளம்**

### பல்லவி

512. ஆடுவோம் வாரீர் - மிருகவேட்டை

ஆடுவோம் வாரீர் !

### அநுபல்லவி

கூடி மிருகமெல்லாம்

கொண்டாட்டம் ஆடுது

நாடி அதன்மேலே

போடுவோம் பாணத்தை - ஆடுவோம்

### சரணங்கள்

எதிர்நிற்கும் யானைமேல்

ஏறிப் பாணம்விட்டேன்

பதறி விழுந்திடும்பார்

பன்றி சிங்கமும் ! - ஆடு

ஆளி புலிகரடி

அதிகம் செந்நாய்விழ

நீளும் கூரியபாணம்

நெடுஞ்சின மாய்விட்டு -ஆடு

இஷ்டப் பயிர்களை

நஷ்டஞ் செய்தபொல்லா

துஷ்ட மிருகத்தை

வெட்டிப் பலிபோட - ஆடு

நம்மை இரட்சிக்கும்

நாயகன் களிகொள்ள

செம்மை உறுகுடிகள்

சிந்தையில் துயர்தள்ள - ஆடு

## இராஜன், வேடர்கள் சேனைகளுக்கும் சொல்

513. மறவரே சைனி யங்காள்

வனத்தினில் மிகுந்தி ருந்த

திறமுள மிருகம் எல்லாம்

திரளாக மாண்டு போச்சு

அறமலி நமது நாட்டுக்(கு)

அன்புடன் போக வேணும்

குறைவிலா திருக்கும் என்றன்

கூடவே வருகு வீரே !

(சைனியம் - படை; அறமலி - அறம் மிகுந்த)

### வசனம்

''கேளுங்கள், வனத்திலே வேட்டையாடிய வேடர்களே, சேனைகளே ! காட்டிலே நாம் செய்த போரினால் மிருகங்கள் மலை போலே கும்பலாக விழுந்து கிடக்கிறது ! இனி, நமது தேசத்திற்குப் போகலாம் ! வந்த இடத்தில் ஜெயம் பெற்ற என்னுடன் கூட வாருங்களப்பா !''

## இராஜன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

514. மந்திரி கேளாய் இந்த

வனத்தினில் அதிக வாச

கந்தகஸ் தூரி வாசம்

கமகம எனவே வீசும்

சுந்தர ஆசிர மம்போல்

தோன்றுது நீபோய் அந்த

விந்தையை அறிந்து வந்து

விவரமாய் உரைசெய் வாயே !

(கந்த - மணம் உள்ள)

## வசனம்

"கேளும், மந்திரி ! இந்தக் காட்டிலே கந்த கஸ்தூரி பரிமள வாடையும், ஓம அக்கினிப் புகையும் உண்டாகி யிருக்கிறது ! இந்த இடம் மகரிஷிகள் ஆசிரமம்போற் காணுது ! நீர் போய் அந்த விந்தையைத் தெரிந்துவாரும் எனது மனதுகந்த மந்திரி !"

## மந்திரி வசனம்

"அப்படியே, அவ்விடம் சென்று, யாருடைய ஆசிரமமென்று தெரிந்துகொண்டு வருகின்றேன் எனது ஆணடவராகிய மகாராசனே !"

## கட்டியன் சொல் பரணி

515. அண்ணல் சொற்படிக்கு

அமைச்சனும் சென்று

வண்ண ஆசிரம

வகையறிந் துரைப்பான் !

## வசனம்

"அகோதெப்படி யென்றால், கார்த்தவீரிய மகாராசன் உத்தரவுப்படிக்கு, மந்திரி அருகிலே காணப்பட்ட ஆசிரமத்துக்குப்

போய், ஜமதக்கினி முனிவர் இடம் என்று தெரிந்து, அரசனுடன் மந்திரி சொல்கின்ற விதம் காண்க !''

## மந்திரி, கார்த்தவீரனுக்குச் சொல்

### விருத்தம்

516 வரியுழு வைத்தோல் கொண்ட
மகேஸ்வரன் அருளி னாலே
திறமுடன் அரசி யற்றும்
செம்மலே சொல்லக் கேளீர்
தரமுள மறைநூல் கற்ற
தபசம தக்கினி மேவும்
பரிவுள ஆசிர மந்தான்
பகர்ந்திட அறிந்து வந்தேன் !

### வசனம்

''கேளும், புலித்தோலுடையாகக் கொண்ட பரமசிவன் கடாக்ஷத்தினாலே சாஸ்வதமாக இந்த உலகத்தை அரசு செய்துவரும் மகாராஜனே ! தகுதியான வேதசாஸ்திரங்கள் கற்றுணர்ந்த தவ மகிமையுள்ள ஜமதக்கினி மகாரிஷி வாசஞ் செய்யும் அன்பான ஆசிரமம் இது ! ஆங்கு இருந்தவர்கள் சொல்லத் தெரிந்து வந்து, உமக்குச் சொன்னேன் இராஜ கண்டீரவா !''

# கார்த்தவீரியனின் மந்திரி, வேடர் தலைவனுக்குச் சொல்

## பரணி

517. தந்திர மந்திர வேடத்

தலைவனே சொல்லக் கேளீர் !

சுந்தர ஆசிர மத்தைச்

சுருக்கினில் பார்த்துப் போவோம் !

## வசனம்

"கேளுங்கள், உபாயம் தெரிந்த மந்திரி வேடத் தலைவனே ! இந்த அலங்காரமான ஆசிரமத்திற்குப் போய்ச் சமதக்கினி மகாரிஷியைத் தெரிசனம் செய்து கொண்டு, நமது பட்டணம் போகலாம் சைனியங்களே !''

(சைனியங்களே - வீரர்களே)

# கட்டியக்காரன் சொல்

## கலிப்பா

*இராகம் : புன்னாகவராளி*

518. வந்த கார்த்த வீரன்மகிழ் வெய்தியே

அந்த ணன்பதம் அன்புடன் சேவிக்க

சிந்தொண் டுவரச் சமதக் கினியாம்

முந்தை வேத முனிவன் வருகிறார் !

(சிந்தொண்டு - சிந்தையுள்ள தொண்டர்கள்; தொகுத்தல் விகாரம்)

## வசனம்

"இந்தப் பிரகாரம் வேட்டையாடி வந்த கார்த்தவீர மகாராஜன் ஜமதக்கினி முனிவருடைய திருவடியை மனமகிழ்ச்சியுடன் சேவிக்க நினைத்துவரும் சமயத்தில், ஆதியாகிய நான்கு வேதங்களையு முணர்ந்த சமதக்கினி மகாரிஷி, சீடர்களுடன் வருகிற விதம் காண்க !"

## சமதக்கினி வருகிற

## விருத்தம்

*இராகம் : காவேரி*

519. மதியிளம் கொன்றை தும்பை

மாசுணம் வில்வம் கங்கா

நதிவிழை வுடன்த ரித்த

நாதனை நோக்கி நாளும்

துதிபுரி ரிசிகர் தந்த

சுதன்ஜம தக்கினி மிக்க

அதிதிக ளுடன்சி றந்த

ஆசிரமம் வருகின் றாரே !

## வசனம்

"மூன்றாம் பிறையும், கொன்றை மாலையும், தும்பை சர்ப்பாபரணம், வில்வம், கங்காநதி, இவைகளைத் தரித்த பரமசிவனை நோக்கிச் சதாகாலமும் தௌத்தியம் செய்யும் ரிசிகர் பெற்ற குமாரனாகிய ஜமதக்கினி மகாரிஷி அதிதிகளுடனே வருகின்ற விதம் காண்க !"

# சமதக்கினி முனிவர் வருகிற தரு

*இராகம் : தோடி*

## பல்லவி

520. ஜமதக்கினி முனிவர் வந்தார் - ஆசிரமம்நாடி
ஜமதக்கினி முனிவர் வந்தார் !

## அனுபல்லவி

ஜமதக்கினி முனிவர் வந்தார்
திறலக்கினி சூரியர்
சீலாம் புலிக்குநன்
மேலாம் விளங்கிய - ஜம

## சரணங்கள்

திருமா லுரையான் மிக்க - புலோமிசை
ஜனனம் மூன்றும் எடுக்க - அதில்முதல்

பருவத மகராஜன் பாவை இரேணுகையைத்
திருமணம் செய்த சீலன் - புகழ்விசாலன் - ஜம

திரிபுரத்தினை எரித்து - மதகரியைத்
திறமுடனே உரித்து - மகிமைஓங்கும்
பரமனை நோக்கியே பரசுபடையும் உற்ற
பரசுரா மன்தனைப் பாலகனாய்ப் பெற்ற - ஜம

அட்ட கஜத்தை எதிர்த்த - தசக்கிரீவ
அரக்கன்தனைச் செருத்த - திராணியுள்ள
மட்டிலாப் புகழ்மாயனைச் சுதனாய்ப் பெற்று
இட்ட பெண்டைஅவனால் வெட்டி எழுப்பிய - ஜம

(செருத்த - கொன்ற; பெண்டை - மனைவியை)

## ஜமதக்கினி வசனம்

''ஆரடா அடா, காலாக்கினி !''

''ஐயா !''

''ஆமா, காலநேமி !''

''சுவாமி, வந்தீர்களா? தங்கள் கூடவே வந்தோம் முனிநாதரே!''

# கட்டியக்காரன் சொல்

## பரணி

இராகம் : தோடி

521. அருமுனிவரும் வந்து

அமைவுடன் இருக்க

விரிபுகழ் கார்த்த

வீரனும் பணிவான்!

## வசனம்

''இந்தப் பிரகாரமாக, ஜமதக்கினி முனிவர் சீடருடன் வந்திருக்கும் சமயத்தில், புகழிலே மிகுந்த கார்த்தவீரன், ஜமதக்கினி முனிவரைக்கண்டு சேவிக்கிற விதம் !''

# கார்த்தவீரன், ஜமதக்கினிக்குப் போற்றி

## விருத்தம்

522. சுருதிநன் னூலு ணர்ந்து

துய்யனாம் ரிசிகர் செய்த

அமையா கியத வத்தால்

அவதரித் தவரே போற்றி

மருமலர்க் குழலாள் வெற்பு

மங்கையை இடத்தில் வைத்த

பரமனைப் போற்றுன் பாதம்

பங்கயம் போற்றி போற்றி !

(மருமலர்-மணம் உள்ள பூ; வெற்பு-மலை)

### வசனம்

''கேளும், வேதங்கள் நான்கும் உணர்ந்த பரிசுத்தமுள்ள ரிசிகருக்குத் தபோபலப் புத்திரராய் அவதரித்த ஜமதக்கினி முனிவரே சரணம் ! வாசனதங்கிய புஷ்பமாலை தரித்த பார்வதி பாகனாகிய மகேஸ்வரனைப் போற்றும் உமது செந்தாமரை மலர்போன்ற பாதமே சரணம், சரணம் சுவாமி !''

## சமதக்கினி கார்த்தவீரனுக்குச் சொல்

### பரணி

523. மேதினி முழுவதும்

வியப்புடன் ஆளும்

ஆதர மன்னனே

ஆசீர் வாதம் !

(மேதினி - உலகம்; ஆதரமன்னன்-குடிபுரக்கும் மன்னன்)

## வசனம்

"கேளும், உலகமெல்லாம் ஒருகுடை நிழலிலே அரசு செய்யும் கார்த்தவீர ராஜனே ! ஆசீர்வாதம் அரசனே !"

# இதுவும் ஜமதக்கினி சொல்

## விருத்தம்

*இராகம் : மோகனம்*

514. மந்தரப் புயலே நீயும்
வலிவுள விலங்கி னத்தை
இந்தவெங் கானில் வேட்டை
எய்தியிங் கிளைப்பாய் வந்தாய்
தங்கிய அவ்வி ளைப்பு
தாகமும் விரைவில் தீர
சங்கையில் லாமல் உண்டுன்
சைனியத் துடன்செல் வாயே !

(சங்கை - கூச்சம்; மந்தரப்புயன் - மந்தரமலை போன்ற தோளை உடையவன்)

## வசனம்

"கேளும், மந்திரமலைக்கு ஒப்பாகிய தோளினை யுடைய மகாராஜனே ! நீயும் சேனைகளும் பலத்த மிருகக் கூட்டங்களை

இந்தக் காட்டிலே வேட்டையாடி, இளைப்புடன் இவ்விடம் வந்தாய்! அந்த இளைப்பும் தாகவிடாயுந் தீர, மனத்திற் கிலேச மில்லாமற், போசனஞ் செய்து, உனது சேனை சைனியங்களுடன் பட்டணம் போய்ச் சேருவாய் மன்னவா !".

## கட்டியக்காரன் சொல்

### பொது அகவல்

*இராகம் : காம்போதி*

515. சீரினில் மிகுந்த சமதக் கினிமுனி
வாரமாய்ச் சொல்ல மன்னவன் இருக்க
அம்முனி நாதன் அமரர்வாழ் பதியில்
செம்மைமன் காம தேனுவை அழைத்து
கார்த்த வீரன்முதல் கனசை னியங்கள்
சீர்த்த மந்திரியும் தீவிர முடனே
அறுசுவை பதார்த்தம் அமைபல காரம்
நறுமிகு துடைய நல்லபோ சனமும்
குறைவில்லா கண்டு கொற்றமா மகிபன்
கறவையைப் பிடித்துக் கட்டவெண் ணினனே !

# கார்த்தவீரியன், மந்திரி சைனியங்களுக்குச் சொல்

## விருத்தம்

520. அறிவுள அமைச்சே சேனைக்
கதிபதி நாமெல் லோரும்
பொறுமைசேர் முனிவர் செய்த
போசனத் தினிதும் பார்த்தால்
கறவைநம் பட்ட ணத்துக்
கட்டியே கொண்டு போனால்
நிறைபணம் குறைவா காமல்
நிறுத்தலாம் களஞ்சி யத்தே !

## வசனம்

''கேளும், புத்தியிலே மிகுந்த மந்திரி, சேனைகளுக்கு நாயகனே ! நமக்கு ஜமதக்கினி முனிவர் செய்த மதுரமான பலகார வர்க்கமும், அறுசுவையுள்ள பதார்த்தமும் அன்னமும் கிடைத்ததை யோசிக்கு மளவில், இந்தக் காமதேனுப் பசுவை நமது நகரத்துக்குக் கொண்டு போய், அதைக்கொண்டு அரண்மனைச் சாப்பாட்டுச் செலவுக்கு நடத்திவந்தால், களஞ்சியத்தில் திரவியம் குறையாமலிருக்கும், மந்திரி சேனாதிபதி !''

# மந்திரி சேனாதிபதி கார்த்தவீரனுக்குச் சொல்

## பரணி

521. அதிபதி உந்தன்
அகத்தினில் உன்னிய
விதமுடித் திட்டால்
வெகுபணம் சேரும் !

(அகத்தினில் - நெஞ்சினில்; உன்னிய - விரும்பிய; விதமுடித்திட்டால் - தொகுத்தல் விகாரம்)

## வசனம்

"கேளும், மகாராஜனே! உமது மனத்தில் எண்ணியபிரகாரம் காமதேனுவானால் நமது போசனச் செலவும் மற்ற சிப்பந்திச் செலவும் நடத்தி வந்தால், களஞ்சியத்துத் திரவியத்துக்குச் செலவு இல்லை யரசனே!"

# கார்த்த வீரியன் ; சேனாதிபதிக்குச் சொல்

## விருத்தம்

522. தீரமும் பலமும் மிக்க
சேனைநா யகனே கேளாய்!
சீரனம் பகிர்ந்த காம
தேனுவை வலிதில் கட்டி

ஆருமே அறியா மல்தான்
அரும்பதிக் குடனே நீங்கள்
வாரமாய்க் கொண்டு வாரும்
வறுமைசே ராமல் ஓட!

(சீரணம் - சீராக அன்னத்தை; பகிர்ந்த - அளித்த)

### வசனம்

"கேளும், தைரியமும் திராணியுமுள்ள சேனாதிபதி! சிறப்பாகச் சாதம் பரிமாறிய காமதேனுவை உங்கள் வல்லமையினால் பலாத்காரமாகக் கட்டிக்கொண்டு, ஒருவரும் இவ்விடத்திலறியாமற் படிக்கு, அருமையான நமது பட்டணத்துக்குச் சீக்கிரமாக அன்புடனே வாரும்! இவ்விடத்தில் தரித்திரமென்பது தங்காமல் வரும்படிக்குத் தவிகர்த்தானே!"

## சேனாதிபதி கர்த்தவீரனுக்குச் சொல்

### பரணி

523. குரிசியே உமதுரை கொண்டு தேனுவையான்
பரிவுடன் கட்டிநம் பட்டணம் வாறேன்!"

(குரிசில் - அரசன்; தேனு- காமதேனு)

### வசனம்

"கேளும், இராஜபரமேஸ்வரா! உமது உத்தரவைக் சிரமேற்கொண்டு, காமதேனுவை நான் பிடித்துக் கட்டிக்கொண்டு நம்முடைய நகரத்திற்கு வருகின்றேன், இராஜ கண்டீரவா!"

## சேனாதிபதி காமதேனுவைப் பிடித்தல்

### விருத்தம்

524. செறிந்த சேனைகளுக்கெல்லாம்
செம்மலுங் கூட வந்தோர்க்(கு)
அறைந்திட அவர்கள் சூழ்ந்தே
அழகுயர் காம தேனை
உறும்பெரும் தாமத் தாலே
உறுதியாய்ப் பிணித்துக் கொண்டே
மறந்திகழ் கார்த்த வீர
மன்னன்முன் வந்தா ரன்றே!

(அறைந்திடா - கூறிட; தாமம் - கயிறு)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரம் சேனைகளுக்கெல்லாம் எஜமான னாகிய தளகர்த்தன் காமதேனுப் பசுவைப் பிடிக்கும்படிக்கு உத்தரவு செய்யக் கூட வந்திருந்த சைனியங்கள் பிடித்துப் பெரிய தாம்பினாற்

கட்டிக்கொண்டு,பராக்கிரமம் விளங்கிய கார்த்த வீரராஜன் முன்னே வந்து நின்றார்கள் என்று அறிக!''

## சேனாதிபதி, கார்த்த வீரனுக்குச் சொல்

### பரணி

525. ஒண்மௌ லியனே உத்தர வின்படி
திண்மையாம் காம தேனுவைக் கொணர்ந்தேன்!

### வசனம்

''கேளும், அழகிய மணிமகுடம் தரித்த மகாராஜனே! உமது உத்திரவுப் பிரகாரம், பலம்பொருந்திய காமதேனுவைக் கட்டிக்கொண்டு வந்தேன் இராஜசிங்கமே!''

## இராஜன் வசனம்

''காமதேனுவைக் கொண்டு வந்தீர்களா? பத்திரமாய்க் கட்டி வைத்திருங்கள் பார்ப்போம் சேனாதிபதியே!''

## கட்டியக்காரன் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

526. செம்மல்இவ் விதமாய்க் காம
தேனுவைப் பிடித்துக் கட்டி

நம்மிட காவ லுக்குள்

நண்ணிவைத் திடுங்கள் என்று

செம்மைஉத் தரவு செய்து

சிறப்புடன் இருக்கும் போது

கொம்மைசீ டர்கள் அறிந்து

கோமுனிக்(கு) இஃது உரைப்பார்!

(நண்ணி- சேர்த்து; கொம்மை-இளம்)

## வசனம்

''இந்தப் பிரகாரம், கார்த்தவீரராஜன், காமதேனுவைப் பிடித்துக்கட்டி, நமது சிறைச்சாலைக்குள் பத்திரப்படுத்தி வைத்திருங்கள் என்று ஸ்திரமான உத்திரவு செய்து இருக்கும் சமயத்தில், இளமையான பருவத்தை யுடைய சீடர்கள் இந்தச் சமாசாரம் தெரிந்து, சமதக்கினி முனிவருக்குச் சொல்லுகிற விதம் காண்க!''

# சீடர்கள் ஜமதக்கினி முனிவருக்குச் சொல்

## பரணி

527. அருந்தவத் துடைய அத்தனே உமது

பெருந்தகைப் பசுவைப் பிணித்தவர் போனார்!

### வசனம்

"கேளும் அதிதான தவத்திலே மிகுந்த ஜமதக்கினி முனிவரே! உம்மிடம் வந்திருந்த பெருமையுள்ள காமதேனுவைக் கார்த்தவீரன் உத்தரவினால், அவன் சேனைகள் கட்டிக்கொண்டு பட்டணம் போனார்கள், எமது குருசுவாமியே!"

## ஜமதக்கினி சீடருக்குச் சொல்

### பரணி

528. சீடரே நீங்கள் சீக்கிரம் புக்கியே

ஈடிலாப் பரசு ராமனை அழைப்பீர் !

### வசனம்

"கேளுங்கள், எனது சீடப் பிள்ளைகளே ! நீங்கள் அதிக துரிதத்தில்போய் ஒருவரும் சமானமில்லாத எனது புத்திரனாகிய பரசுராமனை அழைத்து வாருங்களப்பா !"

## சீடர்கள் சொல் வசனம்

"அப்படியே அழைத்து வருகிறோம், எங்கள் குருவாகிய முனிநாதரே !"

# சீடர்கள், பரசுராமருக்குச் சொல்

## விருத்தம்

529. வில்லின் வல்லமை சிறந்து
வித்தையும் மிகுந்தே யாரும்
சொல்லுசற் கீர்த்தி பெற்ற
தூய்முனி புதல்வ கேளும்
மல்லலந் தொடைகடுக்கை
மயேசன்நல் லருளைக் கொண்ட
துல்லிய உமது தந்தை
துரிதமாய் அழைத்தா ரப்பா !

## வசனம்

"கேளும், வில் சாதுரியத்தில் சிறந்து, கல்வித் திறமுள்ள யாவர்களும் துதி செய்யும்படியான நல்ல கீர்த்தி பெற்ற ஜமதக்கினி முனிவர் குமாரனாகிய பரசுராமரே கேளும் ! வளமை பொருந்திய கடுக்கைமாலை புனைந்த சடாமகுடந் தரித்த பரமேஸ்பரனருள் பெற்ற உமது தந்தை யழைத்துவரச் சொன்னார்; வாருமப்பா !"

# பரசுராமர், சீடருக்குச் சொல்

## பரணி

*இராகம் : தோடி*

530. தந்தை வார்த்தைக்குத் தடையொன்று உண்டோ?
விந்தையாய் யானும் விரைவுடன் வாறேன் !

## வசனம்

''கேளுங்களப்பா, சீடர்களே! என்னைப் பெற்ற பிதா வாக்கியத்திற்கு ஒரு தடையும் இல்லை! வேடிக்கையாக யானும் உங்களுடனே சீக்கிரமாக வருகிறேன்; வாருங்களப்பா!''

# பரசுராமர் வருகிற

## விருத்தம்

*இராகம் : தோடி*

531. ஒளிமதி எனுமு கத்தில்
ஒண்டிரு மண்விளங்க
மிளிர்தட மார்பில் பூணூல்
மேவபட் டஞ்சி வேட்டி
வளமுடன் மருங்கு டுத்து
வான்வில்லும் பரசு பாணம்
பளபள எனவே மின்னப்
பரசுரா மரும்வந் தாரே!

## வசனம்

"இந்தப் பிரகாரமாகச் சீடர்கள் அழைக்க, பிரகாசம் பொருந்திய சந்திரனைப் போன்ற முகத்தில் அழகாகத் திருமண்ணைத் தரித்து, பெருமையும் விசாலமுமுள்ள மார்பிலே முப்புரிநூல் பொருந்தவும், பட்டஞ்சி வேஷ்டி யிடையிலே புனைந்து கொண்டு, வாள், வில், பானம்,பரசு இவை முதலிய ஆயுதங்கள் கையிலே பளபளவென்ன பிரகாசிக்கப் பிடித்துக்கொண்டு பரசுராமர்; தகப்பனான ஜமதக்கினி மகாரிஷியினிடம் வருகின்ற விதம் காண்க!"

## பரசுராமர் வருகின்ற தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

532. பரம ணிடத்தினில் பாங்குற்ற வரம்பெற்ற
பரசு ராமரும் வந்தார்!

### அனுபல்லவி

உரைசெயற் கரும்பலம் உள்ள அரசருடன
உம்பர்கோன் தன்னையும் சம்பரமாய் வெல்லும் - பரம

### சரணங்கள்

சண்டப் பிரசண்ட உத்தண்ட வியமனையும்
உறுதியினில் வெல்லும் சமார்த்தியம் உள்ள - பரம

வளைக்க ஒருவர்க்கும் மாளாப் பெரும்வில்லை
மலர்க்கரத்தால் வளைக்கும் பலவான் புவிமதிக்கும் - பரம
தாதையின் வசனத்தைத் தலைமேற் கொள்ளும்தீரன்
சற்சனர் யார்க்கும் சகாயஞ்செய்யு முதாரன் ! - பரம

சிறந்த துரோண வித்தை செகத்தோர்க்குத்
தெரிவிக்கத் தேசிகனாகிய ஜெயதுங்கன் பிரசங்கன்! பரம

## பரசுராமர், ஜமதக்கினிக்குச் சொல்

### பரணி

533. அந்தமாய் அளித்த தந்தையே போற்றி
பந்தமாய் அழைத்த விந்தையை ஓதும்!

(அந்தமாய் - அழகாக)

### வசனம்

''கேளும், என்னைப் பெற்று ரட்சித்த பிதாவே, சரணம்! இப்போது அழைத்த சமாசாரத்தைத் தெரியச்சொல்லும் தந்தையே!''

## பரசுராமருக்குச் சமதக்கினி சொல்

### விருத்தம்

534. அப்பனே பரசு ராமா
அருந்திறல் கார்த்த வீரன்

ஒப்பிலா(து) இங்கு வந்து
உண்டுபின் காம தேனைக்
கொப்பென ஓட்டிப் போனான்
கொற்றவ நகரம் புக்கி
தப்பிலாப் பசுவை இங்கே
சலிதியில் கொண்டு வாராய்!''

(சலிதியில் - விரைவில்)

## வசனம்

''கேளாய், அப்பா பரசுராமா! அறிதான திராணியுள்ள கார்த்தவீரன் சேனா சைனியங்களுடன் இங்கு வந்து காமதேனுவினால் நான் போஜனம் இட, சாப்பிட்டு, அதன்பின்பு காமதேனுவைச் சீக்கிரமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டான்! அவனுடைய பட்டணத்திற்கு நீ சீக்கிரமாகப் போய், அந்தப் பசுவைக் கொண்டுவருவாய் மகனே!''

## பரசுராமன், சமதக்கினிக்குச் சொல்

## விருத்தம்

535. சேதனர் எவரும் போற்றும்
சிறந்தமெய்ஞ் ஞானம் வீறுந்
தாதையே உமது பாதத்
தாமரை போற்றி போற்றி!

ஓதிய படிக்கு யானும்
ஒருநொடி தனிலே சென்று
பேதமில் காம தேனைப்
பிடித்திங்கு வருவேன் இன்றே!

(சேதனர் - அறிஞர்கள்)

## வசனம்

"கேளும், அறிவாளிகள் எவரும் துதிசெய்யும் மெய்ஞ்ஞானத்திற் சிறந்த பிதாவே! உமது சரணார விந்தமே போற்றி, போற்றி! தேவரீர் அடியேனுக்கு ஆக்ஞாபித்த உத்தரவைச் சிரமேற்கொண்டு ஒரு நிமிஷ நேரத்தில் போய், அவன் பட்டணத்தில் கட்டி வைத்திருக்கிற காமதேனுப் பசுவைப் பிடித்துக்கொண்டு இவ்விடம் வந்து சேருகிறேன் தந்தையே!"

## சமதக்கினி சொல் வசனம்

"அப்படியே பிடித்துக்கொண்டு வரவேணும் சுகீபவா!"

## பரசுராமர், கார்த்தவீரனிடம் போகிற தரு

*இராகம் : மத்தியமாவதி* *தாளம் : ஆதி*

## பல்லவி

536. பரசுராமன் வாரான்-அரசனிடம்
பரசுராமன் வாரான்! - பரசு

## அனுபல்லவி

திறமாம் முனிவருக்குச் சிறந்த அமுதளிக்கும்
பிரியப் பசுவைத் தேடி-பிடித்து வரவே நாடி! - பரசு

## சரணங்கள்

ஆயிரம் கரமுள்ள அரசன் கார்த்தவீரன்
சாய்காலி னாற்செய்த சமர்த்தை அறியவென்று - பரசு
கோவைக் கேட்கஅவன் கொடுத்தால் நலமாச்சு
பாவியவன் மறைத்தால் பதைக்கக்கொல் வேனன்று - பரசு

தாதை வாக்கியத்தினைத் தலைமிசையிற் கொண்டு
வேதை எவர்செய்தாலும் வென்றிட மனத்தெண்ணி - பரசு
அன்ன மிட்டவர்க்குக் கன்ன மிட்டவன்போலே
இன்னல் செய்தானென்றே எண்ணியே சினத்தாலே - பரசு

## கட்டியக்காரன், கார்த்தவீரனுக்குச் சொல்

## பரணி

537. மகுட மன்னவனே மணிவா சலினிடம்
மகிழ்ஜம தக்கினி மைந்தர் வந்தனரே!

## வசனம்

"சரணம், சரணம் ராஜகண்டீரவா! அழகிய நமது கொலு வாசலில் ஜமதக்கினி மகாரிஷி மைந்தராகிய பரசுராமர் வந்திருக்கிறார் மகுட மன்னராகிய கர்த்தனே!"

# கர்த்தவீரன், கட்டியனுக்குச் சொல்

## விருத்தம்

538. பண்ணவர்க் கெல்லாம் மிக்க
பண்புள்ள முனிவ ரான
வண்ணமார் ஜமதக் கினிக்கு
மகவென அவத ரித்த
தண்ணமார் உமது கஞ்சத்
தாளிணை மலர்கள் போற்றி
அண்ணலும் வரவே சொன்னார்
அன்புடன் வருகு வீரே!

(கஞ்சம் - தாமரை)

## வசனம்

"கேளுங்கள், மகாரிஷிகளுக்கெல்லாம் மேலான குணமுள்ள ஜமதக்கினி முனிவருக்குப் புத்திரசிகாமணியா யவதரித்த உமது குளிர்ச்சிபொருந்திய தாமரைமலர் போன்ற பாதமே சரணம்! எங்கள் மகாராஜா வரும்படி உத்திரவாகி யிருக்கிறது! அன்பாக வாரும் பரசுராமரே!"

## பரசுராமர் வசனம்

"அப்படியே வருகிறேன், கட்டியக் காரா!"

## கர்த்தவீரன், பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

539. சீரான நான்கு வேதம்
செம்பிய ஆறு சாஸ்திரம்
ஆராய்ந்து சிலையே ஆதி
ஆயுத பரீட்சை முற்றும்
நேராகக் கற்று வளர்ந்த
நிலையுள்ள பரசுராமா
தாராரும் உமது செய்ய
சாரசப் பாதம் போற்றி!''

(சிலையில்; செய்ய - சிவந்த; சாரசம் - தாமரை)

### வசனம்

''கேளும், சிறந்த சதுர் வேதங்களும் பெரியோர் சொல்லியிருக்கிற ஆறு சாஸ்திரங்களும் பரிசோதனை செய்து, வில் முதலாகிய பல ஆயுதப் பரீட்சையும் விசேஷமாகக் கற்றுத் தெரிந்திருக்கும் நிலைமையுள்ள பரசுராமரே! உம்து தாமரை மலர் போன்ற பாதமே சரணம்! சரணம், ஜமதக்கினி தவப்புத்திரரே!''

### கவி

540. தவமுனி தந்த பாலா
தமியுடன் என்னை நாடி

அவசியம் வந்த தென்ன

அடியனுக் குரைசெய் வீரே!

## வசனம்

''கேளும், தவ மகிமையுள்ள ஜமதக்கினி முனிவர் பெற்ற குமாரனே! தேவரீர் தனியாகவே இவ்விடத்திற்கு என்னை விரும்பி அவசியமாக வந்தது என்ன காரணம்? அடியேனுக்குச் சொல்லவேணும் சுவாமி!''

# பரசுராமர், கார்த்தவீரனுக்குச் சொல்

## விருத்தம்

541. வனத்தினில் வேட்டை ஆடி

வந்தென தாசிர மத்தில்

இனத்துடன் போச னங்கள்

இட்டதோர் காம தேனை

தனதெனக் கொண்டு வந்த

தலைவனே அதனை நாடி

உனதகம் வந்தேன் யானும்

உற்றநற் பசுவைத் தாராய்!

(இனத்துடன் - கறிகாய்களுடன்)

## வசனம்

"கேளும், கார்த்தவீர மகாராஜனே! நீர் காட்டில் வேட்டையாடி நமது ஆசிரமம் வந்து, உம்முடைய சேனாசைனியத்துக்கும், உமக்கும் அன்னம் இட்ட காமதேனுவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்தீரல்லவா? அந்தப் பசுவை ஆசிரமத்துக்கு ஓட்டிக்கொண்டு போகவேண்டும்; கொடுப்பீர் சூரியகுலோத்துங்க அரசனே!"

(சூரிய குலோத்துங்க - சூரியகுலோத்தை மேம்படுத்துவல்ல;
குல + உத்துங்க = குலோத்துங்க)

# கார்த்தவீரன், பரசுராமருக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

542.வனிதையை வெறுத்து நாளும்
வனத்தினில் தவம்இ யற்றும்
முனிவிலாப் பரசு ராமா
முனிவர்க்குக் காம தேனேன்?
மனுநெறி அரச னுக்கு
மாசேனை அசுபம் யானை
நனிசெல ஆன தாலே
நானதக் கொணர்ந்தேன் ஐயா!

(வனிதை - பெண்; அசுவம் - குதிரை)

### வசனம்

''கேளும், பெண்ணாசையை வெறுத்து, சதாகாலமும் கானகத்தில் தவசு செய்யும் கோபமில்லாத முனிவர்களுக்குக் காமதேனு என்னத்திற்கு? வேண்டியதில்லை!மனுநீதிப் பிரகாரம் அரசு நடத்தும் இராஜாவினிடத்திலிருந்தால், அவனுடைய சேனாசைனியங்களும், குதிரை, யானைக்கும் மற்ற சிப்பந்திச் செலவுக்கும் உபயோகமாயிருக்கு மென்று நானதை இவ்விடத்திற்கு அந்தக் காமதேனுப் பசுவைக் கொண்டு வந்தேன் பரசுராம ஐயரே!''

## பரசுராமர் கர்த்தவீரனுக்குச் சொல்

### விருத்தம்

543. வரமுனி வர்களைத் தேடி
வந்தவர்க்கு அமுது செய்ய
அரிஅரன் அயன்சிருஷ் டித்தே
அனுப்பிய காமதேனை
திருவமு துண்ட நீயும்
திருடன்போல் கொள்ளை கொண்டாய்!
கரங்களா யிரமும் வீழக்
கண்டிப்பேன் துண்டிப் பேனே!

### வசனம்

''கேளாய், கார்த்தவீரனே! பரமசிவனிடத்தில் வரம்பெற்ற முனீஸ்வரர்களைத் தேடி வந்தவர்களுக்குப் போசனம் செய்து

வைக்க பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் சிருஷ்டித்து அனுப்பியிருக்கிற காமதேனுவினால் சிறப்பான போசனம் செய்துவிட்டு, நீ திருடன் போல அந்தப் பசுவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வந்த உன்னுடைய ஆயிரம் கரங்களையும் கண்டதுண்டமாய்ச் செய்வேனடா சோரா!''

## கார்த்தவீரன், கட்டியனுக்குச் சொல்

### பரணி

544. கொலுமுகப் பினிலே வீறும்

வலிவுள கட்டியக் காரா!

சலிதியில் ஓடிச் சேனை

பலமுடன் வரவே செய்வாய்!

### வசனம்

''அகோ வாரும் பிள்ளாய், கட்டியக்காரா! நீ அதிசீக்கிரமாகப் போய், ரத, கஜ, துரக, பதாகி என்னும் சதுரங்க சேனைகளையும் சர்வாயுதப் பலத்துடன் வரும்படிக்குத் திட்டம் சொல்லி அழைத்துக்கொண்டு ஓடிவாடா கட்டியக்காரா!''

## கட்டியக்காரன், கார்த்தவீரியனுக்குச் சொல்கிற

### பரணி

545. தோன்றவே உன்தன் சொற்படி சென்று
ஆன்ற சேனைகளை அழைத்தினி வருவேன்!

### வசனம்

"கேளும், இராஜாதிராஜனே! தேவரீர் உத்திரவுப்பிரகாரம் போய், பெருத்த நமது சேனைகளை யுத்த சன்னாகத்துடன் அழைத்துக்கொண்டு வருகிறேன் மகாராஜனே!"

## கட்டியன், சேனாபதி முதலியோருக்குச் சொல்வது

### விருத்தம்

546. வேந்தனர் தரவி னுக்கு
வோறான்றும் தடைசொல் லாமல்
பாந்தமாய் நடக்கும் சேனா
பதிமுதல் அனைவர் கேளீர்
ஏந்தலம் பரசு ராமன்
இகல்செய வந்தான் என்றேன்
மாய்ந்திடச் சமர்வி ளைக்க
வலப்படை கொண்டு வாரீர்!

## வசனம்

''கேளும், அரசர்க்கு அரசனாகிய கார்த்தவீரன் உத்திரவுக்கு ஒருதடையும் சொல்லாமல் நடக்கும் சற்குணமுள்ள சேனைத் தலைவனே! ஜமதக்கினி குமாரனான பரசுராமர் யுத்தம் செய்ய வந்திருக்கிறார்! அவனை வெல்வதற்குச் சண்டை செய்யப் பலமான ஆயுதங்களைக் கொண்டு வாருங்கள், தளகர்த்தனே!''

# சேனாதிபதி, கட்டியக்காரனுக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : காவேரி*

547. இளஞ்சிங்கக் குட்டி போலும்
இகலுள கட்டியக் காரா!
வளஞ்சக்க ரேசர் என்னை
வன்சமர்க் கழைத்த தாலே
உளஞ்சலி யாமல் இன்றே
ஒருநிமி ஷத்தில் வாறேன்!
களஞ்சியம் கொலுவைக் காக்கக்
கடிதினில் செல்லுவாயே!

(சக்கரேசர் - கார்த்தவீரியன்)

## வசனம்

''கேளும், இளமையான சிங்கக் குட்டியை நிகர்த்த பராக்கிரமமுள்ள கட்டியக்காரா! வளமையான சக்கரேசனான

கார்த்தவீர மகாராஜன் என்னை வலிவுள்ள போர்செய்ய அழைத்துவரும்படி ஆக்ஞாபித்ததால், நான் மனஞ்சலிப்பில்லாமற் படிக்கு இப்பொழுதே ஒருநிமிஷ நேரத்தில் வருகிறேன்! பொறகளஞ்சியத்தையும் கொலுவையும் காப்பதற்குச் சீக்கிரம் அவ்விடம் போய்ச் சேரும் கட்டியக்காரா!''

## சேனைத்தலைவன், வருகிற

### விருத்தம்

*இராகம் : தோடி*

548. கத்திநாந்த கந்து ரோணம்
கனமுறு தெண்டு கூரார்
சத்திரம் வடிவார் புங்கம்
தகுந்தசூல முங்கைக் கொண்டு
சித்திர வில்லோர் யாரும்
திகில்கொண்டு நடுக்கம் கொள்ள
சத்துவம் உள்ள சேனைத்
தலைவனும் வருகின்றானே!

### வசனம்

''அகோதெப்படி யென்றால், கத்தி, வாள், வில், தண்டு, கூர்மையான வேல், வடிவுள்ள பாணம், தகுதியான சூலம் இது முதலிய ஆயுதங்களைக் கையிலே பிடித்துக் கொண்டு, அழகிய வில் சாதுரியத்தில் வல்லவர்கள் கண்டு பயந்து, நடுங்கும்படிக்குச்

சத்துவமான பலமுள்ள சேனாபதி அரசனைக் காண வருகிற விதம் காண்க!''

## சேனாதிபதி வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

549. சேனாதிபதி வந்தான்! - அதிவிரைவில்
சேனாதிபதி வந்தான்!

### அனுபல்லவி

சேனாதிபதி வந்தான் வானோரும் பயங்கொள்ளச்
செம்மல் கார்த்தவீரன் திகழ்கொலு வினைநாடி - சேனா

### சரணங்கள்

தட்டிசல்லட மறைதன்னில் இறுக்கிக் கட்டி
நெட்டாய் அம்பறாத்துணியைப் புயத்தினில் மாட்டி - சேனா
ஒன்னலர் எய்கணை ஒன்றும் தையாதோடா
மின்னும் கவத்தை மெய்யினிலே தரிந்து சேனா - சேனா
இவரைச் செயிப்பவர் இந்த உலகத்தினில்
யாவரும் இல்லை என்றெதிரில் கண்டோர்சொலச் - சேனா

# சேனாதிபதி, கார்த்தவீரனுக்குச் சொல்

## விருத்தம்

550. செங்கதிர் களைவி ரிக்கும்
தினகரன் மரபில் வந்த
எங்களாண் டவனே உந்தன்
இணையடிக் கமலம் போற்றி
கங்கையாய் இவிடத் திற்குச்
சலிதியில அழைத்த சேதி
பொங்கமாய் என்ற னுக்குப்
புரியுடன் விளம்பு வீரே!

(தினகரன் - சூரியன்)

## வசனம்

"கேளும், சிவந்த கிரணங்களைப் பரவும்படி செய்யாநின்ற சூரியகுலத்தில் பிறந்து இராஜரீகம் செய்யும் எங்கள் ஆண்டவராகிய கர்த்தரே! உமது இரண்டு பாதார விந்தமே சரணம்! மனவருத்தத்துடன் என்னை இவ்விடத்திற்குத் துரிதமாயழைத்த சமாசாரத்தைச் சந்தோஷமாக எனக்கு அன்புடனே சொல்லியருளும் சுவாமி!"

# கார்த்தவீரன் சேனைத் தலைவனுக்குச் சொல்

## விருத்தம்

551. உலகினில் தியாகம் வாங்கி
உதரமும் வளர்க்கும் பார்ப்பான்
குலமதில் உதித்த சின்னக்
குறளன்இப் பரசுராமன்
பலமுடன் சமரம் செய்யப்
பதைத்திங்கு வந்த பையல்
விலகியே ஓட வெம்போர்
விளைக்கடன் தனைய ழைத்தேன்!

## வசனம்

''கேளாய், திராணியுள்ள தளகர்த்தனே! உலகத்தில் வீடுகள் தோறும் போய்ப் பிச்சை எடுத்துவந்து வயிறுவளர்க்கும் பார்ப்பார் குலத்தில் வந்த சிறிய உருவம் உள்ள பரசுராமன் பலவானைப் போலச் சண்டை செய்ய பதைபதைத்து இவ்விடத்தில் வந்திருக்கிற சிறுவன் பயந்து ஓடும்படிக்கு வெவ்விதனாகிய கடூரமுள்ள உயுத்தம் செய்ய உன்னையிங்கு வரவழைத்தேன், வீரத்தினிலே மிகுந்த சேனைத் தலைவனே!''

# சேனைத்தலைவன், கார்த்தவீரனுக்குச் சொல்

## விருத்தம்

552. குவலயத் தினிலே உள்ள
குடிகட்டுப் பஞ்சாங் கத்தை
விவரமாய்ச் சொல்லில் பிச்சை
வேண்டியே வாங்கித் தின்னும்
பவமுள பரசு ராமன்
பலவான்போல் இவிடம் வந்தான்
அவனை என் பாணத் தாலே
அதமாகச் செய்வேன் பாரீர்!

(குவலயம் - உலகு)

## வசனம்

"கேளும், மகாராஜனே! நமது உலகத்திலே உள்ள குடித்தனக் காரர்களுக்குத் தினந்தோறும் பஞ்சாங்கம் சொல்லி அவனிடத்தில் நெல் முதலியவற்றை வாங்கித்தின்று காலங்கழிக்கிற பரசுராமன், மிகுந்த பலவானைப் போலச் சண்டை செய்ய நம்மிடம் வந்தான்! அவனை என் கையிலே யிருக்கிற ஓர் அஸ்திரத்தினாலே சமமாரம் செய்கிறேன்! என் திராணியைப் பாரும் இராஜ சிங்கமே!"

# கட்டியக்காரன் சொல் பொது

## பரணி

553. விறல்அர கனுக்கிவ் விதஞ்சொலில் புக்கி

திரல்சைனி யங்கள் சேகரம் செய்வான்!

## வசனம்

''இந்தப் பிரகாரம் சேனைத்தலைவன் கார்த்தவீரனுக்குப் பரசுராமருடன் போர் செய்ய வருவதாய்ச் சொல்லிப்போய் தனது சுவாதீனத்தில் இருக்கிற பலத்திலே மிகுந்த சேனா சைனியங்களுக்கு எல்லாம் கண்டோர் மூலமாகத் தெரிவித்துச் சேனைகளை யுத்தத்துக்கு வருவிக்கிற விதம் காண்க!''

# சேனைகள் வருகிற

## விருத்தம்

*இராகம் : தோடி*

554. மண்டலத் தினிலே உள்ள

மாந்தர்கள் வெருவி ஓட

திண்திறல் சுத்த வீரர்

தியங்கிஉள் ளம்க லங்க

விண்தலம் எழும்பச் செந்தூள்

மிகப்பரி கரிப தாதி

அண்டிடாச் சைனி யங்கள்

அணியணி வருகின்றாரே!

(வெருவி - அஞ்சி; செந்தூள்-புழுதி)

### வசனம்

"பூவுலகின் கண் இருக்கிற மானிடர்கள் பயந்து ஓட, புஜபல பராக்கிரமம் உள்ள சுத்த வீரர்கள் திகைத்து, மனது கலக்கம் அடைய, அவர்கள் வரும்வழிகளில் செந்தூள் எழும்பி ஆகாயத்தை மறைக்க, யானை, குதிரை, சேனைகள் ஒருவர்கிட்ட வருவதற்குக் கூடாத சேனைகள் வரிசை வரிசையாய் வருகிறதென்றறிக!"

## சேனைகள் வருகிற தரு

*இராகம்: கலியாணி*

### பல்லவி

555. சேனை வருகிறது! கார்த்தவீரியன்

சேனைத் திரனினைப் பார்!

### அனுபல்லவி

வானைத்தான் விழுங்கி - தாகத்துக்குச்

சோனைமுகில் பிழிவோர் - வளமுள்ள

விசய நகருறைவோர் - ஏமனையும்

திசைகெட்டோட அடிப்போர்! நல்ல

முரச நகருறைவோர் - மூவரையும்
நிரஞ்சன மாய்ப்பிடிப்போர்!
இசைய நகருறைவோர் - இந்திரனை
எட்டிப் பிடித்திருப்போர் - கடல்சூழும்
அவனியைப் பேர்த்தெடுப்போர் - அடலுள்ள
அரசையும் செயிப்போர்!
பீமனையும் பிடிப்போர்-பலத்த
பிரளயத்தைத் தடுப்போர் - விரைவினில்
சர்வலோகஞ் செயிப்போர் - சமுத்திரச்
சலத்தையெல்லாம் குடிப்போர்! - சேனைகள்

## சேனைகள், கார்த்தவீரனுக்குச் சொல்

### விருத்தம்

556. எண்டிசை யானைத் தந்தம்
ஏறிய மார்பன் ஆன
கண்டகன் இலங்கை வேந்தைக்
கடுஞ்சிறை இட்டோய் போற்றி!
தொண்டரால் எங்கள் தன்னைத்
துரிதமாய் அழைத்த சேதி
விண்டுரை செய்ய வேணும்
வியப்புற எங்களுக்கே!

### வசனம்

''கேளும், அஷ்டதிக்கு யானையினுடைய தந்தங்களை மார்பிலேற்றிய கண்டகனாகிய இராவணனைக் கொடிய சிறையில் வைத்த முதல்வனே, சரணம்! உமது வெல்தொழில் செய்யும் தூதரால் எங்களைத் துரிதமாக வரவழைத்த சங்கதியைத் தெரியச்சொல்ல வேணும் யாங்கள் அதிசயம் அடையும்படிக்கு மகாராஜனே!''

## கார்த்தவீரன், சேனைகளுக்குச் சொல்

### விருத்தம்

*இராகம் : மத்தியமாவதி*

557. திடத்தொகை சைனி யங்காள்
        தேர்ச்சியாய்த் தவம்இ யற்றும்
    சடைத்தலை முனிவன் ஈன்ற
        சந்ததி பரசுராமன்
    இடக்கதாய்ப் பேசு கின்றான்
        எதிர்த்துநீர் அவன்சி ரத்தைப்
    புடைத்துச்சங் கரித்தே இன்று
        போகுவீர் இருப்பிடத்தே!

( சடைத்தலை - சடாமுடித்தலை)

### வசனம்

"கேளுங்கள், திராணி பொருந்திய சேனைகளே! மனத்திலே தெளிவுண்டாகித் தவசு செய்யும் சடைத்தலை முனிவனான சமதக்கினி முனிவர் பெற்ற புதல்வன் பரசுராமன் என்னிடம் வந்து எதிர்த்து வார்த்தைகளைப் பேசுகின்றான்! அவனை நீங்கள் எதிர்த்து யுத்தம் செய்து சிரசுகலங்க சமாதியடித்துச் சம்மாரம் செய்து, உமது இருப்பிடம் போயிருங்கள் சைனியங்களே!"

## சேனைகள் கார்த்தவீரனுக்குச் சொல்

### விருத்தம்

558. சரிசரி தேவ ரீரும்
        சாற்றிய படியே யாங்கள்
    பரபரப் பாகச் சென்று
        பரசுராமனை வளைத்து
    கரியின்மேல் வீரச் சிங்கம்
        கடிதினில் பாய்ந்த தேபோல்
    விரைவினில் அவன்சி ரத்தை
        வெட்டியே வருவோம் பாரீர்,

(கரி - யானை)

### வசனம்

"கேளும், இராஜாதிராஜனே! தேவரீர் சொன்னபிரகாரம் யாங்கள் அதிசீக்கிரமாகப் போய்ப் பரசுராமனைக் கொல்லும்படி

வளைத்துக் கொண்டு மதயானையின் மேல் வீரதத்துவம் மிகுந்த சிங்கம் வேகமாகப் பாய்ந்தாற்போலத் துரிதமாய் அவன் தலையைச் சங்கரித்து வெற்றிமாலை தரித்துக்கொண்டு வருகின்றோம் பாரும், எங்கள் ஆண்டவராகிய சிறந்த மகாராஜனே!''

## கார்த்தவீரன் வசனம்

''அப்படியே செய்யுங்கள் சேனா சைனியங்களே!''

## சேனாதிபதி, பரசுராமனைப் பார்த்துச் சொல்

### பரணி

559. ஆண்மையாய் எதிர்த்து இங்குஅமர்
செய்யவந்த மாண்பை வீரா வருகுவாய் போர்க்கே!

### வசனம்

''கேளடா, பராக்கிரமமுடன் யுத்தம் செய்யவந்த பரசுராமா! நாங்கள் போர் செய்யச் சன்னாகத்துடன் வந்திருக்கிறோம்! நீ முன்னே வந்து எதிர்த்து யுத்தம் செய்யடா வீரா!''

# கார்த்தவீரன் சேனைக்கும் பரசுராமனுக்கும் தருக்கம்

## கண்ணிகள்

560. **உயுத்தச் சேனைகள் :**

ஆரடா பார்ப்பாரப் பயலே! எங்கள்

அரசனை எதிர்த்தநீ யாரடா?

**பரசுராமன்**

அடாபோடா என்றுநீர் பேசியே - மிக்க

ஆக்கிரமித்த நீங்கள் ஆரடா?

**சேனை :**

கார்த்த வீரனிட படையடா! உன்னைக்

கண்டிக்க வந்தோமென் றறியடா!

**பரசு :**

என்னைக் கண்டிப்பவர் எவரடா? என்று

ஏவினான் வாளியைத் தூவினான்!

**சேனை :**

வாளி வருவதைக் கண்டுதம் வில்லை

வளைத்துக் களைதண்டு மேவினார்!

**பரசு :**

தண்டம் வருவதைக் கண்டுமே - அதைத்

தடுக்கக் கோடாலியை ஏவினார்!

**சேனை :**

கோடாலியால் தண்டம் விழுந்திட
குடல்நடுங்கி மனம் தளர்ந்திட சேனை

**பரசு :**

பரசென்ற பாணம் விடுத்திட சேனைப்
படுதுக ளாகவே பறந்திட

( வாளி - அம்பு)

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

561. சேனைகள் மாண்ட சேதி
திடமுள தூத ராலே
தானுணர்ந் துதிகக் கோபம்
தாங்கியே மதங்கள் மீறும்
ஆனைபோல் உதும்பிக் கொண்டே
ஆயுத பாணி யாக
பானுவின் குலத்தன் ஆன
பார்த்திபன் வருகின்றானே!

( பானு - சூரியன்; பார்த்திபன் அரசன்)

## வசனம்

''இந்தப் பிரகாரம் பரசுராமருடன் எதிர்த்து உயுத்தம் செய்த கார்த்தவீரன் சேனைகளெல்லாம், மடிந்தும் பயந்து ஓடியும் போய் விட்ட சங்கதி, வேகமாய் நடக்கும் வல்லபமுள்ள தூதர்களாலே கார்த்தவீரன் விசாரணை செய்துதெரிந்து கொண்டு, மனதிலே அதிகக் கோபம் பிரிவேசித்து, மும்மதங்கள் பொழியப்பட்ட ஆனையைப்போல உதும்பிக்கொண்டு, சகல ஆயுதமும் எடுத்துக் கையிலே பிடித்துக் கார்த்தவீரன் போருக்கு வருகிற விதம் காண்க!''

# கார்த்தவீரன் வருகிற தரு

*இராகம் : கலியாணி*

## பல்லவி

562. கதிரவன் குலத்துற்ற கைகளால் ஆயிரம்பெற்ற
கார்த்தவீரன் வந்தான்! - மாகதீரக்
கார்த்தவீரன் வந்தான்!

## அனுபல்லவி

அதிபதிகள் வந்தே அடிவணங்கிச் சூழும்
ஆண்மையுள்ளோன் என்றே அவனியிற்கொண் டாடும் - கதி

## சரணங்கள்

தட்டிச் சல்லடம் வரித்து - கணைபாயாமல்
தகவாய்க் கவசம் தரித்து

மட்டில்லாதவலம் வாய்ந்தவில்லை எடுத்து
வாகுவின்மேல் அம்புறாத்துணியை விடுத்து - கதி

கைலைமலை யைப்பேர்த்த விரலு ளானைக்
காவல்சிறை யில்சேர்த்த வல்லபமுள்ள
ஐயனிவன் என்றமரும் சொல்லிக் கொள்ள
அந்தணன் பரசுராமன் பகையைத்தள்ள - கதி

காமதேனு வினாலிந்தக் கொடூர மான
கனத்தசமரம் விளைந்த தென்று நினைந்து
சேமத்தினில் இருந்த சிறந்தபடைகள் மிக்க
செங்கரத்தினில் கொண்டு திறல்வீரரும் பிரமிக்க - கதி

## கார்த்தவீரன், பரசுராமனுக்குச் சொல்கின்ற

### பரணி

563. மறையவர் குலத்து மதலையே நீயும்
பொறையிலா தமரம் புரியவே வருவாய்!

### வசனம்

''கேளாய், மறையவராகிய பிராமணர்குலத்தில் பிள்ளையாகப் பிறந்த பரசுராமனே! நீ கோபத்துடன் செய்யும் உயுத்தம் செய்ய என்னுடன் வந்து எதிர்ப்பாய் வீரனே!''

# கார்த்தவீரனுக்கும் பரசுராமனுக்கும் தர்க்கம்

*இராகம் : மோகனம்*

## கண்ணிகள்

564. **கார்த்தவீரியன் :**

அடல்செய்யவந்த பரசுராமா உன்மேல்

ஐந்து வச்சிரக்கணை தொடுத்தேன்!

**பரசு :**

தொடுத்தவச்சிரம் துண்டாய் விழுந்திட

துரிதமாய்த் தண்டமும் ஏவினேன்!

**கார் :**

ஏவிய தண்டம் இரண்டாய்விழ

எடுத்திதோ வச்சிரம் தொடுத்தேன்!

**பரசு :**

தாவிவரும் சரம்வச்சிரம் விழச்சூலம்

சமர்த்துடன் விரைவாக விடுத்தேன்!

**கார் :**

அடுத்தடுத்துப் பலஅஸ்திரம் விடுத்தேனுன்

அங்கமெல் லாந்துளை செய்யவே!

**பரசு :**

விடுத்தபலகணை அகற்றியே வினைகரம்

விரைவினில் உன்மனம் நையவே!

**கார் :**

திடத்துடன் மேவுமுன் கரத்துள்ள வில்லையும்

சிதைத்து முறிக்கக் கணை தொட்டேன்!

**பரசு :**

தொடுத்த சரங்களை அறுத்து விழத்தள்ளி

சூலம் மந்திரித்து இதோ விட்டேன்!

**கார் :**

ஆயிரம் கரத்திலும் ஆயிரம் படைபற்றி

அதிகமாய்ச்சு கற்றியே விடுத்தேன்!

**பரசு :**

ஏயுமென் பரசினால் ஆயிரம் படைகளும்

இரியச் செய்து உன்னையும் மடித்தேன்!

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

565. ஒப்பிலா வயத்தைப் பெற்ற

உயர்வுள கார்த்த வீரன்

தப்பிலாப் பரசு ராமன்

தன்படை அதனால் மாயச்

செப்பரும் புதல்வா கேட்டுச்

செருமிகச் செய்தே அந்த

விப்பிரன் பாணத் துக்கு

வெகுவிலே ஓய லுற்றார்!

(செரு - போர்)

## வசனம்

"அகோதெப்படி யென்றால், நிகரில்லாத பலத்தினைப் பெற்ற மேன்மையுள்ள கார்த்தவீரன், குற்றம் இல்லாத பரசுராமன் ஆயுதத்தினால் மடியக்கேட்ட குமாரர்கள் கேள்விப்பட்டுப் பரசுராமனுடன் எதிர்த்து உயுத்தம் செய்து செயிக்க வல்லபமில்லாமையினால் அவன் பிரயோகஞ் செய்யும் பாணங்களுக்குப் பயந்து, பதினாயிரம் பிள்ளைகளும் ஓடிவந்து விட்டார் என்றறிக!"

## கட்டியக்காரன் சொல்

## அகவல்

*இராகம் : காம்போதி*

566. பார்த்திபர் வணங்கும் பாதத் தாமரையான்
கார்த்த வீரியன் கனமுறு பதினேழ்
அக்கு ரோணியாம் அடலுறு சேனைகள்
மிக்க மாய்ந்திட வெஞ்சமர் புரிய
ஒருவரும் இல்லா தொழியவே கண்ட
பரசுராமரும் பட்டணம் புக்கு

கட்டிவைத் திருந்த காம தேனுவாம்

தட்டிலாப் பசுவைத் தானவிழ்த் ததனைக்

கையிலே பிடித்துக் காட்டா றுமலை

வெய்யகான் கடந்து விரைவுடன் தனது

தந்தை ஆசிரமம் தருக்குடன் நண்ணி

எந்தையே இந்த எழில்காம தேனைக்

கொண்டுபோய் விடாதஅக் கொற்றவன் உயிரை

விண்டலத் தனுப்பி வெலவவன் பின்னே

வந்தவர் தம்மை வாட்டியே ஓட்டி

சொந்தமாய்ப் பசுவைத் துரிதமாய்க் கொணர்ந்தேன்

தாதையே உன்றன் தாமரை மலரார்

பாதமே சரணம் பதிந்தருள் புரியே!

(அடல் - வீரம்; கான் - காடு; கொற்றவன் - அரசன்; கார்த்தவீரியன்; தாதை - தந்தை)

## ஜமதக்கினி முனிவர் பரசுராமருக்குச் சொல்

### விருத்தம்

567. மைந்தனே காம தேனை

வலிதினில் மீட்டுக் கொண்டே

வந்தநல் திறமைக் குள்ளம்

மகிழ்ந்தனன் சுபக ரந்தான்

செந்தவ னன்கு லத்துச்

செம்மலைக் கொன்ற தோஷம்

உந்தனைச் சேரா தேக

உதகயாத் திரைசெய் வாயே!

(உதகயாத்திரை - தீர்த்தயாத்திரை)

## வசனம்

''கேளும், எனது குமார்னாகிய பரசுராமனே! கார்த்தவீரன் திருடிக்கொண்டு போன காமதேனுப் பசுவை, உன் பராக்கிரமத்தினால் மீட்டுப்பிடித்து வந்ததற்கு, என்மனம் சந்தோஷம் ஆச்சுது! நல்ல காரியந்தான்! அது அப்படி யிருந்தாலும் செந்தபனனாகிய சிவந்த கிரண முள்ள சூரியகுலத்து அரசனான கார்த்தவீர மகாராஜனைச் சம்மாரம் செய்தது உனக்குத் தோஷமுண்டாச்சுது! அந்தத் தோஷம் உன்னை விட்டுப் போகிறதற்குப் பெருமையுள்ள தீர்த்தங்கள் தோறும்போய் யாத்திரை செய்துவருவாய் பரசுராமா!''

## பரசுராமர் ஜமதக்கினிக்குச் சொல்

## விருத்தம்

568. அத்தனை இதயம் தன்னில்

அனவர தமுநி னைந்தே

மெத்தவும் துதிக்கும் நல்ல

மெய்யறி வுளவே போற்றி!

சத்துநல் கும்பெருத்த

தகையுறும் தீர்த்த யாத்திரை

சித்தமாய்ச் செய்து வாறேன்

செலவுதந் தனுப்பு மையா!

(செலவுதந்து- விடைதந்து)

### வசனம்

''அத்தனாகிய பரமசிவனைத் தேவரீருடைய இதயக்கமலத்தில் எப்பொழுதும் தியானித்துக் தெளத்தியம் செய்யும் நன்மையாகிய ஞானமுடைய பிதாவே சரணம்! சத்தான பலன்களைக் கொடுக்கும் பெருத்த கீர்த்தியையுடைய தீர்த்த யாத்திரை செய்யப் போகிறதற்குச் செலவு கொடுத்தனுப்பும் தந்தையே!''

## ஜமதக்கினி பரசுராமருக்குச் சொல்

### பரணி

569. அறிவிலே மிகுந்த அருந்தவப் புதல்வா

திறமையாய்த் தீர்த்தயாத் திரைசெய்து வருவாய்!

### வசனம்

''கேளும், புத்தியிலே சிறந்த எனது அரிதாகிய தவப்புத்திரனே! நீ வல்லமையுடன் உலகத்தில் உள்ள கங்கை முதலிய நதிகளில் தீர்த்தமாடி திவ்வியஸ்தலங்களுக்கும் போய்ச் சுவாமியைச் சேவித்துத் தோத்திரம் செய்து வருவாய் பரசுராமா!''

## பரசுராமன், ஜமதக்கினிக்குச் சொல் வசனம்

"அப்படியே போய்வருகிறேன், தந்தையே!"

## பரசுராமர் யாத்திரை செய்கிற

### தரு

*இராகம் : தோடி*

### பல்லவி

570. யாத்திரை செய்யலுற்றான்-பரசுராமன்
யாத்திரை செய்யலுற்றான்!

### அநுபல்லவி

குயாத்திரி மாதரைக் கொலைசெய்த பாவமும்
வியாதியெவை யும்தீரும் மேதகு தலந்தோறும் யாத்

### சரணங்கள்

முத்தியைத் தருமென்று மொழியுங்கங்கா தீர்த்தமும்
நத்து யமுனையில் ஸ்நானம்செய்தே அன்புடன் - யாத்

ஞாலமெல்லாம் புகழும் நர்மதை கிருஷ்ணையும்
சீலமுற வேண்டியத் தீர்த்தத்தில் மூழ்கியே - யாத்
கஞ்ச மலர்கள்மல்கும் கன்னி சரஸ்வதியும்
விஞ்சிய பாதகம் விரைவினில் நீங்களண்ணி - யாத்

சுத்தம தாகிய துங்கபத்திரி நதியும்
சத்தென்ற மனங்களி தாங்கித்தீர்த்தமும் ஆடி - யாத்

கோதிலா மகிமைகள் கொண்ட கோதாவரி
ஓதிய உதகத்தில் உள்ளில் உவகைஎண்ணி - யாத்

தன்மையு ளோர்புகழ் தாமரைப் பரணியும்
வன்மையுள்ள தீர்த்தம் வாஞ்சையாய் ஆடியே! - யாத்

(கோதிலா - குற்றமிலா)

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

*இராகம்: காவேரி*

571. இவ்வணம் பரசுராமன்
இணையிலா நதிகள் தோறும்
செய்வையாய்த் தீர்த்தம் ஆடித்
திவ்விய ஸ்தலங்கள் முற்றும்
ஒவ்வியே சேவை செய்தாங் (கு)
உவப்புடன் இருக்கும் போது
ஔவியக் கார்த்த வீரன்
அருஞ்சுதர் வருகின்றாரே!

(சுதன் - மகன்)

## வசனம்

"இந்தப் பிரகாரமாகப் பரசுராமன் என்றும் சரிசொல்லப்படாத நதிகள் தோறும் போய் களங்கமற ஸ்நானம் செய்து, திவ்வியமான தெய்வஸ்தலங்கள் முழுதும் போய்க் கடவுளைக்கண்டு தெரிசித்து வணங்கி, தௌத்தியம் செய்து, சந்தோஷமாக அவ்விடத்திலிருக்கும் போது, இவ்விடத்தில் கார்த்தவீரன் புத்திரர்கள் பொறாமையுடையவர் களாய்ச் சமதக்கினிமுனிவர் ஆசிரமத்துக்கு வருகிற விதம் காண்க!"

## கார்த்தவீரன் பிள்ளைகள் வருகிற

## விருத்தம்

*இராகம் : காவேரி*

572. தந்தையாம் கார்த்த வீரன்
தலைவனைப் பரசுராமன்
நந்தவே கொன்றான் என்று
நாளுமுள் ளத்தில் கொண்ட
மைந்தர்கள் பரசு ராமன்
வனத்தில் இல்லாத வேளை
தந்திரமாய்ப் பார்த்தன் னோன்பி
தாவைக்கொன் றிடவே வாரார்!

( பார்த்தன்னோன் பிதா = பாரதது + அன்னோன் + பிதா)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், தகப்பனாகிய கார்த்தவீர மகாராஜனைப் பரசுராமன் கொன்றுவிட்டான் என்று நாள்தோறும் மனத்தில் பகைவைத்துக் கொண்டு இருந்த குமாரர்கள் பரசுராமன் ஆசிரமத்தில் இல்லாத சமயத்தில் பார்த்துக் தந்திரமாகப் பரசுராமரின் தகப்பன் ஜமதக்கினிமுனிவரைக் கொல்ல வேணுமென்று அவரிருக்கும் ஆசிரமத்திற்கு வருகின்ற விதம் காண்க!''

## கார்த்தவீரன் புத்திரன் வருகிற தரு

### பல்லவி

573. மைந்தர்கள் வந்தாரே - கார்த்தவீரன்
மைந்தர்கள் வந்தாரே!

### அனுபல்லவி

மைந்தர்கள் வந்தாரே தந்திரமாகவே
அந்தணன் ஜமதக்கினி தன்தலை கொய்யவே மைந்தர்

### சரணங்கள்

பரசுராமன் மண்டு செய்த போரில்
பதுங்கி யோடியவர் பண்டு இதயத்தில்
கரவென்ம திவரிடம் கனமாக உள்ளவர்
சுகம்விற் பரீட்சையில் கைவலிமை இல்லாத - மைந்தர்

எதிரியில்லாச் சமயம்பார்த்தே ஒளிந்து
இருந்தவனுக் குள்ளேபயம் வருவதற்கு
பதறிடா தாள்வைத்துப் பலதினமும் பதுங்கி
பார்த்திருந்த இன்று பயணம் புறப்பட்டடு - மைந்

தந்தை இறந்த விசனம் தன்னையின்று
தானொழிந்த தென்னுமனம் மகிழ்வெய்தித்
தந்திர மாகவே தம்பி தமயருடன்
சதிசெய்யவே தங்கள் மதியினிலே எண்ணி-மைந்

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

இராகம் : தோடி

574. மிளிர்கதிர் குலத்தான் கார்த்த
வீரன்மெய்த் தவத்தால் ஈன்ற
இளமையம் சிறுவர் வஞ்சம்
இதயத்தில் எண்ணி வந்தே
ஒளித்துஅவ் விடத்திருக்க
உணர்ந்திடா இருடியான
தெளிசம தக்கினி யாங்கு
செபம் செய வருகின் றாரே!

### வசனம்

''இந்தப் பிரகாரம் சூரியகுலத்திற் பிறந்த கார்த்தவீரன் தவத்தால் ஈன்ற இளம்பருவம் பொருந்திய குமாரர்கள்

வஞ்சனையாகிய காரியங்களை மனத்திலே நினைத்துவந்து, மறைவாக ஒளித்துக்கொண்டு, அவ்விடத்தில் இருக்கும்போது அந்தச் கதை யறியாத மகாரிஷியான ஜமதக்கினி முனிவர் கண்களைமூடிக் கையிரண்டினாலும் காதை மூடிச் செபம் செய்கிறாரென் றறிக!''

## சமதக்கினி வருகிற

### விருத்தம்

*இராகம்: கலியாணி*

575. வாவியப் பினில்இ றங்கி

வணங்கியே ஸ்நானம் செய்து

காவியம் பரம்த ரித்து

கனக்கவி பூதி யிட்டு

தூஉருத் திராட்ச மாலை

தோடக மலர்க்கை ஏந்தி

தேவனைத் தியானம் செய்யச்

சமதக்கினி வருகின் றாரே!

(தூஉருத்திராட்சம் - தூய உருத்திராட்சம்)

### வசனம்

''ஆசிரமத்தில் அருகிலிருக்கின்ற தடாகநீரில் இறங்கி, ஸ்நானம் செய்து, காவிவஸ்திரம் தரித்து, சரீரம் எங்கும் விசேஷமாய்

விபூதியணிந்து பரிசுத்தமான உருத்திராட்சமாலை தோடகமாகிய தாமரை மலர் போன்ற கையிலே எடுத்துக் கொண்டு, கடவுளைத் தியானம் செய்ய வேண்டிச் சமதக்கினி வருகிற விதம் காண்க!''

## ஜமதக்கினி முனிவர் வருகிற தரு

### பல்லவி

576. முனிவரிதோ வந்தார் - ஜமதக்கினிமா
முனிவரிதோ வந்தார்!

### அனுபல்லவி

இனிமையாய்க் கைலை வாழ்ஈசன் பதமலரைக்
கனிவுடனே வணங்கிக் காதலாய்ப் பூசைசெய் - முனிவ

### சரணங்கள்

மும்மலக் குறும்பினை முழுதும் அகற்றிய
மூதறி வுள்ளோர்க்கு மேதகு வேதிய-முனிவ
சீலமுடன் ஸ்நானம் செய்து காவிவஸ்திரம்
கோலமுடன் மருங்கில் கொப்பெனவே தரித்து-முனிவ
விளக்கமாய்த் தடமார்பில் மேவும் முப்புரிநூல்
துளங்க அணிந்துபூதி சோதியுடன் விரைவில்-முனிவ
தாமரை மலர்த்தாளில் தகுந்த மிதியடியை
வாமமுடன் புனைந்து வண்மையுடன் உயர்ந்த-முனிவ

# சமதக்கினி முனிவர் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

577. அருணமும் பரகம் செய்ய
அஸ்தத்தில் இனிதாய்க் கொண்ட
கருணையங் கடலே உன்தன்
கஞ்சமஞ் சரணம் போற்றி
தருணத்தில் மார்க்கண் டேயர்
தன்னையா தரித்தாய் சர்ப்பா
பரணனே மாது பங்கா
பரிந்தெனக் கருள்செய் வாயே!

(சர்ப்பாபரணன் = சர்ப்ப + ஆபரணன்; சிவன்)

## வசனம்

''அருணமாகிய மானும், பரசமாகிய மழுவையும் திருக்கரத்தில் இஷ்டமாக ஏந்தியிருக்கும் அழகிய கிருபாசமுத்திரமே! உமது தாமரை மலர் போன்ற பாதமே சரணம்! இயமன் வந்த சமயத்தில் மார்க்கண்டனை ஆதரணை செய்த கர்த்தனே! பார்வதிக்கு இடப் பாகம் தந்த முதல்வனே! அன்பு வைத்துக் கிருபை செய்யும் சுவாமி!''

# சமதக்கினி முனிவர் தோத்திர அகவல்

*இராகம் : ஆரபி*

578. ஓம்சிவ சம்போ உமையாகு பாகா
தெம்பெலி கடுக்கை சிகழிகை சூடி
வானுறை சிறிய வால்வெண் மதியைத்
தானுகந் தரிய சடையினில் தரித்தோய்
வல்லிய மதள மருங்கினில் புனைந்த
துல்லிய மாகிய சோதிநற் பொருளே!
மதத்தினை உடைய வாரணம் தன்னை
எதிர்த்துரித் தத்தள மெழிலுடன் போர்த்த
பித்தனே கிருபை பெருகிய முதல்வா
அத்தனே பணியும் அன்பருக் கெளியோய்
சங்கரா போற்றி சதாசிவா போற்றி
பொங்கரா பரணப் புனிதனே போற்றி
வித்தகா போற்றிநல் விமலனே போற்றி
சத்தெனக் கருளும் தயாபரா போற்றி
வள்ளியே போற்றி மயேசனே போற்றிநல்
தெள்ளுமா மறையும் தேடுதற் கரிய
கர்த்தனே போற்றியெங் கடவுளே போற்றிதூய்
அத்வித மானதோர் அமலனே போற்றியம்
பரசுரர் போற்றும் பரமனே மூன்று
புரமெரி யெழநகை புட்கரா போற்றி
உன்னியே நெஞ்சம் உருகின தொண்டர்
முன்னிலை வந்தே முதமுடன் காக்கும்
கறைமிடற் நண்ணல் கழலிணை சரணம்
சிறியனுக் கருளும் சிவபெருமானே!
குறைவிலா தெனையாட் கொள்ளுமெம் மானே!
முறைசொலும் என்றன்முன் வந்தருள் செய்யே!

(வால்வெண்மதி - தூய வெண்மையான திங்கள்; வாரணம் - யானை ; புரமெரியெழ - முப்புரமும் தீப்பற்றி எரிய)

## கட்டியக்காரன் சொல்

### விருத்தம்

*இராகம் : தோடி*

579. தேறிய தவத்தோ னான
சமதக்கினி முனிவன் அன்பிற்
கூறிய செபம்செய் கின்ற
குறிப்பினைப் பார்த்தவ் வேளை
கோறவே ஒளித்திருந்த
குமாரர்கள் ஆயு தத்தால்
சீறியே சிரத்தைக் கொய்து
சீக்கிரம் நகரம் போனார்!

### வசனம்

''அகோதெப்படி யென்றால், தவத்தில் தேறினவராகிய ஜமதக்கினி முனிவர், பரமசிவனை நோக்கிக் கண்களை மூடிக்கொண்டு, கைகளால் இரண்டு காதினையும் மூடிச் செபத்தில் இருக்கும் போது, அந்தச் சமயத்தில் கார்த்தவீரன் பிள்ளைகள் மெல்லமெல்லச் சந்தடி பண்ணாமல் வந்து செபத்திலிருக்கும் ஜமதக்கினி முனிவர் தலையை அறுத்துவிட்டுத் தங்கள் பட்டணம் ஓடிப்போய்விட்டார்கள்! மேல் நடந்தது காண்க!''

# இதுவும் கட்டியன்சொல் பொது

## விருத்தம்

580. கார்த்த வீரன் குமாரர்

கடிநகர் சென்ற பின்பு

கீர்த்தி ரேணுகையாள் நாதன்

சிரமறுந் ததனைக் கேட்டு

வேர்த்திட உடலம் எல்லாம்

விரைவினில் ஓடி வந்தே

பார்த்துளம் வெதும்பிக் கண்ணீர்

பரவிநொந் தழுகின் றானே!

(நாதன் - கணவன்; உடலம் - உடல்; அம்முச்சாரியைபெற்று வந்தது; பார்த்துளம்-தொகுத்தல் விகாரம்)

## வசனம்

''இந்தப் பிரகாரமாகக் கார்த்தவீரன் பிள்ளைகள், ஜமதக்கினிமுனிவர் கழுத்தையறுத்துவிட்டு, அவர்கள் பட்டணம் போனபின்பு, சிறப்பினையுடைய ரேணுகையம்மாள் தனது புருஷன் தலையறுபட்டு இறந்த சங்கதியைக் கேள்விப்பட்டுச் சரீரமெல்லாம் வேர்வைநீர் ஒழுக, வேகமாக ஓடிவந்து கணவன் கழுத்து அறுந்து, தலை கீழே கிடப்பதைக் கண்ணினால் பார்த்துத் தனது மனது வருத்தத்துடன் கண்ணீர்விட்டு அழுதுபுலம்புகிறவிதம் காண்க!''

# இரேணுகை, புருஷன் இறந்ததற்கு இரங்கல்

*இராகம் : முகாரி* | *தாளம் : அடிதாளம்*

## பல்லவி

581. ஆ விதியே - பிராணநாதா
ஐயோ விதியே! - ஆவி

## அனுபல்லவி

ஆவிதியே கணவன் அரசனால் இறப்பான் என் (று)
அன்றெழுதிய படிக்கு இன்று நடந்ததோ? -ஆவி

## சரணங்கள்

படுத்த புற்றில்வந்து பாங்குடனே பிறந்து
வருத்தம் இப்படியாக வரவும் இருந்ததோ? -ஆவி
பர்வத ராஜனும் பரிந்தெடுத்து வளர்த்து
சர்வஜன முன்பாகத் தகுமணம் செய்வித்தது -ஆவி
பண்டு நான் செய்தவினை பயனோ நடுவானில்
கொண்டவரன் இறந்து கோதையாள் யானிருக்க -ஆவி
வான்கந் தருவரை வர்ணிக்க வென்சிரம்
தான்பரசு ராமனால் தறிந்துவரச் செய்தது -ஆவி

# கட்டியக்காரன் சொல் பொது

## விருத்தம்

*இராகம் : தோடி*

582. கணவனை எண்ணிச் சிந்தை
கலங்கிநொந் திரங்கும் வேளை
திணையுள ஸ்தலங்கள் தோறும்
தீர்த்தயாத் திரைக்குச் சென்ற
அணியுள பரசு ராமர்
அருநதி முழுது மாடி
இணையிலாத் தலங்கள் சேவித் (து)
இருப்பிடம் வருகின் றானே!

(சேவித்து - வணங்கி)

## வசனம்

''இவ்விதம் கணவனாகிய ஜமதக்கினியை நினைந்து மனவருத்தப்பட்டுப் புலம்பிக் கொண்டு இரேணுகை சவத்தின் அருகில் இருக்கும் சமயத்தில் பூமியில் இருக்கப்பட்ட திவ்ய தலங்கள் எல்லாம் தீர்த்த யாத்திரை செய்யப்போன அலங்காரமுடைய பரசுராமன் அரிதாகிய நதிகளில் ஸ்நானம் செய்து என்றும் நிகரில்லாத மகிமையுள்ள ஸ்தலங்களும் பணிந்து தனது ஆசிரமத்துக்கு வருகின்றானென்று அறிக!''

## பரசுராமன் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

583. பலத்த கார்த்தவீரன் படையவனையும் வென்ற
பரசுராமரும் வந்தார்!

### அனுபல்லவி

குலத்துக்கெல்லாம் உயர்கொண்ட அந்தணர்
குலக்குமரன் சமர்செய்வதில் கோளரி போன்றவன்!-பலத்த

### சரணங்கள்

வரநதி முதலாக வழுத்து நவநதியும்
திறமுள மனதுடன் தீர்த்தமும் அடியே-பலத்த
மொழியும் எழுநகர முதலாம் திவ்யதேசம்
எழிலாய்அங் கிருக்கின்ற ஈஸ்வரரை வணங்கி-பலத்த
தந்தை வாக்கியத்திற்குத் தடைசொல்லாத சேயன்
தந்திரமாகச் செய்சமருக் கதிநேயன்!-பலத்த

(கோளரி - சிங்கம்)

## பரசுராமன், தகப்பனைப் பார்த்துச் சொல்கிற

### விருத்தம்

584. ஐயனே என்ன செய்வேன்?
அரியயாத் திரையே யானும்

செய்யவே எனைய னுப்பிச்

சீவனை விட்டா யோயிவ்

வையகம் பழிக்க உம்மை

வதையவர் செய்திட் டாரோ?

கையிலா தவர்கள் போலக்

கலங்கவோ உடம்பெ டுத்தேன்?

(சீவன் - உயிர்)

## வசனம்

''ஐயையோ தந்தையே நான் என்ன செய்யப் போகிறேன்? அரிதாகிய தீர்த்தயாத்திரை செய்யும்படி என்னை அனுப்பிவிட்டு, உம்மிட உயிரை விட்டுவிட்டாயே! இந்த உலகத்தோர் பழிக்கும்படி எவர்கள் உம்மைக் கொன்றுவிட்டுப் போனார்களோ? ஒன்றுக்கும் உபயோகமில்லாதவர்கள் போல் சரீரமெடுத்து வருத்தப்படவோ ஆகினேன்? இந்த விதிக்கு என்ன செய்வேன் கர்த்தனே?

## பரசுராமர் தந்தைக்கு விசனப்படுகிற தரு

*இராகம் : ஆனந்தபைரவி* *தாளம் : ஆதிதாளம்*

## பல்லவி

585. எப்படி மனந்துணிவேன்? - தந்தை இறந்த

இன்னல் என்று தணிவேன்?

தப்படியாகக் கொய்த தாடாண்மை யார்களைக்

கைப்பிடியாய்ப் பிடித்துக் கண்டித் திடாமல்விட்டு-எப்படி?

### சரணங்கள்

தவசுசெய்தே என்னைச் சந்ததியாய் பெற்ற
இவறலுடைய உதவி இறந்துமிப் புவியினில்-எப்படி?
இதுவரைக்கும் ஆயுள் ஈறாகப் யாச்சுதோ?
மதியினிலே அறியேன் வையகத்தில் சிறியேன்!-எப்படி?

(தாடாண்மையார் - ஆண்மை அற்றோர்)

## கட்டியக்காரன் சொல் பொது

### பரணி

586. பரசுராமன் இப்படி அழும்பொழுதில்
அரிவை இரேணுகை அழுதிரங்குவளே!

### வசனம்

''இவ்விதமாகப் பரசுராமன் தகப்பனைப்பார்த்துஅழுது பிரலாபிக்கிறபோது இரேணுகையும் அழுது புலம்புகிற விதம் காண்க!''

## இரேணுகாதேவி பிள்ளையாகிய பரசுராமனைப் பார்த்து புலம்பல் தரு

### பல்லவி

587. மகனே எப்படி உய்வேன்? இந்தவிதி
வந்ததே நானென் செய்வேன்?-மகனே

## அநுபல்லவி

உலகமெங்கும் தீர்த்த யாத்திரைசெய்ய நீ போக
மிகுமுன் தந்தைசிரத்தை வெட்டினான் வைபோக-மகனே

## சரணங்கள்

மன்னர் கார்த்தவீரன் மக்கள்நீ இல்லாக்காலம்
தன்னை அறிந்துவந்து தங்கிச்செய்தார் இக்கோலம்!-மகனே
இந்நாளென் வரன் செபித்து இருக்கும்வேளையில் நேரே
துன்னார்கள் கபடமாய்த் தோன்றிச்சங்கரித் தாரே!-மகனே
வித்தார மாகவே விதிவசத்தால் தானே
பர்த்தா வினையிழந்த பாவியும் ஆனேனே!-மகனே

(செகம் - உலகம்; வரன்-கணவன்; செபத்து - செபம் செய்துகொண்டு ; துன்னார் - பகைவர்; சங்கரித்தார் - வெட்டினார்; பர்த்தா - கணவன்)

## வசனம்

"இந்தவிதம் இரேணுகை புலம்பி மார்பிலே மோதியடித்துக்கொள்ள, அதை எண்ணிக்கொண்டிருந்த பரசுராமன் தாயாகிய ரேணுகையம்மாளுக்குச் சொல்லுகிற விதம்!"

## பரசுராமர் தாய்க்குச் சொல்

## விருத்தம்

*இராகம் : முகாரி*

588\. என்உள் ளன்பாய் முன்னம்
ஈன்றெடுத் தேவ ளர்த்த

அன்னையே கேளும் உந்தன்
அழகிய கணவ ருக்காய்
இன்னல்நீக் கிடுவாய் கொன்றோன்
இருபத் தோர்கு லத்து
மன்னரை வதைப்பேன் என்று
வாக்கிட்டேன் தவறேன் யானே !

(வாக்கிட்டேன் - சபதம் பூண்டேன்)

**வசனம்**

கேளும், என்னை மன வாஞ்சையுடன் பெற்று எடுத்து வளர்த்த மாதாவே ! உமது பிராண நாதராகிய எனது தகப்பனுக்காக விசனப்படுவதை நீக்கும் ! அவரைக் கொன்ற கரிய குலத்து அரசர் இருபத்தோரு தலைமுறையும் கருவறுக்கிறேன் ! இந்த வசனம் யான் தப்புகிறதில்லை ! இது நிச்சயம் அன்னையே !''

## இரேணுகை முனிவருக்குச் சொல்

**தரு**

*இராகம் : முகாரி*

**பல்லவி**

589. உடன்கட்டை ஏறவேணும் மறையவரே
ஒப்புக்கொள்ளும் காணும் ! -உடன்

## அனுபல்லவி

கடன்பட்டோர் மனம்போலக் கலங்கி நானுமிந்தக்
காசினியில் இருந்து காண்பதென்ன சுகம்? - உடன்

## சரணங்கள்

இந்தச் சரீரந்தான் இனியிருந்து என்னபலன்?
அந்தமுள்ள உயிர் அடைவ தெந்தநலன்? - உடன்
கொண்ட புருடனுடன் கூடியே போனால்தான்
அண்டர் பதியினில் அமர்ந்திருக் கலாம்நான் ! - உடன்
சந்த செபதம் தவறாமலே செய்யச்
சிந்தை முனிவர்களே சிறியேன் உயிர் இருப்ப - உடன்
என்றனுக்(கு) இன்(று) இதயக்குறை போகவே
துன்றும் அக்கினியில் சொலுமுடல் வேகவே ! - உடன்

(காசினி-உலகம்; அண்டர்-மேலுலகத்தோர்)

# முனிவர்கள்; பிராமணர்கள் இரேணுகையைத் தடுத்தல் தரு

*இராகம் : கலியாணி*

## பல்லவி

590. உடன்கட்டை ஏறலாமா? - இரேணுகாநீ
உரைத்திடவும் போமா? - உடன்

### அனுபல்லவி

திடம்பெற்ற மெய்ஞ்ஞானச் சித்தமுள பூசுர
தேசிக முடன்நீயும் நேசமாக மீசுர - உடன்

### சரணங்கள்

உநதனுடல அறுப்புண்(டு) அரக்கி சரீரம்
அந்தித் திருப்பதால் அன்புநின் னேரம் - உடன்
பிரமகுலம் முகம்போல் பெருமுடலும் நண்ணி
அருமையுடன் இருக்கில் அடையலாம்மனத் தெண்ணி - உடன்

அவ்விதம் இல்லாமல் அவிரமுதமின் னங்கம்
இவ்விதம் இரண்டாக எய்தினதால் பங்கம் ! - உடன்

## இரேணுகை புலம்புதல் தரு

இராகம் : ரூபகம்

### கண்ணிகள்

591. என்னசெய்வேன்? ஏதுசெய்வேன்? என்தலை விதிப்பயனோ?
உன்னரிய கேள்வனோ டுடன்கட்டை ஏறவென்று
நெஞ்சினிலே தானினைத்தேன் நியமமுள்ள வேதியர்கள்
கொஞ்சமும் தகாதென்றே கூறுகின்றார் என்னசெய்வேன்?
ஆதிமறை வேதியர்கள் அவ்விதம்செய் யாதேஎன்றார்
மாதியானும் என்னசெய்வேன் மறையவரே சரணம்சாமி !

சற்றும்மனம் இரங்கலையா தய்யல்யான் செய்வதென்ன?
வெற்றியுள வானோர்கோவே வித்தகாயான் செய்வது யாது?
கணவருடனே இறந்தால் கதியடையும் எனநினைந்தேன்
மணவனுடனே இறந்தால் வண்பதவி பெறநினைந்தேன் !
வந்தவிருந் திகழ்ந்திட்டேனோ? மறைமுறைகள்
கடந்திட்டேனோ?
அந்தநாளிலே பலருக்கு ஆபத்துகளைச் செய்தேனோ?
இந்தநாளில் என்றனக்கே இவ்வித வரலாச்சுது
அந்தநடு முதலும்இலா அரும்பொருளே சரணம்ஐயா !

(மணவன் - கணவன்; மறை - வேதம்)

## கட்டியக்காரன் சொல்

### பரணி

592. மங்கை இரேணுகை இவ்வாறு புலம்பவும்
அங்கிருந் தவர்கள் அடாதெனத் தடுத்தார் !

(அடாது - தகாது)

### வசனம்

"இந்தப் பிரகாரமாக, இரேணுகாதேவிபுருஷனுடன் உடன்கட்டை ஏறவேறுணுமென்று பலவாறாக வருந்தியும் கிரமமல்ல என்று தடை செய்தார்களென்றறிக !"

## பரசுராமர், இரேணுகைக்குச் சொல்

### பரணி

593. அன்னையே உன்னை அன்புடன் காப்பேன்
மன்னியே நீஉள் மகிழ்ந்திருப் பாயே !

### வசனம்

''கேளும், என்னைப் பெற்ற தாயே ! உம்மை அன்பாகக் காப்பாற்றுகிறேன் ! நிலையாக மனமகிழ்ச்சியுடன் இரும் மாதாவே!''

## கட்டியன் சொல் ஜமதக்கினி தகனக்கிரியை

### விருத்தம்

*இராகம் : முகாரி*

594. கட்டை முட்டையும் பொருத்திக்
கனமுடன் அடுக்கி மேலே
பொட்டெனச் சமதக் கினிப்பேர்
பூண்டமா முனியை வைத்துச்
சட்டமாய் அங்கு செய்யும்
தன்மைகள் முழுதும் செய்தே
திட்டமாய்த் தீயை மூட்டித்
திரும்பியே வந்தார் யாரும் !

(முட்டை - எருமுட்டை)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், கட்டை, எருமுட்டைகளை அதிகமாய் அடுக்கி, அதன்பேரில் ஜமதக்கினி முனிவரை வளத்தி, வசத்துக்குச் செய்ய வேண்டிய கிரியைகள் எல்லாம் செய்து அக்கினியை மூட்டிவிட்டு, அவரவர்க ளிருப்பிடம் வந்தார்கள்! மேல் நடந்தது காண்க!''

## வெட்டியான் வருகிற பொது

### விருத்தம்

இராகம் : மோகனம்

595. அக்கினி மூட்டி விட்டேன்
அவரவர் வந்த பின்பு
மைக்குழல் இரேணு கைப்பெண்
மருங்குள்ள மரத்தில் ஏறித்
தக்கதீ யில் குதிக்கத்
தான்பார்த்து வேக மாக
மிக்கவோர் தடிகைக் கொண்டே
வெட்டியான் வருகின் றானே!

(மைக்குழல் - கருங்குழல்; உவமைத்தொகை)

### வசனம்

''காஷ்டத்தில் தீமுட்டிவிட்டு, அவரவர்கள் போன பின்பு, மைக்குழல் என்னுங் கருத்த கூந்தலுள்ள பெண்ணாகிய இரேணுகாதேவி, புருஷனுடனே உடன்கட்டை ஏறவேணு மெங்கிற

எண்ணத்தினால், காஷ்டத்தின் அருகிலிருக்கின்ற மரத்தில் ஏறித் தீயிற்குத்திக்க, அதைப் பார்த்து, இரேணுகையைத் தள்ளிக் காப்பாற்றுவதற்குக் கையிலே தடிபிடித்து, வெட்டியான் வருகிறவிதம் !''

(காஷ்டம் - சிதை)

## இதுவும் வெட்டியான் வருகிற

### விருத்தம்

*இராகம் : சாவேரி*

596. மேகத்தைப் போல்க றுத்த
மேனியில் நீறு பூசி
யோகத்தில் உயர்ந்தோன் கையில்
உயர்ந்ததோர் தண்டை ஏந்தி
ஆகத்தில் துகில்உ டுத்தே
அழகுகம் பளித்தோல் போட்டு
தாகமாய்ச் சுடலை நாடிச்
சாம்புவன் வருகின் றானே !

(ஆகம் - உடல்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், மேகத்தைப்போல் கறுத்த உடம்பில் விபூதிபூசிக்கொண்டு, கையிலே நீண்ட தடியைப்

பிடித்து, இடையிலே வஸ்திரம் புனைந்து, அழகிய கம்பளித்தோல் மேல்போட்டு, காஷ்டத்திற்குதித்த ரேணுகையைக் காக்கவேணு மென்கிற ஆவலுடன் மயானத்தை நாடி, வீரசாம்புவன் வருகிற விதம் காண்க !''

(வீரசாம்புவன் என்பது வெட்டியானின் பெயர்)

## வெட்டியானான வீரசாம்புவன் வருகிற தரு

*இராகம் : சங்கராபரணம்* *தாளம் : அடதாளம்*

### பல்லவி

597. சாம்புவன் வந்தானே - வீரச்
சாம்புவன் வந்தானே ! சாம்பு

### அனுபல்லவி

சாம்புவன் வந்தான் தடியைக்கரம் பிடித்து !
தமுக்கும்அதன் மீதில்தான் குறுங்கோல் தொடுத்து ! - சாம்பு

### சரணங்கள்

ஆதிநாளையிலே மூவரை அழித்தசக்தி யாரென்று
கோதனைகேட்கப் பறைதனிலே சுகித்துதித்தவள்
அவளென்று - சாம்பு

மார்க்கண்டேயரைத் தான்பிடிக்க மகிழ்வாய்வந்த
இயமனையும்
தீர்க்கமுடனே உதைத்தெழுப்பும் சிவனார்முன்னிப்
பறையடித்த - சாமபு

உள்ளத்தமரும் பரமசிவனுக்கு உதித்தசண்முகமுள குகனுக்கு
வள்ளுவர்மகளை மணம்புரிந்தஅவ் வாசலில்நின்ற
பறையைமுழக்கிய - சாம்பு

(சண்முகம்-ஆறுமுகங்கள்: குகன்-முருகன்)

## இதுவும் வெட்டியான் சொல் தரு

*இராகம் : நாதநாமக்கிரியை*

598. ஆண்டைகளே கேளீர் - நானிங்கு
அறிந்த மாத்திரம் சொல்லுகிறேன் !
அண்டங்கள் உற்பவம் இங்கே - அதில்
அரிஅயன் உருத்திரன் உதித்ததிங்கே !
அம்புவியிட முழுதும் சமுத்திரம்
அலைபுனல் நிலையா நானறிவேன் - ஆண்டை
அகன்ற விசும்பினில் மீன்தோன்றி
அவிர்செய் யாதின நானறிவேன் - ஆண்டை
அம்புய மலரனுக் கைந்தாய்
அழகிய சிரமுள நானறிவேன் ! - ஆண்டை

(விசும்பு - ஆகாயம்; மீன் - உடு)

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

599. வந்ததோர் வீர சாம்பு
வானெனும் வெட்டி யானும்

அந்தமாம் இரேணு கைப்பெண்

அழலினில் மடிய எண்ணம்

சந்தமாம் தண்டி னாலே

தள்ளியே வெளிப்ப டுத்த

வெந்தமெய் கொப்ப ளித்து

வேதனைப் படுவ தானாளள் !

(அழல் - நெருப்பு; மெய் - உடல்)

**வசனம்**

"இந்தப் பிரகாரம் மயானத்திற்கு ஓடிவந்த வெட்டியான், இரேணுகையம்மன் காஷ்ட அக்கினியில் விழுந்தவள் இறக்காவிதம் தன் கையில் பிடித்திருக்கும் அழகிய தடியினாலே தீயைவிட்டு வெளிப்படுத்திவிட, சரீரம் தீப்பட்டபடியால் கொப்பளிக்க, அதனால் ரேணுகை சகிக்கக் கூடாமல் மனவருத்தத்துடன் மயானத்தில் வெட்டியான்முன்பு புலம்புகிறவிதம் காண்க !"

## இரேணுகை சொல் தரு

*இராகம் : காம்போதி*

**பல்லவி**

600. என்ன செய்குவேன்? சாம்புவனே !

ஏது செய்குவேன்?-என்ன

## அனுபல்லவி

இன்னல் வருமென்றே எண்ணாமல் ஈங்கே
இறக்க வந்ததினால் எய்தியதே தீங்கு ! - என்ன

## சரணங்கள்

தனிமையாய்ச் சுடலையைச் சார்ந்தது தப்பாச்சே !
தருமென் சுற்றத்தார்க்கு மிகுந்தஇது ஏச்சே ! - என்ன
முன்னே வருவதை எண்ணாமல் இப்போது
மூர்க்கமாய் வந்ததில் ஏற்றேனே இத்தீது - என்ன

காஷ்டம் புகுந்தவள் கடிநகரில் வந்து
கலக்க லாகாதென்று கழறுவார் சினந்து ! - என்ன

(சுடலை - மயானம்; கழறுவார் - ஏசுவார்)

# வெட்டியான் சொல்

## விருத்தம்

*இராகம் : முகாரி*

601. ஐயையோ பிரம தேவா
ஆதிமா முனிவன் தேவி
துய்யரே னுகைகாஷ் டத்தீ
சுடவத னாற்ச ரீரம்
பையவே கொப்ப ளித்து
பரதவித் தழுகின் றாளே !

உய்யவா தரணை செய்ய

உகந்துநான் என்ன செய்வேன்?

(ஆதரணை - ஆதரவு)

## வசனம்

''ஐயையோ ! பிரமதேவனே ! ஜமதக்கினி மகாமுனிவர் காஷ்டத்தீயில் பாய்ந்து, இரேணுகையம்மாள் சரீர மெல்லாம் கொப்பளித்து, அதனால் பரிதவித்துப் புலம்புகின்றாளே ! இந்தப் பெண்ணின் வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சி செய்து, ஆதரவினைச் செய்வதற்கு நான் என்ன செய்வேன்? அரி,அரி !''

# வெட்டியான் சொல் தரு

## பல்லவி

602. ஆதரித்திடப் போமோ? - இம்மாதினை

அவனியில் தருமம் ஆமா? -ஆத

## அனுபல்லவி

சாதியினில் புலையன் சதுர்மறையோன் பாரி

ஓதும்இவ் வனிதையை ஊனுள பறைச்சேரி - ஆத

## சரணங்கள்

கோதிலாத பிரமகுலத்தில் வசித்தவள்ளை

பேதமா னடைச்சேரி பெட்புடன் கொண்டுபோய் - ஆத

செந்தழலால் கொப்புளம் திகழ எழும்பிற்றே !

அந்த நிதானமறிந்து அழைப்பவர் ஆர்சற்றே? - ஆத

இச்சுடலை தனக்கெய்து வாரையும் காணேன்

அச்சம் உளத்திருந்தும் அலையுதிந்தப் பிராணன் ! - ஆத

(யாரி - மனைவி; ஊன் - இறைச்சி; கோது - குற்றம்)

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

603. மெய்யெலாம் வியர்க்க வாடி

வெட்டியான் புலம்பும் போது

வையகத் தினில்உள் ளோர்க்கு

வஸ்திரம் வெளுத்து நல்கப்

பையவே நுகிலோர் மூட்டை

பருமுது கினிலே போட்டு

கையினில் தண்டு கொண்டே

காலியும் வருகின் றானே !

(வஸ்திரம் - ஆடை; காலி - ஏகாலி)

### வசனம்

"இந்தப் பிரகாரமாக, தேகமுழுதும் வேர்வைநீர் சிந்த வருத்தத்துடன் வெட்டியான் பிரலாபித்துக் கொண்டு இருக்கும்போது, உலகத்திலுள்ளோர்க்கு வஸ்திரம் வெளுத்துக் கொடுக்கும் வண்ணான் ஒருவன், மெதுவாகத் துணிமூட்டையைப்

பெரிய முதுகிலே எடுத்துக்கொண்டு, கையிலே தடிபிடித்துக் கொண்டு மயானத்தின் அருகாக வண்ணான் வழி மார்க்கம் வருகின்ற விதம் காண்க !''

## வண்ணான் வருகிற தரு

*இராகம் : மத்தியமாவதி*

### பல்லவி

604. வண்ணார அயிலு வந்தான் - துயில்வெளுக்கும்
வண்ணார அயிலு வந்தான் !

### அனுபல்லவி

உண்ணா முலைப்பாகன் அண்ணா மலையாருக்கு
நண்ணியதன் பெண்ணை எண்ணிக் கொடுத் திட்ட - வாள்

### சரணங்கள்

தினம்வீடுகள் தோறும் கனிவாயமுது வாங்கி
கனவிலை யுளதுயில் இனமாய் வெளுத்துதவும் - வண்

கண்ணன் முக்கண்ணனைக் கண்டு தெரிசிக்கும்
வண்ண முனிவரிடம் தண்ணமாய்ப் போகாத - வண்

விஞ்சு கரத்தினிலே கஞ்சிபல்லாய்ப் பிடித்து
வஞ்சிக் கொடியிடை அஞ்சியமும் சொற்கேட்டு - வண்

(கனவிலை - அதிகவிலை; துயில் - ஆடை)

## வெட்டியான் வண்ணானுக்குச் சொல்

### விருத்தம்

605. வண்ணாரச் சாமி கேளும்!
வனமுறு முனிவர் தேவி
ஒண்ணெருப் பினிலே வீழ்ந்தே
உடம்பெலாம் கொப்ப ளித்து
கண்ணியே புலம்பு கின்றாள்
கடிதினில் அழைத்துன் வீடு
நண்ணியங் கிருக்கச் செய்து
நல்லமு தளித்துக் காப்பாய்!

(கடிதினில் - விரைவில்)

### வசனம்

"கேளும், வண்ணாரச் சாமியே! வனத்திலே இருந்த ஜமதக்கினி முனிவர் பாரியாள் இரேணுகையம்மன் காஷ்டத்து நெருப்பில் வீழ்ந்ததனால் சரீரம் எல்லாம் கொப்பளித்து, தேகமும் கன்றி வருத்தப்படுகிறாள்! சீக்கிரமாக உன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அமுதளித்துப் பாதுகாத்து வருவாய் அயிலு மேஸ்திரியே!"

# இதுவும் வெட்டியான், வண்ணானுக்குச் சொல்

606. இன்னமும் சொல்வேன் கேளும் !
என்றனாற் கிடைத்த மட்டும்
தன்னமைக் களத்துப் பிச்சை
தழைவுள குடிக ளீவார்
அன்னதைக் கொண்டு வந்துன்
அத்தத்திற் றருவேன் நீயும்
மின்னவம் பொரியும் மாவும்
வெள்ளன்னம் செய்தீ வாயே !

(களம - நெற்களம்; அத்தத்தில் - கையில்)

## வசனம்

"கேளும், அயிலு மேஸ்திரி ! இன்னமும் உமக்குத் தெரியும்படி சொல்லுகிறேன் ! இந்த ரேணுகையம்மாளைக் காப்பாற்றுவதற்கு என்னால் கூடுமான சகாயம், இவ்வூர் குடித்தனக்காரர்கள் மேட்டிற்குப் போய், அவர்கள் கொடுக்கும் களப்பிச்சை நெல்லுகளை வாங்கிக்கொண்டு வந்து, உன் கையிலே கொடுக்கிறேன் ! அதைநீ வாங்கிக் கொண்டு பொரி, மாவு, அன்னம் இதுகளாய்ச் செய்து, மூன்றுகாலமும் கொடுத்துப் பாதுகாத்து வருவாய், உன் பேரிருக்கும் படிக்கு, சாமி !

## அயினுமேஸ்திரி, வெட்டியானுக்குச் சொல்

607. உன்னிஷ்டப் படிக்கே உன்கைக்(கு)

உதவிய தானி யத்தை

இன்னமற் றெவையும் சேர்த்தி

என்னிடத் தினிலே நல்கு !

பன்னருந் தாயைப் போலப்

பரிந்துப சாரம் செய்தே

என்னிட பெயரி ருக்க

இஷ்டமாய்ப் பாது காப்பேன் !

### வசனம்

"கேளும், வெட்டி சாம்புவனே ! இந்த இரேணுகை அம்மாளுக்கு உன் மனதில் இஷ்டப்படிக்கு எந்தப் பொருள்கள் வேறே அகப்பட்டாலும் அவளுக்கு உபயோகமானதைக் கொண்டுவந்து என்னிடத்திலே கொடு! அதை நான் வாங்கிப் பெற்ற தாயைப் போல் அன்பாக உபசாரம் செய்து, என் பெயர் பூமியில் நிலைபெற்றிருக்கும் படிக்குக் காப்பாற்றுகிறேன் சாம்புவனே !"

## வெட்டியான் வசனம்

"அப்படியே கொடுக்கிறேன் ! அழைத்துக் கொண்டு போவீர் மேஸ்திரி !

## அயிலு மேஸ்திரி இரேணுகைக்குச் சொல்

### விருத்தம்

608. அன்புடன் தவத்தைச் செய்தே
அளித்தஎன் புதல்வி யைப்போல்
இன்புடன் அமுத ளித்தே
இரட்சிப்பேன் வெருக்கொள் ளாதே !
உன்பெரும் கொப்ப ளத்தை
உடம்பினில் ஆற்றத் தக்க
கொன்பெறு வைத்தி யங்கள்
கொப்பெனச் செய்வேன் வாரும் !

(வெருக் கொள்ளாதே - பயங்கொள்ளாதே)

### வசனம்

"கேளும், இரேணுகாதேவியம்மா ! இஷ்டம் வைத்துத் தவத்தைச் செய்து பெற்ற என்னிட பெண்ணைப் போல் இன்பமாகப் போசனம் செய்வித்து, உம்மைக் காப்பாற்றுகிறேன் ! பயப்பட வேண்டாம்! தீப்பட்டு உன் சரீரத்தில் கொப்பளித்ததை ஆற்று தற்குத் தகுதியான வைத்தியங்கள் சீக்கிரமாகச் செய்கிறேன், வாருமம்மா தாயே !"

## இரேணுகாதேவி, வண்ணானுக்குச் சொல்

### பரணி

609. அயிலுமேஸ் திரியேஉன் அன்புச்சொற் படியே
இயலுள நின்மனைக் கேகுவம் வாராய் !

### வசனம்

“கேளுமப்பா, அயிலுமேஸ்திரி ! உனது அன்புள்ள வசனத்தின் படிக்கு அழகிய உன் வீட்டிற்குப் போகலாம்; வாரும் அப்பா மேஸ்திரி !”

## இதுவும் இரேணுகை சொல் தரு

### பல்லவி

610. மாமனைக் கேகுவோம் - வண்ணாரமேஸ்திரி
மாமனைக் கேகுவோம் ! -மாம

### அனுபல்லவி

நீமன மகிழுடன் நேசம்வைத் தழைத்ததில் - மாம

### சரணங்கள்

செந்தழலில் குதித்த தேகம் கொப்பளிக்க
வெந்தபெரும் புண்ணாற்றிச் சிந்தை மிகக்களிக்க - மாம
சந்ததமும் உன்றன்மனத் தயவினாலே எனக்கு
இந்த வருத்தங்களை எரியச்செய் மிக்கு - மாம

உன்மக்கள் மனைவிக்கே உறும்நல்ல பாக்கியம்
தன்மமும் உயர்ந்தகீர்த்தி சாருவையே சிலாக்கியம் - மாம

கைப்புண்ணுக்குக் கண்ணாடி கருதியே பார்ப்பாரோ?
இப்புவியில் கீர்த்தி எய்தியிருப் பாய்நேரே ! - மாம

(சந்ததமும் - எப்போதும்)

## அமிலுமேஸ்திரி, இரேணுகைக்குச் சொல்

### விருத்தம்

611. அம்மணி ரேணு காநீ
அரியஎன் மனைக்கு வந்தாய் !
செம்மையாம் என்தோட் டத்தில்
செழித்துமிக் குயர்வாய்க் கப்பு
விம்மியே இருக்கும் வேம்பின்
விருட்சத்தின் அடியில் வைகி
இம்மையில் இருமுக் காலம்
இனியபோ சனம்ஈ வேனே !

(கப்பு --கிளை)

### வசனம்

"கேளுமம்மா, இரேணுகையே, இப்போது,நீயும் என்னிட வீட்டுக்கு வந்தாய் ! நல்லது ! உன் சரீரத்திலுள்ள கொப்பளம் உலர்ந்து செவ்வையாகிறவரையில் என் தோட்டத்தில், காற்று வாட்டமாய்க் கிளைகள் நெருங்கிய வேம்பின் மரத்து அடியில் இரு! நான் உனக்கு மூன்று காலமும் தவறாமல், இஷ்டமான போசனம் கொண்டு வந்து கொடுக்கிறேன் ! அமுதுசெய்திடுமம்மா தாயே !"

## இரேணுகையம்மன் அமிலுமேஸ்திரிக்குச் சொல்

### பரணி

612. நல்லது நீயும் நவின்றசொற் படிக்கு
மல்லல்சேர் நிம்ப மரத்தடி இருப்பேன் !

(நிம்பமரம் - வேப்பமரம்)

## வசனம்

"கேளுமப்பா, அயிலுமேஸ்திரி ! நீ நல்ல மார்க்கத்தைத்தான் சொல்லினை ! அந்தப் படிக்கு வளமை பொருந்திய வேம்பின் மரத்து நிழலில் இருக்கிறேன், அப்பா?"

# அயிலுமேஸ்திரி, இரேணுகைக்குச் சொல்

613. நங்கையே ஊரில் உள்ள
நற்புகழ்க் குடிகள் வீட்டில்
சங்கையில் லாமல் சென்று
சாதமும் கூழும் வெண்மை
தங்கிய அளையு மோரும்
சலுதியாய் வாங்கி வந்தேன்
பொங்கமாய் அதைய ருந்திப்
பொன்போல இருப்பாய் அம்மா !

(அளை - தயிர்)

## வசனம்

"கேளும் ! அம்மா இரேணுகையே ! இந்த ஊரில் நான் செய்யும் குடித்தனக்காரர் வீட்டில் சாதமும் கூழும் நல்ல தயிரும் மோரும் வாங்கிக் கொண்டு வந்தேன் ! சந்தோஷத்துடனே அதைச் சாப்பிட்டுப் பொன்போலப் பத்திரமாக இரும் இரேணுகாதேவியே !"

## இரேணுகை, அயிலு மேஸ்திரிக்குச் சொல்

### பரணி

614. தூசனே உமது சொற்படிக் கமுது
மீசுர மாக விரும்பியுண் டேனே !

### வசனம்

"கேளுமப்பா, அயிலுமேஸ்திரி ! உன் வாக்குப்படிக்கு, அமுது அதிகத் திருப்திகரமாக ஆசையுடனே யருந்தினேன், அப்பா !"

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

615. மடமயில் அனைய சாயல்
மாதுரே ணுகைத னக்கு
திடமுற ஆத்ம திருப்தி
செய்வித்துக் கொப்ப ளித்த
இடமெல்லாம் வேம்பின் பச்சை
இலையரைத் ததனைப் பூசி
படும்ச கம்ஈ ஓட்ட
பத்திரி கையில்ஈந் தானே !

(மசகம் - கொசு; பத்திரி - வேப்பிலை)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், மயில்போன்ற சாயலுள்ள பெண்ணாகிய இரேணுகைக்குத் தைரியம் வர போசனம் பூரணமாகச் சாப்பிடச் செய்து, உடம்பிலுள்ள கொப்பளம் உலரவேண்டியதற்கு வேப்பிலையை அரைத்துப்பூசி, கொசு, ஈ மொய்க்கிறதை ஒட்டுகிறதற்கு வேப்பிலையைக் கொடுத்து ஒட்டிக் கொள்ளும்படி செய்து ஆதரித்தா னென்றறிக !"

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

616. ஆவலின் உடனே காலி
அழகிய ரேணு கைப்பெண்
பாவைக்குக் கருத்தாய் வேண
பணிவிடை செய்தி ருந்தான் !
மேவுநல் எண்ணம் உற்ற
வீரசாம் புவன்செந் நெல்லும்
மாவுயர் வுள்ள வஸ்தும்
வகைவகை யாய்த்தந் தானே !

### வசனம்

"இவ்விதமாய் அயிலுமேஸ்திரி, பாவை போலும் உருவமுடைய இரேணுகா தேவிக்குக் கருத்துடனே வேண்டிய பணிவிடைகளை யெல்லாம் செய்துகொண்டிருந்தான் ! நல்ல தருமகுணம் பொருந்திய வெட்டியானான வீரசாம்புவன் நெல் முதலிய தானியமும் உயர்ந்த பொருள்களும் விதம்விதமாக இரேணுகைக்குப் பாகம் செய்து கொடுக்கும்படி கொடுத்து வந்தான் என்றறிக !"

## கட்டியக்காரன் சொல் பொது

### அகவல்

617. இவ்விதம் வெட்டியான் ஈந்த தானியத்தைச்
செவ்வையாய்க் குத்திச் சிறப்புடன் மாவும்
அன்னமும் யாக மாகவே செய்து
மன்னநெற் பொரியும் மாவுமாய் இடித்துக்
குறைவிலா மற்படி கொண்டுபோய் அந்த
நறைகுழ லாட்டு நாளுநல் கியதில்
நலிவுள உடல்திடம் நண்ணிக்கொப் பளங்கள்
உலரவே நெஞ்சம் உவகையாய்த் தூசன்
சவரச் சணையிற் றவறுதல் இன்றி
இவர்தன் மருவியே இருந்திடும் போது
நேமன யோக நிஷ்டையில் பரசு
ராமனும் தாயை நாடியே பார்த்து
அன்னைரே ணுகையை அன்புடன் காண
மன்னிய பரசுரா மருமிதோ வந்தார் !

(நடை - தேன்; சவரச்சணை - உபசாரம்)

## பரசுராமர், தாயைத் தேடி வருகிற தரு

இராகம் : தோடி

### பல்லவி

618. பரவைசூழ் உலகினில் பரவும் புகழுடைய
பரசு ராமரும் வந்தார் ! -பரவை

## அனுபல்லவி

அரசன் கார்த்தவீரன் அழகிய சகஸ்திர
சிரசையும் கொய்துஅவன் சேனையை அதம்செய்த - பரவை

## சரணங்கள்

தந்தைஉரைப் படிக்குத் தாயைவெட்டி யெழுப்பிச்
சிந்தை மகிழ்ச்சியுற்றுத் தீர்த்தயாத் திரைசெய்த - பரவை

வில்வல்ல பத்திற்கு வேறொருவர் சமானம்
சொல்லல்ஆ காதென்று எல்லவரும் சாற்றும் - பரவை

புயமீதினில் வெண்மைப் பூணூல் விளங்கவே
இயலாகவே முகத்தினில் திருமண் இட்டு - பரவை

(பரவை - கடல்; புயம் - தோள்)

# பரசுராமர், இரேணுகைக்குச் சொல்

## விருத்தம்

619. துன்னிய அலைஎ றிக்கும்
தொடுகடல் உடுத்த பாரில்
பன்னரும் தவத்தால் என்னைப்
பயின்றமா தாவே போற்றி
மின்னெனும் மருங்கு லார்க்குள்
மேன்மையுள் ளவளே போற்றி !
நன்னெறி உடையாய் உந்தன்
நளினத்தாள் இணைகள் போற்றி !

### வசனம்

"அலைகள் பொருந்திய கடல்சூழ்ந்த உலகத்தில் மிகுதியான தவத்தினால் என்னைப் பெற்ற மாதாவே சரணம் ! மின்னல்போன்ற இடையுள்ள மாதர்களுக்குள் மேன்மையுள்ளவளே சரணம் ! நல்ல நெறியுள்ள உமது தாமரைமலர் போன்ற பாதமே சரணம், தாயே !"

## இரேணுகை பரசுராமருக்குச் சொல்கின்ற

### விருத்தம்

620. ஒப்பனை மன்ம தன்போல்
ஓங்கிய வனப்பு வாய்ந்த
அப்பனே பரசு ராமா
அனவர தமும்நீ வாழி !
எப்படி இனிநான் வைகும்
இயற்கையைக் கண்ட றிந்து
செப்பம தாய்உ ரைப்பாய்
சிந்தையும் மகிழத் தானே !

(அனவரதமும் - எப்பொழுதும்)

### வசனம்

"அலங்காரமுள்ள மன்மதனைப் போல உயர்ந்த அழகுவாய்ந்த பரசுராமனே வாழி ! நீ எப்போதும் வாழக்கடவது ! இனிநான் எந்தப் பிரகாரம் இருக்க வேண்டியது? அதையறிந்து செவ்வையாகச் சொல்லுவாய், என் மனது சந்தோஷம் அடையும்படிக்கு குமாரனே!"

# பரசுராமர், இரேணுகைக்குச் சொல்கின்ற

## விருத்தம்

621. உரியான் தாதை முன்னம்
உரைப்படி நடத்தல் முக்கியம்
பெருவனல் நீர்கு தித்த
பிழையினால் மெய்கொப் பளித்து
மருவுமுத் தெனத்தி கழ்ந்த
வகையுல கினில்மாந் தர்க்கு
திரவம்மை வார்த்து நீங்கச்
செய்துமா வனங்கொள் வாயே !

(தாதை - தந்தை; குதித்த - சிதையில் குதித்த)

## வசனம்

''கேளும், தாயே உமக்கு நாதனாகவும் எனக்குத் தந்தையாகவும் இருந்தவர் முன்பு சொல்லிய வாக்கியம் தவறாமல் நடக்கிறதே முக்கியமான காரியம் ! அக்கினியில் நீர் பாய்ந்ததனால் சரீரமெல்லாம் கொப்பளித்து முத்துப்போல் திரண்டு பிரகாசித்து இலகுவாய்விட்ட அந்தப் பிரகாரம் உலகத்திலுள்ள மனிதர்களுக்கு உமக்கு நேர்ந்தது அம்மையென்று வார்ப்பித்து, அதைநீர் பின்பு நிவர்த்திசெய்து, அவர்கள் சந்தோஷித்தும், மாவும் பால்சாதமும் கொடுக்க, அதனால் சீவனம் செய்வீர் தாயே !''

## மங்களத் தரு

*இராகம் : சுருட்டி* *தாளம் : அடதாளம்*

622. மங்களம் மங்களம் பவந்துதே மங்களம் !
மங்களம் நங்கை வல்லபைநாதன் கருணசர்க்கும்
செங்கதிர் வேலன் தெய்வயானை வள்ளிக்கும் - மங்
சீதேவி பூதேவி சிறந்த திருமாலுக்கும்
மாதேவி பார்வதி வரனதி சிவனுக்கும் - மங்
வெள்ளைக் கமலம்வந்த மெல்லிக்கும் வரனுக்கும்
தெள்ளும் புகழ்பிருகு தேவி புலோமிசைக்கும் - மங்
ஜமதக்கினி முனிக்கும் தெரிவை இரேணுகைக்கும்
அமலமுள பரசுராம அந்தண னுக்கும் - மங்

## எண்சீரடி வாழி

### விருத்தம்

623. தார்வாழி சங்கரன் மாலயனும் வாழி !
சங்கரி செங்கமலை கலைமகளும் வாழி !
ஏர்வாழி குலசனுடன் முனிவர் வாழி !
எழில்பிருகு புலோமிசை நாரதரும் வாழி !
கார்வாழி நாகவல்லி சமதக் கினியும்
கவினி ரேணுகை பரசுரா மன்வாழி !
பார்வாழி வரையரசன் வாழிநல்லோர்
படித்தவரும் எழுதினவரும் பல்லாண்டு வாழி !

## சமதக்கினி நாடகம் முற்றும்